# அடிமைகள்



கே. டானியல்

N. SABASAN.

ஒரு

தோழமை

வெளியீடு

m. [illegible]

# அடிமைகள்

4/4/87

கே. டானியல்

தோழமை
அஞ்சற்பெட்டி : 55
குடந்தை

தோழமை : 1

●

நூலகப் பதிப்பு : 22–00

●


□□ முதற்பதிப்பு : அக். 84

□□ பக்கங்கள் : (50 + XVIII + 272) 340

□□ உரிமை : ஆசிரியர்க்கு

□□ நூலகப்பதிப்பு : 22—00

□□ மக்கள்பதிப்பு : 16—00

□□ அச்சும், அமைப்பும் : அறிவானந்தர், குடந்தை

□□ அட்டை அச்சாக்கம்: தங்கம் பிரிண்டர்ஸ், சென்னை-5

□□ விற்பனை உரிமை : சிலிக்குயில்

□□ முகவரி : வே. மு பொதியவெற்பன்,

20, கோதண்டபாணித்தெரு, குடந்தை-612 001

# தோழமை

— ஒரு முன்னோடி நூல்வெளியீட்டு நிறுவனம் —

## எமது அடுத்த வெளியீடுகள்

★ கதைப்பாடல்களும் சமூகமும்
— கோ. கேசவன்

★ மூன்றாவது பாதை
(கவிதைகள்)
— ஜமாலன்

□

## தொடர்பு முகவரி


*தொலைபேசி : 427*
*தொலைவரி : வாணி*
*அஞ்சற்பெட்டி : 55*


□


*வே. மு. பொதியவெற்பன்*
*பதிப்பாசிரியர் : 'தோழமை'*
*20, கோதண்டபாணித்தெரு*
*குடந்தை - 612 001*


□

**இதுவரையில் ... ...**

- ☐ டானியல் கதைகள்
- ☐ உலகங்கள் வெல்லப்படுகின்றன
- ☐ பஞ்சமர் (முதல் பாகம்)
- ☐ போராளிகள் காத்திருக்கின்றனர்
- ☐ பஞ்சமர் (இருபாகங்களும்)
- ☐ கோவிந்தன்
- ☐ இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக்குரல்
- ☐ பூமரங்கள்

**...... தொடர் நாவல்கள்**


- ○ நெடுந்தூரம் [வீரகேசரி]
- ○ மையக்குறி [ஈழநாடு]
- ○ முருங்கையிலைக்கஞ்சி [தினகரன்]

**இனிவருவன ......**

- ☆ கானல்
- ☆ பஞ்சமர் [மூன்றாம் பாகம்]


பஞ்சமர்
கே.டானியல்


ஓர்
இலக்கியக்குரல்


கே.டானியல்

## பதிப்புரை

''சமூக விழுமியங்கள் கையளிக்கப் படுவதில் இலக்கியத்தின் பங்களிப்பு மிகுதி. ஒரு சமூக உருவாக்கத்திற்கு இலக்கியம் தேவை. ஒரு சமூகத்தின் பாரம்பரியம் அதன் இலக்கியத்தின் மூலமே பேணிக்கொள்ளப்படுகின்றது'' என இலக்கியத்தின் அத்தியாவசியம் பற்றிப் பேசுவார் கலாநிதி கா. சிவத்தம்பி அவர்கள்.

இங்கே இதே மூச்சில் இன்னொன்றையும் அவதானிக்க வேண்டும். ''இலக்கியத்தினால் சகலத்தையும் சாதிக்க முடியும்-சாதிக்கமுடியாதது எதுவுமே இல்லை என்றமாயைத் திரையைக் கிழித்தெறிந்துவிட்டு வெளியே வாருங்கள்! சமூக மாற்றத்திற்கான உண்மைக்கு விசுவாசமான செயற்பாடுகள் நடக்கும்போது வெறும் பார்வையாளனாக மட்டும் நில்லாது அதன்பங்காளர் ஆகுங்கள்!'' — இக்குரலுக்குரியவர்தான் தோழர் கே. டானியல்.

இவ்வாறு ஒரு தேர்ந்த இலக்கியக்காரன் என்கிற எல்லை மட்டத்திலேயே குறுகிவிடாது — தம் சொந்த வாழ்க்கை நடைமுறையாலும் சமூக மாற்றத்திற்காகச் சமராடும் ஒரு சரியான போராளியாகவும் பரிணமித்திருப்பதே இம்மக்கள்கலைஞனின் மகத்துவமாகும்.

ஏறத்தாழத் தம் 16வது வயதிலேயே பொதுவாழ்வில் ஈடுபட்ட டானியல் தமது 21வது வயதிலேயே ஒரு பொதுமை நோக்குடைய அரசியலையும் தெரிவு செய்தார். இன்றுவரை இவர் பங்கெடுக்காத சாதி எதிர்ப்புப் போராட்டமே இல்லை என்கிற அளவிற்கு அவற்றுடன் இரண்டறக் கலந்த போராளியாவார்.

'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்'— 'மக்கள் கலை— இலக்கியப் பெருமன்றம்' எனும் இரு மக்கள்திரள் இயக்கத்தினதும் அமைப்பாளர் டானியல் அவர்களே.

1971-இல் ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிக்காகப் போராடிய ஒரே குற்றத்திற்காக தலைமறைவு வாழ்க்கையை அவர் மேற்கொள்ள நேர்ந்தது. அப்போது ஒரு குக்கிராமத்தில் குடிக்கொருவராக ஒருநாளைக்கு ஒருவர் வீதம் உணவளிப்பும் பாதுகாப்பும் மேற்கொள்ளப்பட்டன. "அப்பணி தனக்காக அல்ல, தான் சார்ந்த கொள்கைக்காக அளிக்கப்பட்டதே" என இன்னும் மனநெகிழ்கிறார் இம் மக்கள்கலைஞர். அப்படிப் பூர்த்தியானதுதான் அவரது மகத்தான 'பஞ்சமர்' (முதல்பாகம்)

பஞ்சமர் (இரண்டாம்பாகம்) வரையிலான டானியலின் படைப்புகளை மட்டும் படித்த அளவில் அவரது எழுத்தில் இருந்து அவரை ஓர் அரசியல் வாதியாக திரு. சுந்தரராமசாமியால்கூட அடையாளங்காண முடியவில்லை (ஆம்! டானியல் ஓர் அரசியல் வாதியுங்கூடவா! என என்னிடம்

தம்நேர்ப்பேச்சிலவர் ஆச்சரியப்பட்டார்!) இதுவே டானியலின் கருத்துப் பிரச்சாரம் துருத்தி மேலோங்காத கலை மேதைமைக்குச் சான்றாதாரமாகாதா ?

பெறுமதி மிகுந்த ஆவணங்களாகப் பேணிப் பாது காக்கப்படவேண்டியவை என ஈழத்தின் கலாநிதிகளால் போற்றப்பெறும் பெருமை மிக்கவை டானியலின் படைப்பிலக்கியங்கள் மண்ணின் நெடி கப்பி வரும் மகத்தான 'தலித்'திலக்கியங்கள் டானியல் மூலமே தமிழுக்குப் புதிய வரவுகளாகின்றன ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழனின் பாரம்பரியங்கள் டானியல் மூலமே வரலாற்றாய்வுக்குப் புதியதரவுகளாகின்றன. 'கரிசக்காட்டு நாய்னா' கி. ரா. வால் நமக்கு ஒரு கரிசல் வட்டாரச் சொல்லகராதி வாய்த்தது போல டானியல் மூலமே நமக்கு ஒரு யாழ்ப்பாணச் சொல்லகாரதி சித்திக்க இயலும். இம் மகத்தான மக்கள் கலைஞனின் - மார்க்சிய லெனினிய இயக்கப் போராளியின் 'அடிமைகளோடு எமது பதிப்புப் பயணம் ஆரம்பமாவது குறித்து மீதூர்ந்த பெருமிதத்துடன் எமது தோழமை உங்களுக்கூடாக அடியெடுத்து வைக்கின்றது.

அறிமுக-விமர்சன முன்னுரைகள் வழங்கிய பேராசிரியர் களையும் அச்சகத்தார்களையும் ஒத்துழைத்த தோழர்கள் அனைவரையும் உள்ளுக்குள் நன்றி மீக்கூர்கின்றோம்.

என்றும் 'தோழமை'யுடன் உங்கள்

8—10—84

## கே. டானியலின் அடிமைகள்

# ஒரு முன்னுரை

கோ. கேசவன்

இன்றைய சமூகத்தில் வெளிப்பார்வைக்கு அடிமைத் தனம் இல்லை. ஆனால் சமூகத்தில் பெரும்பான்மையோர் பல்வேறுவிதமான அடிமைத்தளைகளால் கட்டுண்டு கிடக்கின்றனர். மனித உறவுகள் முழுமையிலும் ஏதேனும் ஒரு விதத்தில் அடிமைத்தனம் இருந்து வருகிறது; போர்த்திக் கொண்டு உள்ளது பெற்றோர் - பிள்ளை உறவு; கணவன்-மனைவி உறவு; சகோதரன் - சகோதரி உறவு என்பன போன்ற குடும்ப உறவுகளிலும் இது காணப்படுகிறது. நிலப்பிரபு - பண்ணையாள் உறவு; முதலாளி - தொழிலாளி உறவு; அலுவலக மேலாளர்-கீழ்ப்பணியாளர் உறவு என்பன போன்ற கட்டமைப்பான தொழில் உறவுகளிலும் கை வண்டி இழுத்தல், பாரம் தூக்கல், சிறு கூலி வேலை செய்தல், கட்டிட வேலை செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள உதிரித்தொழிலாளர்களை உள்ளடக்கிய கட்டமைப்பற்ற தொழில் உறவுகளிலும் அதனதன் தன்மைக்கு ஏற்ப அடிமை நிலை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அதே நேரத்தில் இத்தகு அடிமைத்தனத்தைச் சகித்துக்கொள்ள இயலாத தன்மையில் இது குறித்த அதிருப்தியுணர்வுகளும் எதிர்ப்புச்

செயற்பாடுகளும் கிளம்புகின்றன. இந்த இரண்டு போக்குகளையும் இன்றைய சமூகத்தில் காண்கிறோம்.

அடிமைத்தனத்தில் மிகமிக மோசமானதும் ஆபத்தானதுமானது, சிந்தனை ரீதியில் அடிமைத்தனத்தோடு இயங்கிப்போகும் சிந்தனை அடிமைத்தனமாகும். ''நாம் அடிமையாகப் பிறந்தோம்; நாம் அடிமையாக வாழ்கிறோம்; நாம் அடிமையாகவே இறப்போம்'' என்று தமது அடிமைத் தனத்தை சுபாவமாக — தமது உடம்பின் ஓர் உறுப்பாக — ஏற்றுக்கொள்தலாகும். குடும்ப உறவுகளிலும் தொழில் உறவுகளிலும் இத்தகைய சிந்தனை அடிமைத் தனம் பரம்பரை பரம்பரையாக ஊட்டப்பட்டு வருகிறது. இதற்கு மக்கள் பழகிவந்துள்ளனர் எனக் கூறுவதைக் காட்டிலும் பழக்கப் பட்டு வந்துள்ளனர் என்பதே உண்மையாகும். இத்தகைய சிந்தனை அடிமைகள், தமக்குரிய சுயேச்சைத் தனத்தையும் சுதந்திரத்தையும் தாமே மறுதலிப்பதோடு அடிமைத்தனத்தில் ஒரு பொய்யான நிறைவு காண்கின்றனர். இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளாகப் பழக்கப்பட்டுப் போன இத்தகைய அடிமைத் தனத்தை எவராலும் — எந்த அமைப்பாலும் — திடீரென நீக்கிவிட முடியாது. காலந்தோறும் இறுக்க மடைந்த குளத்தின் பாசியை, ஒரு நாள் வெயில் உலர்த்தி விடாது. இதற்கு நீண்ட காலப் போராட்டம் தேவை. இத்தகைய போராட்டமும், அடிமைத்தனத்திலிருந்து முழு விடுதலை என்பதை நோக்கியதாக இருக்கவேண்டும், அடிமைத்தனத்தின் ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்துக்குத் தப்பிச் செல்லும் இலக்குகொண்டதாக இருக்கக்கூடாது. இது அடிமை மக்களின் விடுதலைக்கான புரட்சிகரத் தத்துவத்தால் வழிநடத்தப்பட்டு, அடிமை

மக்களின் தலைமையில் நடத்தப்படுதலாகும். எனவே, இது நீண்ட காலப் போராட்டத்தால் மட்டுமன்றி நீண்டகால மக்கள் போராட்டத்தால் அடையப்பட வேண்டியதாகும். இத்தகைய நீண்டகால அடிமை மக்களின் போராட்டத்தின் தொடக்க முயற்சி குறித்து விளக்கும் புதினமாக கே. டானியலின் **அடிமைகள்** காணப்படுகின்றது.

கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே என்பதைக் கொள்கையிலும் நடைமுறையிலும் ஏற்றுக்கொண்டு செயற் படுத்தும் புரட்சிகரக் கலைஞரான கே. டானியல், இந்தப் புதினத்தில் சில பிரச்சனைகளைத் தொடுகின்றார். இவை இலங்கையில் உள்ள தமிழ் பேசும் பகுதிகளில் மட்டுமல்ல, சாதியையும் சாதி வேறுபாடுகளையும் சுரண்டல் ஆதாரங் களாகக் கொண்ட எந்தவொரு சமூக அமைப்பிலும் காணப் படும் பிரச்சனைகளாகும். இவர் தொடும் பிரச்சனைகள் இதனால் எமக்கு அந்நியமாகப் படவில்லை. எமது கால் களுக்கும் கீழே அந்த உளைச்சேறு இன்னமும் நாறிக்கொண் டிருக்கிறது; எமது கைகளை அந்த இரும்புக் கயிறு இன்னமும் அழுத்தம் திருத்தமாகக் கட்டிப் போட்டுக் கொண்டிருக்கின்றது; எமது சமூக நரம்புகளை இன்னமும் அது மீட்டிக்கொண்டிருக்கின்றது. கடல் கடந்த இன்னொரு நாட்டின் புதினமாக இருந்தாலும் இது உள்நாட்டுப் பொரு ளாகவே உருப்பெற்று நிற்கிறது - இதன் யாழ்ப்பாணத் தமிழ் நடையையும் மீறிக்கொண்டு,

இதன் காலத்தை 1890-1956 என கே. டானியல் வரையறை செய்கிறார். மூன்றாவது உலக நாடுகளில் ஏகாதிபத்தியம் இரண்டாம் உலகப் பெரும் போருக்குப்

பின்னர் வெளியே சென்றது அதுவரை உள்ள காலத்தை **அரை நிலவுடைமைத்துவ. குடியேற்றக் காலம்** (seni fendal, colonial) என்பர். அது நீங்கிய பின் ஏற்பட்ட அரசியல் மாற்றக் காலத்தை **அரை நில வுடைமைத்துவ, அரைக் குடியேற்றக் காலம்** (Seni fendal, Seni Colonial) என்பர். மூன்றாவது உலக நாடுகளுக்குப் பொருந்தும் இந்த சமுகவியல் யதார்த்தம், இந்தியா, இலங்கை போன்ற ஆசிய நாடு களுக்கும் அதனதன் தனித்தன்மைக் கேற்பப் பொருந்தும். ஒவ்வொரு நாட்டிலும் இந்தத் தனித்தன்மையின் ஊடாகவே பொதுத்தன்மை காணப்படும். தனித்தன்மையை மறந்து விட்டு பொதுத்தன்மையை மட்டும் காண்பது மரத்தை மறந்துவிட்டு காட்டை மட்டும் காண்பதாகும்; பொதுத் தன்மையைப் புறக்கணித்துவிட்டு தனித் தன்மைகளைத் தலையில் தூக்கி ஆடுதல், கடலை மறந்துவிட்டு நீர்த்துளி களை மட்டும் காண்பதாகும்.

இலங்கையில் தமிழ் பேசும் பகுதியிலும் இந்தியா விலும் நிலவுடைமைத்துவம் அல்லது அரை நிலவுடைமைத் துவம் சாதி உறவுகளில் வெளிப்படலாகின்றது. இந்த விதத்தில் ஐரோப்பியாவின் மரபு ரீதியான நிலவுடைமைத் துவத்திலிருந்து மேற்சொன்ன பகுதிகளின் நிலவுடைமைத் துவம் தனித்துவம் கொண்டுள்ளது. இதில், இலங்கையில் சிங்களம் பேசும் பகுதிகளிலிருந்து தமிழ் பேசும் பகுதிகள் வேறுபாடு கொண்டிருந்தது. இன்னும் நுனித்துக் காணும் போதுமட்டக்களப்புப் பகுதியில் இருந்த நிலவுடைமைத்துவம் முசுலீம், இந்து சமயங்களைக் கொண்டிருந்தது. இங்கே சாதி வேறுபாடுகள் மட்டுமன்றி, சமய வேறுபாடுகளும்

இருந்தன. ஆயின் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்த நில வுடமைத்துவம், இந்து வேளாளர்களை மட்டும் நிலப் பிரபுக்களாகவும் இந்து சமயத்தில் இழுத்து வைத்து இணைக்கப்பட்ட அடிநிலை மக்களை பண்ணையாள்களாக வும் கொண்டது. இதில் சாதி வேறுபாடு இருப்பினும், சமய ஒருமை செயற்கையாக வேனும் ஏற்படுத்துவதற்குரிய யதார்த்தம் நிலவியது.

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள படிநிலைமுறைகொண்ட (HierarchialSet up)நிலவுடைமைத்துவம்,தமிழகப்பகுதியில் உள்ள நிலவுடமைத்துவத்தின் விரிவாக்கப்பட்ட வடிவம் ஆகும். தமிழகப் பகுதியில் உள்ள நிலவுடைமைச் சாதி முறையை ஆங்கிலேயர் முற்றிலும் மாற்றி அமைக்க முடியாததைப் போலவே, யாழ்ப்பாணம், மட்டகளப்பு ஆகிய பகுதிகளில்உள்ள நிலவுடைமைச்சாதிமுறையையும் போர்த்து கீசியர், ஒல்லாந்துக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரும் மாற்ற இயலவில்லை. தமிழகத்திலும் இலங்கையிலும் நவீனக் கல்வி முறையும் சமய மாற்றமும் அறிமுகமாயின, தமிழகத்தில் பிராமணர், வேளாளர், தேவர், சாணார், பள்ளர், பறையர், கிறிஸ்துவராய் மாறியதைப் போன்றே, இலங்கையிலும் வேளாளர், நளவர், பள்ளர், பறையர், வண்ணார், அம்பட்டர் போன்ற சகல சாதியினரும் கிறிஸ்துவ மயமாயினர். ஆயின் இத்தகு சமய மாற்றங்கள், கலாச்சார சம அந்தஸ்தை ஏற்படுத்தவில்லை. சைவப் பள்ளரை, சைவ வேளாளர் அடக்கி ஒடுக்கியதைப் போன்றே, கிறிஸ்துவப் பள்ளரை, கிறிஸ்துவ வேளாளர் அடக்கினர். சாதி அடிப்படையில் அமைந்த நிலவுடைமைத்துவ சமுகத்தை அடிப்படையில் மாற்றாது, முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை நிலைகளைக்

கொண்ட மனிதப் பிரிவுகளைச் சமய மாற்றங்கள் மூலம் சமநிலைக்குக் கொண்டுவர இயலாது என்பதை வரலாறு இரண்டு நாடுகளிலும் நிருபித்தது. இதைப்போன்ற முடிவே நவீனக் கல்விக்கும் கிடைத்தது.

இரு நாடுகளிலும் நிலவுடைமைத்துவ உயர் சாதியைச் சேர்ந்தவரே ஆங்கிலக் கல்வியைப் பெற்றனர். தமிழகத்தில் முதலில் பிராமணர்களும் யாழ்ப்பாணத்தில் வேளாளரும் பெற்று, தமது சமூக உயர்நிலையைப் பேணிக்கொண்டனர். முழுமுற்றான நிலவுடைமைத்துவக் காலத்தில் சமூக உயராதிக்கம் பெற்ற தஞ்சாவூர் பிரமதேயக் கிராமப் பார்ப்பனர், நவீனக் கல்வி பெற்று சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அதிகாரியாக மாறினர். நிலவுடைமையாளர்க்கான சமூகத் தகுதியின் வடிவம் மாற்றம்பெற்றது இதைப் போன்றே யாழ்ப்பாண வேளாள நிலப்பிரபுக் குடும்பங்களில் உள்ள இளைஞர்கள் ஆங்கிலக் கல்வி பெற்று, கொழும்பில் அதிகாரம் செய்தனர். இதில் சிறிது காலத்திற்குப் பின் தமிழகத்துப் பிராமணர்களுக்கு ஏற்பட்ட போட்டிகூட, யாழ்ப்பாண வேளாளர்க்கு ஏற்படவில்லை தமிழக நிலவுடமைச் சாதிய சமூக அமைப்பில் பிராமணர்க்கும் கீழே உள்ள வேளாளர், ரெட்டி, கவுண்டர் போன்ற நிலவுடைமை வகுப்பினர் - இனத்தினர் நவீனக் கல்வி பெறுதலிலும் அதிகாரச் சேவகப் போட்டியிலும் பிராமணரை எதிர்த்தனர். இத்தகைய எதிர்ப்புகூட இன்றி, யாழ்ப்பாண வேளாளர் ,தனியொரு பகலவனாக' உலா வந்தனர். எனவே ஆங்கிலக்கல்வியும் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தாமல் தாழ்சாதி இளைஞரில் படித்த சிலர்க்கு சிறசில அதிகாரப் பங்கீடுகளை அளித்தது. மேலும் ஏகாதிபத்தியத்தால்

ஏற்பட்ட மாற்றங்கள் ஏகாதிபத்திய நலனுக்குகந்தையாக இருந்ததால், உள்நாட்டில் சுயமான தொழில் துறை முதலாளியமோ வர்த்தக முதலாளியமோ தோற்றுவிப்பதற் குரிய வாய்ப்பில்லை. இலங்கையின் உள்நாட்டு முதலாளியம் தென்னை, காரீயம், மரபுரீதியான விவசாயம் போன்ற வற்றையே நம்பிக்கைகொண்டிருந்தது. இலங்கையில் ஏகாதிபத்தியத்தின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்த தோட்டத் தொழில்துறை, சுயமான இயந்திரத் தொழில் துறையின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பினும், சில வர்த்தக உறவு களை ஏற்படுத்தத் துணை செய்யவும் பயன்பட்டது. இத்தகு சமய, அரசியல், பொருளாதார மாற்றங்களையே சுருக்கமாக அரை நிலவுடமைத்துவக் காலம் எனலாம்.

1890-1956 ஆம் கால கட்டத்தைப் பின்னணியாகக் கொண்ட இந்தப் புதினத்தில் மேலே விவரிக்கப்பட்டுள்ள சமய, அரசியல், பொருளாதார மாற்றங்களின் ஊடாக ஏற்பட்ட சமூக மாற்றங்கள் பின்னணியாக இடம் பெறு கின்றன. இதில், யாழ்பாண வேளாள நிலவுடமைக் குடும்பங்களையும் அவர்களது பரம்பரை அடிமைகளான பஞ்சமர் குடும்பங்களையும் ஆசிரியர் காட்டுகின்றார். ஒரு நிலப்பிரபுக் குடும்பம் கேளிக்கை விளையாட்டுகளில் தனது பரம்பரைச் செல்வத்தை ஆடித் தோற்றபின், அவர்களிடம் அடிமையாக இருந்த பள்ளன் அதை மீட்டுக் கொடுக் கிறான். ஆயின் இன்னொரு நிலப்பிரபுவின் தூண்டு தலினால் சுடப்பட்டு இறக்கிறான். நிலப்பிரபுவின் குடும்பத்தில் பிறந்த பெண்ணொருத்தி இவனுக்குக்கொள்ளி வைக்கிறாள், இதில் பழம் மரபுகளை சமூகத்தில் திணிக்கும் போக்கும் அவற்றிலிருந்து சமூகம் விடுபடத் துடிக்கும்

போக்கும் வெளிப்படலாகின்றன இது ஓர் இடைக்கால நிலைமை. தான் விளக்குவதற்காக எடுத்துக் கொண்டுள்ள கால நியாயங்களைக் கலைஞர் கலையுலக நியாயங்களாகக் காட்டுகிறார்.

சாதியின் வேர்கள் ஆழமாகப் பற்றிப்படர்ந்து நிற்கும் சமூக அமைப்பு ; மத்திய கால அடக்குமுறைகளைத் தொடர்ந்து செயல்படுத்த நினைக்கும் நிலவுடமைக் குடும்பங்கள் ; இவற்றைப் பெருமளவில் ஒத்துக்கொண்டு இவற்றோடு இயங்கிப்போகும் பெரும்பான்மை அடிமைக் குடும்பங்கள் ; இருளில் சில ஒளிக்கீற்றுகள்போல இவற்றோடு முரண்பட்டு எதிர்த்து நிற்கும் சில அடிமைகள் ; கால மாற்றத்தின் நிலையை உணர்ந்துகொண்டு அடிமைகளின் அடிமை நிலையை மாற்ற நினைக்கும் முயற்சியில் தம்மையும் ஈடுபடுத்திக்கொள்ளும் விரல்விடத் தகுந்த சில உயர் சாதிக் குடும்பத்தினர். இன்னோரன்ன பாத்திரங்களை விளக்கும் இந்தப் புதினம் அல்ல; அல்லது, முழுமுற்றான முதலாளியச் சூழலை விளக்க நினைக்கும் புதினமும் அல்ல. இதில் பிறப்பின் அடிப்படையைக் கொண்டு இயங்கும் மனிதர்கள் மட்டுமே இருப்பதற்கில்லை; உருவாகிவந்த தன் மன நிலையால் இயங்கும் மனிதர்களும் உண்டு. கயிலாய பிள்ளை, சந்திரர், சூரியன் ஆகிய நிலப்பிரபுக் குடும்பத்தினரும் இத்தினி, செல்லி, கந்தன் போன்ற அடிமைக் குடும்பத்தினரும் தமக்கு அமைந்த சூழலுக்கு முரண்படாது இயங்குகின்றனர். குடும்ப அடிமை கந்தனுக்கு வட்டிலில் சோறுபோட்டு பித்தளைப் போணியில் நீர்கொடுக்கும் கண்ணம்மா, அடிமை நிலையை மறுத்துரைக்கும் சின்னப்பன் நிலப்பிரபுத்துவ வன்முறைக்கு எதிராக எதிர்வன்முறைப்

பயன்படுத்தும் அண்ணாவி போன்றோர் தத்தம் பிறப்பால் அமைந்த சூழலுடன் ஒத்துப்போகாது, அதை எதிர்த்தும் இயங்குகின்றனர். இத்தகைய இரு வேறுபட்ட சக்திகளை தமது அரசியல் நியாயங்களின் பார்வையில் ஆசிரியர் கலைப்படுத்துகின்றார்.

இலங்கைத் தமிழ்ப் புதின வரலாற்றில் **அடிமைகள்** புதினத்துக்குத் தனியிடம் உண்டு. குறிப்பாக, சாதியை மையப் பிரச்சனையாகக் கொண்டு எழுந்த இலங்கைத் தமிழ்ப் புதின வரலாற்றில் குறிப்பிடத்தக்க தனி இடம் உண்டு. இடைக்காட்டார் எழுதிய **நீலகண்டன் ஒரு சாதி வேளாளன்** (1925) என்ற புதினமே இத்துறையில் முதலாவதாகும். வேளாள நிலப் பிரபுக்கும் பண்டாரப் பெண்ணுக்கும் பிறந்த நீலகண்டன் தன் தந்தையின் சொத்துகளை அடைய இயலாதபடி தடுக்கும் சமூக நீதியை உடைத் தெறிகிறான். சாதி ஏற்றத் தாழ்வுகளை யும் பிரச்சனைகளையும் அவற்றுக்கான தீர்வையும் சமூக நடைமுறையின் வழி காணவில்லை என்ற பெருங்குறைபாடு இப்புதினத்தில் காணப்படினும், இப்பிரச்சனையைத் தொட்ட முதல் புதினம் என்ற பெருமை இதற்குண்டு. இதற்கு அடுத்தடுத்து எஸ். தம்பிமுத்துப்பிள்ளையின் **அழகவல்லி** (1926), எச் நல்லையாவின் **காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி**(1937), முத்த தம்பி செல்லப்பாவின் **சுந்தரவதனா அல்லது இன்பக் காதலர்** (1933), செல்வ நாயகத்தின் **செல்வி சரோஜா அல்லது தீண்டாமைக்குச் சவுக்கடி**(1938) என்பன போன்ற புதினங் கள் வெளிவந்தன. காலம் காலமாக இறுகி வந்துள்ள

சாதியக் கொடுமைகளையும் வேறுபாடுகளையும் கண்டுணர்ந்து இந்தப் புதினங்கள் வெளிப்படுத்தின என்ற பெருமை இவற்றுக்குண்டு; எனினும் இவை, சாதியப் பிரச்சனைகளின் வெளிப்பரிமாணத்தை மட்டுமே கண்டன; வெறும் சமுதாயக் குறபாடு என்றே கண்டன; இத்தகைய முடிவினால், சாதிய வேறுபாடுகளை மனத் தளவில் நீக்குதல், கலப்பு திருமணம் செய்தல், மனிதாபி மான அன்புமுயற்சி, கல்வி கற்று வேறு தொழிலுக்குச் செல்லல், உயர் சாதியினர் காட்டும் தாராளவாதம் போன்ற வற்றினால் சாதியக் கொடுமைகள் தீரும் என நம்பினர். இத்தகைய நம்பிக்கையின் அடிப்படையில், **செங்கை ஆழியான்** (பிரளயம் 1975), **சொக்கன்** (சீதா—1963), **தி. ஞானசேகரன்** (புதிய சுவடுகள்-1977) என்ற கலைஞர் களும் புதினங்கள் படைத்தனர் ஆயின் 1955 தொடங்கி இன்னோர் எழுச்சியும் கலை இலக்கியத் துறையில் எழுந்தது.

இலங்கைத் தமிழ்ப் புதினத்துக்கு (மொத்தத்தில் தமிழ்ப் புதின உலகிற்கு என்றுகூடச் சொல்வதில் தவறில்லை) புதிய பரிமாணத்தைக் கொத்தவரான இளங்கீரனின் **தென்றலும் புயலும்** (1955), சாதியப் பிரச்சனையில் கலாச்சாரப் புரட்சியை ஏற்படுத்தியது எனலாம். இதற்கேற்றாற் போன்று காலதேச வர்த்தமானக் கூறுகள் ஒருங்கு அமையப்பெற்றன எனினும் கூட, இளங்கீரன் என்ற கலைஞன் ஏற்றுக்கொண்ட மார்க்சியத் தத்துவம் கலாச்சாரப் புரட்சிக்கான வித்தாக இருந்தது. சாதிப் பிரச்சனைகளையும் முரண்பாடுகளையும் மார்க்சிய

நோக்கில் கண்ட முதல் புதினமான **தென்றலும் புயலும்** என்பதில் சில அம்சங்களைக் காண்கிறோம். தாழ்த்தப் பட்டோரின் மீது உயர்சாதி அடக்குமுறை; உயர்சாதியினர் இழிந்து போன நேரத்திலும் சாதிக் கவுரவத்தையும் வெறியையும் விட மறுத்தல்; உயர்சாதியின் கொடுமைக்கு எதிராக தாழ்த்தப்பட்டோர் ஒருங்கிணைதல்; உயர்சாதி யினரில் ஒருசிலர் தாழ்த்தப்பட்டோருடன் இணைந்து கொண்டு சாதி எதிர்ப்புக்குரல் கொடுத்தல்; இளங்கீரன் புதினத்தில் காணப்படும் இத்தகைய பொதுவான அம்சங் களை இவர் வழிவந்த கலைஞர்களின் புதினங்களில் காண்கிறோம்.

செ. கணேசலிங்கனின் **நீண்டபயணம்** (1965), **சடங்கு** (1966), **போர்க்கோலம்** (1969), **மண்ணும் மக்களும்** (1970), கே. டானியலின் **பஞ்சமர்-1** (1972, 1982), **கோவிந்தன்** (1982), தெணியானின் **விடிவை நோக்கி** (1973), செ. யோகநாதனின் **காவியத்தின் மறுபக்கம்** (1976) ஆகிய புதினங்கள் இளங்கீரனின் கலை நியாயத்தின் பாற்பட்டவை எனலாம். இந்தக் கலைஞர்கள் சாதியை அதன் வெளித்தோற்ற அளவில் மட்டும் காணவில்லை; வெறும் கொடூரங்களின் தொகுப் பாக மட்டும் சித்திரிக்கவில்லை. அதன் உள்பரிமாணத்தில் வைத்துக் காண்பதால் அதற்கும் சமூகத்துக்கும் உள்ள உறவைக் காண்கின்றனர். சமூக அமைப்பின் தன்மைக்கும் சாதிய வடிவங்களின் தோற்றத்துக்கும் இணைப்பு காண் கின்றனர். நிலவுடமைத்துவ சமூக அமைப்பின் கொப்பூழ் கொடியிலிருந்து தோன்றிய சாதியை அதன் பல்வேறு

மாறுபாடுகளோடு காண்கின்றனர். இன்றைய அரை நிலவுடமைத்துவ அமைப்பின் உற்பத்தி உறவு வடிவாகக் காணப்படும் சாதிய வடிவங்களின் இன்றியமையாத தன்மையைக் காண்கின்றனர். இவ்வாறு சாதியை விளங்கிக்கொள்வதில் ஏனைய சமரசக் கலைஞர்களுடன் வேறுபடுகின்றனர். விளங்கிக்கொள்வதிலேயே வேறுபாடு இருப்பதனால், அதை மாற்றியமைக்கும் தீர்விலும் வேறுபாடு கொண்டுள்ளனர். சமூகப்பிரிவுகளுக்கு இடையிலான சமரசம், மனிதாபிமானமிக்க பெரியோர்களின் கருணைச் செயல்கள், அடக்கும் வர்க்கங்களுக்குக் கால் கை பிடித்து விட்டுக் காவடி தூக்கும் சட்ட நிறுவனங்கள் இயற்றும் தாராளவாத சட்டங்கள் ஆகிய எவற்றினாலும் சாதியை நீக்க இயலாது எனக் குறிப்பிடுகின்றனர். புரட்சிகரத் தத்துவத்தால் வழிநடத்தப்படும் நீண்டகால மக்கள் போராட்டத்தால் மட்டுமே தீர்க்கமுடியும் என்று உறுதியாக எண்ணிக்கொண்டு, அதை நோக்கிய ஒவ்வோர் அடியையும் தமது புதினங்களில் படைக்க முயல்கின்றனர். அடக்கப்படும் மனிதனிடத்தில் அடிமைத்தனமும் போர்க் குணமும் உண்டு. காலந்தோறும் அடக்கப்பட்டுக்கொண்டே வருவதனால் அடிமைத்தனமும் மாறிவரும் சூழலுக்கேற்ப போர்க்குண வளர்ச்சியும் உண்டு. இத்தகைய போர்க் குணத்தைக் கீறி வெளிப்படுத்தி, மனிதனுக்குப் புலப் படவைக்கும் புரட்சிகரப் பணியை இந்தப் புதினங்கள் இலக்காகக் கொண்டுள்ளன. இந்தப் பணியில் இவை அடையும் வெற்றி தோல்வி அந்தந்தக் காலகட்டத்தின் சிறப்புக் குணாம்சங்களைப் பொறுத்துள்ளதெனினும், நீண்டகாலக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது இவற்றுக்கான வெற்றியை எந்த சக்தியாலும் தட்டிப் பறிக்க இயலாது.

கே. டானியல் நீண்டகாலமாகவே ஒரு விமரிசனத்துக்கு உட்பட்டு வருகின்றார். இவரது படைப்புகள் அனைத்தும் சாதிப் பிரச்சனையை மையமாக வைத்து எழுதப்பட்டவை என்பதே அது. பஞ்சமர், போராளிகள் காத்திருக்கின்றனர்', கோவிந்தன் என்ற புதினங்களும் டானியல் கதைகள், உலகங்கள் வெல்லப்படுகின்றன என்ற தொகுப்புகளில் உள்ள கதைகளும் இக்கருத்துக்கு ஆதாரமாகக் காட்டப்படுகின்றன. இந்த விமரிசனத்துக்கு அடிமைகள் விதிவிலக்காக இருக்கப் போவதில்லை. ஒரு கலைஞனின் படைப்புகளில் பல வகைப்பாடுகள் காணப்படவேண்டியது அவசியம்; ஒரே படித்தானதாக இருக்கக் கூடாது என்பதும் அவசியம். எனினும், அந்த வகைப்பாடுகளை அவன் சமூகத்திலிருந்துதான் எடுக்க இயலும். தனது சமகால சமூகத்திலிருந்துதான் கலைஞன் விஷயங்களைப் பொறுக்க இயலும். ஆனால் எந்த விஷயங்களைப் பொறுக்குவது? தனது சமகால அரை நிலவுடமைச் சமூகத்தின் கொடுமைகளைப் புரிந்துகொண்டு அவற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் பணிக்கு தன் கலையை அர்ப்பணிக்கும் கலைஞன், அரை நிலவுடமைக்கும் மக்களுக்கும் உள்ள முரண்பாட்டையே பிரதானமாகக் கொள்ளமுடியும். அத்தகைய நோக்கில் அரை நிலவுடமைச் சுரண்டல் வடிவங்களுள் ஒன்றான சாதி ஒரு விஷயமாகக் கலைஞனுக்குத் தென்படுகிறது. இத்தகைய நேரத்தில் சமூக மாற்றத்துக்கே சாதியுணர்வு பெருந்தடையாக மாறி விடும் அபாயத்தைக் கண்டுகொண்ட கலைஞன் அதை ஒரு விஷயமாக்குகிறான். இத்தகைய கண்ணோட்டத்தில் கே. டானியல் சாதியைக் கையாள்கிறார் என நான் நினைக்கிறேன். ஆனால், அரை நிலவுடமைச் சமூக

அமைப்பில் எதிர்புரட்சிகர வடிவங்கள் பல உண்டு என்ப தையும் மனித சமூகத்தைப் பாதிக்கும் விஷயங்களும் பல உண்டு என்பதையும் சாதிப் பிரச்சனையைக்கூட இன்னும் பல்வேறு வெளிப்பாடுகளில் புலப்படுத்த இயலும் என்பதை யும் இங்கே சுட்டிக்காட்டுதல் பொருத்தமாகும். அரை நிலவுடமைத்துவ முறையினதும் பண்ணை அடிமை முறை யினதும் பிடிப்புகள் இன்னும் அசைக்கப்படாத காலசட்டத் தில் சாதியப்பிரச்சனைகள் உள்ளிட்ட சகலவிதமான கொடுமைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் கலையளவில் சித்திரிக்கப்படல் காலநியாயமே. சாதி ஒரு விஷயம்; ஆனால், சாதி ஒரே விஷயம் இல்லை. புரட்சிகர மாற்றத்தை எதிர்நோக்கும் சமூகத்தில் எழுதப்படவேண்டிய விஷயங்கள் ஏராளம். நாம் எடுத்து விளக்கவேண்டிய கருத்துகளும் ஏராளம். எனினும் கலைஞர்கள்—தொடர்ந்து கலைப் படைப்புகளில் ஈடுபடும் கலைஞர்கள் மிகவும் குறைவு. அந்த விதத்திலும் இக்கருத்தை வலியுறுத்தல் பொருத்தமாகும்.

உழைக்கும் மக்களிடத்தில் உள்ள சாதியுணர்வுகள் குறித்தும் தமக்கிடையில் அவர்கள் பேணும் சாதி வேறுபாடு கள் குறித்தும் கே. டானியல் குறிப்பிடும் கருத்து யதார்த்த மானவை. அதைப்போன்று நிலப்பரபுத்துவ வர்க்கத்தில் உள்ள சாதி உணர்வுகள் குறித்தும் அவர்கள் தமக்கிடையில் பேணும் சாதி வேறுபாடுகள் குறித்தும் குறிப்பிடும் கருத்து உள்ளது: நிலப்பிரபுக்கள் தமக்குள் முரண்பட்டுக் கொண்டிருந்தாலும் வர்க்க நலன் கருதி விரைவில் ஒன்று பட்டுக்கொள்வர். இலங்கையில் புகைவண்டிப்போக்குவரத்து அறிமுகமாவதால் தம் நலன்கள் பாதிக்கப்படும் என

உணர்ந்த காலத்திலும், அடிமைகள் ஒன்றிணைந்து தம்மை எதிர்க்க முனைகிறார்கள் என்ற நேரங்களிலும் நிலப் பிரபுக்கள் ஒன்றிணைகிறார்கள். இதில் சாதி, இனம், கட்சி, சமயம் என்ற பேதாபேதம் கிடையாது. கே டானியலோ அவரைப் போன்றவர்களோ கூறுவதனால் இக் கருத்தை சிலர் ஒப்புக்கொள்ளத் தயங்கக் கூடும். இன அடிப் படையில் கட்டப்பட்ட ஓர் இயக்கத்தின் மூளையும் முது கெலும்புமாக இருந்து பின்னர் சாதி, சமய சமரசங்களுக்குட் பட்ட சி. என். அண்ணாதுரை **ஜமீன் இனாம் ஒழிப்பு** என்ற நூலில் தன்கொள்கையை மீறிய சமூக யதார்த்தத்தை ஒப்புக்கொள்கிறார்.

"தஞ்சை மாவட்டத்திலே சாம்பசிவ ஐயர் – சாமியப்பா முதலியார்—ஆரியர் திராவிடர் என்று நாம் நினைக்கிறோம். ஒருவரைக் காங்கிரஸ் என்றும் மற்றவரை ஜஸ்டிஸ் என்றும் சொல்கிறோம். அவரவர்களுக்கு வேறுவேறு கொடி இருப்பதாக நாம் எண்ணுகிறோம். பெருமையுடன் பேசிக் கொள்கிறோம். குத்தகைத் தகராறா – வாரத் தகராறா இவைகளின் காரணமாகக் கிளர்ச்சிகள் நடக்கும் போது என்ன காண்கிறோம்? ஆரிய சாம்பசிவ ஐயரும் திராவிடச் சாமியப்பாவும் காங்கிரஸ் மந்திரி பாஷ்யம் ஐயங்காரிடம் பேசி, திராவிடக் கந்தசாமியின் கொட்டம் ஒழிக்கப்பட வேண்டுமென்று மந்திராலோசனை செய்யும் வேடிக்கையை —வேடிக்கையா அது? — வேதனை!... ஆரியமும் திரா விடமும் இந்த விஷயத்தில் ஒன்றாகி நின்றது - பண்ணை யார் என்ற உருவில் "

(ஜமீன் இனாம் ஒழிப்பு, திராவிடப் பண்ணை, திருச்சி 1975 பக் 18—19)

ஆரியமாயினும் திராவிடமாயினும், ஜஸ்டிஸ்கட்சியாயினும் காங்கிரஸ்கட்சியாயினும்'திராவிடக் கந்தசாமியை'—அதாவது பண்ணையாள் கந்தசாமியை ஒடுக்க நினைக்கிறது சாதி, சமயம், இனம், கட்சி போன்றவற்றை நிலப்பிரப்புக்கள் பேணிக் கொண்டு வருகின்றனரெனினும் இவை அனைத்தும் கடந்த வர்க்கவுணர்வு உண்டு; அல்லது தம் வர்க்க நலன்களுக்காக இவற்றைப் பயன்படுத்திக்கொள்வர்.

ஆயின் உழைக்கும் மக்கள், சாதி சமயம் இனம் கட்சி போன்ற ஆயிரம் இரும்பு வேலிகளைத் தாண்டி. ஒரு வர்க்கமாகத் தொகுத்துக் கொள்வதற்கு எண்ணற்ற தடைகள் உண்டு. இவை அனைத்தும் கருத்தியல் தடைகள். இந்தக் கருத்தியல் தடைகளை மீறி இவர்கள் ஒன்றிணைவதில்—இவர்களை ஒன்றிணையச் செய்வதில்தான்—இவர்கள் விடுதலை அடங்கியுள்ளது. ஒரு கீழ்சாதிக் கூலி, தனக்குக் கூலி குறைத்துக்கொடுக்கும் தனது சாதிமுதலாளியை எதிர்த்துப் போராடுவதில் தயக்கம் காட்டுகிறான். முதலாளியை முதலாளி எனக் காணாது, தனது சாதிக்காரன் எனப் பார்க்கப் பழக்கப்படுத்தப்படுகிறான். இதைப் போன்றே உயர்சாதிக்காரனுக்கும் ஒரு சிக்கல் உண்டு. உயர் சாதிக்காரன் காலப் போக்கில் தன் செல்வத்தை இழந்த பின்னாலும் தனது உயர் சாதிக் கித்தாப்பை விட மறுக்கிறான்; இங்கே இவர்கள் பொருளியலுக்கு முரணான கலாச்சார சிந்தனை உள்ளது. இங்கே இவர்கள் சிந்தனை ஒரு போலி வாழ்நிலையைப் படைத்துக்கொண்டிருக்கிறது. இதைக் **கலாச்சாரப் பிரமைகள்** எனலாம். இந்தப் பிரமைகளைச் சுக்குநூறாக உடைத்தெறிவதும் புதிய யதார்த்தத்துக்கான பாதைகளைச் செப்பனிடுவதும் புரட்சிகர கலை

இலக்கியத்தின் பணியாகும். சாதிபற்றிய இத்தகைய புதினங்கள் இத்தகைய பணியை இலக்காகக் கொண்டிருப் பதால், வர்க்க அணி சேர்ப்புக்குச் சேவகம் செய்கின்றன எனலாம்.

நிலவுடமைக் காலத்தில் பிறவியின் அடிப்படையில் தொழில்கள் அமைந்தன. **குலத்தொழில் கல்லாமல் பாகம் படும்** என்பது சமுதாய நடைமுறையிலிருந்து எழுந்ததாகும். ஒரு சாதியில் உள்ளோர் ஒரே தொழிலைச் செய்யும் வாய்ப்புப் பெற்று, சமூக உற்பத்தியில் குறிப்பிட்ட இடம் வகித்தனர்; இதனால், சமூக விளைச்சலில் அதற்கென உரிய பங்குக் கிடைத்தது. இப்படி நிலவுடமைக் காலத்தில் **ஒரு சாதி ஒரே வர்க்கமாகத்** (Caste as one class) திகழ்ந்தது. ஆயின் அதற்குப் பின் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து உருவான அரை நிலவுடமைக் காலத்தில் இது குறித்து சில மாற்றங்கள் ஏற்பட்டன. அடிநிலைச் சாதியினரில் மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட குடும்பங்கள், சில சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு தம் பரம்பரைத் தொழிலை மாற்றிக்கொண்டு சமூக உற்பத்தி யில் வேறுபட்ட பங்கு ஆற்றுகின்றன; இதைப் போன்று சமூகத்தின் உயர் நிலைச் சாதியினரிலும் குறிப்பிட்ட எண்ணிக்கை அளவு குடும்பங்கள் இழிந்துபோய், சமூக உற்பத்தியில் அதற்கு முன் தமது சாதிக்கென இருந்த பங்கிலிருந்து வழுவித் தாழ்ந்து போயின. எனவே, இன்றைக்கு சாதி, நிலவுடமைக் காலத்தில் இருந்ததைப் போன்று ஒருமுகத் தன்மை கொண்ட அமைப்பாக (honogenous-structrue) இல்லை என்பது உண்மையே, இன்றைக்கு ஒரு சாதியை எடுத்துக்கொண்டு ஆய்ந்தால்

அதில் உள்ளோர் முழுமைக்கும் ஒரே தொழிலையே இன்று செய்து கொண்டிருக்கின்றனர் எனக் கூற இயலாது. ஆனால், பெரும்பாலான சாதிகளில் உள்ள பெரும்பான்மை சதவீதத்தினர் இன்றைக்குத் தமது பரம்பரைத்தொழிலில் — அதை மரபு ரீதியாகவோ நவீனப்படுத்தியோ — ஈடுபட்டுள்ளனர் எனத் தெளிவு. பள்ளர் சாதியை எடுத்துக் கொண்டால் மிகக்குறைந்த சிலர் கூலி விவசாயத்தொழில் அல்லது வேறு தொழிலையும் செய்கின்றனர். ஆனால், இறுதிப் பெரும்பான்மை, கூலி விவசாயி களாகவே உள்ளனர். பிராமணர் சாதியை எடுத்துக்கொண்டால் சிறு அலுவலர்களாகவும் பெரிய அலுவலர்களாகவும் சமூக அறிவு ஜீவிகளாகவும் உள்ளனர்; மிகக் குறைந்த சிலரே வேறு தொழில்களில் ஈடுபட்டு உள்ளனர். எனவே நிலவுடமைக்காலத்தில் இருந்ததைப் போல ஒரு சாதி, ஒரே வர்க்கம் என்ற நிலையில் முழுமையாக இல்லை. அது சிதைந்துள்ளது. ஆனால் முழுமையாக இல்லை. ஒரே சாதிக்குள் அதன் பரம்பரைத்தொழில் பெருமளவு மக்களால் பேணப்படுகிறது எனினும் பிறவித் தொழில் அல்லாத தொழில்களும்பேணப்படுகின்றன. எனவே, **இன்றைக்கு ஒரே சாதிக்குள் ஒரே வர்க்கம் என்பது பெரும்பான்மைப்பங்கையும் ஒரேசாதிக்குள் பலவர்க்கம சிறுபான்மைப்பங்கையும் பெறுகின்றன.** இன்றைக்கு நாட்டுக்கோட்டை செட்டியார் சாதியில் வட்டி மூலதனம் கொண்டு இயங்குபவர்களும் உண்டு; அலுவலகத்தில், கல்லூரியில் வேலைபார்த்து வயிற்றைக் கழுவுபவர்களும் உண்டு. ஆயின், எது பிரதானமாக அமைகிறது? எது பிரதானமற்றதாக இருக்கிறது? வட்டிமூலதனவழி வாழ்க்கை

நடத்தும் செட்டியார்களே பிரதானமாக உள்ளனர். இவர்கள் வட்டிக்கு விடும் முறை இன்றைக்கு நவீனமயப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால், நாட்டுக்கோட்டை செட்டியார் என்றால் நமக்கு வட்டிக்காரரே கண் முன்வருகிறார். எனவே, இதுதான் பிரதானமாக உள்ளது. இன்றைய அரை நிலவுடமைச் சமூக அமைப்பில் நிலைமை மாறியுள்ளது என்பதை ஒப்புக்கொள்ளும் அதே நேரத்தில், ஒரு சாதிக்குள் ஒருவர்க்கம் என்பது பிரதான அம்சமாகவும் அதே சாதிக்குள் பலவர்க்கங்கள் என்பது பிரதான மற்றதாகவும் காணப்படுகிறது. ''நாற்று நடும் பாப்பாத்தியைக் கண்டதுண்டா ? ''ஐ. ஏ. எஸ்., படித்தாலும் அரிசன் அர்ச்சகனாக முடியுமா?'' என்பன போன்ற தமிழ்நாட்டிலுள்ள திராவிடர் கழகச் சுவரெழுத்துகளிலும் முழக்கங்களிலும் உண்மை குரூரமாக வெளிப்பட்டாலும், அவற்றுக்கு சமூக யதார்த்தம் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. இந்நேரத்தில் சாதிபற்றிய இலக்கியங்கள் பிரதானமாக வர்க்கநோக்கிலேயே அமைந்து விடுகின்றன. உழைக்கும் சாதியினர் குறித்த இலக்கியமும், அவர்களது ஒன்றிணைவை மையப்படுத்தும்போதும் அவர்கள் மத்தியில் உள்ள கலாச்சாரப் பிரமைகளைச் சுக்கு நூறாக உடைக்க முயலும்போதும் வர்க்க அணிசேர்ப்புக்குச் சேவகம் செய்கிறது எனலாம். ஆனால், இங்கே பிரச்சனை என்னவெனில், இளங்கீரன் வழிவந்த கலைஞர்கள் பலர் இது குறித்து எழுதப்படவேண்டியவை ஏராளம் என்பதாகும்.

ஒரு மார்க்சியவாதி, இந்தியாவிலும்சரி இலங்கையிலும் சரி, அவன் அரை நிலவுடமைச் சமூகத்தை எதிர்ப்பதனால்

அவன் சாதிக்கொடுமைகளை எதிர்த்துப் போரிட்டாக வேண்டும். ஆனால், அரைநிலவுடமை என்பதை நிலவுடமையின் மிச்சசொச்சங்கள் என எண்ணிய பல மார்க்சிய வாதிகள், மலைப்பாம்பை மண்புழுவாகக் கணக்கிட்டுக் கத்தி சுழற்றினர். இந்தியாவிலும் இலங்கையிலும் அழுத்தந் திருத்தமாகப் பதிந்துள்ள தரகு முதலாளியத்தை (இரண்டு நாடுகளில் உள்ள தரகு முதலாளியத்துக்குள்ள அளவு வேறுபாடுகளை நாம் இங்கே நினைத்தல் அவசியம்) தேசிய முதலாளியமாகக் கருதியதனால் இவர்களால் அரைநில வுடமைத்துவ மலைப்பாம்பைக் கவனிக்க இயலவில்லை. எனவே இவர்களுக்கு அரை நிலவுடமைத்துவ சுரண்டல் வடிவமான சாதி ஒரு பிரச்சனையாகத் தென்படவில்லை. எனவே நிலவுடமையின் மிச்சசொச்சமாக இவர்கள் நினைத்த சாதியை நீக்க, வெறும் ஊர்வலம் சென்றாலே போதும் என எண்ணினர். சூரபதுமன் பல்வேறு மாயா வடிவங்கள் எடுத்ததைப்போன்று பலவடிவங்களை எடுத்து நிற்கும் சாதி, ஆயிரக்கணக்கான எஃகு நாக்குகளை இன்றைக்கும் சுழற்றிக் கொண்டிருக்கிறது. இவர்கள் அதைப் பஞ்சு ஈட்டியால் பதம் பார்க்கப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆயின் அரை நிலவுடமைச் சமூக அமைப்பின் சாதிக் கொடுமைகளை எதிர்க்கத் துணிந்த கலைஞன், அமில வார்த்தைகளால் அவற்றை அம்பலப் படுத்தவேண்டும்; அக்கொடுமைகளுக்கு எதிராகக் கலை இலக்கியப் போர்க் கோலம் பூணுதல் வேண்டும். அத்தகைய அம்பலப்படுத்தலையும் போர்க்கோலத்தையும் இந்தப் புதினத்தில் காண்கிறோம். இது ஒரு நீண்டபயணம் ஆகும்; மண்ணுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு சரி செய்யப்படும் போது இது தீர்க்கப்படுவற்கான வாய்ப்புகள் உண்டு

உயர்சாதிக்காரர்களுக்குக் கீழ்சாதியில் உள்ள அனைத்தும் சொந்தம். இது எழுதப்படாத சமூகநீதி' உயர்சாதி ஆடவர்களின் பாலுறவுக்காக திறந்த வெளிச் சந்தையாகவே கீழ்சாதிப் பெண்கள் வைக்கப்பட்டுள்ளனர். ராஜாக்கள் காலத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் இத் தகைய கொடுமைகள், இன்றைய வரலாறாகவும் இருப் பதற்குப் பத்திரிகைச்செய்திகளே சான்றாக விளங்குகின்றன. கீழ்சாதியில் உள்ள அனைத்தும் தமக்குச் சொந்தம் என்ற நிலவுடமைக் குணாம்சமே இதன் அடிப்படை விதியாகும். பல்வேறு சுரண்டல்களில் இது படுமோசமான—பல மனோ தத்துவச் சிக்கல்கொண்ட வடிவமாகும். சாதியக் கொடுமை களைச் சித்திரிக்கும் கலைஞன் இதைத் தொடுதல் அவசிய மாகும். ஆனால், கதையைக் கொண்டுசெல்லும் போக்கில் உயர்சாதி ஆடவர்களின் பாலுறவு ஒழுக்கக் கேடுகளை அம்பலப்படுத்தும் போக்கு, படைப்பின் பிரதானமாக மாறி விடாதபடி பார்த்துக்கொள்தல் மிக அவசியம். ஆனால் சாதி குறித்த பெரும்பாலான புதினங்களில் இது உணரப் பட்டதாகத் தெரியவில்லை கே டானியலின் இந்தப்புதினம் உள்ளிட்ட ஏனைய புதினங்களிலும் இது உணரப்பட்டதாகத் தெரியவில்லை. ஆயின், இன்னொருவன் மனைவியைப் பெண்டாள நினைத்தல் என்பது இராமாயண காலத் திலிருந்து கதைக்கருவாக அமைந்துள்ளது. ஆடவர்களின் தனியுடமைப் பொருள்களில் மிக மதிப்புவாய்ந்த பொருளாக பெண் மதிக்கப்பட்டாள், "பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்றே வள்ளுவரும் கேட்கிறார்; ஒருவனின் தனியுடமைப் பொருள்களோடு பெண்களையும் அஃறிணைப் பொருளாகச் சேர்த்து எண்ணும் பழக்கம் சோழர் காலத்தில் இருந்ததைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இன்றைக்கும் கூட

வீடுகளில் பெண்களை அழைக்கும் பொழுது அஃறிணை விகுதிகளில் அழைக்கும் பழக்கம் உண்டு. எனவே கீழ்சாதி ஆடவர்களின் மதிப்புமிகு பொருளாகக் கருதும் பெண்களை உயர்சாதியினர் போகப் பொருளாகக் கருதல், சாதியக் கொடுமையின் மோசமான, இழிவான வடிவமாகும். இக் காரணத்தினால் கூட இத்தகைய சித்திரிப்புகள் வந்திருக்கக் கூடும்; அல்லது புதினப் படிப்புக்கு உரிய சுவாரசியத் தன்மை கருதி வந்திருக்கக் கூடும். எனினும், இது பிரதான மாக மாறி விடாதபடி பார்த்துக் கொள்தல் அவசியம். அதோடுமட்டுமின்றி, உயர்சாதி ஆடவர்கள் கீழ்சாதிப் பெண்களைப் போகப்பொருளாக நினைத்துக்கொண்டதற்கு எதிராக உயர்சாதிப் பெண்கள் தம் கணவரைத்தவிர வேறு ஆடவர்களையும் போகப் பொருள்களாக ஆட்கொள்தல் காட்டப்படுகிறது. **பஞ்சமரில்** வரும் கமலாம்பிகை, **கோவிந்தனில்** வரும் அழகம்மை நாச்சியார், கண்ணி; **அடிமைகளில்** வரும் சந்திரரின் மனைவி ஆகியோர் இப்படிச் சித்திரிக்கப்படுகின்றனர். இப்படி இலக்கியத்தில் காட்டும் போக்கு, உயர்சாதி ஆடவர்கள் கீழ்சாதிபெண்களை போகப் பொருளாக நினைக்கும் யதார்த்தப் போக்கிற்கு இலக்கியப் பழிவாங்கலாக உருமாறி ஒருவிதமான போலி மனநிறைவைத் தர முயல்கிறது இத்தகைய போலிமனநிறை வுகள், புரட்சிகர கலை இலக்கியத்துக்குப் பலம் சேர்க்காது. புதினத்தைக் கொண்டுசெல்வதற்குரிய சுவாரசியமான கலையுத்தி என்ற அளவில் கூட இதைப் பயன்படுத்துவதில் தவறு ஏற்பட வாய்ப்புண்டு.

இன்றைய கால கட்டத்தில் மூன்றாவது உலகநாடு களில் இரண்டு முரண்பாடுகள் அடிப்படையாக உள்ளன

ஏகாதிபத்தியத்துக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு; அரைநிலவுடமைக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு என்பன. ஏகாதிபத்தியத்தையும் நிலவுடமையையும் தூக்கி எறிந்தாலன்றி மக்களுக்கு விடுதலை இல்லை. மூன்றாவது உலக நாடுகளில் நிலவுடமையை முற்றிலும் அழிக்க இயலாதபடி, ஏகாதிபத்தியம், சரியும் பந்தலுக்கு முட்டுக்கொடுத்து கொண்டிருக்கிறது. நிலவுடமையின் அழிவு என்பது காலனிய முறை அழிவாகும். உள் நாட்டுத் தரகு முதலாளிகளின் வழி ஏகாதிபத்தியம் நிலவுடமைத் துவத்தோடு சமாதான சகவாழ்வு கொண்டுள்ளது. இத்தகைய ஏகாதிபத்திய – நிலவுடமைக் கலாச்சாரத்தைத் தூக்கி எறிந்தாலன்றி மக்கள் கலாச்சாரத்தை நிறுவ இயலாது. இத்தகைய கண்ணோட்டத்தில் அரைநிலவுடமையின் ஆதாரப்பிடிப்பான சாதியையும் சாதிக்கொடுமைகளையும் அங்குலம் அங்குலமாக அலசி ஆராய்ந்து அறுத்தெறியும் நோக்குள்ள இலக்கியங்கள் சாலப் பொருத்தமானவை ஆகும்.

ஆயினும் அடிப்படைமுரண்பாடுகளுள் ஒன்றை மட்டுமே கையாள்வதைவிட இரண்டையும் கையாள்தலும் வேண்டும். மேலும் இந்த அடிப்படை முரண்பாடுகளுக்குள்ளே இருந்து பிரதான முரண்பாடாக பரிணமித்த ஒரு முரண்பாடு எப்போதுமே பிரதானமாக அமைந்துவிடுவதும் இல்லை. பிரதானமுரண்பாடு என்பது ஒவ்வொரு நாட்டின் சூழலையும் சமூக சக்திகளின் சேர்க்கையையும் பொறுத்து உள்ளதாகும். எனவே பிரதானமாக உள்ள ஒன்று பிரதானமற்றதாகவும், பிரதானமற்றதாக உள்ள ஒன்று பிரதானமாகவும் மாறுதல் இயக்கவியலாகும். சமூகத்தைச் சரியாகக் கவனிக்கும் மார்க்சியவாதி இதைக் கவனிக்க வேண்டும். இல்லையெனில் வரலாறு அவன் கையிலிருந்து நழுவிவிடும்.

இலங்கை இரண்டு தேசிய இனங்கள் வாழ்கின்ற நாடாகும். சிங்களவர், தமிழர் என்ற இரண்டு தேசிய இனங்களையும் சுரண்டிக் கொழுத்துக் கொண்டிருக்கின்ற மேலை ஏகாதிபத்தியம், தனக்கும் இலங்கை மக்களுக்கும இடையிலான முரண்பாட்டை மறைக்க முயல்கிறது. இரண்டு தேசிய இனங்களுக்கும் இடையிலான வரலாற்று ரீதியிலான வேறுபாடுகளைப் பகைமை ஆக்கி, சிங்கள தேசியப் பேரின வெறியைக் கிளப்பி, எதிர்ப்புரட்சிகரச் செயல்களின் ஊற்றுக் கண்ணாக இருக்கிறது. ஏகாதிபத்தியம் சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கத்தினர் ஊடாக, சிங்களவர்களையும் தமிழர்களையும் சுரண்டுகிறது. இக்கட்டத்தில் சிங்களப் பேரினவாதத்தை சமரசமற்ற விதத்தில் எதிர்த்து தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தமிழர்களின் அரசியல் சக்தி, ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்டதாகும். ஏகாதிபத்தியத்துக்கும் மக்களுக்கும் இடையீலான முரண்பாடே இன்றைக்கு இலங்கையில் பிரதானமாக அமைந்துள்ளது. நிலவுடமைக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டைச் சரியாகக் கையாண்டு சமகால வரலாற்றைப் புதினமாக்கிப் புரட்சிகர கலை இலக்கியத்தின் போர் வாளாகத் தன்னைப் பரிணமித்துக்கொண்ட கே டானியல் ஏகாதிபத்தியத்துக்கும் மக்களுக்குமான முரண்பாட்டிலும் ஏகாதிபத்தியத்தின் தாக்குதலைத் தடுக்கும் கேடயமாக விளங்கவேண்டும் என்பது பேராசை அன்று.

புரட்சிகரக்கலை இலக்கியம், எதிர்ப்புரட்சிகர சக்திகள் மீது வீசப்படும் போர்வாள்; எதிர்ப்புரட்சிகர சக்திகளிடம் இருந்து மக்களைக் காக்கும் கேடயம் எனவே மக்களைப் பாதிக்கக்கூடிய எந்தப் பிரச்சனையையும் இலக்கியமாக்கும் தோழர் கே டானியலிடமிருந்து இதையும் எதிர்பார்க்கிறோம்

கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே.

*சென்னை 5*
*12—3—1984*

**கோ. கேசவன்**

# அடிமைகள்-

# அறிமுக விமர்சனம்

—மனோன்மணி சண்முகதாஸ்

ஈழத்து எழுத்தாளர்களின் வரிசையிலே கே. டானியல் பலராலும் அறியப்பட்ட ஒருவர். தனது எழுத்தினால் மட்டுமன்றி வாழ்வினாலும் மக்கள் மனதில் இடம் பெற்றவர். தனிமனிதனாக அன்றிப் பல்வேறு இயக்க பூர்வமான நடவடிக்கைகளாலும் தன் வரலாற்றைச் சிறப்பித்தவர். ''பஞ்சமர்'', ''கோவிந்தன்'' என்னும் இரு நாவல்களின் ஆசிரியர் என்ற வகையில் தமிழகமும் அவரைத் தெரிந்து வைத்திருக்கின்றது. இப்போது ''அடிமைகள்'' என்ற மூன்றாவது நாவலின் மூலம் அவர் எழுத்தின் தேவையையும் மதிப்பீட்டினையும் உணரவுள்ளது.

''அடிமைகள்'' நாவல் தமிழர் மத்தியிலே நேர்மையான முறையிலே அறிமுகம் செய்யப்படவேண்டிய ஒருநாவலாகும். யப்பான் நாட்டிலே ஒரு நூல் வெளியிடப்படும்போது அந்நூலுக்கான விமர்சனத்தையும் சேர்த்து வெளியிடும் வழக்கம் இருக்கின்றது. இதனால் நூலின் தரமறிந்து அதனை வாசிக்க முடிகின்றது. ஆயிரக்கணக்கில் அங்கு நூல்கள் வெளியிடப்படுவதால் வாசகர்களின் உதவிக்காக அவ்வாறு செய்கின்றனர். ஆனால், தமிழிலே நூல் வெளியாகும்போது இத்தகைய தேவை என்ன என எண்ணவும் இடமுண்டு. இன்னும் அத்தகைய வழக்கம் தமிழ்நூல் வெளியீடுகளைப்

பொறுத்தவரையில் மிகக் குறைவு என்றுங் கொள்ளலாம். "அடிமைகள்" நாவலுக்கான அறிமுகமாகவும் விமர்சனம் நூலுடன் சேர்ந்து வெளிவரவேண்டியுள்ளது.

தமிழர்களாக இருந்தபோதும் ஈழத்து தமிழர்களிடையே தனித்துவமான அம்சங்கள் பலவுள்ளன. அவற்றை அங்கிருந்து வெளியாகும் நூல்களில் சிறப்பாக நாவல்களே எடுத்து விளக்கியுள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைக் களமாகக் கொண்டெழுதப்பட்ட ஆரம்பகால நாவல்களாயினுஞ் சரி, பிற்கால நாவல்களாயினுஞ் சரி இப்பணியினை ஏற்றுள்ளன. இதனால், எதிர்காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பற்றிய ஆய்வுகளுக்கான பல தகவல்களைத் தருகின்ற தரவுகளாகவும் சிறப்புப்பெறவுள்ளன. இந்த வகையிலே "அடிமைகள்" நாவலின் மதிப்பீட்டைச் சுருக்கிக் கொள்ளாமல் ஏனைய விமர்சனத்துக்குரிய அம்சங்களிலும் இணைத்துப் பார்க்கவேண்டும். அதுவே தற்காலத்துத் தமிழ் வாசகர்களுக்குத் தேவையானதுமாகும்.

"பஞ்சமர்", "கோவிந்தன்" என்னும் இரு நாவல்களோடும் அடிமைகளை ஒப்பிடும்போது சில அம்சங்களில் ஒற்றுமையையும் சில அம்சங்களில் வேற்றுமைகளையும் காண முடிகின்றது. சாதியமைப்பினால் வேறுபட்டவர்களாயினும் மக்கள் எல்லோரும் வர்க்க அடிப்படையில் ஒன்றுபட்டு நில ஆதிக்கக்காரர்களிடமிருந்து விடுதலை பெறவேண்டுமென்பதையே 'பஞ்சமர்' கோட்பாடாகக்கொண்டு நாவல் வடிவம் பெற்றுள்ளது. 'கோவிந்தன்' நலிந்தவர்கள் வாழ்க்கையின் செல்நெறியினை மாற்றியமைக்க வேண்டுமெனும் கருத்துடன் உருவாகியுள்ளது. ஆனால், அடிப்படையாக யாழ்ப்பாணத்துச் சாதியமைப்புப் பற்றிய தெளிவினை ஏற்படுத்தும் பணியில், இரு நாவல்களினதும் கருத்தமைதி ஒன்றுபட்டுள்ளது. "பஞ்சமர்" சிறப்பாகப் பஞ்சமர்களது சமூக நிலைபாட்டை வெளிப்படுத்தக் "கோவிந்தன்"

தாழ்ந்த சாதியினரின் சமூக நிலைபாட்டினைக் குறியீட்டு நிலையாக வெளிப்படுத்துகின்றது. ஆனால், ''அடிமைகள்'' நாவலோ தாழ்ந்த சாதியினரின் சமூக நிலைபாட்டினை எவ்வாறு உயர்த்தலாமென வழியைக் கூறுகிறது. இம்மூன்று நாவல்களிலும் டானியலின் எழுத்தோட்டத்திலும் படிப்படியான வளர்ச்சியும் தென்படுகிறது.பஞ்சமரில் பிரச்சாரநடை மலிந்துள்ளது. கோவிந்தனில் பாத்திர மூலம் பிரச்சாரம் செய்யும் முயற்சி காணப்படுகின்றது. அடிமைகளில் அது வாசகனின் ஆத்மாவோடு இணைக்கப்பட்டுள்ளது.

எனவே,அடிமைகள் நாவலைப்பற்றி அறிமுக விமர்சனம் செய்யும்போது, பல விடயங்களை நோக்கவேண்டியுள்ளது. நாவலுக்கு ஆசிரியர் எழுதியுள்ள முன்னுரைகள் வாசகர்க்கும் மரணபயத்தை யூட்டுவனவாக அமைந்திருப்பது நாவலின் இலட்சியத்திற்கு முரண்பட்டதாக உள்ளது. உடல் நலயீனம் ஏற்பட்டாலும் எழுத்தாளன் உடலைத் துச்சமாக மதிப்பவன். தன் எழுத்தினால் பல நூற்றாண்டு காலம் வாழவல்லவன். இதனை டானியல் நூல் வெளியாகிய பின்னர் உணர்ந்திருக்கவேண்டும். ஆனால், முன்னுரையிலே இந்த நாவலைத் தொடர்ந்து வேறு யாராவது எழுதவேண்டி நேர்ந்தால், அவர்களின் கவனத்திற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், சில முக்கிய விடயங்களை மிக நுணுக்கமாகக் கூறியுள்ளன. சிறப்பாக கடந்தகால நிகழ்வுகளை நாவலின் பொருளாகக் கொள்ளும்போது எழுத்தாளன் கவனிக்கவேண்டிய விடயங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. நாவல் களமாகக் கொண்ட காலப்பரப்பு மட்டுமன்றி, பகைப்புலமும் பொருத்தமாக அமைவதில் எழுத்தாளன் கூடிய கவனஞ் செலுத்தவேண்டும். இன்னும் ஆசிரியர் முன்னுரையில் விளக்கும் சமகாலப் பிரச்சினை பற்றிய கருத்துக்கள் மூலம், தனது நாவலின் உருவாக்கத் தேவையையும் மறைமுகமாகக் கூறியுள்ளார்.

நாவலை எழுதிமுடித்த பின்னர் ஆசிரியர் எழுதியுள்ள முன்னுரையே நாவலின் அமைப்புக்குப் பொருத்தமான முன்னுரையாக அமையக்கூடும். தனது நாவலின் தோற்றத் துக்கான காரணத்தை, எழுத்தாளனின் நேர்மைப் பண்பு வழிநின்று டானியல் கூறியுள்ளது, வியாபார நோக்கையே பிரதான இலக்காகக் கொண்டு, நாவல்களை எழுதுகின்ற இளந்தலைமுறை எழுத்தாளர்க்கு நல்ல வழி காட்டுதலாக அமைந்துள்ளது. இந்நாவலுக்கென எழுதப்பட்டுள்ள பல்வேறு திகதிகளிட்ட முன்னுரைகள் அவசியந்தானா? என்று கருதும் தமிழ் வாசகர்கள் மேற்காட்டிய கருத்துக் களையும் கவனத்திற் கொள்ளலாம்.

நாவலின் கருப்பொருள் என்ன என்பதை முன்னுரையிலே,

''இந்த நாவலில் குறிப்பிடப்பட்டிருக்கும் கால இடை வெளிக்குள் தொடர்ச்சியாகப் பஞ்சம மக்கள் எந்தெந்த விதங்களில் வஞ்சிக்கப்பட்டார்கள், அடிமைகள் ஆக்கப் பட்டார்கள் என்பதனையும், அந்த வஞ்சிப்புகளுக் கெதிராக இந்த மக்கள் ஆங்காங்கே எப்படிப்பட்ட விதங்களில் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதனையும். கிராமப் புறங்களில் எவ்வளவு நுணுக்க மாக இவர்கள்மேல் அடக்குமுறை நுகத்தடிகள் சுமத்தி வைக்கப்பட்டன என்பதையும் நீங்கள் காண்பதற்காக எனது அனுபவத்திற்கும் எனக்கு முற்பட்டவரின் அனு பவங்களுக்கூடாக நான் கற்றுக்கொண்டவைகளுக் குள்ளும் நிதானமாகக் காலூன்றி நின்று அந்தக் கால இடைவெளியில் வாழ்ந்தவர்களையே பாத்திரங்க ளாகவும் அவர்கள் வாழ்க்கைக்குள் வந்து போனவை களையே கருப்பொருள் ஆகவும் தந்திருக்கிறேன்'.

எனத் தெளிவாகக்கூறிய ஆசிரியர் அதன்மூலம் வாசகனுக்குத் தனது நாவலின் நோக்கத்தையும் முன்வைத்துள்ளார். பழையகாலத்து நடைமுறைகளை, நாவலின் கருப்பொருளை

விரித்துரைக்கக் கையாண்டுள்ளார். நாவலின் பாத்திரங்கள் இந்நடைமுறைகளால் தனிப்பட்ட குணவியல்புகளோடு, பாத்திர முரண்பாடின்றி இயங்க முடிகின்றது. ஆக்க இலக்கியத்தின் சிறப்புக்கும் சிரஞ்சீவி வாழ்வுக்கும் இப்பண்பு மிக அவசியமானது. சம காலத்தின் தேவையினை மட்டு மன்றி எதிர்காலப் பயன்பாட்டையும் மனதில்கொண்டு இலக்கியம் படைப்பவர்கள் இந்நெறியில் நிற்பவர்களாவர். இயக்கபூர்வமான புரட்சி நெறியைத் துரிதப்படுத்தும் எழுத்து நெறி, எனக் காலத்தின் போக்கிற்கிணங்கத் தனது எழுத்தை ஆசிரியர் கூறிக்கொண்டாலும், அதற்கும் மேலாகத் தமிழர் பண்பாட்டு நெறியினைப் பேணுகின்ற தன்மையும், ஆற்றலும், தன்னிடம் உண்டென்பதையும் சமூகத்தில் நிலைப்படுத்தவேண்டும். அப்போதுதான் சமூக மாற்றத்தை யும் அதன் தேவையையும், உணர்த்தும் வலுவான ஆயுதமாக ஆக்க இலக்கியம் அமைவதைச் சகல மக்களும் உணர வாய்ப்புண்டாகும்.

''அடிமைகள்'' சமூக மாற்றத்தின் தேவை உணர்த்தப் பல்வேறு அம்சங்களையும் எடுத்து விளக்க முற்பட்டுள்ளது. சிறப்பாகச் சாதித்திமிர், ஒழுக்க நிலை, உறவுப் பிரச்சினை கள், தலைமுறைச் சீரழிவு என்பவற்றின் மூலம் நாவல் சமூக மாற்றத்தின் தேவையை உணர்த்துகிறது. இவ்வம்சங் களினது படிமுறை வளர்ச்சியிலே சமூகச் சீரழிவு ஆழமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கைலாய பிள்ளை, மழவராயர், பல்லக்கு முதலித்தம்பி என்னும் மூன்று பாத்திரங்களும் சாதித்திமிரின் தன்மையையும், அதனால் சமூக நிலையில் ஏற்படும் விளைவுகளையும் துல்லியமாக எடுத்துக் காட்டு கின்றன. ஆனாலதே சமயத்தில் குறிப்பிட்ட பாத்திரங்களின் சாதியுணர்வின் இறுக்கம் தளர்கின்ற சந்தர்ப்பங்களையும் ஆசிரியர் அமைத்துள்ளார். இதனை,

''என்ன இத்தினியும் நீயும் கடிபடுகிறியள்? அவள் விதானையின்ரை உண்மையைச் சொன்னா உனக்கேன்

கோவம் வருகுது? எனக்குத் தெரியும்; போனகிழமையும் பறங்கித் தெருவிலை இருந்து ஒருத்தன் ஒரு போத்தில் பால் கொண்டுபோய்க் குடுத்திட்டுப் போனவனாம். சரி சரி, அது கிடக்கட்டுக்கு இத்தினி. செல்லன் பெண்டிலிட்டை நீ கேட்டு ஒழுங்கு பண்ணு மாதத்திலை ஏதும் அரைப்பறை ஒருபறை நெல்லைக் குடுப்பம். அவளும் கஷ்டப்படுகிறவள்; சீவியமும் போகட்டன்.''

என மழவராயர் பேசுவது காட்டுகின்றது. உறவுநிலைகளிலும் சாதித்திமிரினால் குடும்பங்களிடையே பகைமை பேணப்பட்டதால் இழிந்த சாதியினரின் அடிமை நிலை மேலும் உறுதிப்பட நேரிடுவதையும் பல சம்பவங்களின் பின்னணியிலே ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

''பஞ்சமர்கள் கோவிலுக்கு நேர்த்தி நிறைவேற்றுவதில் ஒருவித வழக்கம். குழந்தைகளுக்கு நோய்நொடி வந்துவிட்டால்...... அது குணப்பட்டால் அம்மனுக்குக் காவடி எடுப்பதாக நேர்த்தி வைக்கப்படும். நேர்த்தியை நிறைவேற்ற கைலாய பிள்ளையரிடம்தான் போயாக வேண்டும். அவர்தான் காவடி எடுக்கும் நாளையும், காவடி எடுப்பவனையும் நியமிப்பார். இவர்களுக்காகக் காவடி எடுக்க தவசியன் ஒருவன் நியமிக்கப்படுவான். கோலாகலமாக நேர்த்தி நிறைவேற்றப்படும். செலவு சித்தாயம் எல்லாம் நேர்த்தி வைத்தவர்களின் பொறுப்புத்தான்''.

பஞ்சமர்களின் வாழ்வு. சமூக நிலையிலே, எவ்வளவு தூரத்திற்குச் சாதியுணர்வு படைத்தவர்களால், கட்டுப்பாடு செய்யப்பட்டிருந்ததென்பதை நாவலில் அமைந்துள்ள மேற்காணும் விளக்கத்தின் மூலம் உணர முடிகின்றது. இந்நிலையிலிருந்து அவர்கள் விடுபடவிரும்பியதையும் பல சந்தர்ப்பங்களிலே கதைப் புணர்ப்பு மூலம் காட்டி அதற்கென மேற்கொள்ள வேண்டியிருந்த வழிமுறைகளையும் ''அடிமைகள்'' கூறியுள்ளது.

ஒழுக்கநிலையிலே ஏற்படும் பிறழ்வுகள் சமூகத்தின் நிலைபாட்டை ஊறுசெய்யும் தன்மையுடையன. இவைதனை மேலைத்தேய சமூகநிலைபாட்டில் பொருத்திப் பார்க்க முடியாது. ஆனால், தமிழ்ச் சமூகத்தின் பண்டையநிலை கூறும் இலக்கியங்கள், சமூக நிலைபாட்டில் ஒழுக்கநிலை பெற்றிருந்த இடத்தினை விரிவாகவே கூறியிருப்பதை அறிய முடிகின்றது. ஒழுக்கம் என்பது மனித வாழ்க்கையில் ஆண் பெண் உடற்சேர்க்கை நிலையிலேயே சிறப்பாகவும் இடம் பெற்று வந்துள்ளது. யாழ்ப்பாணத் தமிழரிடையே சாதி யமைப்பிலே ஒழுக்கம் பெற்றிருந்த பங்கினை, 'அடிமைகள், பாத்திரங்களின் மூலம் அறியலாம். உயர்ந்த சாதியினரும் தாழ்ந்த சாதியினரும் தத்தமது உறவுநிலைகளுக்கேற்ப ஒழுக்கமாக வாழும் மரபுடையவரே. ஆனால், சாதியமைப் பிலே இதற்குச் சில விதிவிலக்குகளுங்கூட மரபுகளாகி யிருந்தன. பொருளாதார பலமுள்ளவர்கள் விதிவிலக்குகளை நடைமுறைப்படுத்தினர். அதனால் பொருட்பலமற்றவர்கள் ஒழுக்க மரபுகளைப் பேணமுடியாதவர்களாகவும் வாழ நேர்ந்தது. இந்நிலையைவிட நடைமுறை வாழ்க்கையிலே ஒழுக்க மரபு பிரச்சினையாவதையும் "அடிமைகள்" நாவல் நன்கு சித்ரிக்கின்றது. ஒழுக்கமரபு மீறல் ஏற்றுக்கொள்ளப் பட்ட அம்சமாக, ஆண்களுக்கே சிறப்பாகத் தமிழர் சமூகத் தில் விதிவிலக்காயிருந்தது. பெண்கள், சமூகத்தின் நிலை பாட்டிற்கெனக் கற்பித்த நெறிகளைப் பேணிவாழவேண்டிய நிலையிலிருந்தனர். இத்தகைய மரபுகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில், ஏற்படும் விளைவுகள் குடும்பநிலையில் மட்டுமன்றி, சமூகநிலையிலும் மாற்றங்களை ஏற்படுத்த வல்லவை. இக்கருத்து செல்வி, கண்ணி, சந்திரரின் மனைவி என்னும் மூன்று பெண்பாத்திரங்களினால் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

இவர்களில் செல்வியும், கண்ணியும் தாழ்ந்த சாதிப் பெண்களாக, ஒழுக்கப் பிறழ்வின் அடிப்படையை, விளக்கு

பவர்களாக அமைகிறார்கள். தான் செய்துகொடுத்த சத்தியத்தை மீறமுடியாமல் கணவனால் சந்தேகிக்கப்படும் செல்லியின் குடும்பம் சிதைகிறது. சரக்கரின் தகாத ஆசையினால், கண்ணியின் குடும்பம் குலைகின்றது. இரண்டு குடும்பத்தின் நிலைகளுக்கும் உயர்சாதி ஆண்களே உடனடிக் காரணமாகின்றனர். இதனால், அடிமைநிலையிலிருந்து விடுபடமுடியாத பெண்கள் நிலை எவ்வாறு சமூகத்தில் உருவாகின்றது என்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார். ஆனால், உயர்சாதியைச் சேர்ந்த சந்திரரின் மனைவியினது ஒழுக்கமீறல், எத்தகைய விபரீத விளைவினைக் குடும்பத்திலும் சமூகத்திலும் கொண்டுவரக்கூடியது, என்பதைக் கூற வந்த ஆசிரியர், ஏனைய பாத்திரங்கள் மூலமாகவே அதனை வெளிப்படுத்தியுள்ளார். இது ஆசிரியரின் தயக்க நிலையைக் காட்டுவதன்றிச், சமூகநிலைபாட்டில் அதனை ஆழமாகக் கண்டிக்க முற்படாததையும் காட்டுகின்றது. சந்திரரின் மனைவிக்குத் தன்னிலையினைக் கூறும் துணிவு ஏற்படவில்லை. நாவலின் இறுதியிலே கந்தன் மூலமாக உண்மை சந்திரருக்கு உணர்த்தப்படுகிறது. எனினும்,

> "இப்போது கந்தன் எல்லாம் தெரிந்தவனாகிவிட்டான்;
> சந்திரருக்கோ எதுவும் விளங்கவில்லை"

என்னும் ஆசிரியர் கூற்று, உண்மையை நுணுக்கமாக அறியவைக்க விரும்பியதையே காட்டுகின்றது. ஒழுக்கப் பிறழ்வுகளை நேரடியாகச் சுட்டிக் காட்டுவது அநாகரிகம் என்றும் கருதப்படுகிறது. அந்த அநாகரிகப் பண்பினையே தனக்குச் சாதகமாக்கும் ஒரு நிலையும் சமூகத்திலுண்டென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இத்தகைய சந்தர்ப்பங்களில் உயர்சாதிப் பெண்களினது ஒழுக்க மீறல்களை விளக்கும் தி. ஜானகிராமனையும் வாசகர் கருத்திற்கொள்ளவேண்டும். "அகிலாண்டம்" பாத்திரப்படைப்பு வாசகருக்கு ஒப்பீட்டுக்குப் பெரிதும் உதவும்.

ஆனால், உறவுநிலைப் பிரச்சினைக்கு, குடும்ப ஒழுக்க மீறல்கள் உதவுவதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டத் தயங்க

வில்லை. கருணையும் கண்ணம்மாவும் இக்கோட்பாட்டை விளக்க உருவாக்கப்பட்டவர்களாவர். எனினும், அப் பாத்திரங்களும் உண்மையை உணராத நிலையிலேயே நாவல் முடிவடைந்துவிட்டது. பெண் பாத்திரங்களின் வரிசையில் கண்ணம்மா அடிமைநிலையை மாற்றப் புதிய புரட்சி செய்கிறாள்.

> "உந்தப் பொட்டைதான் கந்தன்ரை வளப்பிணி! கிட்டடியிலை காணி ஒண்டு வாங்கி உவளுக்குத்தான் கந்தன் எழுதினவனாம்... வெள்ளாளச்சி எண்டாலும் செய்நன்றி மறக்கேல்லை."

கந்தனின் இழவு வீட்டில் கண்ணம்மாபற்றிக் கூறப்படும் இல்வார்த்தைகள் அவளது புரட்சி மனநிலைக்கு, ஆத்மீக அன்பே காரணம் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. கந்தனின் பிரேதத்திற்குத் தானே கொள்ளிவைத்து, புதிய உறவுநிலையைக் கற்பித்து ஒழுங்கான சமூக மரபொன்றை நிலைநாட்டுகின்றாள் கண்ணம்மா. அடிமைகளின் விடுதலைப் போராட்டத்திற்கு வித்திடுகின்றாள்.

தலைமுறைச் சீரழிவினால் ஏற்படும் சமூகநிலை மாற்றத்திற்கும் இதுவே காரணமாகின்றது. அடிமைகளை வைத்து ஆண்ட வேலுப்பிள்ளையர் குடும்பத்தைச் சூரியர் தனது நடத்தையினால் சீரழிக்கின்றார். அவரால் குடும்பப் பெருமை கெடுவது மட்டுமன்றி, சமூகநிலைபாட்டிலே உயர் சாதியினர் ஆதிக்கமும் தளர்வடைகின்றது. எதிர்கால உயர் சாதியினர், தமது முன்னோரின் முறைகேடுகளை அறியவும் இது வழி செய்கின்றது. வர்க்கரீதியான நிரந்தர அடிமை வாழ்வு, தீருவதற்குச் சாதியமைப்புத் தகர்க்கப்படவேண்டியதின் அவசியத்தையும், இதனால் அறிய முடிகின்றது. ஆசிரியர் சாதியமைப்பினை நிரந்தரமாகச் சமூகத்திலிருந்து நீக்கினாலன்றி வர்க்க வேறுபாடு தீராதென்பதைச் சரியான

முறையிலே விளக்குவதற்காக, நடைமுறைச் சம்பவங்களை நாவலிலே இணைத்துள்ளமை, மிகப் பொருத்தமாகவுள்ளது

நாவலின் முக்கிய பாத்திரமான கந்தனின், பாத்திர சிருஷ்டி நாவலின் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகப் புதுமையான முறையிலே அமைக்கப்பட்டுள்ளது. தாழ்ந்த சாதியினனாக வெறும் கந்தனாக அமையவேண்டிய நியதியினை மாற்றிக் கந்தன்மாமாவாக மறையவைத்தமை ஆசிரியரின் திறமைக்கு நல்லதொரு உதாரணமாகும். நாவலின் "தலைச்சன்" பாத்திரம் என ஆசிரியரே சிறப்பித்துக் கூறும், கந்தனின் இயக்கத்திற்குப் பின்வருகின்ற எல்லாப் பாத்திரங்களுமே தொடர்பாயமைந்துள்ளன. கண்ணம்மா நாவலை ஆரம்பித்து முடித்து வைக்கும் பாத்திரமாகும். கந்தனைக் கந்தன்மாமாவாக்கியதால் கண்ணம்மா,பாத்திரப் பண்புகளை மாற்றுகின்ற புதுமையைச் செய்ததாக யாரும் எண்ண இடமில்லை. மரபுமரபாகக் கையாளப்பட்டு வந்த, ஆழமான அன்புநிலையின் உறைவிடமான, பெண்மையையே டானியலும் வெளிப்படுத்தியுள்ளார். பெண்மையின் தாய்மைப் பண்பே, வர்க்கபேதங்களையும் சாதியமைப்புக்களையும் முற்றாகச் சமூகநிலைபாட்டிலிருந்து போக்க வல்லது. இதனை 'அடிமைகளின்' ஆசிரியரும் முற்றாக உணர்ந்திருந்தால் "பஞ்சமரின்" இரண்டாவது பாகத்தை உருவாக்கியது போல "அடிமைகளின்" இரண்டாவது பாகத்தையும் உருவாக்குவார் எனவே வாசகர் உலகம் எண்ணும்.

இலக்கியத்தின் சமூகத்துக்கான பணிகளில் ஒன்று நடைமுறை வாழ்வினூடே புதைந்து கிடக்கும். மனித இனங்களின் பண்பாடு அம்சங்களையும் விபரித்துக் கூறுவதாகும். இலக்கியம் செய்யுளால் ஆக்கப்படும் நிலை மாறி, உரைநடையாலும் ஆக்கப்படும் நிலை சமூகத்திலே உருவாகிய போது, இலக்கிய வடிவங்களிலும், பல்வேறு வடிவங்கள் தோன்றின. தமிழில் அமைந்த மிகப்பழைய உரைநடை, அக்கால மொழியின் வளத்தையே காட்டுகின்றது. நாவல் இலக்கிய வடிவம், தமிழ்மொழியிலே

இணைந்த பின்னர், மொழியின் வளத்திற்கேற்பப், பல்வேறு உரைநடைப் பண்புகளையும் பெறத் தொடங்கியது. மனிதன் அநுபவத்தினாலும், கேள்வியறிவினாலும் புலமை பெறுகின்றான். அப்புலமையால் சுயசிந்தனைக்குள்ளாகின்றான். அச்சிந்தனைகளை எல்லோரும் அறிய எழுத்திலே வெளியிடுகிறான். அவனது எழுத்துப்பணி அவனுக்கெனத், தனித்துவமானதொரு நடையையும் தந்துவிடுகின்றது. இதற்கு ஏட்டுக் கல்வி அவசியமில்லை. இலக்கணமும், எழுதுகின்றவனது தனித்துவத்தினால், அங்கு இணைந்துவிடும். தான் சொல்ல நினைப்பதைத், தனது மொழியிலே, நேர்மையுடன் எழுத வல்லவனே, தனித்துவம் பெற்ற எழுத்தாளனாவான். பிறரது சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் தனக்கு முன்மாதிரியாகக் கொண்டு எழுதுபவன் தனது சொந்தக் கருத்தை மறைத்துவிடுகிறான். அவனால் ஆக்கப்படும் இலக்கியம், மாதிரி இலக்கியமாகிவிடுகின்றது. பல நாவல்கள் இவவாறு, மாதிரி நாவல்களாக, தமிழிலே, தற்போது பலராலும் எழுதப்பட்டு வருகின்றன. அத்தகைய நாவல்களிலிருந்து ''அடிமைகள்'' வேறுபட்டு நிற்கின்றது. ஆசிரியர் தனது சிந்தனையை, தனது மொழிநடையிலேயே எழுதியுள்ளார். கதாபாத்திரங்களும் ஆசிரியர் பேசும் மொழியிலே பேசுகின்றனர். இம் மொழிநடை, மனித உணர்வுகளை உண்மை நிலையிலே காட்டுகின்றது. ''பஞ்சமர்'' எழுதும்போது டானியல் முழுமையாகத் தனது சொந்த மொழிநடையைக் கையாளவில்லை. ''கோவிந்தனி''லும், ''அடிமைகளி லு''ம் தனக்கென வாய்த்த, மொழிநடையிலே எழுதியுள்ளார். அந்நடை நாவலிலக்கியத்தின் சுவையை வாசகர் அறியவைக்கின்றது. இந்நடை மூலமாகவே அவர், நடைமுறை வாழ்க்கைநிலைகளை, கலையம்சங்களை, பொழுதுபோக்குகளை, மக்களின் நம்பிக்கைகளை சுவையுடன் படைக்க முடிகிறது. யாழ்ப்பாணத்திலேகாணப்பட்ட சிறப்பானபண்பாட்டம்சங்களைத் தனது நாவலிலே சிறப்புடன் இணைக்கவும் முடிந்தது. கோயில் திருவிழாக்களையும், பேயோட்டுதல்,

போர்த்தேங்காய் அடித்தல், கோழிச் சேவற்சண்டை போன்ற நிகழ்ச்சிகளையும் யாழ்ப்பாணத்துக் கலாச்சார உணர்வுடன், எல்லோரும் மனதிலே காண எழுத முடிந்தது. பழைய நடைமுறை பற்றிய விபரங்களைத் தேவையான இடங்களில் ஆசிரியர் இணைத்துள்ளார். பேயோட்டுதல் தொடர்பாக,

> "மூன்று வெள்ளைச் சாவலில் இருந்து அரிசி, தேங்காய், நெல்லுப்பொரி, ஆலம் சுள்ளி, பச்சைக் கற்பூரம், சாம்பிராணி, வெற்றிலை, வாழைப்பழம், நவதானியம், வேப்பம்பத்தி, வாழைக்குட்டி...... குங்கிலியம் என்று வளர்த்து, வேறும் சிறு பொருட் கள் உள்ளடக்கி மூன்று சிரட்டை தென்னங்கள்ளு வரையில் வந்து முடிந்தது"

என வருகின்ற வர்ணனை அக்காலத்தில் மக்களிடையே நிலவிய நம்பிக்கைகளோடு, தொடற்புற்றிருந்த அம்சங் களையும் உணர்த்துகின்றது. சாதிப் பாகுபாடு, இத்தகைய நம்பிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றபோது, பெரிதும் கவனிக்கப்பட்டதைத் தெளிவுபடுத்துவதற்காக, "**கயித்தான்**" என்னும் பாத்திரம் ஆசிரியரால் உருவாக்கப் பட்டுள்ளது. இதேபோல போர்த்தேங்காய் அடிக்கும் முறைகளும், சாவல் சண்டைபற்றிய விபரங்களும் கதா பாத்திரங்களினது குணவியல்புகளைத் தெளிவாக உணர்த்து வதற்காக கையாளப்பட்டுள்ளன. இப்பணியில் ஈழத்து எழுத்தாளர்களில் டானியல் சிறப்புப் பெற்றவராவார். ஏனைய பிரதேச உணர்வு நாவல்களைவிட, டானியலின் நாவல்கள் தனித்துவம் பெறவும், இவை முக்கிய காரண மாகின்றன. ஆழ்ந்த அநுபவமும், கூர்மையான சமூக நோக்கும் இன்றி இதனைச் செய்யமுடியாது. சாதிப் பிரச்சினை பற்றி எழுதுவதற்கு இப்போது என்ன தேவை இருக்கின்றது? என்று எண்ணுபவர்கள் இப்புதிய பணியைப் பற்றியும் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். மேலைத்தேய இலக்கியக் கோட்பாடுகளைக் கொண்டு,

நாவல்களிலே சித்தரிக்கப்படுகின்ற சமூகநிலைபற்றிய ஆய்வுகளை மேற்கொண்டிருக்கும், சமூக மானிடவியலாளர்களுக்கு இப்பணியினால் பலதகவல்கள் கிடைக்க வழியுண்டு. வெறும் செய்திகளாக அவற்றைப் பதிவு செய்துவைக்காமல் நடைமுறை வாழ்வுநிலையிலே, அவற்றின் நிலைபாட்டை எல்லோரும் புரிந்துகொள்ள டானியல் பெரிதும் உதவுகின்றார்.

பண்பாட்டம்சங்களாக நிலைபெற்ற நடைமுறைகளை நன்கு உணர, ஆசிரியரால் பழமையான சொற்கள் பல கையாளப்பட்டுள்ளன. தட்டுவம், சிறைக்குட்டி, மாராச்சி, நையம் அடித்தல், வேப்பம்பட்டைத் தண்ணீர், காயம், ஊத்தைக்குடியன், கழிப்புக் கழித்தல், படிமாத்தான், வேப்பம்பத்தி, பஞ்சவடம், மரச்சேர்வை போன்ற சொற்பிரயோகங்கள் அவற்றின் பொருள் தெளிவாக விளங்கும்படி கதைப் போக்கிலேயே இணைக்கப்பட்டுள்ளன. பலபிரதேச வழக்குகள், இன்றைய இளந்தலைமுறையினரால் தெளிவாக விளங்கிக்கொள்ளப்படவும் ''அடிமைகள்'' நாவல் உதவும் என்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாணத்து மக்களிடையேநிலவிய உணவுப்பழக்கங்கள், ஏனைய தமிழர்களிலிருந்து வேறுபட்டவை. இதனைப் பேராசிரியர் க. கணபதிப் பிள்ளையவர்கள் தமது ''ஈழத்து வாழ்வும் வளமும்'' என்னும் நூலிலே விளக்கியுள்ளார். கட்டுரை வடிவிலே அந்நூலில் கூறப்பட்டிருக்கும், யாழ்ப்பாணத்துக்கே சிறப்பான உணவுப் பழக்கங்களையும், இந்த நாவல் விளக்கியுள்ளது. குரக்கன்பிட்டு, அயிலை மீன் சேர்த்தவித்த ஒடியல்பிட்டு, மீன்தீயல், மரைவத்தல் கறி, காயம்பிரட்டிய கோழிக்கறி போன்ற உணவுவகைகள் பற்றிய தகவல்களால் இதை அறிய முடிகின்றது. சில பகுதியினரின் உணவில் சிறப்பாக இடம்பெறும் பொருட்களையும்கூட, ஆசிரியர் வெகு நுணுக்கமான தனது அவதானிப்பினால் நாவலிலே சேர்த்துள்ளார்.

''வால்ஒடியல் தின்னும் வெள்ளாளர்'', ''வால்ஒடியல் தின்னும் கொடிகாமத்தார்'' என்னும் தொடர்கள் இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

சாதியமைப்பினைப் பேணுகின்ற வகையிலும் உணவு அருந்தும்போது சில நடைமுறைகள் கையாளப்பட்டன. உணவு அருந்தும் பொருட்களை ஏதனங்கள், வாழைத் தடல், வாழைஇலை, மண்சட்டி, வட்டில், இரட்டை உலை மூடி, குண்டுச்சட்டி, பித்தளைப்பேணி, அரக்குடுவை என வரிசைபடுத்திக் கூறுவதை நோக்கும்போது ஆசிரியரின் அநுபவ முதிர்ச்சியைக் காணமுடிகின்றது.

இதேபோன்று திருமண ஊர்வலத்தின்போதும் சாதியமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டமை விளக்கப்பட்டுள்ளது.

> ''ஊர்வலத்தின் முன்வரிசையில் பத்துக்கு மேற்பட்ட வில்லு வண்டிகளை வெள்ளை வெளேரென்ற வடக்கன் காளைகள் இழுத்துச் செல்ல, அதையடுத்து நுகத்தடி கட்டப்பட்ட பத்து வண்டிகளை நுகத்திற்கு இருவராக, வடக்கன் நாம்பனுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்ற தோறணையில் அடிமைகள் வடக்கன்களின் வேகத்துக்கு அமைய இழுத்துச் செல்ல, அடிமைகளால் இழுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு வண்டியையும் இழுத்துச் செல்லும் நரகாளைகள் களைப்புற்றுப் போகும்போது கைமாற்றிக் கொள்ள வண்டிக்கு இருவராகப் பின்தொடர, அதை அடுத்து சற்று இடைவெளி விட்டு பத்துக் கட்டாடிமார்கள் நிலபாவாடை விரித்துச் செல்ல... அதற்குப் பின்னால் நட்டுவமேள வாத்தியங்கள் கூட்டமாக அணி வகுத்து முழங்கிவர, அதற்குப் பின்னால்தான் தம்பதிகளின் பல்லக்கு அசைந்து வருகிறது.

இந்த வரிசை முடிந்து பின்னால் இருவர் தோரணங்கள் பொருத்தப்பட்ட கம்பு ஒன்றினைத் தூக்கிப் பிடித்துவர அதற்குப் பின்னால் பல்லக்கு முதலியரின் மதிப்புக்குரிய அடிமைகள் திரண்டு வருகின்றனர்.

அவற்றுள் கோவியக்குடிமைகள் முன்னேயும், மாராயக்குடிமைகள் பின்னேயும், பள்குடிமைகள் அதற்குப் பின்னேயும், நளக்குடிமைகள் அதற்கு அடுத்ததாகவும் சுமார் ஐம்பது பேர்கள் வரை கழியக் கடைசியாக பரியாரி வல்லியனும் அவன் மருமகன் குட்டியனும் வருகின்றனர்.''

இந்த வர்ணனை நாவலின் பகைப்புலத்தை விளக்குவது மட்டுமன்றி யாழ்ப்பாணத்திலே நிலவிய சாதியமைப்பின், சமூக அந்தஸ்து மதிப்பீட்டினையும் நன்கு அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றது. இந்தியத் தமிழர்களிடையே நிலவும் சாதியமைப்பு முறைக்கும், யாழ்ப்பாணத் தமிழர்களிடையே நிலவும் சாதியமைப்பு முறைக்கும் உள்ள வேறுபாட்டையும் இதனால் உணரமுடிகின்றது. திருமணம், குழந்தைப்பேறு, இறப்பு போன்ற நிகழ்வுகளின் போது யாழ்ப்பாணத்தில் சாதியமைப்பின் முழுமையானவரையறைகளைத் தெளிவாக இனங்காணமுடியும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே நடைமுறைப்படுத்தப் பட்டு வந்த வைத்திய முறைகள் சிலபற்றிய தகவல்களும் ''அடிமைகள்'' நாவலில் கதைப்புணர்ப்பின் சுவை கெடாத வகையில் சேர்க்கப்பட்டுள்ளன. புக்கைகட்டுதல், நையம் அடித்தல், கொம்புக்கல் உரைத்து நாக்கில் தடவுதல், பெறுமாதப்பிள்ளைத்தாச்சி மருந்து கொடுத்தல், எண்ணெய் முழுக்கு போன்ற வைத்திய முறைகளே ஆங்கிலேய வைத்திய மரபு வந்த பின்னரும், இன்று வரையும், யாழ்ப்பாணக் கிராமங்களிலே நடைமுறையிலிருக்கின்றன.

மேலைத்தேயத்தவர் கூடத் தற்போது இத்தகைய வைத்திய முறைகள்பற்றிய ஆய்விலே ஈடுபட்டுள்ளனர். இதனால் ''அடிமைகள்'' நாவலுக்கு இலக்கிய நிலையில் மட்டுமன்றி சமூக, மொழி, பண்பாட்டு ஆய்வு நிலையிலும் நிரந்தரமான இடம் ஒன்று உண்டு. நாகரிக வளர்ச்சிப் படிநிலைகளையும் நாவல் சுட்டிக்காட்டத் தவறவில்லை. யாழ்ப்பாணத்திலே போக்குவரத்துச்சாதனங்களின் அபிவிருத்தியும் அவற்றிற்கும் சாதியமைப்பு முறைக்குமிடையே, ஏற்பட்ட பிரச்சினைகளும் வெகு விரிவாக விளக்கப்பட்டுள்ளன. கோஜ்வண்டி புகையிரதம் என்பவற்றின் வருகையால் ஏற்பட்ட மாறுதல்கள் நாவலின் போக்குடன் பொருத்தமாக அமைக்கப்பட்டுள்ளன. சமூகத்தின் துரித வளர்ச்சியை சாதியமைப்புத் தடுத்த நிலையையும், ஆசிரியர் இதன்மூலம், உய்த்துணர வைத்துள்ளமை சிறப்பானது

சாதிபற்றி எழுவது, யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் மிகவும் அவசியமானது. சமூக அமைப்புப்பற்றியும் அதன் பண்பாட்டு வளர்ச்சி நிலைகள் பற்றியும் அறியவோ ஆராயவோ முனைபவர்கள், வெறுமனே வரலாற்றுப் பதிவுகள் தருகின்ற தகவல்களால், தமது நோக்கத்தைப் பூரணப்படுத்த முடியாது. உண்மை அனுபவக் குறிப்புகளையும் இலக்கியங்களையும் தேடிச் செல்லவேண்டும். ''அடிமைகள்'' நாவலின் சமூகப்பணி இதற்கு முழுமையாக உதவக்கூடியது. ''வெறும் சீர்திருத்தக் கருத்துக்களால் அரசு நடத்திக்கொண்டிருப்பவர்களால் சாதி அடக்குமுறையின் கோரங்களைச் சிறிதளவேனும் அசைக்க முடியாமல் இருக்கிறது'' என்பதை டானியல் அநுபவத்தால் நன்குணர்ந்த பின்னரே தனது இலக்கிய வழிமுறையைத் தேடிக் கொண்டார். எழுத்தாளனின் எழுதுகோல் போர் வீரனின் வாளைவிடக் கூர்மையானது. வர்க்கங்களைப் பற்றியே பேசியும் எழுதியும் புகழ் தேடுபவர்கள் இன்றும் உளர். தமிழ்ச் சமூகத்தின் கடந்தகால வரலாற்றின் சீரழிவுக்கான அடிப்படைக் காரணமான, சாதியமைப்

பிணைப்பற்றிய தகவல்கள், யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் இன்னும் எவ்வளவோ நிறைய உண்டு. அவற்றை இன்றைய தலைமுறையினர் எல்லோரும் அறியவேண்டும். ஏனெனில், அதற்கான தேவை இன்று உருவாகிவிட்டது. பொழுது போக்குக்காக இலக்கியம் படிக்கும் மக்கள் தொகை குறைந்து; நமது பிரதேச வரலாற்றுச் சம்பவங்களை விரும்பிப்படிக்கும் மக்கள்தொகை பெருகிவிட்டது. உயர்கல்வியும், நெறிமுறைக்கல்வியும் கற்றவர்கள் மேலைத்தேயக் கோட்பாடுகளோடுதான் இன்னமும் மாரடித்துக் கொண்டிருக்கிறார்கள். தம்மோடு சமூக அங்கத்தினர்களாக வாழும், பொதுமக்களுக்காக எதையும் எழுதாமல் தமது பன்மொழிப்புலமையை வெளிப்படுத்தவே எழுதிய வண்ணமிருக்கிறார்கள். அவர்கள் வாழ்வுமுடிய அவர்கள் எழுத்துகளும் சமூகத்தவர் மத்தியிலிருந்த மறைந்துவிடும். ஆனால், பொதுமக்களுக்காக, அவர்கள் நடைமுறைகளிலிருந்து, பெற்ற அநுபவத்தை, இலக்கியமாக்குபவனே மக்களுக்காக எழுதுபவன். அவனே மறைந்தபின்னும் மக்களோடு வாழ்பவன். அத்தகைய எழுத்தாளனாகக் கூடிய தகைமைகள் டானியலிடம் இருப்பதை அவரது எழுத்துக்கள் இதுவரை மக்களுக்கு உணர்த்தியுள்ளன. ''அடிமைகள்'' இக்கருத்தை இன்னும் அணிசெய்ய வெளி வருகின்றது. தனக்கென வகுத்துக்கொண்ட, தனித்துவமான இலக்கிய நெறியிலே, டானியல் யாழ்ப்பாணச் சமூகநிலைபாடுகளை வெளிக்கொணரவேண்டும். புறத்தாக்கங்களைக் கண்டு சோர்வடையாமல், எழுதுகோல் ஏந்திய சுத்த வீரனாக இன்னும் பல நாவல்களை எழுதி, தமிழிலக்கியத்தால் சமூகத்தை நிலைபெற வைக்கவேண்டும். எதிர்கால இளம் எழுத்தாளர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழவேண்டும்.

மொழி இலக்கிய பீடம்
சுக்குபாவின் பல்கலைக்கழகம் **மனோன்மணி சண்முகதாஸ்**
தோக்கியோ 10—11—1983
யப்பான்



# முன்னுரை

இந்த நாவலை 248 பக்கங்கள் வரை எழுதிக் கொண்டிருந்தபோது இதற்கான முன்னுரையை எழுதிவிட வேண்டுமென என் மனதுக்குப் பட்டது.

எனது உடலுக்குள்ள நோய்களின் தாக்கத்தை நான் நன்றாகவே புரிந்துகொண்டிருக்கிறேன். இந்த நாவலை எழுதி முடிக்கும் முன் என் உயிர் இந்த உடலை விட்டுப் பிரிந்துவிடுமோ என்ற ஒரு பயம்! அதனாலேயே முன் கூட்டியே முன்னுரையை எழுதிவிடத் துணிந்தேன். இதற்கான வேறோர் காரணமும் உண்டு. அது நான் இல்லாத காலத்தில் இந்த நாவலை பிரசுரமாக்குவதின்

அவசியத்தை உணர்ந்தவர்கள், அவ்வேளை யார் யாரிடமோ இதற்கு முன்னுரை வாங்க முற்பட, முன்னுரையை எழுதுபவர் இந்த நாவலின் பிறப்புக்கான காரண காரியங்களை எனது நினைப்புக்கு மாறாக அமைத்துவிட்டால் இதன் பலன் வேறுவிதமாக ஆகிவிடும் என்பதினாலும் ஆகும்.

முதலில் எழுதப்பட்ட 248 பக்கங்கள் கரு தப்பாமல் இந்த நாவலின் சுருக்கத்தை இதைப் பூர்த்தி செய்பவர் களுக்காகக் குறிப்பிட வேண்டியதாகிறது.

இந்த நாவலின் தலைச்சன் பாத்திரம் 'கந்தன்' கடந்த 248 பக்கம் வரை அவன் வேலுப்பிள்ளைக் கமக்காரன் வீட்டுக்கு விசுவாசமுள்ள நாயாக உழைத்து வந்திருக் கிறான்... அப்போது வேலுப்பிள்ளையின் மருமகன் சூரியர் காணாமல் போய்விடுகிறார். அவரின் அட்டாதுட்டித் தனமான வாழ்க்கையினால் பூர்வீக சொத்துக்கள் கரைந்து போக... இறுதியாக உள்ள குடியிருப்பு நிலம் கயிலாயர் என்பவரின் கடனுக்காக ஏலம் போகிறது. அக்காணியை ஏலத்தில் வாங்கிய கந்தன் அதை வேலுப்பிள்ளையரின் பேத்தி கண்ணம்மாவின் பெயருக்கே கொடுத்துவிடுகிறான். கயிலாயரின் பேரன் கருணைக்கு வேலுப்பிள்ளையரின் பேத்தி கண்ணம்மா மேல் காதல் வருகிறது.

முன்பெல்லாம் கந்தனை வெறும் 'கந்தன்' என்று அழைத்த கண்ணம்மா இப்போது கந்தன் மாமாவின் சம்மதத்தையும் கேட்கும்படி காதலனைக் கேட்கவே அவன் தந்தை மூலமாக கந்தனைக் கேட்கவைக்க .... "அது யோசித்துத்தான் சொல்லவேண்டுமென கந்தன் சொல்ல, கந்தன் சுட்டுக் கொல்லப்படுகிறான். மிகுதிப் பகுதி இதுதான்!

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் இந்த நாவல் எழுதப்படத் தொடங்கியதால் கீழ்க்காணும் விஷயங்கள். தொடர்ச்சியை எழுதுபவர்கள் கவனத்துக்குரியதாகும்.

(1) பாத்திரங்களின் பெயர்கள் முன்னுக்குப்பின் மாறுபட்டதாயிராமல் கவனிக்கப்படுதல்

(2) முக்கிய பாத்திரமான கந்தனுக்கான வர்ணனையில் மாறுபாடு இருந்தால் அதைச் சீர்செய்தல்.

(3) நாவலின் தொடக்க காலமும் முடிவு காலமும் என்று கொள்ளப்பட்ட 1890—1956 ஆகிய ஆண்டுகளுக்குள் பாத்திரங்களும் சம்பவங்களும் அடங்குகின்றனவா என்பதை உறுதிப்படுத்தல்.

(4) நாவலின் களங்களான மழுவராயர் வீடு, சுட்டிபுரம் அம்மன்கோவில் பண்ணித்தலைச்சி அம்மன்கோவில், வேம்பிராய்ச்சந்தி, மாந்தோப்பு, மந்துவில், வேம்பிராய் வீதியிலுள்ள கயிலாயர் வீடு, கொடிகாமம் சந்தை, ஆகியவைகளையும் அதன் சுற்றுப் புறங்களையும் ஒரு தடவை பார்த்து ஒப்பிடுதல்.

(5) காலத்துக்கமைந்த உடை, நடை பாவனை பேச்சு வழக்கு ஆகியவைகளை கணிசமாக அவதானித்தல் முதலியன ஆகும்.

இந்த நாவலுக்குள்ளே 1890க்கும் 1956க்கும் இடையே வாழ்ந்த மாந்தர்கள் மட்டும் வந்து போகின்றனர். இந்த இடைக்காலத்துள் யாழ்ப்பாணப் பகுதிக் கிராமங்களிலும் முன்னேறிய நகர்ப் பகுதியிலும் ஏற்பட்டு வந்த பரிணாம

வளர்ச்சிகளையும், வாழ்க்கை முரண்பாடுகளையும். அந்தப் பரிணாமங்களாலும், முரண்பாடுகளாலும் தோற்றுவிக்கப் பட்டு வந்த வர்க்க முரண்பாட்டுப் புறப்பாடுகளையும் வாசகர்கள் காண்பார்கள்.

என்மீது எப்போதுமே சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் ஒன்று சமகாலப் பிரச்சனைகளை நான் இலக்கியத்தில் ஆள்வதில்லை என்பது. இக் குற்றச்சாட்டுகளை வைப்பவர் களால் கூறப்படும் சமகாலம் என்பது எது என்று எனக்கு இன்னும் விளங்கவில்லை.

குணாம்சத்தில், நடைமுறையில் இன்றுவரை இருந்து வரும் ஒன்றான சாதி அமைப்பின் பிரச்சனைகள் சமகாலப் பிரச்சனைகள் என்று இவர்களுக்குத் தோன்றவில்லையா ? சரி இவர்கள் சொல்வது போன்று இவைகள் சமகாலப் பிரச்சனைகள் அல்ல என்று வைத்துக்கொள்வோம். ஒரு சமூகத்தின் கடந்தகாலப் பிரச்சனைகளில் இருந்து கற்றுக் கொள்ளும் பாடங்கள்தான் இவர்களால் கூறப்படும் சமகாலப் பிரச்சனைகளை அணுகுவதற்குச் சரியான வழிகாட்டியாக இருக்கும் என்பதை இன்னும் இவர்களால் ஏன் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை ?

பொதுவில் பார்க்கும்போது சாதிப் பிரச்சனைகளை எனது இலக்கியங்களில் காணும்போது இவர்களைக் கூடவே அந்தப் பிரச்சனைகள் தொட்டு நிற்கின்றன என்பதனை இவர்கள் உணர்கிறார்கள். அதனால்தான் " சாதி சம்பந்தம் இல்லாத இலக்கியங்களைப் படைக்க டானியலால் முடியாது, " என்று தீர்வும் காணுகிறார்கள்.

அவர்களின் தீர்வு ஒப்புக்கொள்ளப்படவேண்டியதே ! சாதிப் பிரச்சனைகளோடு பின்னிப் பிணைந்திருக்காத தமிழர்களின் வாழ்க்கை என்பது இல்லவே இல்லை என்பது எனது துணிவான முடிவு இது சரியானதே. அதனாலேயே நான் இந்த இயல்பான தமிழனின் வாழ்க்கையை இலக்கியம் ஆக்குகிறேன்.

இலக்கியம் என்ற பெயரில் வாழ்க்கையோடு ஒட்டிப் போகாத கற்பனா இலக்கியக்காரர்களின் வரிசைக்கு என்னைத் தள்ளிவிட மேற்கொள்ளப்படும் வார்த்தைப் பிரயோகமே 'இந்தச் சமகால இலக்கியம்' பற்றி எழுது பவர்கள் என்று எனக்குக் கூறுவதாகும்.

இன்னொரு குற்றச்சாட்டுக்கும் நான் ஆளாக்கப் படுகிறேன். சாதிப் பிரச்சனைகளை நான் எழுதுவதால் வர்க்க ஐக்கியத்திற்கு அது குந்தகமாகிவிடுகிறது என்ப தாகும். முதலில் வைக்கப்பட்ட குற்றச்சாட்டும் இதுவும் ஒரே இனம், கனம் உள்ள இரட்டைகளேயாகும்.

வர்க்கங்கள் எந்த அடிப்படையில் வகுக்கப்படுகின்றன? அல்லது எந்த அடிப்படையில் வகுக்கப்படவேண்டும்? மாக்சிசத் தத்துவத்தின்படி இழப்பதற்கு எதுவும் இல்லாத வர்களையே பிரித்தெடுத்து அதற்கே மாக்ஸ் "புரோலிற்ரேயின்" என்று பெயர் சூட்டியுள்ளார். இதையே புரட்சிக்கு முன்னணிப் படையாகவும் கொள்ளவேண்டும் என்கிறார். அதை ஏற்றுக்கொண்டு,கிராமப்பாட்டாளிகளை இவர்களின் நேச சக்தியாக்குவது நமது கடமை.

இயந்திர உற்பத்தி முறைக்குள் பல ஜாதியினரையும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவம் உள்ளடக்கிக் கொண்டிருப்பதால் அங்கே அப்போதைக்கப்போது நேராகவே எழும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேருக்கு நேராகவே தங்களை ஒன்றுபடுத்திப் போராடும் அவசியத்திற்கு நகரத்துத் தொழிலாளிகள் உட்படுதல் போன்று கிராமப்புற உழைக்கும் மக்களை ஒன்றுபடுத்திவிடுவது இலேசுப்பட்ட ஒன்றல்ல. பண்ணை அடிமை முறையினதும் நிலப்பிரபுத்துவ முறையினதும் பிடிப்புகள் இன்னும் அசைக்கப்படாத அமைப்பினையே நாம் காணுகிறோம். இதில் தமிழகத்துக்கென்றோ இலங்கைத் தீவுக்கென்றோ வேறுபாடு ஒன்றும் இல்லை.

இந்தப் பண்ணை அடிமைகளான கீழ் மட்டத்தினரிடையே பல கூறுகள் போடப்பட்டுள்ளன. அந்தக் கூறுகளை ஒன்றுபடுத்துவதற்கான நடவடிக்கைகளாகக் கூலி உயர்வை அல்லது குறைந்த பட்சச் சலுகைகளை முன்வைத்து வெற்றிகொண்டதாக அனுபவங்கள் காட்டவில்லை. சமயாசமயங்களில் நிலப்பிரபு சாதியையே பாவித்து வெற்றி கண்டுவிடுவதையே கண்டிருக்கிறோம். இந்தப் பண்ணை அடிமைகள் தங்கள் தங்கள் வட்டத்துக்குள்ளேயே கௌரவங்கள் பாராட்டிக் கொள்வது வழக்கத்தில் இருக்கும் ஒன்றாகும். இதையே நிலப்பிரபு சரியாகச் சுண்டிவிட்டு வெற்றி கண்டு விடுகிறான். அதனால் பொதுவில் அந்தப் பண்ணையாருக்குக் கீழ்ப்பட்டு நசுங்கும் அவனால் தாக்கப்படும் சகலரையும் ஒன்று சேர்க்க அந்த சாதி வடிவத்தின் கோரத்தை எடுத்துக்காட்டி அதற்கு எதிரான உணர்வைத் தூண்டிவிடுதல், பண்ணையாரால்

ஆளப்படும் "சாதி ஆசை காட்டிப் பிளவு படுத்தல்" என்ற நடவடிக்கைக்குப் பதிலாக சாதிக் கொடுமைகளைச் சொல்லி ஐக்கியப்படுத்துதல் ஆகியவற்றில் முந்திக் கொண்டால் அது பலனைத் தருமே அன்றி நஷ்டத்தைத் தரவே தராது. இது தக்கவழி என்பதில் ஐயமில்லை.

ஆனால் இதை மட்டும் செய்து கொண்டிருத்தல் என்பது தவறானதே! ஏனைய சமூகத்து வர்க்கத்தோடு இணைக்கும் வேலையும் சேர்த்துக் கொண்டால்தான் மாக்ஸ் கண்ட புரோலிற்ரேயின் வர்க்க குணாம்சங்கள் பரவலாகும். இந்த இணைப்பு இல்லாதவரையில் பெயருக் காகத்தான் இந்த வார்த்தைப் பிரயோகம் உபயோக மாகும். நேர்மையாக இதை ஒப்புக்கொள்ள மறுப்பவர்கள் நிச்சயமாகப் பலவேறுபட்ட நலன்களுக்காகத் தங்களை வெளிப்படுத்த விரும்பாத வெறும் தத்துவக்காரர்கள் என்பதுதான் நான் நினைப்பதாகும். எனவேதான் "சாதி அமைப்புக்கு எதிரான இலக்கியம் செய்தல் வர்க்கத்துக் குள்ளேயே பிளவை வருவித்துவிடும் செயல் என்று குரல் வைப்பவர்கள் வர்க்கத்துக்குள்ளேயே ஒரு வர்க்கத்தைத் தொடர்ந்து வளர்த்துவர வேண்டிய வேளையில் சமூக மாற்றப் போரின்போது வழிவிலத்தி ஓடும் ஒரு பிரிவினர்க்கு ஆதரவு தருகின்றனர் எனச் சுட்டிக்காட்டுதல் அவசியமா கிறது. இவர்களால் வேறோர் நியாயமும் வைக்கப்படு கிறது. "பண்ணை முதலாளிகள் வேறு சாதியினராக இருந்தாலும் அடிமைகளை ஆளும் வகையில் சாதி முறையை வைத்துக் கொண்டே அவர்கள் ஐக்கியப் பட்டிருப்பதுபோல நமக்குள்ளும் ஏன் அப்படி இருக்கக் கூடாது?" என்ற கேள்வியுடன் இந்த நியாயம் பிறக்கிறது.

இந்த நியாயம் கடைசியில் முதலாளித்துவ முறையின் மூலமே மாக்சீசத்தைச் சென்றடைந்துவிட முடியும் என்பதில் தான் போய் நிற்கும். (அதாவது நலுங்காமல், அலுக்கா மல், களைக்காமல் புள்ளடிகளைப் போட்டு அரசமைத்தல்!)

இந்த நாவலில் குறிப்பிடப்பட்டிருக்கும் கால இடை வெளிக்குள் தொடர்ச்சியாகப் பஞ்சம மக்கள் எந்தெந்த விதங்களில் வஞ்சிக்கப்பட்டார்கள் அடிமைகள் ஆக்கப் பட்டார்கள் என்பதனையும், அந்த வஞ்சிப்புகளுக்கு எதிராக இந்த மக்கள் ஆங்காங்கே எப்படிப்பட்ட விதங்களில் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதனையும் கிராமப்புறங்களில் எவ்வளவு நுணுக்கமாக இவர்கள் மேல் அடக்குமுறை நுகத்தடிகள் சுமத்திவைக்கப்பட்டன என்பதை யும் நீங்கள் காண்பதற்காக எனது அனுபவத்திற்கும் எனக்கு முற்பட்டவர்களின் அனுபவங்களுக்கூடாக நான் கற்றுக் கொண்டவைகளுக்குள்ளும் நிதானமாகக் காலூன்றி நின்று அந்தக் கால இடைவெளியில் வாழ்ந்தவர்களையே பாத்திரங்களாகவும் அவர்கள் வாழ்க்கைக்குள் வந்து போனவைகளையே கருப்பொருள் ஆகவும் தந்திருக்கிறேன்.

எனது முன்னைய நாவல் ஒன்றில் நான் குறிப்பிட்ட தைப்போல ‘‘மனித வரலாறு என்பது தொடர்ச்சியான ஒரு நீண்ட யுத்தம். இன்றோ நாளையோ அது முடிந்து விடக் கூடியது அல்ல. உலகினை உழைக்கும் வர்க்கம் தனது ஆளுமைக்கு உட்படுத்தும் வரை இந்த யுத்தம் நீடிக்கும். இந்த யுத்த நடத்தலில் நானும் என்போன்ற பலரும் எனக்குப் பின்னால் வேறு பலரும் இலக்கியத்துக் கூடாகத் தங்கள் பங்களிப்பை செய்துகொண்டே இருப்பர்.

இன ரீதியில், மொழி ரீதியில், இந்த யுத்தம் விரிவடையப் போவதில்லை. இனம் மொழி என்பவைகளில் ஏற்படும் பிரச்சனைகளில் தீர்வுகாண மயக்கத் தோற்றத்திற்குப் பின்னால் இழுபட்டுச் செல்பவர்களுடன் இலக்கியக்காரர்களும் இழுபட்டுப் போகும் நிலையை இன்று காண்கிறோம். இது நிரந்தரமான இழுபாடாக இருக்கப்போவதில்லை. வர்க்க முரண்பாட்டினால் தோற்றுவிக்கப்படும் பெரும் பிரளயத்திற்கு முன்னால் இந்தக் குறுகிய போக்கு அடிபட்டுப்போகும். அந்தக் காட்சியை இப்போதே என் கண்கள் காண்கின்றன.

இந்த நாவல் என்னால் பூர்த்தி செய்யப்படாதவிடத்து இன்றுள்ள நிலையில் இந்தப் பணியை செய்யக்கூடியவர்களாக நான் இருவரைக் காண்கிறேன். ஒருவர் கே தங்கவடிவேல்; மற்றவர் "தெணியான்".

இந்த நாவலில் வரும் சம்பவங்களையும், பாத்திர வார்ப்புகளையும் சரியாக உணர்ந்துகொள்ளக்கூடிய சமூக அறிவு தங்கவடிவேலிடம் இருப்பதை அறிகிறேன். அதே வேளை நீண்டகாலமாக சிருட்டி இலக்கியப் படைப்பில் இருந்து அவர் விடுபட்டு நிற்பதையும் அவதானிக்கிறேன்.

அடுத்தவரான 'தெணியான்' சாதி விவகாரத்தின் வேர்களைத் துருவிப் பிடிக்கும் ஆற்றல் உள்ள படைப்பாளியாக வளர்ந்து வருகிறார். சமீப காலத்திலிருந்து அவரின் எழுத்து ஆளுமை விரிவடைவதையும் அவதானிக்கிறேன். ஆயினும் இந்த மிகுதிப் பகுதியை பூர்த்தியாக்கும் பணிக்கு அவரைப் பொறுப்பாளனாக்க என்னால் முடியவில்லை.

ஏனெனில் அரசியலில் அவர் என் வயப்படவில்லை. சரியான நிலைப்பாட்டுக்கு வரவில்லை. சூழ்நிலைகள் அவர் வரவைத் தடுக்கின்றன. கால ஓட்டத்தில் அவர் அரசியல் நிலைப்பாட்டில் சரியான பங்கெடுப்பினை கொள்ளும் நிலை ஏற்படின் குறிப்பிட்ட இருவருமே இதைப் பூர்த்திசெய்யப் பொருத்தமானவர்கள் என இதைப் பிரசுரிக்க விரும்புபவர்களுக்கு ஆலோசனை கூற விரும்புகிறேன்.

இதற்குமேல் இந்த முன்னுரையை என்னால் கொண்டுசெல்ல முடியவில்லை, எனது மதிப்பிற்குரிய வாசகர்களுக்கெல்லாம் எனது வணக்கங்கள்.

**கே. டானியல்**
14-4—83

15-4—83

வர்க்கப் போருக்கான இந்தக் களரியில் மக்களிட மிருந்து கற்றுக்கொள்ளவும்... கற்றுக்கொண்டவைகளையே போர் ஆயுதங்களாக்கவும் நிறைய, நிறையப் பாடங்கள் பிறக்கின்றன. இதைப் பகிரங்கமாக மறுப்பவர்கள் பலர் மாக்சீயப் போர்வையைப் போர்த்துக்கொண்டு உலாவு கின்றனர். அவர்கள் இலக்கியக்காரர்களாகி, வாசகர்களை ஊடுருவி, அவர்கள் மூலமாக மக்களிடம் ஒரு மயக்கு நிலையை ஏற்படுத்த தத்துவங்களுக்குள் தத்துவம் கண்டு கொண்டதாகப் பிதற்றுவர்.

இலக்கியம் உட்படச் சகலதிலும் இவர்களை இனம் காணுவதில் வாசகர்களும், அவர்களுக்கூடாக மக்களும் கவனமாக இருத்தல் அவசியம். சாதாரண மனிதனுடைய அன்றாட வாழ்க்கைக்கு அப்பால் தத்துவ விரிசல்களைப் பிச்சல், பிடுங்கல்களாக்கி தத்துவம் வேறு, வாழ்க்கை வேறு என்று புதிய பாடம் கற்பிக்க முற்படும் எவராலும் தொடர்ச்சியான மக்கள் போரை கொண்டு செல்லவே முடியாது.

மனிதனின் வாழ்க்கைக்கான போராட்டங்களில் இருந்தே தத்துவ வளர்ச்சியினைக் காண்பவர்களால் மட்டுமே இந்த யுத்தத்தை நடத்திச் செல்லமுடியும்.

இறுதியில் இது ஒரு பிரளயமாக மாறும். இந்தப் பெரும் பிரளயத்திற்கு முன்னால் தேவையற்றதுகள், தேவையற்றவர்கள் அழிக்கப்படும்; அழிக்கப்படுவர் !

அடுத்துவரும் தலைமுறை இலக்கியத்திற்கூடான தனது பங்கினை செய்தே தீரும்; அதற்கு இந்தச் சிறுநூல் ஒரு ஆயுதமாக பயன்படின் அது எனக்குப் போதுமானதாகும்.

**கே. டானியல்**

15—4—83

16—4—83

ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பேரெழுச்சிக்கு "இலக்கியத்தையும் ஆயுதமாகப் பயன்

படுத்துதல்" என்ற கொள்கையின் அடிப்படையில் எழும் நடைமுறைகளை சமூக மாற்றத்தின் எதிரிகளும் இன்று கடைப்பிடித்து வருவதை காண்கிறோம்.

இவர்கள் மிகவும் இலகுவாக புரட்சியைப் பற்றியே பேசிக்கொண்டு மூளையால் விரிவடைந்த அறிஞர்களுக் கூடாக மக்கள் புரட்சியை தடுத்து நிறுத்தும் இலக்கியங் களை மக்களிடையே பரப்புகின்றனர். மக்கள் இலக்கியக் காரர்கள், மக்கள் சார்பான விமர்சகர்கள் இதை இனங் கண்டு மக்களுக்கு உண்மையினைக் கூறவேண்டும். இது இலகுவான வேலையல்ல. மக்களும் சமூக மாற்றத்திற்கான தங்கள் நடைமுறை வேலைகளுடன் ஒன்றாக இதைச் சேர்த்துக் கொண்டு இவர்களை அம்பலப்படுத்த வேண்டும்.

இவர்கள் அம்பலப்படுத்தப்படாத ஒவ்வொரு நிமிட வேளையும் ஒவ்வொரு வருடமாக சமூக மாற்றத்தைப் பின் தள்ளிவிடும். இந்தக் கவனிப்புச் சரிவர நடக்க வேண்டு மெனில், மக்கள் இலக்கியத்துடன் நின்றுவிடாது அரசியல் கூர்மையுடையவர்களாக ஆகவும் வேண்டும்.

எனவே சரியான இலக்கியக்காரன் தனது படைப்பு களுக்கூடாக சரியான அரசியல் தெளிவினை உண்டாக்கும் விதைகளைத் தூவி விடாதவனாகில் அன் மிகவும் தாக்கமான ஒரு தவறினைச் செய்தவனாகிறான்.

எனது இலக்கியப் பயணத்தில் நான் அந்தத் தவறினைச் செய்யவில்லை எனத் துணிந்து கூறுவேன்.

கடைசிவரை என்னோடு அந்தத் துணிவு இருந்தே தீரும்.

76/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

**கே. டானியல்**
16—4—83

**"அடிமைகள்"** எழுதி முடிக்கப்பட்டுவிட்டது. இந்த நாவலையும் தமிழ்நாட்டில் பதிப்பிக்க வேண்டிய சூழ்நிலை ஒன்று இப்போதுதான் தோன்றியது. பலகாரணங்களுக்காக இந்த நாவலும் அங்கு வெளிவருவது பொருத்தமாகவே படுகிறது.

தமிழகத்துப் படைப்புக்களை இலங்கையர்கள் படிப்பதைப்போன்று தமிழகத்தவர்கள் இலங்கையின் படைப்புக்களைப் படிப்பதில்லை என்ற குரல் நீண்ட காலமாக இங்கு எழுந்து கொண்டிருந்தது. இலங்கையின் தமிழ் தமிழகத்து மக்களுக்குப் புரியாததுடன், இலங்கையின் படைப்புக்களைத் தமிழகத்தில் பெறமுடியவில்லை என்று தமிழகத்தார் சமாதானமும் சொல்லி வந்தனர். தமிழகத்துப் படைப்புக்களைத் தொடர்ந்து படிக்கும் வாய்ப்பு இருக்கின்றபடியால்தான் தமிழகத்து மொழி புரியவில்லை என்று இங்கிருந்துகுரல் எழவில்லை. அதேபோன்று இலங்கையின் படைப்புக்கள் அங்குள்ளவர்களால் படிக்கப்படும்போதுதான் இந்தத் தமிழுடன் அவர்கள் பரிட்சயமாவர். அதனால் விளங்கவில்லை என்ற சமாதானம் சொல்ல வாய்ப்பில்லாமல் போய்விடும் அத்துடன், இருநாடுகளுக்குமே பொதுவான கருப்பொருட்கள் இலக்கிய ஆளுமைக்குட்படும்போது வாசகர்களிடையேபொதுவானஉடன்பாடுபிறக்கவும்

வாய்ப்புக் கிடைக்கிறது. நல்லவாசகர்களுக்குக் கடல் பிரிவினையை மறந்து நல்ல எழுத்தாளர்களை இனங்காணுவதற்குச் சூழ்நிலையும் சிருட்டிக்கப் படுகிறது. எனவேதான் இது தமிழகத்தில் பிரசுரமாவதை நான் விரும்பினேன்.

முதன் முதலில் தமிழகத்தில் புத்தக உருவில் வெளியான எனது "பஞ்சமர்" நாவலைப் படித்த பலரிடமிருந்து எனக்குக் கிடைக்கப்பெற்ற கடிதங்களிலிருந்து பல படிப்பினைகளை என்னால் பெற்றுக் கொள்ளவும் முடிந்தது. "எனது நாட்டு மக்களிடமிருந்து மட்டுமல்ல வேற்று நாட்டு மக்களிடமிருந்தும் நான் கற்றுக்கொள்ள அனேகம் இருக்கின்றன" என்ற உண்மையினையும் இவைகள் மூலம் உணர்ந்து கொள்கிறேன்.

இத்தோடு இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கு எனது இந்தவிதமான சாதி எதிர்ப்புப் போராட்ட இலக்கீயங்களைக் கேலி செய்பவர்கள், "தமிழகத்தில் சமூக சீர்திருத்த இலக்கியங்கள் தோன்றியதனால்தான் சாதி ஒழிந்து விட்டது; இன்று அங்கு சாதி சம்பந்தமான இலக்கியங்களைப் படைப்பவர்கள் இல்லை; இதே போன்று சமூகச் சீர்திருத்த இயக்கங்களைத்

தோற்றுவித்தாலே போதாதா? அவைகளை இலக்கியங்களாகப் படைக்க இப்போது என்ன அவசியம்வந்துவிட்டது!'' என்று அப்பாவித்தனமாகக் கேட்கின்றனர். அத்தோடு அந்தச்சீர்திருத்த இயக்கங்களான தி. க., தி. மு. க., அ. தி. மு. க., காந்திய சேவா, சர்வோதயா ஆகியவைகளை நிரைப்படுத்திக் குறிப்பிடுகின்றனர். இது எத்தனை தூரம் உண்மையானது என்பதனை சாதாரண தமிழகத்து மக்களே முடிவு செய்யவிட்டால் மனச்சாட்சி உள்ள எந்தத் தென்னகத்தவனும் இதை ஏற்றுக் கொள்ளவே மாட்டான் என்பதனை நான் நன்றாக உணர்வேன். எனவேதான் வெறும சீர்திருத்தக் கருத்துக்களால் அரசு நடத்திக் கொண்டிருப்பவர்களால் சாதி அடக்கு முறையின் கோரங்களைச் சிறிதளவேனும் அசைக்கமுடியால் இருக்கிறது என்பது உண்மைப்படுகிறது. இதை உள்வாங்கிக் கொள்ளும் பலர் எனது இந்த இலக்கிய வழிமுறையினையும் அந்தச் சீர்திருத்தக் குழிக்குள் தள்ளிவிட முற்படுகின்றனர்; "வர்க்க ஐக்கியத்தைச் சிதைக்கும் செயற்பாடு'' என்கின்றனர். இவர்களின் இந்தக் கூற்றினை மறுபடியும், மறுபடியும், மறுபடியும் நான் மறுக்கிறேன்.

தமிழகத்தில் எனது இலக்கியக் கருத்தினை ஒட்டி இது போன்ற நாவல்கள் பல எழுந்துள்ளன.

அவை மிகச்சில ஆயினும் இலங்கையோடு ஒப்பிடும் போது எண்ணிக்கையில் அதிகமானவையே! அவைகளை விழுந்து விழுந்து படித்துவிட்டு, "ஆகா, அற்புதம்; அற்புதம்" என்று புகழ்பாடும் எனது நாட்டு விமர்சகர்கள், வாசகர்கள், எழுத்தாளர்கள் பலர் எனது பஞ்சமரையும் கோவிந்தனையும் மூர்க்கத்தனமாகத் தாக்க முற்பட்டிருந்தமைக்குரிய காரணத்தை அறிய முற்பட்டால் அது 'இந்த இரு நாவல்களிலும் அரசியல் நிறைவு மிஞ்சி நிற்கிறது' என்பதில்தான் போய்முடியும்.

சமீபத்தில் என்னை வைத்திய விடுதியில் பார்க்க வந்த இலக்கிய ரசிகரும், அரசியல்வாதியு மாகிய ஒருவருடன் பேசியபோது, பேச்சுவாக்கில் "அடிமைகள் எனது கடைசிப் படைப்பாக இருந்தாலும் இருக்கும்" என்று நான் கூறியபோது அனுதாபத்துடன் அவர் அதன் கருப்பொருளைக் கேட்டுவிட்டு, "இதென்ன மடைக்கதை கதைக்கிறீர் அரசியலே இல்லாத ஒரு நாவலை எழுதிப் பேரெடுக்காமல் உமக்குச் சாவு வராது!" என்று எடுத்த எடுப்பிலேயே கூறிவிட்டார். என்மீது அவர் வைத்துள்ள அபிமானத்தை இப்படித்தான் காட்ட

# 1

கண்ணம்மா படுக்கப்போய் வெகு நேரம் ஆகிவிட்டது.

சீதேவிக் கிழவி பாயை விரித்துப் போட்டு விட்டு கால்மாட்டுப் புறமாக இருந்து வெற்றிலை துவைத்துக் கொண்டு இருந்தாள். கைபோன போக்கில் நீண்ட நேரமாகத் துவைத்துக் கொண்டிருந்தாள்.

விறாந்தையில் ஒதுக்குப்புறமாகப் படுத்திருந்த வேலுப்பிள்ளைக் கிழவன் முனகுவதும், இழைப்பதுவும், இருமுவதும், இழுப்பதுமாக இருந்தார். பாழாய்ப்போன

தொய்வு... மேகம் கறுத்துவிட்டால் போதும் அவருக்குத் தொய்வு இழுக்கத் தொடங்கிவிடும். இரவின் அமைதியையெல்லாம் அவரின் இழுப்புக் கலைத்துக்கொண்டே இருந்தது.

சீதேவிக்கிழவிக்கு முன்னால் சுடர்விட்டுக்கொண்டிருந்த உயரமான பித்தளை விளக்கு இருந்தாற்போல ஊதிவந்த காற்றுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் ஆடி, அசைந்து நடுங்கி இறுதியில் அணைந்தே போய்விட்டது.

"கண்ணம்மா! நாச்சியார் நெருப்புப்பெட்டி எங்கை மோனை வைச்சனி?" என்று சீதேவிக்கிழவி குரல்வைத்தாள்.

நடுவீட்டுக்குள் இருந்து குச்சி ஒன்றைத் தட்டிப் பற்ற வைத்துக்கொண்டே கண்ணம்மா வெளியே வந்தாள்.

"நீ இன்னும் படுக்கேல்லையே பெத்தாச்சி?" என்று கேட்டுக்கொண்டே வந்தவள் பித்தளை விளக்கைப் பற்ற வைத்தாள்.

குளிர் காற்று வீசியது.

வெளியே சங்கடப்படலைத் தலைவாயில் பக்கமாக நாய் குரைத்துக்கொண்டு ஊளையிட்டது.

"ஏணை, நீ இன்னும் படுக்கேல்லையே?" என்று கண்ணம்மா மீண்டும் கேட்டாள்.

"இல்லையடி பிள்ளை!" என்று மொட்டையாகப் பதில் சொன்னாள் சீதேவிக் கிழவி. வெற்றிலை துவைக்கும் ஓசை விடாமல் கேட்டுக்கொண்டிருந்தது.

கண்ணம்மாவுக்கு இதற்குப் பின்பு பேசவரவில்லை அவள் அப்படியே நின்றாள்.

''பண்டித்தலைச்சி அம்மாளே! எங்களுக்கு இப்பிடியும் ஒரு சோதனையோ...? என்று ஏங்கிய பெருமூச்சுடன் கிழவியின் குரல் மறுபடியும் வந்தது.

பேத்திக் கிழவியை ஏதேதோ சொல்லித் தேற்ற வேண்டுமென்றுதான் கண்ணம்மாள் நினைத்தாள். ஆனால் அவளால் பேசமுடியவில்லை. அவள் கண்களில் சுரந்துவந்த கண்ணீர், பார்வையை மங்கலாக்கவே பிறங்கையால் கண்களைத் துடைத்துக் கொண்டு...

''பெத்தாச்சி! நடக்கிறது நடக்கட்டுக்கு இனி நாங்கள் என்ன செய்யிறது., நீ படனை.'' என்று மட்டும் கூறினாள்.

வேலுப்பிள்ளைக் கிழவனின் இழுப்பின் ஓசை தொடர்ந்தும் கேட்டுக்கொண்டே இருந்தது.

சங்கடப்படலைத் தலைவாயில் பக்கம் எல்லுவன் நாய் குரைத்துக் குரைத்து ஊளையிட்டுக்கொண்டே இருந்தது.

வெளியே இலேசாக மழைத்தூறல் தொடங்கியது. சிறிது சிறிதாகத் தூறல் கனத்து துளிகளாகிக் கொட்டியது.

வீட்டின் பின்புறமிருந்து பசுமாட்டின் கனைப்பு கேட்டது. அது தன் கன்றுக் குட்டிக்கு இருட்டின் இனங் காட்டிக் கொள்ளவே கனைக்கிறது. கன்றுக்குட்டியும் பதிலுக்கு 'ம்மா...' என்று குரல் வைத்தது.

கண்ணம்மா பித்தளை விளக்கை எடுத்துக் கொண்டு முற்றத்திற்கு வந்தாள். நாற்சார்வு வீடான அந்த

நடுமுற்றத்தில்கம்பியில் உலரப்போடப்பட்டிருந்ததுணிகளை இழுத்து எடுத்துவந்து உள்சார்விறாந்தையில் போட்டுவிட்டு கொல்லைப் புறம் போனாள். இப்போது அவள் வெளியே கட்டப்பட்டிருக்கும் மாடு கண்டை அவிழ்த்துக் குடிலுக்குள் கட்டிவிட அவசரமாகப் போனாள்.

"கவனம் பிள்ளை! மழைக்காலிருட்டு, அடி பாத்துப் போ..." என்று பேத்தியாரை எச்சரிக்க சீதேவிக் கிழவி தவறவில்லை.

கண்ணம்மா வெளியே போய்வரச் சற்று நேரம் ஆகிவிட்டது. அவள் திரும்பி வந்தபோதும் கிழவி லொக்கு லொக்கென்றுவெற்றிலையை துவைத்துக்கொண்டிருந்தாள்.

"புள்ளை; இண்டைக்கும் கந்தன் வரான் போலை... கொட்டிலுக்கை பாத்தனியே மோனை?" என்று சீதேவிக் கிழவி கேட்டாள்.

"ஓமெணை; வரல்லையெணை!" என்று பதில் சொல்லிக்கொண்டே கண்ணம்மா தலையின் ஈரத்தைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

நீண்டு நெடுத்து முழங்கால்வரை தொங்கிக் கொண்டு, உல்லாசமாக ஆடி அசைந்து நளினமாடிக் கொண்டிருந்த கருங் கூந்தலையே சீதேவிக் கிழவி பார்த்துக் கொண்டிருந்தாள். உச்சியிலிருந்து பீறிட்டு வந்த பெருமூச்சு ஒன்று வெளியே வந்தது.

"ஈரத்தை நல்லா உணத்து பிள்ளை தடிமன், கிடிமன் வந்திடப் போகுது!" என்றவள் தொடர்ந்து தனக்கு உள்ளேயே பேசினாள்.

"பாவம் அவன் பரதேசி, எங்கினேக்கை போய்க் கிடக்கிறானோ தெரியலையே. அவன்ரை இனத்தவங்களும் அண்ட மாட்டாங்கள்! அவனும் இல்லாட்டா..!" என்று மேலும் ஏதேதோ பேசிக்கொண்டாள்.

ஈரத்தை ஓரளவு உலர்த்தி முடிந்ததும் படுக்கையில் விழுந்து விட்டாள்.

வெளியே சீதேவிக் கிழவி இன்னும் லொக்கு லொக்கு என்று வெற்றிலையை துவைத்துக்கொண்டிருந்தாள்.

"புள்ளை, கந்தன்ரை தட்டுவத்துக்குள்ளை குரக்கன் புட்டுப்போட்டு மூடி வைச்சனியை? பாவம் ஒண்டு பாதியிலை சில நேரம் வந்தாலும் வருவானெல்லே!" என்று சீதேவிக் கிழவி மீண்டும் பேசினாள்.

"ஓமெணை ... உறியிலை வைச்சு பெட்டியாலை மூடியெருக்கெணை" என்று கன்ணம்மாவின் பதில் கிடைத்தது.

வேலுப்பிள்ளைக் கிழவனின் பக்கத்திலிருந்து இப்போது ஓசை ஏதும் வரவில்லை. தொய்வு இழுத்து களைத்துப் போகவே... அவர் சற்று அசந்து போனார்.

வெளியே சங்கடப் படலைத் தலைவாயில் பக்கம் எல்லுவன் நாய் குரைத்து ஊளையிட்டுக்கொண்டே இருந்தது.

மழை சற்று ஓய்ந்து போனபோது தொலைவிலிருந்து வந்த றெயில் ஓசை பேரிரைச்சலாக எழுந்தது. அது

இப்போதுதான் ஆனையிறவுப் பாலத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது.

இந்த இரைச்சல் கேட்பதாகஇருந்தால் நேரம் சரியாகப் பத்தே காலாகத்தான் இருக்கும்,

''புங்கை றெயிலும் வந்திட்டுது உந்தப் பரதேசியை இன்னும் காணேல்லை இண்டைக்கும் வரான்போலைத்தான் கிடக்கு...'' என்று சிதேவிக் கிழவி மீண்டும் பேசினாள்.

சிதேவிக் கிழவி வெற்றிலை துவைக்கும் லொக்கு, லொக்கென்ற ஓசை இன்னும் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

# 2

சிதேவிக் கிழவிக்கு இப்போது வயது எண்பத்தைந்துக்கு மேலாகி விட்டது அறுபத்தைந்து ஆண்டுக்கு முன், புத்தூரில். இருந்து சகல ஐஸ்வரியங்களோடும் அவள் வந்திருந்தாள்.

வேலுப்பிள்ளையருக்கு மனைவியாகி இந்த வீட்டுக்குள் அவள் காலடி எடுத்து வைத்தபோது சகல சீர்வரிசைகளும் அவளுடன் வந்து சேர்ந்தன.

புத்தூரில் பிரசித்தி பெற்ற பல்லக்கு முதலித்தம்பியின் ஏகபுத்திரியாகஅவதரித்து பட்டத்துக்கான இளவரசியாக

பத்தொன்பது வருடங்கள் புத்தூரில் வாழ்ந்துவிட்டு இருபதாவது வயதில் இந்த நாற்சார் வீட்டுக்கும் அதைச் சுற்றியுள்ள தென்னந்தோப்புக்கும், வேலுப்பிள்ளையரின் உற்றார் உறவினருக்கும்... தோட்டம் துரவு, மாடு, கண்டு சகலத்திற்கும், மொத்தத்தில் வேலுப்பிள்ளையர் குடும்பத்தின் ஆணைக்குட்பட்ட சகலத்திற்கும் இராணி யாகவே வந்து சேர்ந்தாள்.

புத்தூர் பல்லக்கு முதலித்தம்பி என்றால் யாழ்ப்பாணப் பகுதிக்கு மட்டுமல்ல, நாடு முழுமைக்குமே பிரசித்தம். அத்தனை தூரத்திற்கு முதலித்தம்பி குடும்பம் பிரசித்தம் மட்டுமல்ல முதலித்தம்பியின் முப்பாட்டன் காலத்திலிருந்து அந்தப் பிரசித்தம் தொடர்ந்து கொண்டிருந்தது.

நிலம், புலம், சொத்து, சுதந்திரம், அதிகாரம், அடிமை குடிமை, சிறைக்குட்டிகள் என்ற விதங்களிலான சகல சுகபோகங்களுடனும்... பரம்பரை பரம்பரையாக இராச வாழ்வு நடத்திக்கொண்டிருந்த பல்லக்கு முதலித்தம்பியின் குடும்பத்துடன் வேலுப்பிள்ளையரின் குடும்பத்தை ஒப்பிட்டால் சீதேவிஅம்மாளுக்கும், வேலுப்பிள்ளையருக்கும் நடந்த திருக்கலியாணம் பொருத்தமற்றதாக இருந்தது என்னவோ உண்மைதான். ஆனாலும் சீதேவி அம்மாளுக்கும் வேலுப்பிள்ளையருக்கும் திருக்கலியாணம் நடந்தேவிட்டது.

வெள்ளை நிறத்தவர்கள் ஆட்சி செய்த காலம் அது. வேலுப்பிள்ளையரின் தந்தை யாழ்ப்பாணம் கோட்டைக்குள் உத்தியோகம் பார்த்தார். முதலித்தம்பியரோ... யாழ்ப் பாணம் கச்சேரியில் பெரும் பதவி வகித்தார். நாளாந்தம் பல்லக்கில் உத்தியோகத்திற்கு வந்து போகும் முதலித் தம்பியரை மடக்கி, கோட்டைக்குள் வேலைபார்த்த வேலுப் பிள்ளையரின் தந்தைக்குச் சம்பந்தியாக்கிய பொறுப்பை

வெள்ளைக்கார மேலதிகாரி ஒருவர் மிகக் கச்சிதமாக செய்து முடித்துவிட்டார்.

வேலுப்பிள்ளையரை மாப்பிள்ளையாக அழைத்துச் செல்ல புத்தூரில் இருந்து பல்லக்கு வந்தது. பல்லக்கில் மருமகனை அழைத்துச் சென்ற முதலித் தம்பியர் மகளையும், மருமகனையும் பல்லக்கிலேயே அனுப்பி வைத்தார். அந்தப் பெருமைக்குரிய பல்லக்கு இன்னும் சீதேவிக் கிழவியின் - வேலுப்பிள்ளையரின் நாற்சார் வீட்டின் கூடத்துள் ஒரு மூலையில் கொலுவீற்றிருக்கிறது.

சீதேவி அம்மாள் வேலுப்பிள்ளையரின் வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது சகல சீர்வரிசைகளும், அத்துடன் கணவன் மனைவியான ஒரு சிறைக் குடும்பமும் வந்து சேர்ந்தது. சீதேவி அம்மாளுக்கு தொண்டுதுரவு செய்யவும்,குடும்பத்தின் சகல தேவைகளுக்காகவும் அப்படியொரு குடும்பத்தை அனுப்பிவைப்பது சீதேவி அம்மாளுக்கு மட்டுமல்ல, அந்தக் குடும்பத்தைச் சார்ந்த சகல பெண்களுக்கும் சீதனச் சீர்வரிசைகளில் ஒன்றாகும்.

சீதேவி அம்மாளுக்கு இப்படி ஒரு சிறைக்குட்டிக் குடும்பத்தை தெரிவு செய்வதில் பல்லக்கு முதலித்தம்பியார் மிகவும் சிரமப்பட்டுவிட்டார்.

சிறைக்குட்டிக் குடும்பங்கள் என்ற விதத்தில் நாற்பது குடும்பங்களுக்குமேல் முதலித்தம்பி குடும்பத்திற்கு இருந்த தால்... அந்த நாற்பது குடும்பங்களுமே சீதேவி அம்மாளின் சீர்வரிசையாகப் போவதற்கு நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டன. இவர்களுக்கு இடையே உள்ள இந்தப் போட்டியை தவிர்ப்பதற்காக முதலித்தம்பியர்

திருவுளச் சீட்டுத்தான் போடவேண்டி இருந்தது. இந்தத் திருவுளச் சீட்டின் மூலம் சீதேவி அம்மாளின் சீர்வரிசைக்குள் அடங்கும் அதிஷ்டத்தைப் பெற்றவர்கள் இத்தினியும் எல்லிப்போலையும் என்ற மலட்டுக் குடும்பத்தினராகும்.

இத்தினி என்பவளுக்கும் எல்லிப்போலை என்பவனுக்கும் பிள்ளை குட்டி என்ற தொல்லைகள் எதுவுமே இல்லை தன்னந்தனிக் கட்டைகள். குழந்தை குட்டி கிடைக்குமென்று முப்பது வருடங்கள் காத்திருந்து அலுத்துப்போன நிலையில் இப்படி ஒரு அதிஷ்டம் அவர்களுக்குக் கிடைத்திருந்தது.

மலட்டுக் குடும்பத்தை வேலுப்பிள்ளைக்கு வரிசைப் பொருளாக அனுப்புவதில் முதலித்தம்பியின் மனைவியான வளும், சீதேவி அம்மாளின் அன்னையானவளுமானவளுக்குத் துளியளவும் சம்மதம் இல்லை. ஆனால் என்ன செய்வது. முதலித்தம்பியர் திருவுளச் சீட்டுத்தான் முடிவான தீர்ப்பு என்று முடிவு செய்துவிட்டாரே! சீதேவி அம்மாளுக்கு இது பிரச்சனை அல்ல, அவளின் எண்ணமெல்லாம், தான் போகுமிடத்திற்கு பெருமையோடு போய்ச் சேர்ந்து, முதல் எடுப்பிலேயே அந்தக் குடும்பத்திற்கு அதிகாரியாகி-ராணியாகி சர்வமுமாகிவிட வேண்டும் என்பதுதான்.

வேலுப்பிள்ளையரின் தந்தை செல்லப்பருக்கு முதலித் தம்பியரின் குடும்பத்தில் சம்மந்தம்கலந்ததில் பெருமைதான் ஆனாலும் தனது பெருமையையும் அவர் முடிந்த அளவு காப்பாற்றிக்கொண்டார். சுட்டிபுரம் அம்மன் கோவிலடியி லிருந்து தனக்கான நிலப்பாவாடை விரிப்பித்து, மேள தாள வாத்தியங்கள் முழங்க, தனது செல்வாக்குக்குட்பட்ட வீட்டுப் படலைகள் தோறும் நிறை குடங்கள் வைப்பித்து, ஆராத்தி எடுத்து கோலாகலமாக மணமக்களையும், சம்மந்திப் பகுதியினரையும் வரவேற்று தனது மேம் பாட்டையும் ஊர்சிதப்படுத்திவிட்டார். சம்மந்தி வீட்டார்

பார்த்து ஏங்கிப் போகும் அளவுக்கு குடிமக்களுக்கு அன்ன தானம் வைத்துக் காட்டிவிட்டார்.

அத்துடன் பட்டணத்திலிருந்து தருவிக்கப்பட்ட சிவிகையில் மணமக்களை ஏற்றி இறக்கிக் காட்டியும் விட்டார்.

உறவினர்களின் சபைசந்திக்கான நேரம் வந்துவிட்டது. சம்மந்திப் பகுதிப் பெரிய மனிதர்களும், ஊரின் பிரமுகர் களும் நாற்சார் வீட்டையும், தடிக்கட்டுப் பந்தல்களையும் நிறைத்துக்கொண்டுவிட்டனர்.

பல்லக்கு முதலித்தம்பியர் சகலருக்கும் மேம்பட்டவராக நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு மணவறைக்குப் பக்கத்தே கொலு வீற்றிருந்தார். சபை சந்திக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. சம்பிரதாயப்படி வீட்டிற்குத் தலைவன் யாராவது ஒருவரிடம் செம்பு தண்ணீரைக் கொடுத்து, சபை சந்தியை ஆரம்பித்து வைக்கவேண்டும். யாரைப் பெரிய மனிதராகக் கனம் பண்ணுவது!

தூரத்து முறையானவரும் ஊருக்குள் பெரும் செல்வாக் குடையவரும் கச்சாய் இராசரெத்தின முதலியின் பேரனுமாகிய கைலாய பிள்ளை தட்டுப்பந்தல் முகப்பில் கொலு வீற்றிருந்து மகாராச தோறணையில் அதிகாரம் செலுத்துகிறார்.

முதல்நாள் சுட்டிபுரத்தில் நடந்த அசம்பாவிதத்தை அவர் பெரும் தன்மையுடன் மறந்துவிட்டார். கோப்பாய் பகுதியிலிருந்து வந்தவரும் திடவீரசிங்கமுதலியாரின் இரத்த உருத்துக்காரனுமாகிய சூரிய முதலியார் தனது பரிவாரங்கள் புடைசூழ சகலருக்கும் மேலானவன் நான் என்ற தோறணையில் பாவனை செய்துகொண்டிருக்கிறார்.

செல்லப்பாப் பிள்ளைக்கு இப்போது பிரச்சனையாகி விட்டது. சம்பந்தி பல்லக்கு முதலியாரிடம் செம்பு தண்ணீரைக் கொடுத்தால் மற்றவர்கள் ஆத்திரப்பட்டுக் கொள்வார்கள். மற்றவர்களில் யாராவது ஒருவரிடம் செம்பு தண்ணீரைக் கொடுத்து விட்டாலோ பல்லக்கு முதலித் தம்பியர் வாய் நனைக்காமலேயே திரும்பிவிடுவார்!

செல்லப்பாபிள்ளை முற்றத்திற்கு வந்து மதியத்தைப் பார்த்தார். அது திரும்பிக் கொண்டிருந்தது.

நடு வீட்டுக்குள் பூதாக்கலம் நடந்து கொண்டிருந்தது. அந்த வேளை உள்ளே சென்று மகனிடம் பேசுவது சரியான தாக அவருக்குப் படவில்லை. பாதிரியார் சரியாக இரண்டு மணிக்கு வருவாரென்று மகன் சொன்னதை நினைத்து நினைத்துப் பார்த்துக் கொண்டார். மணி இரண்டுக்குக் கிட்டவாக வந்துவிட்டது.

அப்போது வெளியே ஆரவாரம் ஒன்று கேட்டது. சிறுவர்கள் பெரியவர்கள் எல்லோரும் வாயில் பக்கமாக ஓடினர்.

தொலைவில் குதிரை வண்டி ஒன்று தெரிந்தது. புழுதியை அள்ளித் தெளித்துக்கொண்டு அது ஓடி வந்தது.

தலை நிமிர்ந்து வந்த இரு வெள்ளைக் குதிரைகளின் தலைகள் உயரத்தில் தெரிந்தன.

குதிரைக்கு மேலான ஆசனத்தட்டில் ஒருவன் ஓங்கிய சவுக்குடன் உல்லாசமாக குந்தியிருந்தான். அவன் வெண்ணிற நீள உடைக்குள் அடைந்து கிடந்தான். தலையில் கறுப்பான தொப்பி ஒன்று இருந்தது. அதில் இராசமுடி மின்னிப் பளிச்சிட்டது.

"பாதிரியார் வாறார்!" என்று எங்கிருந்தோ ஒரு குரல் எழுந்தது. வண்டி வாயிலுக்கு வந்து நின்றதும் உள்ளே இருந்து தனது வெள்ளை உடம்புக்கு நீண்ட வெள்ளை மேலங்கி தரித்து இடையில் ஊதா நிற உத்தரியத்தைக் கட்டி, வொயில் துணியிலான தொப்பியைக்கழற்றி கையில் பிடித்தவாறே பாதிரியார் இறங்கி வந்தார்.

செல்லப்பர் பரிவாரங்களுடன் வாயிலில் காத்திருந்து பாதிரியாரை வரவேற்றுக் கொண்டு சொக்கட்டான் பந்தலுக்கு வந்து சேர்ந்தார்.

பூதாக்கலத்தை அவசர அவசரமாக முடித்துக் கொண்டு வேலுப்பிள்ளையரும் சீதேவி அம்மாளும் பந்தலுக்குள் வந்து பாதிரியாரை வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

பாதிரியார் அரைகுறைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வேலுப்பிள்ளையரைக் குசலம் விசாரித்துவிட்டு உட்கார்ந்து கொண்டார்.

வேலுப்பிள்ளையர் ஐந்து வருடங்கள் பாதிரியாரின் மதிப்பிற்குரிய மாணவனாக இருந்து படித்தவர். வட்டுக் கோட்டைப் பாடசாலையில் விடுதி மாணவனாக இருந்த அந்த ஐந்தாண்டு காலத்தில் வேலுப்பிள்ளையர்,பாடசாலையின் அதிபரான பாதிரியாரின் மனம் கோணும்படியாக நடந்ததில்லை. மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை விடுதலையில் ஊரில் இருந்துவிட்டு பாடசாலைக்குச் செல்லும்போது ஆசைப் பண்டங்கள், அருமைப் பண்டங்கள் என்று கொண்டுசென்று பாதிரியாரின் மனைவியானவளிடம் சேர்த்துவிட்டு அவளின் அங்கீகாரத்திற்காகக் காத்திருப்பார் இதனால் பாதிரி அம்மாளுடைய செல்வாக்கையுமே வேலுப்பிள்ளையர் பெற்றுவிட்டார்.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் வாழ்ந்ததாகச் சொல்லப்பட்ட பெரியமனிதர்கள் தான் ஊருக்கு ஓரிருவராக அந்தப் பாடசாலையில் விடுதி மாணவர்களாக இருந்து படிக்க முடியும். அந்த அந்தஸ்தை பெற்றவர்களில் வேலுப் பிள்ளையரும் ஒருவராக இருந்ததால் பாதிரியார் குடும்பம் இவரிடம் பற்றாக இருந்தது. இதனால்தான் பாதிரியார் பல மைல்களைக் கோஜ் வண்டியில் தாண்டி வேலுப்பிள்ளை யரின் கல்யாணத்திற்காக வந்திருந்தார்.

பாதிரியார் வந்து சேர்ந்ததும் வேலுப்பிள்ளையரின் தந்தை செல்லப்பருக்கு ஒரு முடிவு வந்துவிட்டது

சபை விருந்து நடப்பதற்கு யாருக்கு முதலில் செம்பு தண்ணீர் பரிமாறுவது என்ற பிரச்சனை சுமுகமாகத் தீர்ந்துவிட்டது, செல்லப்பபிள்ளை பாதிரியாரின் கையில் செம்பு தண்ணீரை வைத்துவிட்டார். பாதிரியாரைத் தலைச்சன் விருந்தாளி ஆக்கிவிட்டதில் பல்லக்கு முதலித் தம்பியருக்கு மனது ஒரு மாதிரியாகத்தான் இருந்தது ஆனாலும் அவரால் இதைப் பெரிது படுத்திவிட முடிய வில்லை. ஏனெனில் முதலித்தம்பியின் குடும்பத்திலிருந்தும் ஓரிருவர் பாதிரியாரின் ஆணைக்குக் கீழ் இருந்து கல்வி கற்று வந்தனர்.

விருந்து வைபவம் எந்தவித அசம்பாவிதமுமின்றி மிகவும் மங்களகரமாக நடந்தேறியது.

இன்று நால்சார் வீட்டின் ஒதுக்குப் புறத்தில் கிடந்து இழுத்துக் கொண்டிருக்கும் வேலுப்பிள்ளையருக்கும், லொக்கு, லொக்கு என்று வெற்றிலையைத் துவைத்துக் கொண்டிருக்கும் சீதேவி க்கிழவிக்கும் கல்யாணம் நடந்து பல்லக்கில் ஏறி சீதேவிக் கிழவி எழில் துள்ளும் குமரிப் பெண்ணாக சுட்டிபுரம் கோவில் வரை வந்து அதிலிருந்து சிவிகை ஏறி மந்துவிலுக்கு வந்து சேர்ந்த அந்தக் காலத்தை யெல்லாம் சீதேவிக் கிழவி இப்போது நினைத்துப் பார்த்துக் கொள்கிறாள். லொக்கு, லொக்கென்ற ஓசை இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

# 3

விடிந்துவிட்ட பின்பு கண்ணம்மா வெளியே வந்தாள். வழக்கத்துக்குமாறாக சீதேவிக்கிழவி முன்தாணையை இழுத்து மூடியபடி சுருண்டுபோய் கிடப்பதைப் பார்த்து,பேத்தி இரவெல்லாம் விழிப்பிருந்து விடியப்புறத்தில் தான் தூங்கியிருக்கவேண்டு மென்று கண்ணம்மாள் முடிவுக்கு வந்தாள்.

ஏதோ இரவெல்லாம் நன்றாகத் தூங்கி விட்டவரைப் போன்ற தெம்பில் வேலுப் பிள்ளையர் வெளித் திண்ணையில் குந்தி

இருந்து சுங்கானைப் பற்ற வைத்துக்கொண்டிருந்தார். இரவெல்லாம் அவரைப்பிழிந்தெடுத்த ஈளையோ இழுப்போ இப்போது எதுவுமில்லை.

வானம் நன்றாக வெளித்திருந்தது. சூரிய ஒளிக்கதிர்கள் உலகத்தில் பரவிச் சிரித்தன.

கண்ணம்மா வீட்டின் பின்புறம் சென்று, கந்தனுக்கான குடிசைக்குள் தலையை நீட்டிப் பார்த்தாள். கந்தன் இரவு வரவில்லை என்ற முடிவுக்கு வந்ததின் மேல் மறுபடியும் முற்றத்திற்கு வந்தாள்.

இரவெல்லாம் நன்றாக மழை பெய்து முற்றத்தின் அழுக்குகளை கழுவி அடித்து வெண்மையாக்கி இருந்தது.

கிணற்றடிக்குச் சென்று முகம் அலம்பிவிட்டு செம்பில் நீரை நிறைத்துக் கொண்டு மாட்டுக் குடிலுக்குச் சென்று பால் பிதுக்குவதற்காக கன்றுக் குட்டியை அவிழ்த்து முதல் ஊட்டுக்கு விட்டபோது... தொலைவில் பிரசித்தக்காரனின் டும், டும் என்ற ஓசை மிதந்து வந்தது!

கண்ணம்மாவின் நெஞ்சும் பறை கொட்டிக்கொள்ளத் தொடங்கிறது!

''ஏதோ... நடக்கிறபடி நடக்கட்டும்.'' என்று தான் இரவெல்லாம் மனதிற்குள் சொல்லி முடிவுக்கு வந்தவளுக்கு இப்போது மறுபடியும் மனது அடிக்கத் தொடங்கிவிட்டது.

ஒரு மாத காலத்திற்கு முன் ஊரெல்லாம் சுற்றி மேளம் தட்டிவிட்டு பிரசித்த ஏல விற்பனைக்காரர் முத்துக்குமார சாமி உடையாரும், கிராம விதானையாரும், மாமன் சந்திரரும், மேளக்காரச் சின்னானும், உள்ளே வந்து வெலியாத்து நோட்டீசை சங்கடப்படலைத்தலைவாயிலுக்கு

உள்புறத் தூணில் ஒட்டிவிட்டுச் சென்ற பின்பு இன்று ஊரைச் சுற்றி இக்காணியின் விற்பனைக்காக ஊரை அழைக்க மேளம் தட்டப்படுகிறது. மேளக்காரச் சின்னான் அதிகாலையோடு வந்து கோட்டின் கட்டளையை பிரசித்தப் படுத்தி மேளம் தட்டுகிறான்.

புத்தூர் பல்லக்கு முதலித்தம்பியரின் பூட்டியாகிய கண்ணம்மாவுக்குச் சொந்தமான இந்த ஒரே ஒரு சிறு காணித்துண்டும் அதற்கு அடங்கிய நால்சார் வீடும், அதற்கு அடங்கிய சகலதும் கண்ணம்மாவின் தந்தையான சூரியர் பல வருடங்களுக்கு முன் கைலாயரிடம் பெற்ற கடனுக்காக இன்று ஏலத்தில் விற்பனையாகிறது.

கண்ணம்மா தாயையும், தொடர்ந்து தந்தையையும், தந்தையானவர் வைத்துவிட்டுச் சென்ற பெருவாரி கடனுக் காக சொத்து சுதந்திரம் சகலதையும் இழந்து கடைசியாக அவளுக்காக மிஞ்சி இருந்த இந்த வீடு வழவையும் இன்று இழக்கப் போகிறாள். அதை ஊரெல்லாம் பிரசித்தப்படுத்த தட்டுமேளம் தட்டப்படுகிறது.

இன்னும் சிறிது வேளையில் கண்ணம்மா பேத்தி சீதேவிக் கிழவியையும், பேரன் வேலுப்பிள்ளையரையும் தவிர்த்த வேறெந்த சொத்துச் சுதந்திரமும் அற்ற அனாதை ஆகப் போகிறாள்.

அங்குமிங்குமாகத் தட்டப்படும் பிரசித்தத்தின் ஓசை காற்றிலே மிதந்து வருகிறது. மாட்டின் பாலைப் பிதுக்கி முடித்துக்கொண்டு கண்ணம்மா குசினிப் பக்கம் போகிறாள். சற்று வேளைக்குப் பின் சீதேவிக் கிழவியை எழுப்பிவிட்டு விட்டு வேலுப்பிள்ளைக் கிழவனுக்கு கோப்பியை ஊற்றிக் கொடுக்கிறாள்.

முற்றத்து வெளியை வெறித்துப் பார்த்தபடி வேலுப்பிள்ளைக் கிழவன் கோப்பியை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருக்கிறார். கோப்பியைக் குடித்து முடிந்ததும் நீண்ட ஒரு பெருமூச்சு கிழவனின் உந்தியிலிருந்து இரை வெடுத்து வெளியேறுகிறது.

பல வருடங்களுக்கு முன் வாழ்ந்த குபேர வாழ்வு அவர் நினைவுக்கு வருகிறது.

சின்ன வயதில் வட்டுக்கோட்டைப் பாடசாலையில் கழிந்த இளவரசு வாழ்க்கை, அதைத்தொடர்ந்து புத்தூர் பல்லக்கு முதலித்தம்பிக்கு மருமகனாகி... புத்தூரில் இருந்து பல்லக்கு ஏறி சுட்டிபுரம் வரை வந்து அங்கிருந்து சிவிகை ஏறி வீடு வந்து சேர்ந்த புதுமணப் பவனி...

கோவில் குளத்திற்கெல்லாம் சீதேவியுடன் சோடியாக சென்று வந்த கொலு, ஆசைத்தம்பி முதலியாரின் கோஜ் வண்டி பவனியில் கண்டிக்குச் சென்று வந்த யாத்திரை.

கண்ணுக்கெட்டாத் தூரம்வரை விரிந்து, பரந்துகிடந்த விளைநிலங்களின் அறுவடைக் காலங்கள், வயல் வெளிகளில் சூட்டு மிதிப்பின் போது வரும்படியை பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நிற்கும் அடிமை குடிமைகள்... நான் நீ என்று தொண்டு துரவு செய்ய முந்திக்கொண்டு நிற்கும் சிறைக்குட்டிகள்.

நடு வீட்டுக்குள் களஞ்சியக் கடைகள், எடுபிடி ஆட்கள்.

எண்ணுக் கணக்கற்ற ஏர்க்கலப்பைகள், உழவு மாடுகள்.

ஓய்ந்த வேளைகளில் பந்தயம் வைத்து பொழுதைப் போக்குவதற்கெனத் திட்டமிட்டு வளர்க்கப்பட்ட, வெண்டயம், சங்கிலி, குஞ்சம் இணைக்கப்பட்ட சவாரிக் காளைகள்.

துரைமாருக்கான விருந்து கள், கேளிக்கைகள்.

பண்டித்தலைச்சி அம்மன் கோவில் அன்னதானங்கள்; குளுத்திகள்; பெருந்திருவிழாக்கள்!

இவையெல்லாம் சங்கிலித் தொடராக அவர் நினைவுக்கு வருகிறது......

● ● ● ● ●

சீதேவியுடன் பல்லக்கு ஏறிவந்த அடுத்த மாதமே கண்டியில் உத்தியோகம் பார்த்து வந்த வேலுப்பிள்ளை யரின் பெரிய தகப்பனார், தம்பதிகளைக் கண்டிக்கு வந்து சில நாட்கள் தங்கிப் போகும்படி அழைப்பு அனுப்பி வைத்தார். இந்த அழைப்பை ஏற்று சீதேவியுடன் வேலுப் பிள்ளையர் கண்டிக்குப் புறப்பட்டுப்போனபோது ...... அது இன்னும் அவர் மனதைப் பிழிகிறது.........

அடிக்கொரு தடவை அங்குமிங்குமாகக் கேட்ட பிரசித்த ஓசை சமீபித்து, சமீபித்து... வந்து கொண்டிருந்தது.

முற்றத்தில் சுருண்டு கிடந்த எல்லுவன் திடீரெனக் குரைத்துக் கொண்டே படலைத் தலைவாயில் பக்கம் ஓடியது, ஓடிய எல்லுவன் ஓங்காரமாகக் குரைத்து, அனுங்கி இறுமி, ஊளையிட்டுக் கொண்டு படலைத் தலைவாயிலுக்கு உள்ளேயும் வெளியேயுமாக மாறி, மாறி ஓடி, ஓடிக் குரைத்து... பிரசித்தத்தின் ஓசை படலைத் தலைவாயில் வரை வந்துவிட்டது.

திண்ணையில் குந்தியிருந்தபடி' எல்லுவனின் ஓங்காரத் தொனிக்குக் காது கொடுத்துக் கொண்டும், அது எஜமான் விசுவாசத்தை பிரகடனப்படுத்தும் தன்மையை பார்த்துக் கொண்டும் இருந்த வேலுப்பிள்ளைக் கிழவனுக்கு நெஞ்சு விம்மிக்கொண்டது.

படலைத் தலைவாயிலை வெறித்து நோக்கியபடி அவர் ஏங்கிப் போயிருந்தார். அவர் கண்களில் நீர் மல்கியது. எல்லுவன் என்ற பெயரோடு சேர்ந்தாற்போன்று நடந்து முடிந்துபோன பல வருடங்கள் முன் கடந்த சம்பவங்களை நோக்கி அவர் மனது திரும்பியது.

இன்றிருப்பதுபோல அந்தக் காலத்தில் புகைவண்டிகளோ மோட்டார் காரோ எந்தவித யந்திர சாதனங்களோ இல்லாத காலம்.

வேலுப்பிள்ளையரின் தூரத்து உறவினரான வண்ணார் பண்ணை ஆசைப்பிள்ளையர் யாழ்ப்பாணத்திற்கும், கண்டிக்கும் இடையில் கோஜ் வண்டிப் போக்குவரத்தை நடத்திக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து இரட்டைக் குதிரைகள் பூட்டப்பட்ட கோஜ் வண்டி தகுதியான பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு புறப்படுமாக இருந்தால் அதன் அடுத்த தங்குமிடம் கொடிகாமமாக இருந்தது.

கோஜ்வண்டி கொடிகாமத்தை அடைந்ததும் அங்கு தங்கிவிட்டு மறுநாளோ அல்லது சிலமணி நேரங்கள் கழித்தோதான் புறப்படுவது வழக்கம். யாழ்ப்பாணம் இருந்து பூட்டப்பட்டுவந்த குதிரைகளுக்குப் பதிலாக வேறிரு குதிரைகள் கொடிகாமலயத்திலிருந்து பூட்டப்படும். அங்கிருந்து புறப்படும் கோஜ்வண்டி பளை, பரந்தன்... இப்படியே இடை இடையே உள்ள லயங்களில் தங்கித்தங்கி கண்டியை வந்தடைய ஒரு வாரத்திற்கு மேலாகிவிடும்.

இந்தக் கோஜ்வண்டிப் போக்குவரத்தில் யார் யாரை ஏற்றவேண்டும் என்பவைகளையெல்லாம் தீர்மானிப்பவர் ஆசைப்பிள்ளை முதலியாரேதான்!

தேசத்தின் வழமைக்கேற்ப ஆசைப்பிள்ளை முதலியாரால் அங்கீகரிக்கப்படுபவர்கள் ஏறக்குறைய அவரது வம்சத்தைச் சேர்ந்தவர்களாகவும், அதற்கு அடுத்த அந்தஸ்தைப் பெறும் சாதியினராகவுமே இருப்பார்கள். அந்த அடிப்படையின் அப்பால் வெள்ளைத்தோல் படைத்த துரைமாராகவும் அல்லது அரசாங்கத்தில் பெரும் பதவி வகிப்பவர்களுமாகத்தான் இருப்பார்கள்.

வேலுப்பிள்ளையருக்கும் சீதேவி அம்மாளுக்குமாக ஒரு பிரத்தியேக கோஜ் வண்டியையே ஆசைப்பிள்ளையர் அனுப்பியிருந்தார்.

கோஜ் வண்டி வேலுப்பிள்ளையரின் வீடுவரை வந்து தம்பதிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டபோது உற்றார் உறவினர் சூழ நின்று தம்பதிகளை வழியனுப்பிவைக்க வந்திருந்தனர்.

வேலுப்பிள்ளை தம்பதிகள் கண்டியை நோக்கி உல்லாச யாத்திரைக்குக் கிளம்புவதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

புத்தூரில் இருந்து சீதேவியுடன் வரிசைப் பொருளாக வந்து சேர்ந்த எல்லுப்போலையும் இத்தினியும் உல்லாசப் பயணத்தின் தொண்டு துரவுக்காக இவர்களுடன் செல்ல வேண்டியதாயிற்று.

கோஜ் வண்டியைச் செலுத்தி வந்தவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தனது சிறைக்குட்டிகள் தன்னோடு வந்துதான் ஆகவேண்டுமென சீதேவி அம்மாள் பிடிவாதமாக நின்றாள். வேலுப்பிள்ளையருக்கோ சீதேவி அம்மாளின் மனதிற்கு மாறாக நடக்கத் துணிவில்லை. வேலுப்பிள்ளையரின் தந்தை கந்தப்பபிள்ளைக்கோ எதுவும்

செய்யமுடியவில்லை. மருமகள் சீதேவி அம்மாளின் விருப்பத்திற்கு மாறாக நடந்தால் சம்பந்தியாகிய புத்தூர் பல்லக்கு முதலித் தம்பியாரின் பகையை சம்பாதிக்க வேண்டும். சிறைக்குட்டிகளைக் கோஜ் வண்டியில் ஏற்றி விட்டாலோ ஊராரின் பழிப்புக்கும், கோஜ் வண்டிச் சொந்தக்காரராகிய வண்ணார்பண்ணை ஆசைப்பிள்ளை முதலியாரின் கோபத்திற்கும் ஆளாக வேண்டும்!

ஊராரின் பழிப்புக்கு ஆளாகிவிடுவதில் அதிகம் அவர் அஞ்சவில்லை. ஆனால் ஆசைப்பிள்ளை முதலியாரினதும் பல்லக்கு முதலித்தம்பியினதும் கோபத்துக்கு ஆளாகும் துணிவும் அவருக்கு இருக்கவில்லை.

கந்தப்பர் சீதேவி அம்மாளை தனிமையில் அழைத்து சிறைக்குட்டிகளை விட்டு விட்டுச் சென்றால் என்ன? என்று இலேசாகக் கேட்டுப் பார்த்தார்.

தங்கள் குடும்பத்தில் சிறைக்குட்டிகளை விட்டு, விட்டு எங்கும் செல்வது வழக்கமில்லையென்றும் அப்படிச் செல்வது பல்லக்கு முதலித்தம்பியரின் கௌரவத்திற்கு இழுக்கென்றும் காரணங்களைக் காட்டி சீதேவி அம்மாள் மறுத்து விட்டாள்,

வேலுப்பிள்ளையரின் தாயானவள் மருமகளை அழைத்துக் கெஞ்சிப் பார்த்தாள். வேலுப்பிள்ளையருக்கு தாயாரின் வேண்டுகோளுக்குப் பதில் சொல்லவே முடியவில்லை. மனைவி சீதேவி அம்மாளை நடுவீட்டுக்குள் அழைத்து சிறைக்குட்டிகளை விட்டு, விட்டுச் சென்றால் என்ன? என்று கேட்டுப் பார்த்தார். சீதேவி அம்மாளோ அவரின் ஆலோசனையை ஏற்கவில்லை. ''அப்படியானால் இந்தப் பிரயாணத்தையே நிறுத்திவிடலாம்'' என்ற விதத்தில் பேசித் தீர்த்துவிட்டாள்.

கந்தப்பருக்கு இதற்குமேல் யோசிக்க நேரம் போத வில்லை. சரியாகப் பன்னிரண்டு மணிக்கு பிரயாணத்தைத் தொடங்க வேண்டும். வருவது வரட்டும்! என்ற மன உறுதிப்பாட்டோடு இத்தினியையும் எல்லுப்போலையை யும் கோஜ் வண்டியின் வக்குக்குள் பாய் விரித்து இருக்கும் படியும் மகனையும் மருமகளையும் ஏறும்படியும் பணித்தார்.

சரியாகப் பன்னிரண்டு மணிக்கு கோஜ் வண்டி புறப்பட்டபோது வழியனுப்புவதற்காக உறவினர்கள் என்ற விதத்தில் நின்றவர்கள் மிகவும் சொற்பமானவர்கள்தான். சிறைக்குட்டிகளைக் கோஜ் வண்டியில் ஏற்றிச் செல்வதைப் பகிஷ்கரிக்கும் தோறணையில் அனேகமானவர்கள் வீட்டை விட்டே போய்விட்டனர்.

புழுதியை அள்ளித் தெளித்துக்கொண்டு கோஜ்வண்டி போய்க்கொண்டிருந்தது. வண்டி போகும் திசையையே பார்த்துக் கண்ணீர் வடித்தபடி வேலுப்பிள்ளையரின் தாய் நின்றுகொண்டிருந்தாள்.

எதிர்கொண்டுவரும் எதிர்ப்பை எல்லாம் 'சமாளிப்பேன்' என்ற மன உறுதியுடனோ என்னவோ கந்தப்பர் வண்டி பறந்தோடிச் சென்று வெகு நேரமாகியும் புழுதிக் காடாகிக் கிடந்த பக்கத்தை வெறித்துப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தார்.

வண்டி புறப்பட்டுச் சென்றதும் கந்தப்பருக்கு வேறொரு முக்கியமான வேலை ஒன்று காத்துக் கிடந்தது. யாழ்ப்பாணப் பட்டினம் சென்று சிறைக் குட்டிகளை கோஜ் வண்டியில் ஏற்றியதற்கான விளக்கத்தைக் கூறி வேண்டுமானால் ஆசைப்பிள்ளை முதலியாரை மன்னிப்பு கேட்க வேண்டும். காலதாமதம் ஆகிவிட்டால் எதிரிகள் சென்று ஆசைப்பிள்ளை முதலியாருக்கு இல்லாததையும்

பொல்லாததையும் சொல்லி, அவருக்கும் தனக்குமுள்ள உறவை முறித்தாலும் முறிந்து விடுவார்கள் என்ற பயம்!

அவர் அவசரமாகப் புறப்பட்டபோது, நாளைக் காலை கச்சேரிக்குப் போகும் முன் ஆசைப்பிள்ளை முதலியாரைச் சந்தித்துக் கதைத்தால் போதாதா? என்ற ஆலோசனையை மனைவி கூறினாள். ஆனாலும் அதுவரை பொறுத்துக்கொள்ளக் கந்தப்பரால் முடியவில்லை.

பட்டணத்தை நோக்கி திருககல் வில்லு வண்டி புறப் பட்டுவிட்டது. வில்லு வண்டி உட்புற ஆசன இருக்கை களுக்குப்புற நீக்கலாக, மெத்தை ஆசனங்களுக்குச் சற்றுப் பணிவாக வட்டவடிவில் அமைந்த ஆசனத் தட்டிலிருந்து கந்தப்பரின் நிரந்தரச் சிறைக்குட்டி முத்தன் பிரயாணத் தைத் தொடங்கினான்.

இரவு ஆசைப்பிள்ளையரின் வீட்டில் தங்கி மறுநாள் கச்சேரிக்குப் போய்விட்டு வருவதாக மனைவியிடம் கூறி விட்டு கந்தப்பர் புறப்பட்டுச் சென்றார்.

● ● ● ● ●

வேலுப்பிள்ளையரும் சீதேவி அம்மாளும் கோஜ் வண்டி யின் மெத்தை ஆசனத்தில் கொலுவிருக்க சிறைக்குட்டி களான எல்லுப்போலையும், இத்தினியும் வண்டியின் வக்குக்குள் போடப்பட்ட ஓலைப்பாயில் இருந்தனர். அக்கம்பக்கத்தில் காப்பாளர்கள் இருவர் இருந்தனர்.

பார்ப்பதற்கு மிகவும் எடுப்பும், சிறப்புமான இரு வெள்ளைக் குதிரைகள் கோஜ் வண்டியை இழுத்துச் சென்று கொண்டிருந்தன.

கோஜ் வண்டி கொடிகாமத்தைக் கடந்து, மிருசுவிலை யும் தாண்டி எழுதுமட்டுவாள் சந்தியைக் கிட்டிக் கொண் டிருந்தபோது வீதிக்குக் குறுக்காக மரக்கொம்பொன்று போடப்பட்டிருந்தது.

முதலில் சாரதி, காற்றுக்கு மரக்கொப்பு ஒடிந்து வீழ்ந்து விட்டதாகவே நினைத்தான். ஆனால் கோஜ் வண்டி மரக்கொப்பைக் கிட்டியபோது அவனால் நிலைமையை தெளிவாகப் புரிய முடிந்தது.

வீதியின் இருபுறங்களிலுமிருந்து கம்புகள் தடிகளுடன் பலர் கோஜ் வண்டியை நோக்கித் தாவினர்.

''டேய்! நிற்பாட்டடா!'' என்று பல குரல்கள் கிளம்பின.

கோஜ் வண்டி நிறுத்தப்பட்டது. பலர் வண்டியைச் சூழ்ந்து கொண்டனர். வண்டியின் வக்குக்குள் இருந்த எல்லுப்போலையை ஒருவன் இழுத்து வெளியே அல்லாக்காக வீழ்த்தினான்.

பாதுகாவலர்கள் வண்டிக்குள் இருந்து குத்து வாள்களை வெளியே எடுக்கும் மூன் அவர்கள் இருவரையும் பலர் இழுத்து வெளியே கொண்டு வந்து விட்டனர்.

''கோவியப்பயல், நீர் கோச்சு வண்டியிலை ஏறியிட்டீர் என்ன?'' என்று ஒருவன் கத்தினான்.

''முறியடா அவன்ரை நாரியை,'' என்றான் வேறொருவன்.

''இறங்கடி கோவீச்சி வெளியிலை!'' என்று கூட்டத்தில் நின்ற ஒருத்தி கத்திக் கொண்டே இத்தினியை வெளியே இழுத்தாள்.

வேலுப்பிள்ளையர் வெலவெலத்துப் போனார். சீதேவி அம்மாளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

'' ஐயோ! என்ன இது!'', என்று அவள் கத்தினாள்.

வெளியே எல்லுப்போலையின் அவலக் குரல் கேட்டது.

இத்தினி கதறிக் கதறி அழுதாள், இவையெல்லாம் சற்று வேளைக்குள் நடந்து முடிந்துவிட்டன.

எல்லுப்போலை நினைவிழந்து வீதியில் கிடந்தான்.

சற்று வேளைக்குள் கூட்டம் கலைந்து விட்டது.

கண்டிக்கான உல்லாசப் பிரயாணம் இடையில் நின்று விட்டது. சீதேவி அம்மாள் கோச்சு வண்டிக்குள் அழுது கொண்டிருந்தாள்.

சிதறி ஓடிய கோஜ் வண்டியின் சாரதியும், காவலர்களும் இழைக்கக் களைக்க திரும்பி வந்து கொண்டிருந்தனர். இத்தினி எல்லுப்போலையின் நெஞ்சில் விழுந்து புலம்பிக் கொண்டிருந்தாள்.

சணவேளையில் நடந்து முடிந்துவிட்ட இந்தத் தாக்குதல் வேலுப்பிள்ளையரால் எதிர்பார்க்கப்படாத ஒன்றாய் இருந்தாலும், இந்தத் தாக்குதலின் காரண கர்த்தாவை அவர் புரிந்து கொண்டுவிட்டார்,

கோஜ்வண்டி கொடிகாமத்தைத் தாண்டி வந்தபோது சந்தைக்கு முன்னால் கயிலாயபிள்ளையர் தன்னைப் பார்த்து நளினமாக சிரித்துக் கொண்டது படக்கென்று மனதிற்குள் வந்தது. ஆனால் வழிமறித்துத் தாக்கிய யாரையும் அவரால் அடையாளம் காணமுடியவில்லை எல்லோரும் தலைக்குடுமிகளை மூடி மூண்டாசு கட்டியிருந்தனர். தாக்கியவர்கள் உசன் வயல்வெளியைத் தாண்டி தெற்குப் புறமாக ஓடி நெடுந்தூரம் வரை சென்று வயல் வெளிக்கப்பாலுள்ள தென்னந் தோட்டத்தில் மறைந்தது மட்டும்தான் அவரால் அனுமானிக்க முடிந்தது.

கண்டிப் பிரயாணத்தை இடை நிறுத்தி எல்லுப் போலையை குறை உயிருடன் கோச்சுக்குள் ஏற்றிக்கொண்டு

வேலுப்பிள்ளையர் வீடு வந்து சேர்ந்தபோது தாயானவள் பெரும் குரல் எடுத்து ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டாள்!

எல்லுப்போலையின் மண்டையில் இருந்து வழிந்தோடிய இரத்தம் சிறிது சிறிதாக நின்று விடவே................அவனின் இருதையத் துடிப்பும் நின்றுவிட்டது!

வேலுப்பிள்ளையரின் நால்சார் வீட்டுக்குப் பின்புறக் கொல்லையிலுள்ள தோட்டத் தறையோடு எல்லுப் போலைக்கும் இத்தினிக்கும் ஒதுக்கிக் கொடுத்த குடிசைக்குள் எல்லுப்போலையின் பிரேதம் எடுத்து வரப்பட்டு வைக்கப்பட்டது.

இரவோடிரவாக வேலுப்பிள்ளையர், பட்டணத்திற்குச் சென்றுவிட்ட தந்தை கந்தப்பபிள்ளைக்கும் புத்தூர் பல்லக்கு முதலிக்கும் புத்தூரில் உள்ள எல்லுப்போலையின் உறவினர்களுக்கும் வேலுப்பிள்ளையர் ஆள் அனுப்பி வைத்தார்.

இரவெல்லாம் இத்தினி எல்லுப்போலையின் பிணத்தின் மேல் புரண்டு, புரண்டு கதறிக் கொண்டிருந்தாள்.

விடிந்து வெகு நேரத்தின்பின் கந்தப்பர் வந்து சேர்ந்தார். புத்தூர் முதலித்தம்பியரும், புத்தூரில் உள்ள எல்லுப்போலையின் உறவினர் சிலரும் நடுப்பகல் போல் வந்து சேர்ந்தனர். பல்லக்கு முதலித்தம்பியுடன் அவரது நாட்டாண்மைக்கு உட்பட்ட கையாட்களும் ஒரு பெரும் போருக்கான முறையில் வந்து சேர்ந்தனர். ஊரெல்லாம் பரபரப்பாகிவிட்டது.

புத்தூரில் இருந்து சண்டியர்கள் வந்து சேர்ந்துவிட்டனர் என்ற சேதி ஊரெல்லாம் சணவேளைக்குள் பரவி

விட்டது. செத்துப்போன எல்லுப்போலையின் மேல் கொண்டிருந்த அனுதாபத்திற்காக பல்லக்கு முதலித்தம்பி சண்டியர் பரிவாரங்களுடன் வந்து சேர்ந்தார் என்பதல்ல. தனது சிறைக்குட்டியை கொன்று விட்டதனால் ஏற்பட்ட கௌரவப் பிரச்சனை அவரை ஆள் அணிகளுடன் வர வைத்துவிட்டது.

வேலுப்பிள்ளையரின் உறவினர் கைலாயபிள்ளைதான் இப்படி ஆள்வைத்து எல்லுப்போலையைக் கொன்றுவிட்ட தான செய்தி முதலித்தம்பியரின் கௌரவத்தை மேலும் சோதனை செய்வதாக இருந்தது. ஆனாலும் ஆத்திரத்தை அடக்க வேண்டியிருந்தது.

இங்கு சம்பந்தம் வைத்துக்கொண்டதற்காக ஊர்விட்டு ஊர் வந்து சண்டித்தனம் செய்வது வெற்றியைத் தரக் கூடியதல்ல என்ற எண்ணம் அவரை அப்படி அடக்கி வைத்தது.

எல்லுப்போலையின் குடிசைக்கு முன்னால் உள்ள மருத மரத்து நிழலில் இருந்து விதானை, உடையார், மணிய காரர் ஆகியோர் மரண விசாரணை செய்தனர்.

பல்லக்கு முதலித்தம்பி ஆத்திரத்துடன் வந்து ''வால் ஒடியல் தின்னும் கொடிகாமத்தாருக்கு இவ்வளவு துணிவோ...!'' என்று வைத்த ஓங்காரக் குரல் இவர்கள் காதுவரை கேட்க இந்த மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்சிமிட்டிக் கொண்டனர்.

முடிவில் இவர்கள் கந்தப்பரை அழைத்து, ''அடித்தவர் களை அடையாளம் காட்டக் கூடிய சாட்சிகள் இல்லாத

தாலும், யாரும் நேராக அகப்படாததாலும், யாரையும் குற்றவாளிகளாகக் காணமுடியவில்லை. நிலைமையை நாங்கள் மேலிடத்திற்கு அறிவிக்கிறோம்'', என்று ஏக மனதாக சொல்லிவிட்டனர்.

இந்தச் சம்பவம் நடந்து எத்தனையோ ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. அன்றிலிருந்து இன்றுவரை வேலுப் பிள்ளையரின் வீட்டில் அன்று கொலையுண்ட எல்லுப் போலையின் பெயரை எல்லுவனாக்கி ஒரு நாய் தொடர்ச்சியாக இங்கே வளர்கிறது.

எல்லுப்போலையாகிய எல்லுவன் இறந்து போன மறுமாதமே வேலுப்பிள்ளையர் ஒரு கடுவன் குட்டியை வாங்கி வந்தார். அவன் ஞாபகமாக நாய்க்குட்டிக்கு எல்லுவன் என்று பெயர் வைத்தார். சுமார் எட்டு ஆண்டு காலம் எல்லுவன் வாழ்ந்துவிட்டு இயற்கை மரணம் எய்தி விட்டது.

மறுமாதம் வேலுப்பிள்ளையர் ஒரு கடுவனை வாங்கி வந்தார். எல்லுவன் என்றே அதற்கும் பெயரிட்டார். நீண்ட பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்துவிட்டு அது நோய் வாய்ப்பட்டு சொறியாகிவிட்டபோது வேலுப்பிள்ளையர் தன் கையாலேயே அதைக் கொன்றுவிட்டு, மறுமாதமே வேறோர் கடுவன் குட்டியை எடுத்து வந்து அதற்கும் எல்லுவன் என்றே பெயரிட்டார்.

இரண்டாண்டுகள் வாழ்ந்து கொண்டிருக்கும் போது அந்த எல்லுவன் விஷம் தீண்டி இறந்துவிட்டது. அடுத்து வந்த எல்லுவன் பன்னிரண்டு ஆண்டுகள் வேட்டையாடிக் கழித்து இறுதியில் ஒரு நாள் ஒரு உடும்பை கலைத்துச் செல்ல — உடும்பு குளத்திற்குள் பாய்ந்துவிடவே எல்லுவனும்

உடும்பின் பின்னால் பாய்ந்தபோது இரைக்காகக் கரையில் காத்திருந்த முதலை எல்லுவனைப் பிடித்துச் சென்றுவிட்டது.

இப்படியே எல்லுவன்கள் வந்து வந்துபோய், இப்போது குரைத்து ஓங்காரம் இடும் எல்லுவன் ஒன்பதாவது அவதார எல்லுவனாகும்.

வேலுப்பிள்ளையர் இப்போது அந்த எல்லுவனிலிருந்து இந்த எல்லுவன் வரை ஒருமுறை நினைத்துப் பார்த்துக் கொண்டார்.

பிரசித்தத்தின் ஓசை எழுந்த திக்கில் இன்னும் எல்லுவன் ஓங்காரமாக குறைத்துக் கொண்டே இருந்தது.

///

# 4

''டேய் கதிரவேலு கூறலைத் துவக்கு, இரண்டாயிரத்து இருநூற்றி ஐம்பது'' என்று உடையார் பணிக்கவே, உடையாரின் உதவியாளனாகிய கதிரவேலன், ''இரண்டாயிரத்து இருநூற்றி ஐம்பது ரூபா!'' என்று குரலை உயர்த்திக் கூறினான். சற்று வேளைக்குள் இதே வார்த்தையை பலமுறை கூறிவிட்டு ''முதலாம் முறை இரண்டாயிரத்து இருநூற்றி ஐம்பது ரூபா!'' என்று முதலாவது முறையைக் கூறி நிறுத்தினான்.

கண்ணம்மாளோ, வேலுப்பிள்ளையரோ அன்றிச் சீதேவிக் கிழவியோ வீட்டு முன்விறாந்தையை விட்டு கீழே இறங்கவும் இல்லை: எதுவும் பேசவும் இல்லை. சீதேவிக் கிழவி வெற்றிலை இடுக்கும் லொக்கு லொக்கென்ற ஓசை மட்டும்தான் கேட்டுக் கொண்டிருந்தது.

கிணற்றுப் பக்கமாக நின்று எல்லுவன் மட்டும் ஊளை இடுவதும் — குரைப்பதுமாக இருந்தது.

வேலிக்கரைகளில் அங்குமிங்குமாக நாலைந்து தலைகள் மட்டும் தெரிந்தன. திறந்து கிடந்த கங்கடப்படலைக்குள் ஐந்து பத்துச் சிறுவர்கள் நின்றனர். அத்துடன் சிறுவர்களோடு சிறுவனைப் போன்று பிள்ளையார் கோயில் கட்டை ஐயரும் தனது நாரியைத் தடவியபடி பரிதாபமாக நின்றார்.

''என்ன, உடையார்... நேரத்தைச் சுணக்கிறியள்! இஞ்சை கேக்கிறதுக்கு ஆளில்லை கூறி முடியும்'' என்று சந்திரர் குரல் வைத்தார்,

''இல்லைச் சந்திரர் நான் என்ரை காரியத்தைச் சரியாச் செய்யவேணும். நீர் கொஞ்சம் பொறும்! ஆர கேக்கப் போறியள்? கேக்கிற நீங்கள் கூச்சப்படாமல் கேளுங்கோ......'' என்று சுற்றி நின்றவர்களை நோட்டம் விட்டார் உடையார். சுற்றி நின்றவர்கள் உடையார் முகத்தைப் பாத்தார்களேயன்றி யாரேனும் கேள்விக்கு முன்வரவில்லை.

சந்திரர் ஒரு முறை கூட்டத்தைச் சுற்றி வந்தார்.

''ஆரெண்டாலும் கேளுங்கோ... நான் ஆற்ரையும் காணியை அமுசடக்குப் பண்ணவரேல்லை. விருப்பமான

நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கோ...... என்ன கட்டை ஐயா நீர் பாக்கிற பார்வையைப் பாத்தா ... கேக்கப் போறீர் போலை கிடக்கு கேளும்!'' என்று கட்டை ஐயரைக் கேலியோடு பார்த்தார், கட்டை ஐயர் வெட்கப்பட்டுக் கொண்டே சங்கடப்படலைக்கு வெளியே தலையை இழுத்துக் கொண்டார்.

''இஞ்சை, சந்திரர், நீர் பேசாமல் இரும். நான் என்ரை காரியத்தைச் சரியாத்தான் செய்வன்!'' என்று உடையார் சந்திரரை இலேசாகக் கண்டித்தார்,

''இல்லை, ஆரெண்டாலும் கேக்கட்டன்; ஏன், வேலுப் பிள்ளை அம்மான் கூட வேணும் எண்டா வட்டியையும் முதலையும் கோட்டுச் செலவையும் கட்டி மீளட்டன்.'' என்று சந்திரர் மீண்டும் பேசினார்.

''இஞ்சை, சந்திரர் தேவையில்லாமல் கதைக்கப்படாது. அதெல்லாம் எங்களுக்குத் தெரியும். வட்டியையும், முதலையும், கோட்டு செலவையும் கட்டினா அது நீர் சொல்லியே நாங்கள் செய்யிறது? அது உடையாருக்குத் தெரியும். எப்பன் பேசாமல் இரும்.'' இப்படி அருணாசலம் விதானையார் சந்திரரை சற்றுக் கிண்டலாகக் கண்டித்தார்.

''ஓகோ, விதானையாருக்குக் கோவம் பெருகுது போலை கிடக்கு, வருந்தானே; எப்பிடி எண்டாலும் இரத்தம் துடிக்காதா பின்னை!'' விதானையார் தாவியதையும் சந்திரரின் நக்கலையும் உணர்ந்து கொண்ட உடையார், ''இஞ்சை சந்திரர் சொல்லிப் போட்டன். நீர் வேலுப் பிள்ளையற்றை மருமோனா இருந்தாலென்ன, விதானையார் அவையின்ரை உருத்துக்காறரா இருந்தா என்ன. நான் எல்லாம் சரியாத்தான் செய்வன், நீர் குழப்படி பண்ணாமல் இரும். இல்லாட்டி நான் வெந்நீசை இடையிலை

நிப்பாட்டிப் போடுவன்!'' என்று எச்சரிக்கவே, சந்திரர் கையாள் ஒருவன் சந்திரரை சற்று நகர்த்திச் சென்று கிணற்றுக்கட்டில் உட்கார வைக்கவே அவர் சற்று அடங்கிக் கொண்டார்.

''கதிரவேலு ஒரு ஐம்பதைக் குறைச்சுக் கூறு!'' என்று மறுபடியும் உடையார் கூறவே கதிரவேலன்,

''இரண்டாயிரத்து இருநூறு!'' என்று கூறத் தொடங்கினான்.

''சாம்பான் ஒருக்கா மேளத்தையும் தட்டன்ராப்பா!'' என்று விதானையார் கூறவே சின்னான் மேளத்தைத் தட்டினான்.

''எடை, இஞ்சைபார் பரியாரி, பொன்னனும் வந்திட்டான். எடே, பொன்னன் உன்ரை கருவிப் பையை அடைவு வைச்சுப்போட்டு வேலுப்பிள்ளை அம்மான்ரை காணியை வேண்டன்ரா!'' என்று கிணற்றுக் கட்டிலில் இருந்து சந்திரர் கத்தினார்.

''உதிலை முருகேசுக் கமக்காரற்றை பேத்தியின்ரை துடக்குக் கழிவெல்லே இண்டைக்கு. அதுக்குத்தான் துடக்கு மயிர் எடுக்கப் போனான். இஞ்சை அமளியாக் கிடக்கெண்டு பார்க்க வந்தனாக்கும்!'' என்று கூறிக் கொண்டே கமக்கட்டிலிருந்த கருவிப் பையை எடுத்து மறு இடுக்கில் வைத்து, தெற்குப் புறமாக ஈர நிலத்தில் குந்திக் கொண்டான் பொன்னன்.

''எட நீயும் காணி வேண்ட வந்தநீ எண்டுதான் நினைச்சம்... அங்கை கந்தனும் வாறான்!'' என்று சந்திரர் கூறியபோது, கந்தன் சங்கடப் படலைக்கு நட்டுக்கு நடுவாக வந்து விட்டான். ஐயர் துடித்துக் கொண்டு அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொண்டார். சிறுவர்களும் ஒதுங்கிக் கொள்ள கந்தன் உள்ளே வந்துவிட்டான்.

கந்தன் உடம்பில் வெயர்வையின் ஈரப்பசையோடு பனை ஓலையின் சொடுகுகள் ஒட்டிக் கிடந்தன. தலையில் முடிபோல தளைநார் போட்டிருந்தான். இறுக்கமாகக் கட்டப்பட்டிருந்த கொடுக்கில் கிட்டி கட்டிய கயிறு வரியப் பட்டிருந்தது. அந்தக் கிட்டித் தடியில் நார் பின்னிப் பொருந்திய கொடுவாக்கத்தி ஒன்று தொங்கவிடப் பட்டிருந்தது. அவன் இப்போதுதான் எங்கோ பனை ஓலை வெட்டிவிட்டு அந்தக் களையோடு வந்திருக்கிறான்,

பறுகுபோன்று கும்பி நின்ற அவன் தலையிலும் பனந் தும்பும் தூசியும் படிந்திருந்தன. ஒரு தடவை அவன் கண்கள் அந்த வளவை துளாவின.

"இரண்டாயிரத்து இருநூறு!" இரண்டாம் கூறல். கூறல்காரனின் குரல் மேலோங்கி எழுந்தது.

"கந்தன், நீயும் கேக்கத்தான் போறாய் போலை கிடக்கு!" சந்திரரின் குரல் கிணற்றுக் கட்டிலிருந்து கேட்கிறது.

"ஓமாக்கும்! கேக்கத்தான் போறன்!" கந்தனின் குரல் படக்கென எழுந்தது.

"நீரோ... கேக்கத்தான் போறீரோ ?" இது சந்திரரின் பக்கத்தில் இருந்தவரின் குரல்.

கந்தன் சற்று முன்னே வந்து "ஏன் நயினார், நான் கேக்கப்படாதோ?" என்று உடையாரைப் பார்த்துக் கேட்டான்,

"ஓ... நல்லாக் கேக்கலாம், விருப்பம் எண்டாக் கேளன்," உடையார் பதில் சொன்னார். சற்று வேளை எல்லோரின் ஆரவாரமும் நின்றது.

"நான் அம்பது கூடக் கேக்கிறன்." கந்தனின் கேள்விக்குப் பின் கதிரவேலன் "இரண்டாயிரத்து இருநூற்றி அம்பது!" என்று குரல் வைத்தான்.

"ஆரது...... கந்தன் இரண்டாயிரத்து இருநூற்று அம்பதோ... சரி சரி! வேறை ஆரும் கேக்கல்லையோ?" என்றார் உடையார்.

"இரண்டாயிரத்து முன்னூறு!" என்றார் சந்திரர்.

"சந்திரர், நீர் தீர்வைக்காறன்; நீர் கேக்கேலாது!" என்றார் விதானையார்.

"ஏன், கேக்கேலாது...?" என்றார் சந்திரர் கோபத்தோடு.

"ஏன் உடையார், சந்திரர் கேக்கேலுமோ...?" என்ற விதானையார் கேள்விக்கு, "தீர்வைக்காறர் கேக்கேலாது!" என்று உடையார் பதில் கூறினார்.

இந்தப் புதிய பேச்சு வார்த்தைகளின் பின் உள்ளே இருந்த கண்ணம்மா வீட்டு விறாந்தைக்கு வந்து... நடப்பவைகளை அவதானிக்கத் தொடங்கினாள். சீதேவிக் கிழவி தான் கிளப்பிக் கொண்டிருந்த லொக்கு லொக்கென்ற ஓசையை நிறுத்திக் கொண்டாள்.

வேலுப்பிள்ளைக் கமக்காரரோ மூலையோடு கிடந்த ஈசிச்சாரிலிருந்து கொண்டே பாசிபடிந்த கண்களை அகல வீசிக் கொண்டார்.

கந்தனும் ஒரு கேள்விக்காரனாக மாறிவிட்டதை எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்து நின்றனர்.

படலை ஓரம் நின்று கந்தனுக்கு வழிவிட்ட கட்டை ஐயர் கண்களை அகலத் திறந்து, நடப்பவைகளை நன்றாக அவதானிக்கும் பாவனையில் சங்கடப் படலைக்கு உள்ளாக சற்று முன்வந்து, வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்த ஓதிய மரத்தில் சற்று சாய்ந்து கொண்டார்.

உள் மனதில் வெளியான ஒருவகைத் திருப்தியை பிரதி பலிப்பதைப்போல கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டார் விதானையார்.

வேலுப்பிள்ளையர் மேல் பழி தீர்த்துக் கொள்வதில் தனக்கு நிகர் யாரும் இல்லை என்று எண்ணிக் கொண்ட சந்திரருக்கு இப்படி ஒரு போட்டியோ எதிர்ப்போ கிளம்பி யதில் அவருக்கு திருப்தி கண்டிருக்க வேண்டும்.

அசடு வழிய கிணற்றுக்கட்டில் இருந்த சந்திரர் பக்கத்தில் நின்ற செல்லத்தம்பியின் காதிற்குள் ஏதோ கிசுகிசுத்தார். அவனும் அரையில் இருந்த சால்வையை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டே,

''கந்தன் கேக்கேலாது!'' என்று சற்று மிடுக்காகக் கூறினான்,

''ஏன் கேக்கேலாது ?'' என்றார் விதானையார் படக் கென்று.

''கந்தன் தனக்காகக் கேக்கேல்லை; ஆருக்காகக் கேக்கிறான் என்டு கேட்டுப் பாருங்கோ'' என்றான் செல்லத் தம்பி.

''மெய்யே,கந்தன்! நீ ஆருக்காகக் கேக்கிறாய்; ஒழியா மல் சொல்லு.'' என்டு கந்தனைப் பார்த்து உடையார் கேட்டபோது.

''நான் சின்ன நாச்சியாருக்காக கேக்கிறனாக்கும்!'' என்று கந்தன் சுணக்கமின்றியே பதில் கூறினான்.

''இப்ப சொல்லுங்கோ உடையார், நான் தீர்வைக் காறன் கேக்கேலாது எண்டால் ஆதனக்காறர் கேக் கேலுமோ?'' என்று ஒரு சட்டப் பிரச்சனையை சந்திரர் தூக்கிப் போட்டுவிட்டார். உடையாருக்கு உடனடியாக இதற்குப் பதில்கூற முடியவில்லை.

''அவை தங்கடை சொத்து தங்களோடை இருக்கெட்டு மெண்டு விரும்பினா வெந்தீசு துவங்கிறதுக்கு முந்தி முறைப்படியெல்லோ அதைச் சொல்லியிருக்க வேணும். கிடக்குமட்டும் கிடந்து போட்டு இப்ப பள்ளனைக் கொண்டு கேப்பீச்சு வேண்டப் பாக்கினம் வெக்க மில்லாமல்!'' என்று சட்டத்துடன் சாதிப் பொடியையும் தூவினான் செல்லத்தம்பியர்.

''செல்லத்தம்பி நயினாருக்கு நான் சொன்னது விளங் கேல்லையாக்கும். நான் தானாக்கும் காணியை வாங்கப் போறன்! ஏன் ஒழிப்பான் எண்டுதான் வெளிச்சமாச் சொன்னனான். நான் வேண்டி சின்ன நாச்சியார் கண்ணம்மா பிள்ளைக்கு நன்கொடையாக் குடுக்கப் போறன்!'''

கந்தனின் இந்தப் பேச்சு முடிந்ததும் முடியாததுமாக சந்திரர் கிணற்றுக் கட்டை விட்டுக் குதித்து எழுந்தார்.

''என்ன பள்பிள்ளை நீரோ வேண்டப்போறீர்? வேண்டி நன்கொடையாக் குடுக்கப் போறீரோ... நீரோ ...!' என்று கந்தனை நோக்கி வந்தபோது, கந்தன் சற்றுப் பின்னடைந்து பின் இடுப்பில் தொங்கிய கத்தியை மெதுவாகக் கையில் எடுத்துக்கொண்டான்.

கூட்டம் கலகலத்தது! விதானையார் நடுவே வந்தார் உடையார் குரல் வைத்தார்.

''இஞ்சை வெந்தீசு நடக்குது! ஈட்டுக்காரனையும் கடன்காரனையும்விட ஆரெண்டாலும் கேட்டு வாங்கலாம்

ஆருக்கெண்டாலும் குடுக்கலாம். இதிலை வீண் குழப்பம் நடந்தால் நான் சரியான நடவடிக்கை தான் எடுப்பன்!''

உடையாரின் இந்த எச்சரிக்கை சந்திரரை சற்றுப் பின்னடையச் செய்து விட்டது.

''இஞ்சாலை வாண்ணை அவன் வேண்டட்டும்; பிறகு நாங்கள் பாக்கிற மாதிரிப் பாப்பம்!'' என்று சந்திரரைச் சமாதானம் செய்வது போல பாவனை பண்ணி அவரை ஓரமாக இழுத்துச் சென்றான் செல்லத்தம்பியர்.

'என்னடா... உவனைக் காணி வேண்ட விடுகிறதோடா...? வெக்கம் ரோசம் இல்லாத விதானையும், உடையாரும் அவன்ரை பக்கம் நிக்கிறாங்களெண்டு நாங்களும் நிக்கிறதோடா?...ம் நாளைக்கு மற்ற ஊரவங்களின்ரை கண்ணிலை முளிக்கிறேல்லையோடா? உந்தக் கிழட்டு வேலுப்பிள்ளையனுக்கும், தாடகைக் கிழவிக்கும் வெக்கமில்லையெண்டு உந்தக் குமரிக்கு மெல்லே மானம் இல்லாமல் போச்சு!!...''

சந்திரர் இப்படிப் பேசி முடிப்பதற்கிடையில் செல்லத்தம்பியர் அவரை சங்கடப்படலைக்கு அப்பால் இழுத்து வந்துவிட்டார்.

''இந்தக் காணியை நான் எண்டைக் கெண்டாலும் ஆட்சி செய்யாட்டி நான் கைலாயனுக்குப் பிறந்த பிள்ளை இல்லை''. என்ரை ஆச்சி என்னை அம்பட்டனுக்குத்தான் பெத்திருக்க வேணும். செய்து காட்டிறனோ இல்லையோ பார்!''

என்ற குரல் சங்கடப் படலைக்கு அப்பால் கேட்டது. அது சந்திரரின் குரல்தான்.

இதற்குப்பின் சாம்பான் சின்னானின் குரல் பிரசித்த ஏல முறையில் இரு தடவைகள் எழுந்து எழுந்து ஓய்ந்தது.

கந்தனின் பெயருக்குக் காணி தீர்வையாகிவிட்டது.

# 5

நடுப்பகல் தாண்டி பிற்பகல் மூன்று மணியானதும், புத்தூர் முதலித்தம்பியர் வீட்டில் இருந்து திருமண ஊர்வலம் புறப்பட்டது. பல்லக்கு முதலியாரின் மகள் சிதேவி அம்மாளின் திருமண வைபவங்கள் முடிந்து, சபை சந்தி முடிந்து... அடிமை குடிமைகளுக்கெல்லாம் அன்னமிடல் முடிந்து மாப்பிள்ளை வேலுப்பிள்ளையரை அழைத்துவர அன்று அதிகாலை, மந்துவிலுக்கு எடுத்து வந்த பல்லக்கு இப்போது சிதேவியம்மாளையும், வேலுப்பிள்ளைய

ரையும் மாப்பிள்ளைத் தோழன், பெண்பிள்ளைத் தோழி ஆகியோரையும் ஏற்றிக்கொண்டு கிளப்பிவிட்டது.

ஊர்வலத்தின் முன் வரிசையில் பத்துக்கு மேற்பட்ட வில்லு வண்டிகளை வெள்ளை வெளேரென்ற வடக்கன் காளைகள் இழுத்துச் செல்ல,அதையடுத்து நுகத்தடி கட்டப் பட்ட பத்து வண்டிகளை நுகத்திற்கு இருவராக, வடக்கன் நாம்பனுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்ற தோரணையில் அடிமைகள் வடக்கன்களின் வேகத்திற்கு அமைய இழுத்துச் செல்ல, அடிமைகளால் இழுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு வண்டிகளையும் இழுத்துச் செல்லும் நரகாளைகள் களைப் புற்றுபோகும் போது கைமாற்றிக் கொள்ள வண்டிக்கு இருவராகப் பின்தொடர, அதை அடுத்து சற்று இடை வெளிவிட்டு பத்துக் கட்டாடிமார்கள் நிலபாவாடை விரித்துச் செல்ல.. அதற்குப் பின்னால் நட்டுவமேள வாத்தியங்கள் கூட்டமாக அணிவகுத்து முழங்கிவர, அதற்குப் பின்னால்தான் தம்பதிகளின் பல்லக்கு அசைந்து வருகிறது.

இந்த வரிசை முடிந்து பின்னால் இருவர் தோரணங்கள் பொருத்தப்பட்ட கம்பு ஒன்றினைத் தூக்கிப் பிடித்துவர அதற்குப் பின்னால் பல்லக்கு முதலியாரின் மதிப்பிற்குரிய அடிமைகள் திரண்டு வருகின்றனர்.

அவற்றுள் கோவியக் குடிமைகள் முன்னேயும், மாராயக் குடிமைகள் பின்னேயும், பள் குடிமைகள் அதற்குப் பின்னேயும், நளக் குடிமைகள் அதற்கு அடுத்ததாகவும் சுமார் ஐம்பது பேர்கள் வரை கழிய கடைசியாக பரியாரி வல்லியனும் அவன் மருமகன் குட்டியனும் வருகின்றனர்,

இறுதியாக — தன்னந்தனியனாக வெருளிக்கோலத்தில் ஒரு ஊத்தையன் வந்தான். அவன்தான் கந்தன்.

ஊர்வலம் புத்தூர் சந்தி வரை வந்து தெற்கு நோக்கித் திரும்பி, பண்ணித் தலைச்சி வீதிக்கு மாறி தச்சக்கடவை வயல்வெளி வரை வந்து விட்டது.

அது ஒரு சோளகக் காற்றுக் காலம்! விசாகப் பெருங் காற்றுத் தொடங்கி இருந்தது. இதனால் நில பாவாடை காரர்களால் கையுயர்த்த முடியவில்லை. அது நிறுத்தப் பட்டுவிட்டது. மேள இசைகளும் நிறுத்தப்பட்டுவிட்டன.

மாலை வந்துவிட்டது.

கடைக்கோடியில் எல்லைக்கம்புக்கு அப்பால் வந்த அடிமை குடிமைகளில் சாதிக்கு ஒருவரைத் தவிர மற்ற வர்கள் பின் வாங்கிவிட்டனர். நின்றவர்களில் வெருளிக் கந்தனும் ஒருவன்.

சுட்டிபுரம் அம்மன் கோவில் விழாக்கோலத்தில் இருந்தது. அங்குமிங்குமாகப் பத்துக்கு மேற்பட்ட கிச்சின் விளக்குகள் உயர்த்தி வைக்கப்பட்டிருந்தன. அவைகளை அடிக்கடி காற்றடித்துப் பராமரிப்பதற்கும், தலையில் வைத்து சுமந்து செல்வதற்கும் தயாராக ஒவ் வொன்றுக்கும் இருவர் வீதமாக காத்திருந்தனர்.

நெய்விளக்கு ஏற்றப்பட்ட அம்மன் விக்கிரகம் சாத்துப்படி அலங்காரத்தின் கொலு சின்னஞ்சிறு கதவால் தரிசன நிலைக்கு வைக்கப்பட்டிருந்தது.

மூலஸ்தானக் கட்டிடத்திற்கு முன்பாக போடப் பட்டிருந்த ஓலைவேச்சல் பத்துக்கால் மண்டபத்துள் இருந்த சிங்க வாகனமும், இரட்டைக் குதிரை வாகனமும், காராம்

பசு வாகனமும் தூசு துடைக்கப்பட்டு பளபளப்பாக இருந்தன.

கொக்கட்டி மரச்சோலைக்கு நடுவே இடம்பெற்ற அந்தச்சுட்டிபுரம் அம்மன் திருப்பதியில் எங்குதிரும்பினாலும் மகரதோரணங்களும் செவ்விளநீர் குரும்பை அலங்கரிப்புமாகவே இருந்தது.

பத்துக்கால் மண்டபத்திற்கு முன்னால் கொக்கட்டி மரங்களின் சிறை பிடிப்பினால் கிளை பரப்ப முடியாமல் நீண்டு நெடுத்து வளர்ந்த ஆலமரம். அதற்கு முன்னால் ஒரு விளக்குக்கம்பம். அந்த விளக்குக்கம்பம்தான் பஞ்சமர்கள் திருக்கோயிலை உள்சென்று அசூசைப்படுத்தும் எல்லைக் கோடாக நிற்கிறது.

வடக்கும் தெற்குமாக வந்துகொண்டிருந்த கல்லு றோட்டுக்கப்பால் இருந்த கிணற்று வடிவத்தில் அமைந்த கேணி சுத்தம் செய்யப்பட்டு, பக்கவாட்டில் இருந்த கல் தொட்டியில் நீர் நிறைக்கப்பட்டு பளிங்கு போல கிச்சின் லையிற்றின் ஒளிபட்டு மின்னுகிறது

வீதிக்குப் பக்கமாக விடப்பட்டிருக்கும் பெரிய கரத்தைச் சில்லுகள் பொருத்தப்பட்ட, தேக்கு மரத்திலான சகடையை சுற்றியும் மகர தோரணங்கள் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. கோவிலுக்கு வடக்குப்புற அன்னதான மடத்திற்கு முன்னால் இருப்பது தண்டிகைச் சிவிகை!

இந்தச் சிவிகை இப்போதுதான் அந்தப் பகுதிக்கு அறிமுகமாகியிருக்கிறது.

சனக்கூட்டம் அதைச் சூழ்ந்து நின்றது. அது பட்டினத்திலிருந்து தருவிக்கப்பட்டிருக்கிறது.

வேலுப்பிள்ளையரின் தகப்பனார் தனது அரசாங்க ஆதரவைக்கொண்டு அரசாங்க அதிபர் மூலமாக அதை ஏற்பாடு செய்திருக்கிறார்.

இதற்குமுன் அரச காரியங்களைத் தவிர அது பிற தேவைகளுக்கு வருவதில்லை. யாழ்ப்பாணப் பட்டினத்தில் இராச காரியங்களின் எடுபிடி ஆட்களான சிவியார்தான் அச்சிவிகையைக் காவுவர்.

முதன் முதலில் இராச காரியமற்ற இந்த நிகழ்ச்சிக்கு சிவிகை காவ இவர்கள் மறுத்தனர். ஆயினும் அரச அதிபரின் ஆணை அவர்களை அப்படிச் செய்ய வைத்து விட்டது.

அந்தச் சிவிகையோடு அதை காவிச் செல்வதற்குப் பத்துப் பேர்கள் வந்திருந்தனர்.

பட்டினக் கோட்டைக்குள் இருந்து நடுப்பகல் போலப் புறப்பட்டுச் சற்று முன்தான் அது சுட்டிபுரம் வந்து சேர்ந்திருக்கிறது. இதைத் தருவித்தலின் மூலம் பல்லக்கு முதலிக்குத் தானும் தாழ்ந்தவனல்ல என்பதை வேலுப் பிள்ளையின் தந்தையார் காட்ட முற்பட்டுவிட்டார்.

சிவிகையை மட்டும் பார்க்க ஊரே திரண்டு வந்து விட்டது. எல்லோருடைய பார்வைக்காகவும் சிவிகை ஏற்கனவே பனந்தடிகளால் தயாரிக்கப்பட்ட உயரமான கோர்க்காலியில் கொலு வைக்கப்பட்டிருக்கிறது.

வேலுப்பிள்ளையரின் தூரத்து உறவினரும், ஊருக்கு சகல வழிகளிலும் தலைச்சனும், வேலுப்பிள்ளையரைவிட பத்து வயது குறைந்தவருமாகிய கைலாய பிள்ளையரும்

அவரின் சகாக்களும், அங்குமிங்குமாக ஓடி ஆடிச் சகல காரியங்களையும் கவனித்துக் கொள்ளுகின்றனர்.

சிலம்படிகாரர் ஒரு பக்கம்!

பந்து வீச்சுக்காரர் மறுபக்கம்!

வாணக்காரர்கள் வேறொரு பக்கம்!

மேளக் கச்சேரிக்காரர் மற்றுமோர் பக்கம்!

இப்படிப் பல பக்கங்களாக கூட்டம் கூட்டமாக இருந்தவர்களையெல்லாம் அப்போதைக்கப்போது கவனித்துப் பேசி ஆணை இட்டுக் கொண்டிருந்தனர்.

இரவு மணி பத்துக்கு மேலாகிவிட்டது! பனை இருட்டுக்கு ஊடாக வெளிச்சங்கள் சில கண்ணுக்கு எட்டிய தூரத்தில் தெரிந்தன.

"பொம்புளை மாப்பிளை வருகுது!" என்ற குரல்கள் அங்குமிங்குமாகக் கேட்டன.

பல்லக்கில் பவனிவரும் தம்பதிகளை வரவேற்பதற்காக எல்லோரும் ஆரவாரப்பட்டனர்,

அம்மன் திருக்கோயில் மணியகாரர் கூட்டத்திற்கு முன் வரிசையில் வர அவரைத் தொடர்ந்து அர்ச்சகர் பின் நிற்க கூட்டத்தில் களைகட்டத் தொடங்கிவிட்டது.

நீளத்திற்கு ஆங்காங்கே ஆனால் நேராக நிரைக்கு நெடுத்த மனிதர்கள் தலைக்குமேல் தூக்கி வைக்கப்பட்டு நகர்ந்து வந்த வெளிச்சங்களில் வெண்காளைத் திருக்கள்களும், நுகத்தடியை இழுத்துவரும் மனிதக் காளை வண்டிகளும், பல்லக்கும் அடிமை குடிமைகளும் நன்றாகத் தெரிந்தன.

இருந்தாற்போல் வெடித்த அவிட்டொன்று முதல் வெடியின் உந்தலில் வானளாவத் தாவி வெடித்தபோது சிதறிய வெள்ளித்துகள்களின் ஒளியில் குடைகள் இரண்டு விரிக்கப்பட்டு,வடக்கு நோக்கி காற்றில் அசைந்து சென்றது, தம்பதிகளைக் கட்டியங்கூறி வரவேற்பதைப் போன்றிருந்தது

அவிட்டு வெடிச் சத்தத்தில் முன்வரிசையில் வந்த வடக்கன் காளைகள் சற்று அசைந்திருக்க வேண்டும். அவைகளின் சதங்கை நாதங்கள் அதை ஊர்ஜிதப்படுத்தின.

பல்லக்கு கோவில் சோலைக்குள் வந்துவிட்டது. பல்லக்கிலிருந்து வேலுப்பிள்ளையரும், சீதேவியம்மாளும் வெளியே பாதங்களைத் தூக்கி வைக்க... அர்ச்சகர் அரிச்சனைத் தாம்பாளத்தை முன் நீட்டி வேலுப்பிள்ளையருக்குத் திலகமிட்டு பன்னீர் தெளித்து வரவேற்க,இரண்டு பெண்கள் மஞ்சள் தண்ணீரில் தம்பதிகளை ஆலாத்தி எடுக்க, சீதேவி அம்மாளின் தந்தையார் முன்வந்து சூழ்ந்திருந்தவர்களை வழி விலத்தி, கோவில் மண்டபம் வரை அதிகார தோரணையில் அழைத்துச் செல்ல... இப்போது கயிலாய பிள்ளையரின் முதன்மை அற்றுப் போய்விட்டது,

இருந்தாற்போல் வெடித்த அவிட்டொன்று முதல் வெடியின் உந்தலில் வானளாவத்தாவி வெடித்தபோது சிதறிய வெள்ளித்துகள்களின் ஒளியில் குடைகள் இரண்டு விரிக்கப்பட்டு, வடக்கு நோக்கி காற்றில் அசைந்து சென்றது தம்பதிகளைக் கட்டியங்கூறி வரவேற்பதைப் போன்றிருந்தது.

அவிட்டு வெடிச் சத்தத்தில் முன்வரிசையில் வந்த வடக்கன் காளைகள் சற்று அசைந்திருக்க வேண்டும். அவைகளின் சதங்கை நாதங்கள் அதை ஊர்ஜிதப்படுத்தின.

பல்லக்கு கோவில் சோலைக்குள் வந்துவிட்டது பல்லக்கிலிருந்து வேலுப்பிள்ளையரும், சீதேவிஅம்மாளும் வெளியே பாதங்களைத் தூக்கி வைக்க.........அர்ச்சகர் அரிச்சனைத் தாம்பாளத்தை முன்நீட்டி வேலுப்பிள்ளை யாருக்குத் திலகமிட்டு பன்னீர் தெளித்து வரவேற்க இரண்டு பெண்கள் மஞ்சள் தண்ணீரில் தம்பதிகளை ஆலாத்தி எடுக்க சீதேவி அம்மாளின் தந்தையார் முன் வந்து சூழ்ந்திருந்தவர்களை வழிவிலத்தி கோவில் மண்டபம் வரை அதிகார தோரணையில் அழைத்துச்செல்ல......... இப்போது கயிலாயபிள்ளையரின் முதன்மை அற்றுப் போய் விட்டது,

பல்லக்கு முதலியர் கயிலாயபிள்ளையரையும் சேர்த்துத்தான் வழிவிலத்தினார். எப்போதும் அவர் சுபாவம் அப்படித்தான். கயிலாபிள்ளையரின் முகத்தில் அசடு வழிந்தது. ஆனாலும் அவர் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

மேள வாத்தியங்கள் முழங்கின!
அவுட்டுகள் வெடித்தன!
வெளிச்சங்கள் நகர்ந்தன!

இப்போது தம்பதிகள் சாமி தரிசனத்திற்காக மூலத் தான முன்பகுதிக்கு அழைத்து வரப்பட்டு விட்டனர். நெய்வேத்திய தீப ஆராதனை தொடங்கி முடிய சில நிமிடங்கள் ஆகிவிட்டன.

வெளிச்சக்கூட்டு ஆலமரத்திற்கு உள்ளே பெரிய மனிதர்களும் அதற்கு அப்பால் பஞ்சமர்களும் நிறைந்து போய்விட்டனர்

அம்பாளுக்குத் திருப்பூசை நடந்துகொண்டிருந்தது. பூசையும் முடிந்து பிரசாதம் பரிமாறப்பட்டபின் மணமக்கள் தண்டிகைச் சிவிகைக்கு மாறி, மணமக்கள் வேலுப்பிள்ளையரின் இல்லத்திற்கு பிரயாணத்திற்கான ஆயத்தங்களைத் தொடங்க வேண்டியதுதான்.

இங்கிருந்து வேலுப்பிள்ளையர் வீட்டுக்கு சுமார் மூன்று மைல் தூரம் போயாக வேண்டும். புதிதாகக் கல்லுப் போட்டு மட்டப்படுத்தப்பட்ட கிறவல் ரோட்டில் மூன்று மைல் தூரம் போவது இலேசான காரியமல்ல. ஊர்வலம் போய் முடிய விடிந்தாலும் விடியும்.

மறுபடியும், மறுபடியும் எலிக்கோட்டைகள், அவிட்டுக் கோட்டைகள் கலவாகுக் கோட்டைகள்.........

எலிவாணக் கோட்டை ஒன்று சரசரத்து மேலெழுந்து கழன்று சிந்து விளையாடி ஓய்ந்தபோது..........

கேணிப் பக்கம் சலசலப்புக் கேட்டது. எல்லோர் கவனங்களும் அந்தப் பக்கம் திரும்பின.

கைஅடி ஓசைகள்! சற்று அமுக்கலான பிளிறலான ஒரு சிறுவனின் குரல்! அவலமாகக் கேட்கிறது!

பக்கத்தே இருந்து எரிந்துகொண்டிருந்த கிச்சின் லையிற்று கேணியை நெருக்கிக் கொண்டிருந்தது.

வெளிச்சம் நன்றாகத் தெரிந்தது! அங்கே ஒருவன் அடித்து உதைக்கப்படுகிறான். அவனின் ''அம்மா! அம்மா!!'' என்ற கதறல். குரலின் உச்சரிப்பில் தெளிவில்லை. பத்து வயது நிரம்பாத வெருளிக் கந்தன் உதைக்கப்படுகிறான்.

கயிலாயபிள்ளையினாலும் அவரின் எடுபிடிகளாலும் உதைக்கப்படுகிறான். ஆலமர வெளிச்சக் கட்டையடியில் இருந்து அக்கூட்டத்தை நோக்கி ஒருவன் தாவிச்செல்கிறான்

கந்தனுக்கு விழும் அடிஉதைகளை தடுத்து நிறுத்துவதற்காக ஓடிச் செல்கிறான்.

''இவன் ஆரடா நளச் சுப்பன்! கொல்லுங்கோடா அவனை!'' கயிலாயபிள்ளையரின் ஓங்காரக்குரல் கேட்கிறது. இந்தக் குரக் எழுந்ததுதான் தாமதம்; சிவிகையடிக்குப் பக்கமாக நின்ற பல்லக்கு முதலியர் ஓடி வருகிறார்.

''டேய், அவன் என்ரை பள்ளன்! என்ரை குடிமோன்; ஆரடா அவனை அடிக்கிறது?'' இந்தப் பெருங்குரல் பல்லக்கு முதலியரிடம் இருந்து வந்ததுதான் தாமதம்,

அடி ஓசைகள் இல்லை!

சல சலப்புகள் இல்லை!

ஆரவாரங்கள் இல்லை!

எதுவுமே இல்லை!

மழை பெய்து ஓய்ந்தது போலிருந்தது! பல்லக்கு முதலியரின் அதட்டல் கேள்விகளுக்குப் பதிலில்லை.

கோவில் மணியகாரர் ஓடிவந்தார். வேலுப்பிள்ளையின் தந்தை கந்தப்பர் ஓடி வந்தார்!

கந்தன் பரிதாபமாக அழுதபடி நிலத்தில் மண்ணில் புரண்டு கொண்டிருந்தான்.

அவனுக்கு உதவிக்குச் சென்றவனின் கை முறிக்கப்பட்டு தொங்கிய நிலையில் அடக்கமாக முனகிக் கொண்டிருந்தான்.

"என்ரை சிறைக் குட்டியனுக்கு ஆற்ரா அடிச்சவன்? வாடா முன்னுக்கு!"

பல்லக்கு முதலியர் சவால் விட்டார். யாரும் முன் வரவில்லை.

மணியகாரர் நடுவே வந்தார். "ஏன் தம்பியவை இவையனுக்கு அடிச்ச நீங்கள்"? என்று அவர் நிதானமாகக் கேட்டார்.

"இவன் கல்லுத் தொட்டியிலை கை வைச்சிட்டான்!" கயிலாயபிள்ளையர் எல்லோருக்குமாகப் பதில் சொன்னார். வீறாப்பாகச் சொன்னார். நிலத்தில் கிடந்த கந்தனைச் சுட்டிச் சொன்னார்.

"அவன் தொட்டியிலை கைவைச்சால் நீர் அடிக்கிறதோ ...? இப்படிக் கேட்டார் பல்லக்கர்.

"அவன் புத்தூர் பள்ளன்!"

"மற்றவனுக்கு ஏன் அடிச்சுக் கை முறிப்பான்?"

பல்லக்கரின் அடுத்த கேள்வி "இவன் எங்கடை ஊர் நளவன்; இவன் ஏன் புத்தூர் பள்ளனுக்காக வருவான்?"

கயிலாயபிள்ளையர் படக்கெனப் பதில் சொன்னார்.

"நீர் உம்மடை நளவனுக்கு என்னெண்டாலும் செய்யலாம். அதை நான் கேக்கேல்லை. அது உம்மடை விருப்பம். இவன் என்ரை பள்ளன்; இவன் என்ன செய் தாலும் என்னைக் கேக்காமல் நீர் ஒண்டும் செய்ய ஏலாது ...அதுவும் நான் கூட நிக்கேக்கை நீர் அவனுக்கு அடிக் கிறதோ?" பல்லக்கரின் இந்தப் பேச்சை எல்லோரும் ஆமோதித்தனர் போல தலையசைத்துக் கொண்டனர்.

கயிலாயபிள்ளையர் வாயடைத்துப் போனார்.

இந்த நாற்பது வயது அனுபவத்தில் இப்படி ஒரு அனுபவத்தை சந்திக்கவில்லை. பேச முடியாமல் நின்றதில்லை. மனதிற்குள்தான் அவர் கறுவிக்கொள்ள முடிந்தது.

செல்லப்பரும், மணியகாரரும் ஊரின் மாப்பாண உடையாரும் முன்னே வந்தனர்.

''எல்லோரும் நடந்ததுகளை விட்டிட்டு இப்ப காரியங்கள் நடக்கிறதுக்கு ஒக்கலிச்சுப் போங்கோ!'' என்று மட்டும் மணியகாரர் பேசினார்.

கூட்டம் சிறிது சிறிதாகக் கலைந்து பரவத் தொடங்கியது.

''டேய், இவன் சுப்பனை தாவளத்துத் துரும்பனிட்டை கொண்டுபோய் புக்கை கட்டுங்கோடா!'' என்று கயிலாய பிள்ளையரின் ஆணைப்படி சுப்பன் கால் நடையாக நடத்தி செல்லப்பட்டான்.

அவனின் வாலிபமிடுக்கு எழுந்து நடக்கச் செய்தது. அவன் மிகவும் நிதானமாகவே நடந்து சென்றான். அவனின் பற்கள் நறநறப்பதைக் கேட்டுவிட்ட ஒருத்தன் ''பல்லைக் கடிச்சுக் கொண்டு எப்பன் பேசாமல் வாடா சுப்பன்! துரும்பன்ரை புக்கையோடை சுகம் வந்திடும்.'' என்று ஆறுதல் சொல்லிக்கொண்டே அவனோடு நடந்து சென்றான்.

கந்தனுக்கு மயக்கம் வந்தது.

மகரதோரணங்களோடு தொங்கிய சூரியகாந்தி இளநீர் ஒன்றைப் பறித்து அதன் மூளை உடைத்து ஒருவன் கந்தனைக் குடிக்கப்பண்ணிஅவன் முகத்திலும் பனுக்கினான்

''அம்மாளின்ரை அபிசேக இளநீர் இப்பிடி எங்களுக்கு முன்னம் சுகப்படுத்திப் போடும்!''

கூட்டத்திலிருந்து ஒரு குரல் எழுந்தது. சற்றுவேளை கழிவதற்கு இடையில் கந்தனுக்கு வலிப்பும் இழுப்பும் வந்து விபடது.

சீதேவிக் கிழவி குமரியாக மந்துவிலக்கு வந்து சேர்ந்த போதுதான் கந்தனும் வந்து சேர்ந்தான். எல்லுப் போலையும் இத்தினியும் உத்தியோகெ பூர்வமாக சீர்வரிசை களுக்கு உட்பட்டவர்களாக வந்து சேர்ந்தபோது கந்தன் பத்தாவது வயதில் வலி இழுப்புக்காரனாக சுட்டி புடம் போடப்பட்டது போன்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப் பட்டு வந்து சேர்ந்துவிட்டான்.

உபசார வைபவங்கள் முடிந்து வீட்டில் விழாக்கோலம் கலைந்தபின்பும் கந்தன் யாரிடமும் கேட்காமலும் சொல் லிக் கொள்ளாமலும் நின்றுவிட்டான்.

வேலுப்பிள்ளை வீட்டுக்கு அவன் நாய்க்குட்டியாகி விட்ட பின்பு அந்த வீட்டை விட்டுப் போகும் அளவுக்கு கந்தனுக்கு நினைவு ஓடவில்லை,

அவனை வாபோவோம் என்று அழைத்துச் செல்ல எவரும் இல்லை. அவன் இங்கேயே தங்கிக்கொண்டான்.

கல்யாண வரவேற்பு அமளிக்குள் கந்தனைக் கணக்கில் யாரும் சேர்க்கவில்லை, நான்கோ ஐந்தோ நாட்களுக்குப் பின் பல்லக்கு முதலியர் குடும்ப சமேதராக மக்களைப் பார்க்க வந்தபோதுதான் கோடிப்புறத்து இலுப்பை மரத்தின் கீழ்கந்தன் சளிவடியக் குந்திக்கொண்டிருப்பதைக் கண்டார்.

''எடே, கந்தன் நீ இன்னும் போகேல்லையே?'' என்று அவர் பேச்சு வாக்கில் கேட்டார். அப்போதுதான்

கந்தனுக்கும் தான் நிற்பது புத்தூர் அல்ல மந்துவில்தான் என்றநினைப்பு வந்திருக்க வேண்டும்,

"நான் எங்கையாக்கும் போறது?" என்று அப்பாவித் தனமாக ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டான்,

முதலியர் சிதேவியின் சீதனக் குடிமை எல்லுப் போலையையும் இத்தினியையும் கூப்பிட்டு,

"எல்லுப்போலையன், எடி இத்தினி இவன் கந்தனும் உங்களுக்கு உதவியாக இருக்கட்டுக்கும்.' என்று கந்தனுக்கு அபயம் அளித்துவிட்டார்.

"அதுக்கென்ன வாக்கும், நயினார் சொல்லவேணுமே!" என்று இத்தினி நசிந்தபோது, "இஞ்சைபார் இத்தினி யின்ரைக் புழுகத்தை. புள்ளை குட்டி இல்லாதவளுக்கு புள்ளை ஒண்டு கிடைச்சிட்டுதெல்லே! எடி, இத்தினி இவன் எங்கடை பள்ளன் கலப்புக்கிலப்பு இல்லாத பள்ளன். இவன்ரை தேப்பனுக்கு விசர் வந்து இவன்ரை தாயைப் போட்டு அடிச்சதிலை அவளும் கிணத்துக்கை விழுந்து செத்துப் போனாள், அவள் தேப்பனும் விசரிலை தூங்கிச் செத்துப்போனான்." என்று முதலியர் கந்தனின் பரிதாபத்தை ஒருதடவை சொல்லிக்கொண்டார்.

இத்தினிக்கு மனது சுள்ளென்றது. கந்தனை புதிதாகத் தான் இத்தினிக்கு அறிமுகம் செய்வதாக நினைத்துத்தான் அப்படிச் சொன்னார்,

ஆனால் இத்தினிக்கோ.........

# ௬

இத்தினியின் கண்களுக்குள் கந்தனின் தாயான செல்லி இன்னும் நிற்கிறாள். செல்லியின் கணவனான, கந்தனின் தந்தை செல்லனின் கறுத்த திரண்ட உருவம், அவள் கண்களுக்குள் நிறைந்து கிடக்கிறது!

பல்லக்கு முதலியரின் மைத்துனரான மழுவராயரின் மகள் முத்துப்பிள்ளை நாச்சியாரின் பிரசவகாலத்தில் இத்தினி அந்த வீட்டில் கோவிச்சுக் குடிமையாக இருந்தாள்.

முத்துப்பிள்ளை நாச்சியாருக்கு ஒருநாள் நடுச்சாமத்தில் பிரசவ நோக்காடு கண்டிருந்தது. மெதுவாக இடுப்புவலி தொடங்கிய நாட்களுக்கு முன்னதாகவே மருத்துவிச்சி மாராச்சி ராசநோக்காடு வரும்வரை செல்லியுடன் காத்திருந்தாள்.

இராஜ நோக்காடு கண்டுவிட்டது!

நடு இராத்திரியில்!

வீடே ஆரவாரப்பட்டது!

முத்துப்பிள்ளை நாச்சியாருக்கோ இதுதான் முதல் பிரசவம்!

அனுபவமில்லாத நாச்சியார் ஊரே எடுபடக் குரல் வைத்துக் குழறினாள்!

மருத்துவிச்சி மாராச்சியும் இத்தினியும் எப்படியெல்லாமோ அவளை ஆசுவாசப்படுத்திப் பார்த்தனர். ஆனால் நாச்சியாரின் கூக்குரல் அடங்கியபாடில்லை.

பொழுது விடிந்தபோது நாச்சியார் பிரசவித்து விட்டாள்!

''கூரையைத் தட்டவாக்கும்!'' என்ற இத்தினியின் குரல் உள்ளிருந்து கேட்டபோது. அதற்குப் பின்னால் ஒரு பேரதிர்ச்சியும் வரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

மயக்கம் போட்ட நாச்சியாருக்கு பின் மயக்கமே தெளியவில்லை.

மாராச்சி தன்னாலான சகலதையும் பார்த்துத் தீர்த்து விட்டாள். இத்தினிக்குக் கூவி அழவேண்டும் போலத்தான் இருந்தது.

ஆனாலும் ஒரு நம்பிக்கை. ஆவரங்கால் செல்லத்துரை பரியாரியிடம் வில்லுவண்டி பறந்தோடியது. செல்லத்துரைப் பரியாரியார் மருந்துப் பெட்டியுடன் வந்து சேர்ந்து விட்டார்.

வைத்தியம் பார்த்தார்!

பலதும் பத்தும் செய்தார்.

நாச்சியாரின் சுயநினைவைக் கொண்டுவர அவரால் முடியவில்லை.

கடைசி மருந்து நையம் அடித்தல். இது பிரசவ காலத்தில் செய்வது சாதாரண விதிக்குப் புறம்பானதுதான். ஆனாலும் பரியாரியார் இதைச் செய்தார். ஒன்றும் பலிக்கவில்லை.

கடைசியில் கொம்புக்கல்லையும் உரைத்து நாச்சியாரின் நாக்கில் தடவ முயற்சித்தார். அதுவும் நடக்கவில்லை. நாச்சியாரின் பற்கள் கிட்டிவிட்டன, அப்படி இருந்தும் ஒருமாதிரியாக இத்தினி கொம்புக் கல்லு உரைசல் கழியை நாச்சியாரின் நாக்கில் தடவியே விட்டாள். ஒருவித அருட்சியும் இல்லை.

பூமியில் குதித்துவிட்ட சின்ன நயினுருக்கு வேண்டிய சகலதும் மறுபுறமாக நடந்து கொண்டிருந்தன,

செல்லத்துரைப் பரியாரியாரை நம்பி ஒரு நாள் பகல் கழிந்துவிட்டது.

நாச்சியாருக்கு நினைவு வரவே இல்லை! யாழ்ப்பாணம் பண்டியன் தாழ்வில் இருக்கும் ஒரு பரியாரி பற்றிப் பலர் சொன்னுர்கள். ஆட்டிறச்சிப் பரியாரி என்றுதான்

அவருக்குப் பெயராம். பிள்ளைத்தாச்சி வைத்தியத்தில் அவருக்கு நிகர் அவரேதான் என்ற பேச்சு!

றிச்சோ வண்டியைத் தவிர அவர் வேறெதிலும் பிரயாணம் செய்வதில்லையாம். யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து புத்தூர் ஏறக்குறைய பத்து மைல்!

இந்தப் பத்து மைல் தூரத்தை அவர் றிச்சோ வண்டியில் கடந்து வரவேண்டும். ஆனாலும் மழுவராயரின் வில்லு வண்டி பட்டணத்தை நோக்கிப் பறந்தது!

மத்தியான வேளை!

பங்குனி மாத வெய்யில்!

காற்று வேகத்தில் வில்லுவண்டி நான்கு மணிக்கெல்லாம் வைத்தியரின் வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டது.

வைத்தியருக்கு மிதமிஞ்சிய குடிப்பழக்கம்! அதனால் அவர் உணவருந்திவிட்டு தூங்கிக் கொண்டிருக்கும் நேரம் அது. அவரை யாரும் துயில் கலைக்கக்கூடாது. வழமை அப்படி.

அவர் தானாகவே துயில் கலைதல் வேண்டும். மழுவராயரோ வைத்தியரின் பள்ளி எழுச்சிக்காகக் காத்திருக்க வேண்டியதாயிற்று!

புத்தூர் மழுவராயராவது வெறும் குடிகார பரியாரிக்காகக் காத்திருப்பதாவது!

இது அவர் கடுக்கண்ட காலத்திலிருந்து நடவாத புதுமைதான்.

ஆனாலும் மழுவராயர் பரியாரி வீட்டு ஒட்டுத் திண்ணையில் காத்திருக்க வேண்டியதாயிற்று.

ஐந்து மணிவரையில் வைத்தியர் துயில் கலைந்தார்.

"புத்தூர் மழுவராயராம்......வந்திருக்கிறார்" என்று அவர் மனைவி படுக்கையில் வைத்து சேதி சொன்னாள்.

"மழுவராயர் எண்டா ராசாவே, இருக்கச் சொல்லு வாறன்," என்ற வைத்தியரின் இறுமாப்புக் குரல் மழுவ ராயருக்கும் கேட்டது.

மழுவராயர் தன் பட்டுச் சால்வையை இழுத்து வெயர் வையைத் துடைத்து சமாளித்துக் கொண்டார்.

வீட்டின் பின்பக்கக் கதவால் சென்று கிணற்றடியில் முகம் அலம்பி சாவகாசமாக வைத்தியர் வந்து சேர்ந்தார்.

"என்ன சங்கதி? ஆட்டிறச்சிப் பரியாரியிட்டை வந்திருக்கிறியள்?" என்று கேள்வியைக் கேட்டஎர், அவர் கண்கள் நன்றாகச் சிவந்திருந்தன. அவருக்கு இன்னும் உடம்பு சமநிலை பெறவில்லை.

மழுவராயரின் உதவிக்கு வந்தவர்கள் இலேசாக விஷயத்துக்கு வந்தனர்.

இடம் வலங்களைச் சரியாகக் கேட்டுவிட்டு, "சரி நீங்கள் போங்கோ நான் வாறன்." என்று சொல்லிக்கொண்டே அவர் புறப்பட தயாரானார்.

"அப்ப, வில்லு வண்டியிலேயே போவம்!" இப்படி மழுவராயர் கேட்டுவிட்டார். பரியாரியாருக்குக் கோபம் வந்துவிட்டால் வாய் அடைத்துப் போகும். கண்களாலேயே வெறித்துப் பார்த்தார். அவர் ஒண்டிலையும் ஏறமாட்டார் றிச்சோவிலேதான் ஏறுவார்!" என்று மருந்தரைக்கும் பண்டாரி மழுவராயருக்கு விஷயத்தைப் புரிய வைத்தார். பண்டாரி றிச்சோக்கார இளையவனைத் தேடிச் சென்றாள்.

சுமார் அரைமணி நேரத்தில் வைத்தியரையும் ஏற்றிக் கொண்டு இளையவன் புறப்பட்டு விட்டான்.

அன்று பௌர்ணமி வந்து இரண்டாம் நாள். நிலவு காலித்து வந்தபோது வைத்தியரின் றிச்சோ புத்தூருக்கு வந்து சேர்ந்துவிட்டது.

ஆவரங்கால் செல்லத்துரைப் பரியாரியார் ஆட்டிறச்சிப் பரியாரியின் வருகையை வேளையோடே அறிந்துகொண்டு அவ்விடத்தை விட்டு மெதுவாகச் சென்றுவிட்டார்.

வீடு நிறைந்திருந்த சனக்கூட்டத்தை விலத்திக்கொண்டு வைத்தியர் உள்ளே சென்று விட்டார்,

நாடித்துடிப்புப் பரிசோதனை முடிந்து ......... பின்பு வைத்தியர் சொல்லிய அனுமாங்களின் சேகரிப்பும் நடந்து முடிந்து ......... இத்தினிதான் மருந்துச் சிரட்டையில் குளிசையை உரைத்தாள். குளிசை வைரக்கல்லுபோல இருந்தது. அரை மணி நேரத்திற்கு மேல் உரைக்க வேண்டியதாயிற்று. "முதல்லை மருந்து குடுக்க பெறுமாதப் பிள்ளைத்தாச்சி வேணும்:" என்று கூறினார் வைத்தியர். கண்களுக்குப் படக்கூடியதாகப் பெறுமாதக் கர்ப்பிணி ஒருவருமே இல்லை, நினைவுக்குத் தட்டுப்படக் கூடியதாக உறவு முறைக்குள் யாரும் தெரியவில்லை,

"செல்லன் பெண்டிலுக்கு இது தான் பெறுமாதம் அவளை..." இப்படி இத்தினி இழுத்தான்.

"என்ன... பள்ளி செல்லியோ...?" இப்படி ஒரு கண்டனங் கலந்த பெண் குரல் கேட்டது.

"அதொண்டும் ஆத்திரத்திற்கு சாத்திரமில்லை; அவளைக் கூப்பிடுங்கோ." மழுவராயரின் குரல் வெளியில் இருந்து கேட்டது.

மழுவராயரின் பனைவடலிக்குள் இருந்து வயிற்றுச் சுமையொடு நாரி வலிக்க அணுங்கிக் கொண்டு... செல்வி அழைத்து வரப்பட்டாள். நடுவீட்டுக்குள்ளும் விடப் பட்டாள். ''சன்னதியானே!'' என்று மனதிற்குள் செபித்துக் கொண்டு கிட்டியிருந்த நாச்சியாரின் பற்களை இத்தினி நீக்கிக் கொடுக்க செல்வி மருந்தைப் பருக்கி விட்டாள்.

மருந்தின் பெரும் பகுதி கடவாயால் வெளி ஓட இறுதிப்பகுதி மட்டும்தான் உள்ளே சென்றது.

''அது போதும்'', என்றார் வைத்தியர்.

செல்லனும் ஊரில் இல்லை.

முதல் மருந்து வார்த்த செல்வியை வீட்டுக்கும் கூட்டிச் சென்றுவிட வேண்டும் என்ற நினைப்பு யாருக்கும் வரவில்லை.

செல்வி தாழ்வாரத்தோடு இருந்துவிட்டாள், அவளால் எழுந்து ஒரு அடிகூட நடக்க முடியவில்லை. நல்ல நிலவு தான்; வீட்டுக்கு நடந்து செல்ல அவளுக்குப் பயமில்லை. ஆனால் நாரி வலித்து இடுப்பு உழைந்து...

பனைவடலிக்குள் ஒரு பையனின் அழுகுரல் கேட்டது.

அது செல்வியின் மூத்தவன் கந்தனின் குரல்! கண் விழித்தவன் தாயைக் காணாது கத்துகிறான். செல்வி எழுந்துபோக முயன்றாள் முடியவில்லை. இத்தினி அவளைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்றாள்.

''என்ன செல்வி வயிறு நோகுதே?'' போகும் போது இத்தினி கேட்டாள்.

"ஓமாக்கும், இடுப்பு வலிக்குது!" செல்வி அனுங்கிக் கொண்டே பதில் சொன்னாள். செல்லியை வீட்டில் விட்டுவிட்டு அவளின் சிறிய தாய்க்காரியான பூதியிடம் சென்று "செல்விக்கு வயிறு நோகுது போலைக் கிடக்கு…" என்று சொல்லிவிட்டு நயினார் வீடு வந்து சேர்ந்தாள் இத்தினி,

"என்னடி இத்தினி இவ்வளவு நேரமும் செய்தனி? புரிசன் புடிக்கப் போனியோடி?" என்று ஒரு கேட்கக் கூடாத கேள்வியை மழுவராயரின் மனைவி பெரிய நாச்சியார் கேட்டுவிட்டாள். இத்தினி மரமாக நின்றாள்.

"செல்லிக்கு வயிறு நோகுதுபோலை கிடக்காக்கும். அதுதான் வீட்டை கொண்டு போய் விட்டிட்டு வாறனாக்கும்" இத்தினி காரணம் கூற முற்பட்டாள்.

"ஓ, பள்ளிக்கு மருத்துவிச்சி வேலை பார்க்கப் போட்டு வாறாள் கோவிய நாச்சியார். என்ரை பிள்ளை கிடக்கிற கிடையிலை " என்று அவள் மறுபடியும் இரைந்தாள்.

வைத்தியர் எல்லோர் முகங்களையும் மாறி மாறிப் பார்த்தார். அவருக்குக் கோபம்தான் வந்திருக்கவேண்டும் மழுவராயரின் மனைவியை வெறித்துப் பார்த்தார். மருந்துப் பெட்டியைத் திறந்தார். இரண்டு குளிகைகளை எடுத்தார். இத்தினியிடம் நீட்டினார்.

"இந்தா இதைக் கொண்டுபோய் வெத்திலைச் சாறிலை அவளுக்கு உரைச்சு குடுத்திட்டு வா! இராச நோக்கோடு கிளம்பும்; கெதியாப் போ!" என்று துரிதப்படுத்தினர்.

யாராலும் எதுவும் சொல்லமுடியவில்லை. மழுவராயர் அம்மாள் வாயே திறக்கவில்லை. கட்டளை இட்டது வைத்தியர்.

உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நாச்சியாரை விட்டுவிட்டு மருந்துக் குளிசையுடன் இத்தினி போய் விட்டாள்.

விடியும்வரை வைத்தியர் கண் விழித்துக் காத்திருந்தார். மூன்று தடவைகள் மருந்து பருக்கப்பட்டது.

அடிக்கடி நாடிப் பரிசோதனை செய்தார். அவர் முகத்தில் மன நிறைவு தெரிந்தது. மாராச்சி மருத்துவச்சியும் கூட இருந்தாள். மற்றவர்கள் அங்குமிங்குமாக நகர்ந்து விட்டனர்.

விடிந்தபோது முனகல் கேட்டது. நாச்சியார் அனுங்கினாள்.

அவளுக்கு தெளிவு வந்துவிட்டது! உடல் நோவின் பாதிப்புத் தெரிந்தது. அதனால் அவள் முனகினாள்.

குழந்தைக்குப் பனங்கட்டித் தண்ணீரை சேலைத் திரியில் தோய்த்து உமியக் கொடுத்துக் கொண்டிருந்தாள் இத்தினி.

சாய்மனைக் கதிரையிலேயே வைத்தியர் தூங்கிவிட்டார்.

வடலிப் பக்கத்திலிருந்து செல்லியின் சிறிய தாய்க்காரி பூதி வந்தாள். அவள் ஒரு நல்ல சேதியையும் சுமந்து வந்தாள் செல்லி நடுராத்திரியில் ஒரு ஆண் குழந்தையை பெற்றுவிட்டதாக அவள் சொன்னாள். மிகவும் இலகுவாகப் பெற்றுவிட்டதாகவும், நஞ்சுக்கொடி கூட அரை மணி நேரத்தில் விழுந்து விட்டதாகவும் அவள் சொன்னாள்.

"என்ரை குஞ்சுவுக்கு மருந்துச் சிரட்டை பிடிச்சுப் பருக்கினவளெல்லே. விக்லங்கம் வராமல் பெத்துப் போட்டாள்" என்று மழுவராயரின் மனைவியானவளின் குரலும் கேட்டது.

சாய்மனைக் கதிரையில் கிடந்த வைத்தியர் கண்விழித்து உடம்பை மூடியிருந்த நார்ப்பட்டுச்சால்வையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு,

"விசர்க்கதை கதைக்கிறியள்! உங்கடை பிள்ளைக்கு சிரட்டைப் பிடிச்சு மருந்து பருக்கினதாலைதான் அவள் சுகமாப் பெத்தவள் எண்ட எண்ணமாக்கும். பேத்தனமான கதையெல்லே இது...... அவள் சிரட்டைப் பிடிச்சுப் பருக்கினதாலைதான் இந்தப் பிள்ளை பிளைச்சிருக்கு எண்டு சொல்லுங்கோ..... மோட்டுத்தனமாக கதை கதைச்சா எனக்குப் பிடிக்காது......"

வைத்தியர் சற்றுக் கோபமாகச் சொன்னார். வைத்தியரின் பேச்சுக்குப் பிறகு வேறு பேச்சுக்களே கேட்கவில்லை.

மழுவராயர் பின்பக்க விறுந்தையில் இருந்து வைத்தியரிடம் வந்து சேர்ந்தார். றிச்சோக்கார இளையவன் றிச்சோப் படியிலேயே சுருண்டு கிடந்தான்.

"இளையவன்"

வைத்தியரின் அழைப்புக் கேட்டு இளையவன் திடுக்குற்று எழுந்தான்.

வைத்தியர் புறப்படுவதற்குத் தயாரானார். அவரிடம் எதையெல்லாமோ பேசவேண்டும், சொல்லவேண்டும் என்று தான் மழுவராயர் எதிர்பார்த்தார். ஆனால் வைத்தியர் முந்திக்கொண்டு எழுந்துவிட்டார்.

மருந்துப் பெட்டியிலிருந்து சில மருந்துக் குளிகைகளை எடுத்து இத்தினியிடம் கொடுத்து,

"இண்டைக்கு விட்டு நாளைக்கு ஆட்டிறச்சியோடை பத்தியம் குடுக்கவேணும். குழந்தைக்குத் தாய்ப்பால் குடுக்கப்படாது" என்று பணித்துவிட்டு முற்றத்திற்கு வந்துவிட்டார்.

இளையவன் தயாராஞன்.

வைத்தியர் றிச்சோவில் ஏறிக் குந்திவிட்டார்.

மழுவராயர் அவதிப்பட்டார். வைத்தியருக்கு சன்மானம் கொடுக்கவேண்டும்.

றிச்சோ நகர்ந்து கொண்டிருந்தது. மழுவராயர் சற்று வீச்சாக றிச்சோவுக்கு முன்ஞக வந்தார்.

"இளையவன் கெதியாப் போ!"

வைத்தியர் கட்டளை போட்டார் பலமாக. றிச்சோ பறந்தது!

மழுவராயர் பின் தங்கிவிட்டார்.

ஏங்கிப்போய் நின்றுவிட்டார், ஒரு துட்டுக்கூட அவரால் வைத்தியருக்கு கொடுக்க முடியவில்லை.

மாலை 5 மணிக்குமேல் மழுவராயரின் விஸ்லுவண்டி வைத்தியரின் வீட்டு முற்றத்தில் வந்து நின்றது, மிக மலம் நிறைந்த கோலத்தில் மழுவராயர் வந்து இறங்கிஞர். அவரின் குவளைக் கடுக்கண்களில் புது ஒளி தெரிந்தது. அவரின் நாவல் நிறச் சாய வேட்டியும் ஆரணியன் சால்வையும் அணில் மார்க் பெனியனும் அவரை ராசக் கோலத்தில் காட்டின. கைப்பிரம்புடன் அவர் இறங்கி வந்தார். அவரோடு கூட வந்தவன் கையில் பையுடன் வந்தான்.

அது நிறைய நாணயக் குற்றிகள் இருந்திருக்கவேண்டும். அவன் மழுவராயருக்குப் பின்னால் பக்குவமாக நகர்ந்து வந்தான். அப்போதுதான் வைத்தியர் தூக்கம் கலைந்து கைகால் அலம்பிவிட்டு திண்ணைக்கு வந்திருந்தார்.

''ஓ...... நீரே! வாரும் மழுவராயர்.'' வைத்தியர் அதிகாரமாகப் பேசினார்.

''அப்போதை ஒண்டும் வேண்டாமல் வந்திட்டீர், அதுதான் இப்ப கொண்டு வந்தனான்!'' மழுவராயரும் சற்று மிடுக்காகவே பேசினார்.

''ஓ... நீரோ, எனக்குக் காசு தரப் பாத்திரோ... நான் வேண்டாமல் வந்திட்டனோ. நீர் நல்ல கசவாரம் எண்டு நான் கேள்விப்பட்டனான். உம்மடை மகளின்ரை உயிரின்ரை விலையை நீர் தரப் போறீரோ... எங்கை தாரும் பாப்பம்!''

வைத்தியரின் பேச்சு மழுவராயரைக் குத்திவிட்டது. ஆனாலும் அவர் கூட வந்தவனைக் கண்களால் பணித்தார். அவன் பையை திண்ணையில் வைத்து விரித்தான்.

வைத்தியர் அதை ஒவ்வொன்றாக எடுத்து வெளியே வைத்தார், இராசதலை பதித்த இருபது இறைசாக்கள் இருந்தன. சொல்லிவைத்தாற்போல் றிச்சோக்கார இளையவனும் அங்கு வந்து சேர்ந்தான்.

''இளையவன் இஞ்சை வா! இதைச் சீலைத் துண்டுக்கை போட்டு ஐயாவின்ரை வில்லு வண்டி வக்குக்கை கொண்டு போய் வை!'' எண்டு மட்டும் கூறினார்.

இளையவன் அந்தக் குற்றிகளைப் பையில் போட்டு சுருக்கி எடுத்து வில்லு வண்டி வக்குக்குள் வைத்து விட்டு வந்தான்.

மழுவராயருக்கு அசடு வழிந்தது! ''இஞ்சேர் காணும் உம்மடை மோளின்ரை உயிருக்கு நீர் தந்த விலையைப்பாக்க எனக்கு சிரிப்புத்தான் வருகுது. தின்னாமல் குடியாமல் நீர்

சம்பாதிச்ச காசு சும்மா கண்டபடி வீசி எறியாதையும் போம்!''

மழுவராயர் தயங்கித் தயங்கித் திரும்பினார்.

''இஞ்சை நில்லும் ஒரு அலுவல். காலமை இத்தினி யிட்டை சொல்லாமல் வந்திட்டன். உம்மடை மோள் எழும்பி நடக்க ஐஞ்சாறு மாசம் செல்லும். உம்மடை மருமோனைக் கிட்டப் போகவிட்டீரோ மோள் இல்லை எண்டு நினைச்சுக் கொள்ளும். இன்னுமெண்டு மோளின்ரை பாலை புள்ளைக்குக் குடுக்க விடப்பிடாது. ஆம்பிளை வாடை பிடிக்காத ஒரு பால்காரியைப் பிடிச்சு பாலைக் குடுப்பியும். போம்! கடைசியா ஒண்டு உமக்குச் சொல்லத் தான் வேணும், செத்துச் சவமாய் கட்டையிலை கிடக்கேக்கை அறுனாக்கொடியையும் விடாங்கள் காணும்.''

மழுவராயரின் தலை கவிழ்ந்துவிட்டது. அவர் வண்டியை நோக்கி நடந்து கொண்டிருந்தார். அவரால் ஒரு வார்த்தை கூடப்பேச முடியவில்லை.

வண்டிக்குள் நீண்ட நேரமாக அமைதி நிலவியது. ஐயாவின் நிலைமையைப் புரிந்துகொண்டு வண்டி ஓட்டியும் பேசாமல் வந்தான். பூதர்மட வளைவைத் தாண்டியபோது,

''ஆள் எலும்பும் தடியுமெண்டாலும் ஒரு பொல்லாத ஆள்போலை கிடக்கு. நயினாரையே பேசாமல் வாயைக் கட்டிப்போட்டார்'' என்று பேசிவிட்டான்.

வந்ததே கோபம் மழுவராயருக்கு!

''வாயைப் பொத்திக்கொண்டு வாடா! அந்தக் குடிகாரனுக்காகப் பேச வந்திட்டாய்! என்ன செய்யிறது அவன்ரை முப்பத்திரண்டு பல்லையும் கொட்டியிருப்பன் செய் நன்றியை மறக்கக் கூடாது எண்டு விட்டனான்.''

மழுவராயரின் இரைச்சலுக்குப் பின் பேச்சில்லை.

வண்டி புத்தூருக்கு வந்து சேர நிலவு காலித்துவிட்டது.

வீடு அமைதியாகக் கிடந்தது! மகளின் முனகலோ பேரனின் சிணுங்கலோ எதுவும் கேட்கவில்லை.

இத்தினி பேரனுக்கு திரிச்சீலையில் கல்கண்டுத் தண்ணீரை ஊட்டிக் கொண்டிருந்தாள். நெய் விளக்குகள் விறாந்தையிலும் உள்கூடத்திலுமாக எரிந்துகொண்டிருந்தன

மனைவி நன்றாகத் தூங்கிப் போய்விட்டாள்.

மகள் அயர்ந்து போய்விட்டாள். வேப்பெண்ணை வாசனையும், சரக்குகளின் வாசனைகளோடு சேர்ந்து ஒருவித மொய்ப்பு சுவாசத்தை ஏற்படுத்தியது.

நான்கைந்து நாட்கள் கழிந்துபோய்விட்டன. ஆட்டிறச்சிப் பரியாரி சொன்னது போல ஆட்டிறச்சிக் கறியுடன் நாச்சியாருக்குப் பத்தியமும் கொடுக்கப்பட்டு விட்டது. ஆனாலும் அவளுக்குத் தெம்பு வரவில்லை.

ஊர் வழமைப்படி ஐந்தாவது நாள் வென்னீர் வார்க்கத் படவில்லை. ஏழாவது நாளுக்கான வெப்பம் பட்டைப் தண்ணீருக்கான அடுக்குகளும் நடக்கவில்லை. நாச்சியார் படுக்கையோடேயே கிடந்தாள். குழந்தைக்கு பனங்கட்டித் தண்ணீரும், கல்கண்டுத் தண்ணீரும் எத்தனை நாளைக்கு?

பரியாரியார் சொன்னது போல ஆண்வாடை இல்லாத பால்காரி வேண்டும்!

ஆண்வாடை படாத என்றால் .........

எப்படியும் முப்பத்தி ஒன்று அல்லாத நாற்பத்தி ஒன்று அதாவது பெற்றுத் துடக்கு கழிவு நடப்பதற்கு முன் ஆண் வாடைபடாமல்முடியாதுதான். ஆனால் அவர்கள் அறிந்த மட்டில் அந்தக் கட்டத்திற்கு உட்பட்டதாக யாரும் கிடைக்கவில்லை.

மாராய பகுதியில் தேடிப் பார்த்தாகிவிட்டது. இத்தினி மூலமாக கோவியப் பகுதியிலும் தேடிப் பார்த்தாகி

விட்டது! தச்சக் கடவையில், கொல்லன் கொள்ளை எல்லாம் தேடியாகிவிட்டது.

ம்.........ஒருத்தி...!

பண்டார பகுதியில் ஒருத்தி இருந்தாள். ஆனால் பண்டார பகுதியினர் அப்படிச் செய்வதை பண்டாரிகள் யாருமே விரும்பவில்லை. அதுவும் பூணூல் போட்ட பண்டார பகுதி அது.

மழுவராயர் அம்மாளிடம் இத்தினி ஒருநாள் கேட்டாள் "செல்லன் பெண்டில் செல்லியைப் புடிச்சால் என்னவாக்கும்?"

"ஆரையடி இத்தினி! பள்ளி செல்லியையோ...? கண்டறியாத கதை கதைக்கிறாய் என்ன!"

"ஏனாக்கும் கொட்டப்பெட்டி ஆறுமுகத்தார் பள்ளியின்ரை பால் குடிச்சுத்தானை வளர்ந்தவர்."

கொட்டைப் பெட்டி ஆறுமுகம் பள்ளியிட்டைப் பால் குடிச்சு வளந்தாரெண்டால்...... மழுவராயன்ரை பேரனுமோ, அப்பிடி வளரவேணும்? உந்தக் கதையை விடடி இத்தினி!"

"நான் சாணைப் பிள்ளையை ஆளாக்க வேணுமெண்டு சொன்னனாக்கும். சொல்லிறனெண்டு குறை நினைக்கப் பிடாதாக்கும், உங்கடை ஒண்டைவிட்ட அண்ணன்ரை மச்சான் அதுதான் விதானையார், இப்பவும் பள்ளி பறைச்சி எண்டு பார்க்காமல் பால்காறியளிட்டை பால் கறப்பிச்சுக் குடிக்கிறவராம். உடம்புக்கு நல்லதெண்டு."

"சீ! எடி இத்தினி விடடி அந்த நாய்மோன்ரை கதையை!"

"என்ன இத்தினியும் நீயும் கடிபடுகிறியள்! அவள் விதானையின்ரை உண்மையைச் சொன்னா உனக்கேன் கோவம் வருகுது? எனக்குத் தெரியும்; போன கிழமையும்

பறங்கித் தெருவிலை இருந்து ஒருத்தன் ஒரு போத்தில் பால் கொண்டுபோய் குடுத்திட்டுப் போனவனாம். சரி சரி அது கிடக்கட்டுக்கு இத்தினி, செல்லன் பெண்டிலிட்டை நீ கேட்டு ஒழுங்கு பண்ணு; மாதத்திலை ஏதும் அரைப்பறை ஒருபறை நெல்லை குடுப்பம். அவளும் கஷ்டப்படுகிறவள். சீவியமும் போகட்டன்.''

மழுவராயரின் இந்தப் பேச்சுக்குப் பின் அம்மாள் செல்லி மேல் பாய வில்லை. ஆனாலும் அவள் பக்குவமாகக் கேட்டாள், ''பள்ளியின்ரை துடக்குக் கழிவு முடியிறதுக் கிடையிலையோ ?'' என்று

''எடி, அப்பா சும்மா விசர்க் கதை கதையாதை கண்டியோ; அதுக்கென்ன அவள் துடக்கேடை பால் குடுத்தா? உன்ரை மோளுக்கும் துடக்கெண்டதை மறந்திட்டாய் போலை கிடக்கு. சரி துடக்குக் கழிவு மட்டும் பேரன் பனங்கட்டித் தண்ணியே குடிக்கிறது? அதைத்தான் விடன்; ஆண்வாடை படாத பால் வேணுமெண்டு பரியாரி சொல்லிப் போட்டார்... துடக்குக் கழிவு முடிஞ்சாப் போலை செல்லியை செல்லன் விடுவானே!''

கணவனின் பேச்சின் கருத்தையும் சுவையையும் அம்மாள் ஒருகணம் கிரகித்தாள். பின்பு அவருக்கு ஒரு போடு போடவேண்டுமென்ற எண்ணம் மனதில் படவே;

''காக்கைக்கு கனவிலும் பீ தின்னிற நினைப்புத்தான்! ஒவ்வொருதரும் நினைக்கிறது தன்னைப்போலைத்தான் மற்றவையழுமெண்டு'' அம்மாள் சொல்லி முடித்து விட்டாள்.

''இஞ்சை உனக்கு ஆகப்பகுடி கூடிப் போச்சுக் கண்டியோ!''

மழுவராயர் இப்படி எச்சரித்தார்.

# 7

செல்லனுக்கு செல்லி நயினார் வீட்டுக்குப் பால் கொடுக்கப் போவது சம்மதம் இல்லைதான். ஆனாலும் அவனால் பரிபூரண எதிர்ப்பைக் காட்ட முடியவில்லை.

சரியாகத் தீட்டுத் துடக்கு ஆறிப் போவதற்கிடையில செல்லி நயினார் வீட்டுக்கு பேரன் நயினாருக்குப் பால் கொடுக்கப் போய்விட்டாள்.

ஒழுங்குமுறை இப்படித்தான்.

காலைப் பொழுது உதயத்திற்கு ஒரு தடவை.

பதினொரு மணிக்கு ஒரு தடவை.

மூன்று மணிக்கு ஒரு தடவை.

இரவு எட்டு மணிவரை ஒரு தடவை.

காலை செல்லி வரும்போது இத்தினி இளம் சுடு தண்ணீரைத் தயாராக வைத்திருப்பாள். பின் விறாந்தைக தாழ்வாரத்தில் செல்லிக்குக் குறுக்குக் கட்டை அவிழ்த்து முலைகளை ஒவ்வொன்றாக ஏந்திப் பிடிக்க இத்தினி சுடு தண்ணீரைப் பக்குவமாக வார்ப்பாள். செல்லி முலைக் காம்பை உரசி சுத்தமாகவும் பரவலாகவும் கழுவிக் கொள்வாள். அத்தோடு அவளின் சொந்த குத்தியன் சூப்பிய எச்சிற் பசை போய்விடும்.

செல்லி பேரன் நயினாருக்குப் பால் ஊட்டுவாள். தன் பிள்ளைக்கென்று ஒழித்து வைக்காமலேயே, வஞ்சகம் இல்லாமல் ஊட்டுவாள். அவள் திரும்பிப் போகும்போது முலைகளைச் சுத்தம் செய்வதில்லை. பேரன் நயினார் சூப்பிய எச்சில் பசையை செல்லியின் குத்தியன் சூப்பலாம்.

வேளை தவறாமல் இப்படியே... நாட்கள் ஓடி மறைந்துவிட்டன. அன்று நாச்சியாருக்குத் துடக்குக் கழிவு நாள். ஆனாலும் அவளால் தோய்ந்து குளிக்க முடியவில்லை. அவள் பாயோடுதான்.

மறுநாள் இரண்டுமணி பால் கொடுப்பதற்காக செல்லி வந்தபோது தோய்ந்துவிட்ட கூந்தலை தோகைபோல விரித்து விட்டுக் கொண்டு வந்து சேர்ந்தாள்.

''என்னடி செல்லி இண்டைக்குத் துடக்குக் கழிவே உனக்கு?'' இப்படிப் பெரியம்மாள் கேட்டபோது செல்லி வெட்கத்தோடு சிரித்துக் கொண்டாள். அது ஒரு பொல்லாத மோகினிச் சிரிப்பு!

செல்லி பால் ஊட்டிவிட்டுப் போனபோது ஐயாவும், அம்மாளும், இத்தினியும் கூடிப் பேசிக்கொண்டனர்.

இரவு செல்லி வந்தாள்!

வழமைப்படி எல்லாம் முடிந்து அவள் வீடு திரும்ப எத்தனித்தபோது... பெரியம்மாள் ஒரு சின்னஞ்சிறிய தாம்பாளத்தில் பச்சைக் கற்பூரத்தைக் குவியலாக வைத்துக் கொழுத்திக் கொண்டே செல்லியின் முன்னால் நின்றாள். பின்னால் இத்தினி நின்றாள்.

"செல்லி! கற்பூரத்தை அடித்துச் சத்தியம் செய்து போட்டுப் போ!" என்றாள் அம்மாள். செல்லிக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ நகையோ நட்டோ வீட்டில் களவு போயிருக்கவேண்டும். அதனால்தான் தன்னை சத்தியம் பண்ணச் சொல்லிக் கேக்கினம் போலை... என்று செல்லி ஏங்கிப் போனாள்.

"இத்தினி சொல்லனடி அவளுக்கு." என்று அம்மாள் கட்டளை போட்டாள், செல்லி நடுங்கியே போய்விட்டாள்! இத்தினியால் பேசவே முடியவில்லை.

"எடி, இத்தினி கற்பூரம் எரிஞ்சு முடியப் போகுதடி சத்தியத்தைக் கேளனடி கெதியா!" அம்மாள் அவசரப் படுத்தினாள்.

"செல்லி! ஆம்பிளையளோடை தொடுப்பு வைக்காத-வளின்ரை பால் ஆறுமாதத்திற்கு சின்ன நயினாருக்குக் குடுக்கவேணுமெண்டு அண்டைக்கு வந்த பரியாரியார் சொல்லிப் போட்டார். அதுதான்...செல்லி..."

செல்லி மரத்துப் போய் நின்றாள்!

அவள் உடம்பெல்லாம் நடுங்கி வியர்த்தது.

"எடி, செல்லி கற்பூரம் முடியப் போகுது..." என்றாள் அம்மாள்.

இத்தினி அவள் கரங்கள் இரண்டையும் பிடித்து அந்தக் கரங்களாலேயே கற்பூரத்தை அணைத்துவிட்டாள்!

''சன்னிதியானே!'' செல்லி இதை மட்டும் தான் சொன்னாள்.

''செல்லி! சன்னிதியானுக்கு மேலாலை சத்தியம் செய்து போட்டாள்; மாறமாட்டாள்,'' என்ற மழுவராயரின் குரல் விறாந்தையில் இருந்து கேட்டது.

செல்லி வீடு வந்து சேர ஒன்பதுக்கு மேலாகிவிட்டது. என்றுமில்லாது அவள் நெஞ்சுக்குள் இடி ஏறுகள் கேட்டன.

கொட்டில் வாசலுக்கு முன்னால் மண்சட்டி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மூத்தவன் கந்தன் தூங்கிப் போய் விட்டான். இளையவன் முகட்டில் தொங்கிய ஏணைக்குள் கால்கள் இரண்டும் வெளியே தெரிய அசந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

பேத்திக் கிழவி முன்தாணைச் சேலையை பரவி அதன் மேல் சரிந்துவிட்டாள். அவள் அன்று காலைதான் மயிலங் காட்டில் இருந்து செல்லிக்குத் தோய வார்த்து துடக்குக் கழிக்க வந்திருந்தாள்.

செல்லன் வீட்டில் இல்லை.

அவன் இன்னும் வரவில்லை.

சிலவேளை அவன் வந்து சேர இரவு ஒண்டு பாதிக்கு மேலாகிவிடுவதும் உண்டு. இருந்தாலும் வீட்டில் இன்று நல்ல காரியம் நடந்திருக்கிறது. அவன் இன்று வீட்டோடு இருந்திருக்க வேண்டியவன். ஆனாலும் அவன் இன்னும் வந்து சேரவில்லை.

''பேத்தி, சோறு திண்டிட்டியே?'' என்று கேட்டுக் கொண்டு அவள் வந்தாள்.

''நீயும் வரட்டுக்கு, அவனும் வரட்டுக்கு தின்பம்!'' என்று கூறிக்கொண்டே பேத்திக் கிழவி அருண்டாள்.

"அந்தாள் எப்ப வரப்போகுது நீ தின்னணை!" என்று கூறிக்கொண்டே செல்லி கரப்பைத் திறந்தாள்.

"நீயும் பச்சை உடம்புக்காரி கெதியாத் திண்டிட்டு படன்புள்ளை." என்று கூறிக்கொண்டே கிழவி குசினி என்ற அந்தக் கரப்புக் கூட்டுக்கு முன் வந்து விட்டாள்.

இருவரும் சாப்பிட்டு முடிய வெகுநேரம் ஆகவில்லை. பின்பு ஏணைக்குள் கிடந்த இளையவனைத் தூக்கித் தடுக்கில் கிடத்தினாள்.

ஒரு பக்கத்தே கந்தன்.

மறுபக்கத்தே இளையவன். செல்லி நட்ட நடுவில் கிடந்து கொண்டாள்.

பேத்திக் கிழவியும் சுங்கானைப் பற்ற வைத்து நாலு இழுவை இழுத்து சாப்பிட்ட பொச்சத்தைத் தீர்த்துக் கொண்டு சுருண்டு போய்விட்டாள்.

மண்சட்டி விளக்கு கொட்டில் படலைப் பக்கமாக எரிந்து கொண்டுதான் இருந்தது.

அது செல்லனின் வரவுக்காகக் காத்திருக்கிறது.

வெகுநேரம் கழித்து செல்லன் வந்து சேர்ந்துவிட்டான்.

"பித்தம் தெளிய மருந்தொன்று இருக்குதாம்" என்ற நந்தனார் பாட்டின் முதல் அடியை முணு முணுத்துக் கொண்டே அவன் வந்து சேர்ந்தான்.

செல்லனுக்கு இலேசாக சங்கீதம் தெரியும். சமீபத்தில் அவன் காத்தான் கூத்தில் சாராயப் பூதியக்கைக்கு வேஷம் போட்டுப் படித்திருந்தான். அந்த வேளைதான் பித்தம் தெளிய மருந்தொன்று இருக்குது... என்ற நந்தனார் பாட்டை மழுவராயர் வீட்டுக் கிராமப் போனில் கேட்டிருந்தான்.

காத்தான் கூத்தில் சாகாயப்பூதி அக்கைக்கு நடித்த போது அண்ணாவிவரணிச் செல்லரினால் சொல்லிக் கொடுக்காத பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குதாம்... சாராயப் பூதியிடம்'' என்று தன்னை அறியாமலேயே இராகத்துடன் பாடித் தீர்த்துவிட்டான். வந்ததே அவனுக்கு மவுசு! அன்றிலிருந்து தன்பாட்டில் இந்தப் பாட்டை முணு முணுப்பது அவனுக்கு வழக்கமாகிவிட்டது.

ஆனால் அவன் இப்போது சாராயப் பூதியிடம் என்று பாடவில்லை. ''பேரின்பம் ஒன்றுள்ளே'' என்று பேரின் பத்தில் தான் பாடுகிறான்.

அவனின் குரல் கேட்டதும் படக்கென்று எழுந்து அவனுக்கு உணவு பரிமாறும் வழக்கமுடைய செல்லி இன்று எழுந்திருக்கவில்லை. அவள் தூங்கிவிடவும் இல்லை. ஆனாலும் அவளால் எழுந்திருக்க முடியவில்லை.

கண்களை இறுக, இறுக மூடிக் கொண்டாள். இலே சாகக் குறட்டை விடவும் முற்பட்டாள்.

''பாவம் அவள் பாவியும் துடக்குக் கழிய தோஞ்ச களை!'' என்று செல்லன் அவளுக்காகப் பச்சாதாபப் பட்டான்.

கரப்பைத் திறந்து தன் பாட்டிலேயே சோற்றை செல்லிக்காகக் சாச்சப்பட்ட காயம் பிரட்டிய கோழிக்கறிச் சட்டிக்குள் போட்டுப் பிரட்டி கிழங்குக் கறியையும் போட்டுச் சாப்பிட்டான்.

காயக்கறி வாய்க்கு இதமாகவே இருந்தது.

''இப்பிடி இது ருசியெண்டதாலை தான் பிள்ளை வேண்டாம், வேண்டாம் என்று போட்டு பிறகும் பிள்ளை பெறுகிறாளவை.'' என்று மெதுவாகக் கூறி மனதிற்குள் சிரித்துக்கொண்டே செல்லன் உணவருந்தி முடித்துக்கொண்டு, தட்டிக்குள் இருந்த புகை இலைக்

கீறல் ஒன்றை எடுத்துச் சுற்றிப் பற்ற வைத்துக்கொண்டே ஓலைப் பாயை விரித்துப் படுத்துக் கொள்வதற்கு இடையில் செல்லி கூந்தலைப் பரப்பிவிட்டுக் கொண்டு படுத்திருப்பதை ஓரக்கண்ணால் பார்த்து ரசித்தபடி விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக்கொண்டான்.

படுத்தவன் படுத்தவன்தான்.

வாயில் இருந்து தவறி விழுந்த சுருட்டு நெருப்புப் பரவி விடாமல் மெதுவாக வந்து அதைத் தூரத் தள்ளிவிட்டு ஓசைப்படாமல் செல்லி மறுபடியும் படுத்துவிட்டாள்.

வாயில் இருந்து சுருட்டு வீழ்ந்ததோ செல்லி வந்து அதைத் தூர அகற்றி விட்டதோ எதுவும் செல்லனுக்குத் தெரியாது.

அவன் எந்தவித அலட்சியமும் இன்றிமெய் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

செல்லிக்கோ .....

அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்துவிட்டாளே... அவளுக்குப் பயமாக இருந்தது.

நன்றாக விடிவதற்கிடையில் செல்லன் எழுந்து வேலைக்குச் சென்றுவிட்டான். நிலாவரைக் கேணிக்கு மேற்காலுள்ள மழுவராயரின் கல்லுப்பூமியில் கல்லுடைக்கும் வேலை. அன்று காலைப்பொழுது உதயத்திற்கிடையில் வேலை தொடங்க வேண்டுமென்று சாஸ்திரி சொல்லி இருந்ததால் நான்கு மணிக்கெல்லாம் எழுந்து செல்லன் போய்விட்டான். செல்லன் எழுந்து செல்லும் போதுதான் செல்லி அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

மழுவராயருக்கு செல்லனின் மேல்தான் வேலைகளைப் பொறுத்தவரை நம்பிக்கை. அதனால்தான் செல்லியின் துடக்குக் கழிவு நடந்த மறுநாளே செல்லனைக் கொண்டே

முதலாவது கொந்தாலிக் கொத்தைப் போட்டுவிட வேண்டு மென்ற ஆசை! தடக்கு வீட்டுக்காரனைக் கொண்டு வேலையைத் துடக்கி வைக்கக்கூடாது என்றுதான் அவர் இவ்வளவு நாளும் காத்திருந்தார்.

செல்லி வெகுநேரம் வரை நித்திரை செய்தாள். அவளால் உரிய நேரத்தில் எழுந்திருக்க முடியவில்லை. துடித்துப் பதைத்து அவள் எழுந்திருந்தபோது... பொழுது சற்று உயரத்திற்கு வந்துவிட்டது.

இளையவனுக்குப் பால் ஊட்டாமலேயே நயினார் வீட்டுக்கு ஓடினாள். "என்னடி பள்ளி இவ்வளவு நேரமும் செய்தனீ?" என்று கேட்டுக்கொண்டே பெரிய நயினாத்தி செல்லியின் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை கண்களால் அளந்தாள்.

அவளின் அந்த அளப்பு செல்லியை வேகவைத்தது. அவள் வாயடைத்துப் போயே நின்றுவிட்டாள். இத்தினி வழமைபோல சுடு தண்ணீருடன் வந்தாள்.

"பொறடி இத்தினி இவளை ஒரு கதை கேக்கவேணும். இவள் முழுசிறதைப் பார்த்தா..." என்று பெரிய நயினாத்தி இழுத்த போதே அவள் என்ன எண்ணுகிறாள் என்று இத்தினிக்கு விளங்கிவிட்டது.

செல்லிக்கு அது புரியாமலில்லை.

"சன்னதியானாணை அப்பிடி ஒண்டும் இல்லை நாச்சியார்" செல்லி இந்தச் சொல்லின் மூலம் தன்னைச் சத்தியத்திற்கு விசுவாசமானவள் ஆக்கிவிட்டாள்.

பெரிய நயினாத்தி உள்ளே போய்விட்டாள்.

பேரன் நயினார் கதறியது கேட்டது. இத்தினி வழமை போல செல்லியின் முலைகளுக்கு சுடுதண்ணீர் ஊற்றினாள்.

செல்லியும் முலைகளைக் கழுவிக்கொண்டு பின் விறாந்தை ஒடுக்குக்குள் போய்விட்டாள்.

செல்லி வீட்டுக்கு வந்தபோது பேத்திக்கிழவி ஊருக்குப் புறப்படத் தயாராக நின்றாள்.

"பேத்தி ஐஞ்சாறு நாளைக்கு நிண்டு போவனணை!"

செல்லி பேத்தியைக் கேட்டாள். "எடி, புள்ளை துடக்கு கழிவும் முடிஞ்சுது. நான் இனி நிக்கிறது சரியில்லை. கொட்டிலுக்கை ஒண்டடி மண்டடியாப் படுத்தெழும்ப முடியுமே புள்ளை?

கிழவி கேட்டது பொல்லாத கேள்விதான். பெரிய நயினாத்தி கண்களால் அளந்த அளப்பும் இதேபோல்தான்.

"பேத்தி! எனக்கு இன்னும் தேகம் சரிவரேல்லை. அஞ்சுபத்து நாளைக்குப் பேந்தும் காயம் தின்ன வேணும் போலை கிடக்கு. நாப்பத்தொண்டு மட்டும் உதவிக்கு நிண்டிட்டுப் போனலை!"

செல்லியும் நாசூக்காகப் பதில் சொல்லி விட்டாள்.

தன் உடம்பு தேறவில்லை என்பதனால் அல்ல செல்லன் தனக்குக் கிட்ட வராமல் ஒரு காவல் அவளுக்கு வேண்டிக் கிடந்தது. அதை வேறு விதத்தில் சொல்லி அவள் வெற்றி கண்டுவிட்டாள்.

கிழவி குறுநாட்டுக் கொய்யகச் சேலையை அவிழ்த்து கொடியில் போட்டுவிட்டு பிரயாணத்தை நிறுத்திக் கொண்டாள். செல்லி பெருமூச்சுவிட்டு ஓயும் முன் செல்லன் வந்து சேர்ந்தான். நாளுக்குக் கொந்தாலி போட்டுக் கல்லை உடைப்பைத் தொடக்கிவிட்டு அவன் செல்வியைப் பார்க்க சோட்டையில் வந்திருந்தான்.

"ஏன் பேத்தி நேற்று முழுக்க விடியப் புறம் போயிடு வன் எண்டு கத்திக்கொண்டு இருந்த நீ இன்னும் போகேல்லையே!" என்று கேட்டான்.

"அவளுக்கு இன்னும் சரியான சுகமில்லை போலை கிடக்காம் மோனை. நாப்பத்தொண்டு மட்டும் துடக்குக் கழியாது போலை கிடக்கு. அதுதான் மறிச்சுப் போட்டாள்"

பேத்திக் கிழவி பதில் சொன்னாள்.

செல்லனுக்கு இதனால் எந்தத் தாக்கமும் ஏற்பட வில்லை.

"பின்னை நில்லனை, அவளும் பச்சை உடம்புக்காரிக்கு உதவியா இருக்கும்." என்று அவன் அப்பாவித்தன மாகப் பேசினான்.

செல்லிக்கு மனதில் இருந்த சுமை சற்றுத் தளர்ந்தது போல இருந்தது.

அவள் பழம் சோற்றுப் பானைக்குள் தேங்காய்ப் பாலைப் பிழிந்துவிட்டு வெங்காயம் மிளகாயையும் கயக்கிச் சேர்த்து, உப்புவிட்டு பினாட்டுத் தட்டுடன் செல்லனுக்குப் பரீவோடு கொடுத்தாள்.

"அப்பு " என்று கொண்டே கந்தனும் அம்மணமாக ஓடி வந்தான்.

"ஏனப்பா... இவன்ரை கச்சை எங்கை?"

"ராத்திரி நித்திரையிலை கச்சைச் சீலை எல்லாம் மூத்திரம் பெஞ்சு போட்டான். தோச்சுப் போட்டுக் கிடக்கு." என்று செல்லி பதில் சொன்னாள்.

செல்லன் மறுபடியும் கல்லடிக்கப் போய்விட்டான்.

பேத்திக் கிழவி நான்கைந்து நாட்களுக்கு செல்லிக்கு காயச் சரக்கு சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று தோன்றியது. அவள் அடுக்குப் பெட்டியைத் திறந்து பார்த்துவிட்டு, "இஞ்சியும் உள்ளிப்பூடும் துண்டா இல்லயடி புள்ளை." என்று குறைபட்டுக் கொண்டாள்.

செல்லிக்கு மனதிற்குள் சிரிப்பு வந்தது. ஆனாலும் பிடி கொடுக்காமல்" "நான் நாச்சியார் வீட்டிலை வாங்கி

வாறன்'' என்று கூறிக்கொண்டே நயினாத்தி வீட்டுப்பக்கம் போய்விட்டாள். அடுத்த வேளை பால் கொடுப்புக்கு நேரம் வந்துவிட்டது.

பேத்திக் கிழவி உலையை மூட்டிக் கொண்டிருந்தாள் சற்று வேளைக்குப் பின் செல்லி வந்து சேர்ந்தாள். முன்தானைச் சேலைக்குள் அரிசியும் காய்பிஞ்சுமாக வந்து சேர்ந்தவள் அத்துடன் ஒரு புதிய செய்தியையும் சுமந்து வந்தாள்.

சின்ன நாச்சியாருக்கு இரவு இலேசாக பேய்க்குறை ஏற்பட்டதாகவும் தான் அங்கு போனபோது அவள் படுக்கையில் எழுந்திருந்து தலையை சுழற்றிச் சுழற்றி ஆடியதாகவும் அவள் சொன்னாள்.

அத்துடன் இராப்போலத்தான் அவளின் கணவன் கொழுந்தர் நயினார் பயணத்திலிருந்து வந்ததாகவும் அவர் வந்த கையோடேயே அவளுக்கு ஆட்டம் தொடங்கி விட்டதாகவும் சொன்னாள்.

''ஓமெடி புள்ளை! இருக்குமடி அவரோடை பேயைப் பிச்சையைத் தொத்திக்கொண்டு வந்து அது பச்சைப் புள்ளைக் காரியைப்புடிச்சுப் போட்டுது போலை கிடக்கு!'' என்று கிழவி அனுதாபப் பட்டுக் கொண்டாள்.

இரண்டு நாட்களுக்கிடையில் சின்ன நாச்சியாருக்குப் பேய் பிடித்த செய்தி ஊரில் பரவிவிட்டது.

மழுவராயரும் அம்மாளும் பலவிதத்தில் யோசித்துப் பார்த்துவிட்டனர். மகளுக்கு பிடித்த பேயை மாந்திரீகக் காரனைக் கொண்டுதான் அகற்றவேண்டும். அதை அகற்றி விட்டால மகளுக்குச் சகல நோயும் தீர்ந்து போய்விடும், என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்.

தகுதியான மாந்திரீகக்காரனைத் தேடிப் பிடிக்க வேண்டும். பல மாந்திரீகக்காரர்களின் பெயர்கள் ஆலோசனைக்கு வந்துபோயின. இறுதியில் துரும்பன் கயித்தானின்

பெயர்தான் தெரிவு செய்யப்பட்டது. கயித்தானைக் கொண்டு மாந்திரீகம் செய்வதில் பல சிக்கல்கள் இருந்தன. அவன் பஞ்சமருக்கு சீலை வெளுக்கும் கட்டாடிக் குலத்தைச் சேர்ந்தவன். அவன் நயினார் வளவு எல்லைக்குள் காலடி எடுத்து வைக்கக்கூடாதவன், என்பது ஒன்று. அதைவிடவும் அவனின் சாதியினர் வீதிகளில் நடமாடும்போது தாங்கள் வருவதை மற்றவர்களுக்கு அறிவிக்கும் தோரணையில் காவோலைத்துண்டு ஒன்றினை நிலத்தில் அரையவிட்டு இழுத்துவரவேண்டும், அதுவும் குறிக்கப்பட்ட வீதிகளைவிட வேறு வீதிகளில் குடியிருப்பவர்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

இந்தச் சிக்கல்களுக்கிடையில் கயித்தானைக் கொண்டு கழிப்புக் கழிப்பதென்பது மழுவராயர் குடும்பத்திற்குக் கஷ்டமாகவே இருந்தது.

ஒருவிதத்தில் கயித்தானுக்கு ஊரில் பயந்துகொண்டு இருந்தவர்கள் பலர். பெல்லி சூனியம் செய்து கொள்ளும் வல்லமை படைத்தவன் என்பதால்தான் அந்தப் பயப்!

ஊத்தை குடியன் அவனுக்கு வாலாயமான தெய்வமாம்! அதை எந்த வேளையும் அவன் ஏவிவிட்டு வேண்டியதைச் சாதித்துக் கொள்வானாம். பல இடங்களில் அவனின் வசிய மாந்தரீக வேலையால் ஆண், பெண் உறவுகளும் கல்யாணங்களும் ஒப்பேறி இருப்பதாக பலர் நிரைபடுத்திச் சொல்வர்.

சாதி வழக்கப்படி மாந்திரீகத்திற்குச் செல்லும்போது காவோலை பிடித்து இழுத்துச் செல்வதற்கு அவன் சம்மதிப்பதில்லை. எந்தப் பெரிய மனிதராக இருந்தாலும், காவோலை இழுக்கும் நிபந்தனையை தூக்கி எறிந்தே பேசுவான்,

செல்லனின் தகப்பனுடன் கயித்தானுக்கு நெருங்கிய நட்பு! அவன் உயிரோடு இருந்திருந்தால் மழுவராயர்

இப்படியெல்லாம் யோசிக்க வேண்டியதில்லை. அவன்தான் செத்துவிட்டானே!

மழுவராயர் செல்லனிடம் இலேசாகப் பேசினார் கயித்தானைப் பிடித்து மகளுக்குக் கழிப்புக் கழிக்க செல்லனைக் கயித்தானிடம் அனுப்பி வைத்தார்.

செல்லன் அச்சுவேலிச் சந்தைச் சந்தி றோட்டால் நடந்து... கல்லுக் கலட்டிக்குள் குடியிருந்த கயித்தானைச் சந்திக்கப் போயிருந்த போது இருட்டிப் போய்விட்டது.

அப்போது கயித்தான் உடுக்கை அடித்து ஒரு தேவதையை வாலாயம் பண்ணுவதற்கு ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தான்.

கயித்தானின் வாலாயத் தாலாட்டு முடியும்வரை காத்திருந்து, அது முடிந்ததும் செல்லன் விஷயத்துக்கு வந்துவிட்டான். செல்லனின் அப்பனுடன் கொண்டிருந்த நல்லுறவால் அவன் செல்லனுக்கு மதிப்புக் கொடுத்துப் பேசினான்.

மழுவராயர் வீட்டுப் பேச்சுத் தொடங்கியதும் படக் கென்று கயித்தான் மறுப்புத் தெரிவித்து விட்டான்.

மழுவராயர் வீட்டுச் சாதி வழமைப்படி காவோலை இழுத்துத்தான் வரவேண்டும். எனவே அப்படித் தன்னால் வரமுடியாது என்ற தோரணையில் அவன் மறுத்தே விட்டான்.

மழுவராயர் வீட்டுக் குடும்பத்தின் வல்லமைகளைக் கூறி கதையோடு கதையாக அவர்களைப் பகைத்துக் கொள்வது நல்லதல்ல என்ற விதத்தில் செல்லன் பேசிப் பார்த்தான்.

"தம்பி! செல்லன், நீயும் சேர்ந்து கயித்தானை வெருட்டப் பாக்கிறாய் என்ன? துரும்பன் கயித்தானை

தெரிஞ்சுகொண்டு இப்பிடிக் கதைக்கிறாய்... துப்பல் துப்பி வத்திறதுக்கிடையிலை கும்பத்திலை இருந்துகொண்டு ஊத்தை குடியனை அனுப்பி ஆளை விழுத்திறன் பாக்கிறியே!'' என்று கயித்தான் சபதம் செய்யும் தோரணையில் பேசிய பேச்சு செல்லனையே நடுங்க வைத்துவிட்டது.

செல்லன் இதற்குமேல் பேசவில்லை. சரியில்லாத நேரத்தில் வந்து விட்டதாக நினைத்துக்கொண்டு அவன் திரும்பிவிட்டான், மனதிற்குள் அவனுக்கு எரிச்சலாகவும் இருந்தது. தனது அப்பனின் சினேகிதத்தைக்கூட கயித்தான் பார்க்காதது அவனை எரிச்சல் கொள்ள வைத்தது! இருந்தும் என்ன செய்வது நயினார் வீட்டுக் காரியத்தை ஒப்பேற்றுவதற்குக் கயித்தானைத் தவிர அவனுக்கு வேறு ஆள் இருப்பதாகத் தெரியவில்லை,

நேராக மழுவராயர் நயினாரிடம் வந்தார்,

''என்ன செல்லன், துரும்பன் கயித்தானை அடுக்குப் பண்ணிப் போட்டியே?'' என்று நயினார் செல்லனைக் கண்டதும் கேட்டார்.

செல்லனுக்கு உடனே பதில் சொல்ல வரவில்லை.

''இல்லையாக்கும் இல்லையாக்கும்...'' என்று அவன் இழுத்தான்.

''என்னடா அது! இல்லையாக்கும்? அவன்என்னவாம்?'' என்று அவர் அவசரப்படுத்தினார்.

''அவன் நயினார் வீட்டை வரமாட்டன் எண்டிட்டான். வந்தா காவோலை கட்டிக்கொண்டு வரச்சொல்லுவியளாம். அதுதான் மாட்டன் எண்டிட்டான்.''

முக்கித் தக்கி சொல்லி முடித்தான்.

என்ன காவோலை கட்டித் துரும்பன் வரமாட்டானாமோ...? துரும்பப் பிள்ளைக்கு அப்பிடி வந்திட்டுதோ... அவன் கலட்டிக்கை குடி இருந்திடுவானாமோ?''

நயினாரின் இரைச்சல் உள்வீடு வரை கேட்டது. பெரிய நயினாத்தி வெளியே வந்தாள். "ஏனப்பா பிலத்துக் கத்திறியள்? வெளியிலை தெரிஞ்சா வில்லங்கமெல்லே! அவன் உடன் பெல்லி விடுவான் எண்டெல்லே கதை! தந்திரமாக் காரியத்தை முடிக்கிறதை விட்டிட்டு சும்மா கத்திறதே!" என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

"பெரிய நயினாத்தி சொல்லுறதுதான் சரியாக்கும். சின்ன நயினாத்தியின்ரை வருத்தத்தை மாத்திறதாக்கும் தேவை!" இப்படிச் செல்லனும் பெரிய நயினாத்திக்கு ஒத்து ஊதினான்.

நயினார் அடங்கிவிட்டார்.

பின்பு கயித்தானை எப்படியும் கொண்டு வருவதற்கான தந்திர ஆலோசனைகள் நடந்தன. "பிள்ளையார் கோவிலடி ஒழுங்கை வரைக்கும் வயல் காணியள்தானே. அவன் வயலுக்காலை வரட்டும். வேணுமெண்டா... எங்கடை வளவுக்கை காவோலையை விடட்டும். பின் வளவு மாட்டுக் கொட்டகைக்கை கும்பத்தை வைச்சு அவன் பேயை ஆட்டட்டன்." என்ற ஒரு ஆலோவணையை நயினாத்தி சொன்னாள்.

"உது சரிவராதாக்கும். கொஞ்ச இடமெண்டாலும் அவன் காவோலையை இழுத்துவரச் சம்மதியான். ஒரு மாதிரி அந்தப் பக்கத்து நயினாரவையிட்டைச் சொல்லி காவோலையை இழுக்காமல் அவனை இழுத்து வாறதுதான் சரியெண்டு எனக்குப் படுகுதாக்கும்".

செல்லன் தன் அபிப்பிராயத்தை முடிவாகச் சொன்ன போது ஐயாவும் தலையசைத்து அதற்கு ஒப்புக்கொண்டு "பிள்ளையார் கோவிலடியாரோடை கதைக்கவேணும். பல்லக்கு முதளியாரோடை கதைச்சுப் பாப்பம்." என்று கூறிக்கொண்டே எழுந்திருந்தார். உள்ளே மூச்சிழுக்கும் ஆரவாரம் கேட்டது. சின்ன நயினாத்திக்கு ஆட்டம் தொடங்கிவிட்டது! இத்தினி அந்த ஆட்டத்தைக் கட்டுப் படுத்துவது சந்தடிமூலம் கேட்டது.

# 8

விடிந்ததும் விடியாததுமாக செல்லன் கயித்தானிடம் வந்துவிட்டான்!

கயித்தானிடம் அவன் சமரசம் பேச வரவில்லை. கயித்தானின் நிபந்தனையை நயினார் ஏற்றுக் கொண்டதைத்தான் சொல்ல வந்தான்.

சின்ன நயினாத்தியை ஒரு தடவை பார்த்துவிட்டுத்தான் தனது முடிவை சொல்வதாக கயித்தான் சொன்னான்.

அதன்படி இரவு ஏழு மணிக்கு மேல் செல்லன் வந்து கயித்தானை அழைத்துச் செல்வதாக ஏற்பாடாயிற்று.

ஏழு மணிக்கு முன் செல்லன் வந்து காத்திருந்து கயித்தானை அழைத்துக்கொண்டு பெரிய நயினார் கொல்லைப்புற மாட்டுக் கொட்டிலுக்குள் வந்து சேர இரவு ஒன்பது மணிக்குமேல் ஆகிவிட்டது.

மாட்டுக் கொட்டிலுக்குள் நெய் விளக்குகள் எரிந்தன,

சிறியதொரு கும்பத்தைக் கயித்தான் வைத்தான். சின்ன நயினாத்தியை இத்தினி தாங்கி வந்து கும்பத்துக்கு முன்னால் இருக்க வைத்தாள்.

சற்றுவேளை வாய்க்குள் முணுமுணுத்து, திருநீற்றை அம்மாள் தலையில் தூவி குங்குலியப் புகையை அம்மாள் முகத்துக்கு நேரே பிடித்து சுவாசிக்கக் கொடுத்துவிட்டு கயித்தான் மௌனமாகக் கண்மூடி இருந்தான்.

கொட்டகையின் பின்புறம் கட்டி இருந்த வெள்ளைக் கன்னி நாகு நான்கைந்து தடவைகள் கத்தியது. எல்லோர் கவனமும் அந்தப்பக்கம் திரும்பியது.

கயித்தானின் வாலாயத் தெய்வமான ஊத்தைகுடியன் வருவதாக ஒருவருக்கொருவர் குசுகுசுத்தனர்.

கயித்தான் வேப்பம் பத்தியால் சின்ன நயினாத்தியின் உடல் பூராவும் உரசிக் கொண்டிருந்தான்.

சாம்பிராணிப்புகை மேலெழுந்தது. சின்ன நயினாத்தி யின் தலை இலேசாக ஆடத்தொடங்கியது: சற்று பலத்தது!

கயித்தான் தன் உச்சாடனத்தை அத்துடன் நிறுத்திக் கொண்டான்.

நயினாத்தியைப் பிடித்திருக்கும் தேவதை தனக்கு வளைந்து கொடுக்குமா? என்பதற்கான வெள்ளோட்டம் நடந்து முடிந்தது.

சின்ன நயினாத்தியை அழைத்துச் செல்லும்படி கூறவே இத்தினி அவளை அழைத்துச் சென்றுவிட்டாள்.

''உத்திரமாகாளிதான் பூமரத்தை பிடிச்சிருக்கு. படிமாத்தானை அகத்தித் தாறன்!'' என்று கயித்தான் கூறினான்.

கயித்தானின் வாய்ப்பிறப்பையே அறிந்துவிடத் துடித்துக் கொண்டிருந்தவர்களுக்கு இது தேனாக இருந்தது,

''காசு பணத்தைப் பாக்காதை; கயித்தான் பிள்ளையை சுகப்படுத்திப்போட்டு, நீ வேண்டிறவை வேண்டு,'' என்று தனது கயலஞ்சித் தனத்தை 'பிள்ளையை சுகப்படுத்திப் போட்டு—,' என்ற சொல்லுக்குள் அடக்கி வெளியிட்டார் மழுவராயர்.

கயித்தான் மழுவராயரைப் பற்றி நன்றாக அறிந்தவன். ஐயாவின் பேச்சுக்கு அவன் நளினமாகத் தலையசைத்தான்.

வெளியே நின்ற செல்லன் ''நயினார் இப்பிடி வர'' என்று அவரை அழைத்தான்.

அவர் செல்லனிடம் வந்தார்.

''கயித்தானுக்கு கைவியளமாய் ஏதும் குடுக்க வேணுமாக்கும், பாத்துப் பாராமல் குடுக்கவாக்கும். அப்பத்தான் மனம் வைச்சு வேலை நடக்குமாக்கும்!'' என்று செல்லன் சற்று எட்டி நின்று தலையை தூர நீட்டி அவர் காதுக்குள் மெதுவாகச் சொன்னான்.

எதையோ நினைத்துக்கொண்டு வீட்டின் பின்கதவால் கூடத்திற்குள் சென்ற நயினார் பத்தாயத்தைத் திறந்து கைவிட்டுப் பணத்தைக் கிள்ளி எடுத்து எண்ணினார். ஆறு பணம் சரியாக இருந்தது. அது போதும் என்று மனது கூறியது.

வெளியே வந்தவர் அதை சற்று உயர்த்திப் பிடிக்க கயித்தான் அரை அடி தாழ்த்திக் கையைப் பிடிக்க நயினார் அந்த ஆறு பணத்தை அவன் கையில் போட்டார்.

கைவியளம் முடிந்தது.

"அடுத்த வெள்ளிக்கிழமை கழிப்பு செய்யவேணும்.'' என்று கயித்தான் சொல்லிவிட்டு கழிப்புக்கு வேண்டிய பொருட்களைச் சொல்லத் தொடங்கினான்,

மூன்று வெஃளைச் சாவலில் இருந்து அரிசி, தேங்காய், நெல்லுப்பொரி, ஆலம் சுள்ளி, பச்சைக் கற்பூரம, சாம்பிராணி, வெற்றிலை, வாழைப்பழம், நவதானியம், தேசிக்காய், வேப்பம்பத்தி, வாழைக்குட்டி... குங்குலியம் என்று வளர்த்து, வேறும் சிறு பொருட்கள் உள்ளடக்கி ஒன்பது சிரட்டை தென்னங்கள்ளு வரையில் வந்து முடிந்தது.

கயித்தானும் செல்லனும் கிளம்பும்போது மணி பதின் ஒன்றுக்கு மேலாகி விட்டது.

கயித்தானை செல்லன் அழைத்துச் சென்று கலட்டி வரை விட்டு வரவேண்டும்.

செல்லனின் வீட்டைத் தாண்டி ஒரு சிறு ஒழுங் கையால் சின்னப் பொடியனின் வீட்டுக்கு கயித்தானை அழைத்துச் சென்றான்.

அப்போதுதான் சீவலை முடித்துக்கொண்டு சின்னப் பொடியன் ஈரத்துணியால் உடம்பைத் துடைத்துக்கொண் டிருந்தான்.

கள்ளுக்கு வந்தவர்கள் கலைந்து போய்விட்ட நேரம் அது. பல்லக்கு முதலியரின் ஒத்தாசையுடன் அவரின் செல்வாக்கைப் பயன்படுத்தி சின்னப்பொடியன் கள்ளுச் சீவி வந்தான்.

ஒதுக்குப்புறமாக வேலிக்குள் செருகப்பட்டிருந்த பிளாக்கிளில் அவன் இருவருக்கும், கள்ளுப் பரிமாறினான்.

''என்ன சின்னப்பொடியர் காய் வெட்டிக் கள்ளுப் போலை கிடக்கு, கசக்குது!'' என்றான் கயித்தான்.

ஓம் கயித்தார்; இளம் பாளையள் ஒஞ்செல்லே போச்சுது.'' என்று சின்னப்பொடியன் பதில் சொன்னான்.

செல்லன் ஒன்றும் பேசவில்லை. சின்னப்பொடியன் அவனுக்குக் கிட்டிய சொந்தம். அதனால் அவன் மௌன மாகவே இருந்தான்,

''துலையாலையோ வாறியள் ?'; சின்னப் பொடியன் கேட்டான்,

''உதிலை மழுவராயற்றை மேளுக்கு ஏதோ குறை பாடாம் பாத்திட்டு வாறன். வாற வெள்ளிக்கிழமை பேயாட்டிக் கழிப்புக் கழிக்க வேணும்.'' கயித்தான் பதில் சொன்னான்.

''என்ன ... மழுவராயர் வீட்டையோ ... கயித்தார் நீர் உப்பிடிப் போனநீரோ......? வழவுக்கை விட்டினமோ...''

சின்னப்பொடியன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

''விடாமைப் பின்னை என்ன செய்யிறது? சின்ன நயினத்திற்கு உத்திரமாகாளி பிடிச்சிருக்கு. கயித் தானைப் பிடிக்காட்டி அவ தப்பேலுமே? பிடிக்கத்தானே வேணும்''. கயித்தான் கெப்பராகக் கதைத்தான். பின்பு பேச்சு நீளவில்லை.

கயித்தானும், செல்லனும் போகப் புறப்பட்டபோது ''மழுவராயர் சரியான கசவாரம் கயித்தா, கேள்விப்பட்டி ருப்பீர். ஏதோ......வேண்டிறதைப் புத்தியாய் வேண்டிப் போட வேணும்.'' என்று மட்டும் சின்னப் பொடயன் பேசினான்.

பாதியளவு தூரம் நடந்ததின்மேல் கயித்தான் செல்லனைக் கேட்டான்.

''செல்லர், அலுவல் முடிஞ்சு கழிப்புக் கழிச்சொள்ளை சுடலையுக்கை வைச்சு பிசகை தீப்பீச்சுப் போடவேணும். சின்னப்பொடியன் சொல்லுறதைப் பாத்தா ஆளிட்டை

காசு கழட்டிறது கஷ்டம் போலை கிடக்கு. கயித்தானிரை பிசகைத் தீக்காட்டா கட்டி வைச்ச பேயை அவிட்டு விட்டுடுவான் எண்டு நீ வேளையோடை சொல்லிப் போடவேணும் கண்டியோ......"

கயித்தானின் இந்தப் பேச்சை செல்லன் மௌனமாகவே செவிமடுத்துக்கொண்டு வந்தான். கயித்தானைக் கலட்டிக்குள் விட்டுவிட்டு செல்லன் வந்துசேர நடு இரவுக்கு மேலாகி விட்டது.

கொட்டில் படலை ஓரம் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

கந்தன் கச்சையுடன் சுருண்டுகிடந்தான். இளையவன் செல்லிக்குப் பக்கத்தே கிடந்து காலையும் கையையும் உதறி விளையாடுவதாகப் பாவனை செய்து கொண்டிருந்தான்.

மாதங்கள் இரண்டுக்கு மேலாகிவிட்டன உடம்பில் தெம்பு திறாணியும் அதனுக்கு வந்துவிட்டது.

செல்லி நல்ல தூக்கத்தில் இருக்கவேண்டும்; சிறிதாக குறட்டைச் சத்தமும் கேட்டது.

சமீபகாலமாக இப்படித்தான் செல்லி செல்லன் வரும் போது தூங்கிப்போய்விடுவாள். பேத்திக் கிழவி இருந்த போது அவனுக்கு அவள்தான் உணவு பரிமாறுவாள். பேத்திக் கிழவி போய்விட்ட பின்பு இப்படித்தான்.

தன்பாட்டிலேயே கரப்பைத் திறந்து சாப்பிட்டுவிட்டு பாயைவிரித்து, இளையவனை தூக்கிக் கொஞ்சிக்கொண்டே செல்லன் படுத்துவிடுவான்.

விளக்கு அணைக்கப்பட்டது! சற்று வேளைக்குப்பின் செல்லன் கொட்டாவி விடுவது அடுத்தடுத்துக் கேட்டது.

''இஞ்சரப்பா...!'' செல்லன் கூப்பிட்டான். செல்லியின் மூச்சுக்கூடக் கேட்கவில்லை. 'இஞ்சரப்பா இளையவனைத் தூக்கிக்கொண்டு போ!'' இதற்கும் செல்லியின் பதிலில்லை.

''எடி, அப்பா... நான் கூப்பிடுறன்...'' செல்லன் பலமாகக் குரல் வைத்தான். அப்போதுதான் அருண்டவள் போல் செல்லி எழுந்து கொட்டாவி விட்டாள். சோம்பல் முறித்தாள்.

''இவன் இளையவன் நெஞ்சி படுத்திட்டான் தூக்கப்பா!''

இருட்டுக்குள் செல்லி இளையவனை தூக்க வந்த அருட்சி தெரிந்தது.

அவள் குனிந்து இளையவனைத் தூக்க அவள் கரங்கள் செல்லனின் நெஞ்சில் உராய்ந்தது.

செல்லன் அவளை இழுத்து நெஞ்சோடு இறுக அணைத்தான். அவன் கூறியது போல இளையவன் நெஞ்சில் இல்லை.

அவள் திமிறினாள்!

செல்லனின் ஆண்மையும் திமிறியது! செல்லன் செல்லியை மடக்கிவிடத் துடித்தான். செல்லி ஒரு எதிர்ப் போரே நடத்தினாள்.

போரில் அவளுக்கு வெற்றி!

மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க அவள் தனது இடத்திற்கு வந்து... தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டாள். சிறிது நேரத்தின் பின் அடுப்பை ஊதி விளக்கைக் கொழுத்தினாள்

செல்லன் வெட்கத்தால் குறுகிப்போனான். அவளிடம் தோற்றுப் போய்விட்ட வெட்கமல்ல அது! பச்சை உடம்புக் காரியை இப்படிக் களைக்கப் பண்ணி விட்டேனே என்பதற்காக.

இரவெல்லாம் அவனுக்கும் தூக்கம் வரவில்லை. அவளுக்கும் தூக்கம் வரவில்லை.

நன்றாக விடிவதற்கிடையில் செல்லன் எழுந்து கல்லடிக்கப் போய்விட்டான்.

செல்லியும் பேரன் நயினாருக்குப் பால் ஊட்டப் போய் விட்டாள்.

கந்தன் இளையவனுக்குக்காவலாக வீட்டில் இருந்தான்.

நயினாத்தி வீட்டில் இருந்து அவள் வந்தபோது செல்லன் காலை உணவுக்காக வந்திருந்தான்.

அவனைப் பார்க்க செல்லிக்குப் பரிதாபமாக இருந்தது.

வழமைபோல பழங்கஞ்சியும் பனாட்டுத் தட்டையும் பரிமாறினாள்.

செல்லன் மூச்சுவிடாமல் கஞ்சியை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தான்.

''என்னப்பா... கயித்தாரப்பா என்னவாம்? சின்ன நயினாத்திக்கு உண்மையிலை பேய்தான் பிடிச்சிருக்காமோ?'' செல்லி மிகவும் பவ்வியமாகக் கேட்டாள். இரவு நடந்து விட்டது எதுவும் மனதில் இல்லாததுபோல் அவள் பேசினாள்

''பேயில்லாமல் பின்னை என்ன... உத்திரமாகாளி பிடிச்சிருக்காம். சுகபடுத்தலாமாம். வாற வெள்ளிக்கிழமை கழிப்பு!''

''பாவமப்பா சின்ன நயினாத்தி! கயித்தாரப்பா கழிப்புக் கழிச்சா அவவுக்கு எல்லாம் சுகமாப்போகும் —''

செல்லி தனது ஆசையை அப்படியே கக்கினாள். சின்ன நயினாத்திக்குப் பேய் போய்விட்டால் தான் தப்பித்துக் கொள்ளலாம் என்ற அவா! மனதில் கிளர்ந்து எழுந்தது.

செல்லனுக்கு முதுகில் ஒட்டிக்கிடந்த மண்பருக்கைகளை அவள் துடைத்துவிட்டாள். செல்லனுக்கு உடம்பு குபீரென பொங்கியது.

"இஞ்சரப்பா, கயித்தராப்பாட்டைச் சொல்லி கழிப்பை நல்லாக் செய்யச் சொல்லு! ஏனப்பா... வெள்ளிக்கிழமைக்கு முன்னம் செய்யாப்பிடாதாமே?"

செல்லி கயித்தானை அவசரப்படுத்த செல்லனைத் தூண்டினாள்.

செல்லி இத்தனை தூரம் சின்ன நயினாத்திமேல் பற்று வைத்திருப்பதை அவனால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

"ஏனடியப்பா...... நீ அவசரப்படுகிறாய்.

"ஓ......அவசரம்தான் கெதியிலை அதைக் கழிச்சாத் தான் நல்லது......" செல்லியின் மனச்சுமை இப்படிப் பேசவைத்தது. செல்லனுக்கு அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

நயினாத்தி வீட்டிலை இருக்கிற அக்கறை உனக்குக் கூடிப்போச்சு. என்னையும் புள்ளையளையும் மறந் திடுவாய் போலை கிடக்கு......? எனக்கு ஒண்டுமாய் விளங்கேல்லை!"

செல்லனின் பேச்சு செல்லியின் நெஞ்சைச் சுட்டது! அவளால் பதில் ஏதும் பேசமுடியவில்லை. நல்லவேளை கந்தன் சுருட்டி வைத்த பாயில் தடக்கி விழுந்தது அவளுக்கு வாய்ப்பாய் போய்விட்டது. செல்லி ஓடிச் சென்று கந்தனைத் தூக்கி விட்டாள்.

அப்போதுதான் சின்ன நயினாத்தியின் கணவன் கொழுந்தர் நயினார் பக்கத்து பனைவளவுக்குள் காலடி எடுத்து வைப்பது தெரிந்தது.

அவர் வழக்கமாக பத்து மணிக்குத்தான் அந்த வளவுக்கு வருவார். அந்த வேளைதான் சின்னப்பொடியனும் காலம் தவறி வந்த வம்புப் பாளைப் பனையைச் சேர்வை செய்வதற்காக வந்து சேருவான்.

கொழுந்தர் நயினார் வளவுக்குள் வந்தாரென்றால் சரியாகப் பத்து மணியாகத்தான் இருக்கும்.

அந்தச் சுற்றாடலில் அந்தப் பனை ஒன்றில்தான் காலம் தவறி வம்புப் பாளை வருகிறது. கொழுந்தருக்கு இளம் பாளைக் கள்ளென்றால்தான் பிடிக்கும்,

அவர் வளவுக்குள் வந்த கையோடு, "எடி! செல்லி!" என்ற குரலும் வந்தது! செல்லி அவசரமாக ஓடிப் போனாள்.

சற்று வேளைக்குள் திரும்பி வந்தாள். வரும்போது ஐந்தாறு காவோலைகளையும் இழுத்து வந்நாள்.

"நயினார் ஏன் கூப்பிட்டவர்?"

"ஐஞ்சாறு காவோலை கிடந்தது அதுதான் தரக் கூப்பிட்டவர்"

செல்லி பதில் சொன்னாள். செல்லன் எதுவும் பேச வில்லை. அவன் மறுபடியும் கல்லடிக்குப் போய்விட்டான்.

நிலாவரைக் கேணிக்குப் பக்கத்தேதான் மழுவராயரின் கலட்டிக் காணி.

செல்லன் ஐந்தாறு பேர்களுடன் தானும் ஒருவனாகக் கல்லுடைக்கிறான். கூலிக்காரன். மேற்பார்வைக்காரன் ஏன் சில வேளைகளில் அந்த ஐந்தாறு பேர்களுக்கும் இவன்தான் எஜமான்.

எப்போதும் கலகலப்பாக இருப்பவனுக்கு இன்று அப்படி இருக்க முடியவில்லை. எவருடனும் எதுவும்

பேசாமலேயே அவன் கல்லுடைத்துக் கொண்டிருக்கிறான். ஒரு தடவை அவன் கொந்தாலியை ஓங்கி அடித்தபோது அது சறுக்கி மெதுவாக அவன் கால் எலும்பில் அடித்து விட்டது.

இப்படி அவனின் அடி என்றும் சறுக்கியது இல்லை. அடி அவ்வளவு தாக்கமானதாக இல்லை. ஆயினும் அவனை அந்த நோ சற்று வேளை இருக்க வைத்து விட்டது.

அந்தவேளை அவன் கால் வலியையும் மிஞ்சி மனவலி மேலோங்கி நின்றது.

இரவு .........

இரவு செல்திமிறிப் பறித்துக்கொண்டு போனது.........

சின்ன நயினாத்தியின் பேயை அகற்றுவதில் அவள் ஆர்வமாக இருப்பது.........

கொழுந்தர் நயினார் அவளைக் கூப்பிட்டு காவோலை கொடுத்து அனுப்பியது......

இவைகளை ஓரிரு தடவைக்குமேல் மனதில் வராமல் கட்டுப்படுத்தவே அவன் முயன்றான். ஆனாலும் அது முடியவில்லை.

''என்ன செல்லன்ரை போக்கு இண்டைக்கு வித்தியாச மாக் கிடக்கு! வீட்டிலை கீட்டிலை ஏதும் வில்லங்கமோ...?''

செல்லனைவிட சற்று வயதுக்கு அதிகமான மாரியன் இப்படிப் பேசினான். அது செல்லனுக்கும் கேட்டது. செல்லன் பலமாகச் செருமினான்.

இது வெறும் செருமல் அல்ல; ஒரு எச்சரிப்பு என்பது மற்றவர்களுக்கு விளங்கிவிட்டது. இதற்குமேல் யாரும் பேசவில்லை.

மதியம் திரும்பியபோது வேலையை விட்டுவிட்டு எல்லோரும் கலைந்து விட்டனர்.

செல்லன் வீட்டுக்கு வந்தபோது செல்லி அப்போது தான் உலைப்பானையைச் சரித்து கஞ்சியை வடியவிட்டிருந்தாள். தினை அரிசிக்கஞ்சி அதனால் அது வடிய மறுத்து அடம்பிடித்தது. வழமையில் அதை உமியவிடுபவள். உலைத் தண்ணீர் அதிகமாகிவிட்டதாலும் கணவன் வந்துவிடுவான் என்ற அவசரத்தினாலும் கஞ்சியை வடித்து ஆற விடவேண்டும் என்பதால் ... அதை வடித்து விட அவள் பிரயாசைப்பட்டாள்.

சுடு உணவு செல்லனுக்குப் பிடிக்காது. வந்தவன் கொந்தாலியை தாழ்வாரத்தில் போட்டுவிட்டு, தாழ்வார ஓலைத் தட்டியோடு கிடந்த கிடுகில் சரிந்து விட்டான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

'அவன் பாவி தவிச்சுப் போய் வந்திருக்கிறான்' என்று மனதிற்குள் கூறிக்கொண்டே அரை வடியோடு உலையை நிமிர்த்தி உலை மூடிக்குள் தினைச் சோற்றைப் போட்டு அகப்பைக் காம்பால் கிளறி அதை ஊதிவிட்டுக்கொண்டாள் செல்லி.

செல்லன் கண்களை மூடிக்கொண்டான். செல்லிக்கு செல்லனின் போககு அதிர்ச்சியாக இருப்பதற்குப் பதில் பயமாக இருந்தது.

''இஞ்சை, ஒழும்பன் சோறு ஆறிப்போச்சு'' என்றாள் செல்லி.

எதுவும் பேசாமல் எழுந்து வந்து உணவு அருந்தி...... மீண்டும் கிடுகில் சரிந்துவிட்டான்.

செல்லிக்கு நெஞ்சுக்குள் இடித்தது!

நேரம் போய்க்கொண்டிருந்தது.

மூன்று மணிக்கெல்லாம் அவள் பேரன் நயினாருக்குப் பால் கொடுக்கப் போயாக வேண்டும்.

செல்லி போய்க்கொண்டிருந்தாள்.

செல்லன் கண்களை மூடிக்கொண்டே கிடந்தான்.

"சுமார் ஒரு மணிநேரம் கழிந்து திறந்த பனைப் பரப்புக்கூடாக செல்லி வருவது செல்லனுக்குத் தெரிந்தது,

செல்லிக்குச் சற்றுத் தொலைவில் கொழுந்தர் நயினாரும் வருவது தெரிந்தது.

செல்லி தன் கொட்டிலுக்குள் நுளைந்தாள்.

கொழுந்தர் நேராகவே நடைபாதையால் சென்று மறைந்து விட்டார்.

செல்லியின் முன்தாணை கனத்தது!

இப்படி முன்தாணை கனக்கக்கூடியதாக அவள் என்றுமே எதையுமே கொண்டுவந்ததாக செல்லனுக்கு ஞாபகம் இல்லை.

பத்துப் பதினைந்து நாட்களுக்கொருக்கா கிழங்காக பூசனிக்காயாக வேறு காய்கறி வகைகளாக பெட்டி கொண்டுபோய் வாங்கி வருவாள். குஞ்சுப் பெட்டியைக் கொண்டு வரும்படி அவர்கள் தான் சொல்லி விடுவார்கள்.

முன்தாணைப் பொருட்களை செல்லி மறைவாகவே வைக்க முயன்றதாக செல்லன் அனுமானித்தான்.

சில்லரைகளை அவள் முட்டி ஒன்றில் போட்டு மூடி வைப்பதாக அவன் உணர்ந்தான்.

செல்லி அவசர அவசரமாக வெளியே வந்து கொழுந்தர் போன அடிச்சுவட்டுக்குப் பின்னால் போனாள்.

செல்லி திரும்பி வரும்போது பொழுது கருகிவிட்டிருந்தது.

இளையவன் துடிதுடித்து அழுது கொண்டிருந்தான்.

கந்தன் அவனை அணைத்து ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தான்.

செல்லன் இன்னும் எழுந்திருக்கவில்லை,

செல்லி வரும்போது பெரியதொரு செடுத்தல் மீனை எடுத்து வந்தாள். செல்லன் மௌனமாகவே எழுந்து வெளியே போய்விட்டான்.

இளையவனுக்கு பால் குடிக்கக் கொடுத்துவிட்டு செல்லி அவசரமாக மீனை வெட்டக் குடத்தடிப் பக்கம் போய்விட்டாள்.

கந்தன் விளக்கைப் பிடித்துக்கொண்டு செல்லிக்குப் பக்கமாக இருந்தான்.

''நல்ல பெரிய மீனனை என்ன... ?'' கந்தன் நாவூறக் கேட்டான்.

ஓமடா...... புத்தூர் சந்தியிலை நயினார் வாங்கித் தந்துவிட்டவர்.''

செல்லியும் மகனின் கேள்விக்கு உற்சாகமாகவே பதில் சொன்னாள்.

அவசர அவசரமாக மீனை வெட்டி உப்புப்போட்டு அடுப்பில் வைத்து அதைத் தீய்த்து கந்தனுக்கு உணவு கொடுத்துவிட்டு, ''இளையவன் அழுதா ஏணையை ஆட்டடா!'' என்று கூறிக்கொண்டே செல்லி நயினாத்தி வீட்டுக்குக் கிளம்பி விட்டாள்,

இரவு பால் கொடுக்கும் நேரம் வந்துவிட்டது.

செல்லன் வீட்டுக்கு வந்தபோது செல்லி இல்லை.

''கோத்தை இன்னும் வரேல்லையே?'' செல்லன் கந்தனைக் கேட்டான்.

''இப்ப, கொஞ்சம் முந்தித்தான் போனவை.'' கந்தன் மொட்டையாகவே பதில் சொன்னான். அதற்குப் பின் பேச்சில்லை.

நீண்ட நேரம் போய்விட்டது.

செல்லி வந்தாள்.

"இவ்வளவு நேரமும் எங்கையடி போன நீ?" செல்லன் இப்படிக் கத்தினான். இதற்கு முன் ஒருபோதும் அவன் இப்படிக் கத்தியது கிடையாது.

"நயினாத்தி வீட்டை. ஒத்தினி இண்டைக்கு ஆற்ரையோ இழவு வீட்டுக்குப் போட்டாவாம். கொழுந்தர் நயினாரிட்டை இண்டைக்கு இரவு ஆரோ வருகினமாம். சந்தைக்கு என்னை வரச்சொல்லி மீன் வேண்டித் தந்துவிட்டவர். மீனையும் வெட்டிக் குடுத்துப் போட்டு சின்ன நயினாருக்கு பாலும் குடுத்திட்டு வரச்செண்டு ம்பாச்சு!

கடகடவெனக் கூறி முடித்துவிட்டு செல்லனுக்குச் சோறுபோடக் கரப்பைத் திறந்தாள்.

"பொத்தடி வேசை வாயை! வேசை ஆட்டம் ஆடிப் போட்டு எனக்கு மறுமளி சொல்லுறாய்!"

செல்லனின் கனமான வார்த்தை.

செல்லியை அவன் முடித்த பத்து வருடங்களில் பாவிக்காத வார்த்தை! தூக்கிய கரப்பை அப்படியே வைந்த அவள் நின்றாள். நீண்ட நேரம் நின்றாள்.

செல்லனுக்கு இன்று அளவுக்கு சற்று அதிகமான மது மயக்கம், என்பது அவளுக்கு முன்னமே தெரிந்திருந்தது. அந்த மயக்கம் இப்படியான சுடு சொற்களை கொண்டு வரும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

முன்பும் அவன் இப்படி மது மயக்கத்தில் பேசியிருக்கிறான். வெறி அதிகம் கூடிவிட்டால் இவன் செல்லியின் முன்தாணையைப் பிடித்து, பிடித்து இழுத்துக்கொள்வது தான் வழக்கம்.

இது வழக்கத்துக்கு மாறான வார்த்தை. விளக்கு வெளிச்சத்தைத் தவிர எந்த அருட்சியும் வீட்டில் இல்லை.

செல்லன் தாழ்வாரக் கிடுகின்மேல் உறங்கிப் போய் விட்டான். அவனின் குறட்டை கேட்டது.

செல்லியும் இளையவனுக்கும், கந்தனுக்கும் நடுவே சுருண்டுவிட்டாள்.

"இஞ்சரப்பா! சோறெல்லே நாறப்போகுது; திண்டிட்டுப் படனப்பா!"

இடையே செல்லி ஒரு தடவை கேட்டாள்.

செல்லனிடமிருந்து பதில் கிடைக்கவில்லை செல்லனைத்தொட்டு அருட்டிச் சோறு கொடுக்க அவளால் முடியவில்லை. முன்பு பல தடவைகள் சிறு சிறு தகராறுகளில் இப்படிச் சாப்பிடாமல் படுத்திருக்கிறான். அப்போதெல்லாம் செல்லி அவனைத் தொட்டு உலுப்பி, அருட்டி எழும்ப வைத்து உணவு கொடுத்துவிடுவாள். பின் செல்லன் செல்லியை வெகுநேரம் வரை விழித்திருக்க வைத்து விடுவான்.

விடிந்து வெகுநேரம் ஆனாலும் செல்லியால் எழுந்திருக்க முடிவதில்லை. அவ்வளவு அலுப்பாக இருக்கும் அவளுக்கு! எந்தவித அலுப்புச் சலிப்புமின்றி செல்லன் வேலைக்குப் போய்விடுவான்.

இன்று செல்லிக்கு அந்தத் துணிவு வரவில்லை. முன்பெல்லாம் அவளை அவன் இப்படி கடுமையாக பேசியது இல்லை.

அவன் அவளுக்காகக் காத்துக் கிடந்தான்.

செல்லியின் முன்தாணை கண்ணீரால் நனைந்து கொண்டிருந்தது.

///

# ௯

வெள்ளிக்கிழமையும் வந்துவிட்டது.

இரவு மணி பத்துக்கு மேல்.

நயினார் வீட்டு மாட்டுக்கொட்டிலுக்கு நடுவே கயித்தானும் அவனின் உதவி ஆள் பொன்னனும் கும்பம்வைத்து கும்பத்துக்குப் பக்கவாட்டில் சாம்பல் மொந்தன் வாழைக் குட்டியையும் சுற்றி வண்ணக் கோடிட்டு வேப்பம் பத்தி கட்டி சாம்பிராணிகளை சேர்த்து, கதலி வாழைச் சீப்பொன்றைப் பிரித்து அதற்கு நாக்கு மூக்குத் தள்ளி ... சகலதையுமே செய்து முடித்துவிட்டனர்.

இருவருக்கும் உதவியாக செல்லனும் இத்தினியின் கணவன் எல்லுப்போலையும் நின்றனர். எல்லா ஆயத்தங் களும் முடிந்துவிட்டன.

சின்ன நயினாத்தி கும்பத்தை நோக்கி அழைத்து வரப்பட்டாள். இத்தினி அவளை அழைத்து வந்து கும்பத் துக்கு முன்னால் இருத்தினாள்.

கயித்தான் சிறு மண்சட்டியில் ஊற்றி வைக்கப்பட்டு இருந்த தண்ணீரை மந்திரித்து அவள் மேல் தெளித்து, கும்பத்தை சுற்றித் தெளித்துஉதவியாளன் பொன்னனுக்கும் தெளித்து புனிதமாக்கிவிட்டு, திருநீற்றுச் சட்டியில் குங்குலியத்தைக் கொழுத்திப்போட்டு சற்று அதை எரிய விட்டு அடித்து அணைத்துவிட்டு திருநீற்றை அள்ளி நயினாத்தி தலையிலும் தூவிவிட்டு பொன்னனின் கையிலும் கொடுத்து தன் தலையிலும் தூவிக்கொண்டான்.

திருநீற்றை அப்படியே வாயில் போட்டு கையில் ஒட்டிக் கிடந்ததை அள்ளிச் சொருகப்பட்ட கொண்டையிலும் உரசிக் கொண்டாள்.

கயித்தான் தன் குடுமியை குலைத்து இரண்டு செம்பரந்தம் இதழ்களை அதில் செருகி மீண்டும் முடிப்புப் போட்டுக்கொண்டு தன் தொழிலைத் தொடங்கிவிட்டான்.

சுற்றிவர நான்கைந்து நெய் விளக்குகள் எரிந்தன.

மழுவராய நயினாரும், பெரிய நயினாத்தியும், கொழுந்தர் நயினாரும் இரண்டு நெருங்கிய உறவினர்களும் மட்டுமே கும்பத்து எல்லைக்கப்பால் சுற்றி நின்றனர்.

சின்ன நயினாத்திக்கு முன்னால் சாம்பிராணிச் சட்டியை நகர்த்தி அதில் சாம்பிராணித் தூள்களைத் தூவி விட்டான் பொன்னன்.

புகைக் கெண்டல் மேலெழுந்து நயினாத்தியின் முகத்தை மறைத்து சென்று கொண்டிருந்தது. தாம்பாளம் ஒன்றில்

விளைவு கற்பூரம் எரிந்து கொண்டிருந்தது. கயித்தான் வேப்பம் பத்தியால் சின்ன நயினாத்தியின் மேனியைத் தடவினான்.

இத்தினி பக்கத்தில் இருந்து அவளின் தலைமுடியை உச்சிக்கு எடுத்து முடிச்சுப் போட்டுவிட்டாள்.

சாம்பிராணிப் புகை...

கற்பூர வாசனை...

வேப்பம் பத்தி தடவலின் சிலிர்ப்பு..

கயித்தானின் மந்திர உச்சாடனம்...

ம்... எதுவுமே நயினாத்தியை உசுப்பவில்லை.

கயித்தான் மடிக்குள் இருந்து நூல் ஒன்றை எடுத்து ஒரு பக்கத்தை நயினாத்தியின் முன்தானையில் முடியச் சொல்லி இத்தினியிடம் கூறிவிட்டு மறுபகுதியை வாழையில் தொடுத்துவிட்டு, மஞ்சள் தண்ணீரை அதன்மேல் மாவிலையினால் தெளித்துக்கொண்டே மந்திர உச்சாடனம் செய்தான்.

நயினாத்தி அசையவில்லை.

''பொன்னன்!'' என்று கயித்தான் அழைத்தான். பொன்னன் குறிப்பறிந்து கொண்டு வாழைக் குட்டிக்கு மறுபக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

கயித்தான் மறுபடியும் மடிக்குள் இருந்து மஞ்சள் பூசப் பட்ட நூல் ஒன்றை எடுத்து ஒரு தலைப்பை பொன்னனின் கையிலும் மறுபகுதியை வாழையிலும் தொடுத்துவிட்டு மறுபடியும் மஞ்சள் தண்ணீரால் அதை அபிஷேகம் செய்து... வேப்பம் பத்தியால் அவள் உடம்பைத் தடவித்தடவி பக்க வாட்டில் தயாராக வைத்திருந்த உடுக்கை எடுத்து அதில் இராகத்தை எழுப்பி தாலாட்டுப் பாடத் தொடங்கி விட்டான்.

''ஊத்தைகுடி வயிரவா ஓடியாடா!

உத்திரமாகாளியட்டை ஓடியாடா!''

தாலாட்டுத் தொடர்ந்து... தொடர்ந்து... உடுக்கின் நாதம் உயர்ந்து... உயர்ந்து...

பொன்னனின் தலை அசைந்தது!

பொன்னனின் கொண்டை குலைந்தது!

பொன்னனின் மேனி வெயர்த்தது!

பொன்னன் ஆடத் தொடங்கிவிட்டான்!

அவன்மேல் ஊத்தைகுடி வயிரவன் வந்துவிட்டான்!

தாலாட்டுக்கிடையே ''செல்லன், களபலி கொடுக்க வேணும். கோழிச்சாவல் ஒண்டை எடு!'' என்று கயித்தான் குரல் வைத்தான். செல்லன் வெள்ளை வெளேரென்ற சாவலை கயித்தானிடம் நீட்டினான். கயித்தான் அதைப் பெறுவதற்கு இடையில்... ஆடிக்கொண்டிருந்த பொன்னன் திடீரென அதைப் பாய்ந்து பிடித்து அதன் கழுத்தை நறுக்கெனக் கடித்து இரத்தத்தை உறுஞ்சிக் குடித்து அதன் தலையையும் உடலையும் வெவ்வேறாக்கி வெளியே வீசினான்.

தளலயற்ற அந்த முண்டச் சாவல் துடிதுடித்து துள்ளி, துள்ளி... இறுதியில் ஓய்ந்து போனது.

பொன்னன் வேகமாக தலையை சுழற்றி, சுழற்றி ஆடினான்.

கயித்தான் நயினாத்தியைப் பார்த்து தாலாட்டுப் பாடினான்.

''அம்மா... உத்திரமாகாளி!

உத்திரமாகாளி...!''

என்றெல்லாம் உச்சாடனம் செய்தான். அவள் அசையவே இல்லை.

''செல்லன்! எலும்பிச்சம் பழம் ஒண்டு தா! தடை வவட்ட வேணும்.''

கயித்தான்கேட்டு வாய்மூடுமுன் செல்லன் பெரியதொரு எலும்பிச்சம் பழத்தை கயித்தானின் கையில் வைத்தான். மடிக்குள் இருந்து கயித்தான் ஒரு பொருளை எடுத்தான், அது வில்லுக்கத்தி

அப்போதுதான் அதைக் கயித்தான் ஒரு பெரும் மனிதரிடம் இருந்து வாங்கி இருந்தான். 'றெச்செற்'வில்லுக்கத்தி என்றால் அப்போது கிடைப்பது அருமை!

கயித்தான் அதை விரித்தான். சடக்கென்ற ஓசையுடன் அது விரிந்தது.

கயித்தான் அந்தப் பழத்தை வெட்டினான். அதைப் பிரித்து நிமிர்த்தி வைத்தான். என்ன ஆச்சரியம்! அதில் இருந்து இரத்தம் சீறியது.

சின்ன நயினாத்தி பயந்துவிட்டாள். அதிலிருந்து சீறிய இரத்தம் அவளுக்கு நேராக எழுந்தது.

சூழ இருந்தவர்கள் குசுகுசுத்துக் கொண்டனர். கயித்தான் தாலாட்டைத் தொடர்ந்தான்.

பொன்னன் ஆடி, ஆடி உச்சஸ்தாயியில் வேகப்பட்டான். இப்போது நயினாத்தியின் தலை இலேசாக ஆடியது.

''தாயே! படிமாத்தாளே ... ஓடோடி வா தாயே...!''

கயித்தான் உரக்கச் சொன்னான்.

அவள் ஆடினாள்!

தலையை மேலும் கீழுமாக அசைத்து ஆடினாள்!

அவள் உச்சிக் குடிமி அவிழ்ந்து போயிற்று . . , .கூந்தல் முன்னே விழுந்து அவள் முகத்தை மூடியது. கைகள் இரண்டையும் நிலத்தில் ஊன்றி உடம்பை இருக்கையை விட்டு தூக்கி தூக்கி ஆடினாள்!

உடுக்கின் நாதத்தில் தாலாட்டு ஓசை!

அவள் நாலாபக்கமும் சுழன்று, சுழன்று ஆடினாள்!

இத்தினி அவள் உடல் ஆட்டத்திற்கு ஏற்ப தானும் அசைந்து கொண்டிருந்தாள். அவளுக்கும் ஆட்டம் வரும் போலை இருந்தது. முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது. தலையைச் சுற்றியது... அவள் தன்னைச் சமாளிக்க முயன்று கொண்டிருப்பது புரிந்தது

கயித்தானுக்கு விஷயம் ஓரளவுக்குப் புரிந்துவிட்டது.

இத்தினியும் ஆடத் தொடங்கிவிட்டாளானால் அவன் பிழைப்பில் மண் விழுந்து விடும். ஆனாலும் என்ன செய்வது ?

சின்ன நயினாத்தியை ஆட்டி அவளின் காளியை ஆணி அடித்துக் கட்டி வைக்கும் வரை இத்தினியும் ஆடித்தான் ஆகவேண்டும்.

நயினாத்தி அம்மாளுக்கு மூச்சுக்களை தள்ளியது அவள் மீண்டும் மீண்டும் ஆடினாள்,

''எடி, உத்திரமாகாளி இந்தப் பூமரத்தை விட்டுப் போறியா !'' கயித்தான் கேட்டான்.

'மாட்டேன்!; போகமாட்டேன்!'' அவள் வாய் திறந்து பேசினாள்.

பக்கத்தே இருந்த சாட்டையை எடுத்து அவள்மேல் தாறுமாருக விளாசித் தள்ளினான் கயித்தான்.

''ஐயோ, என்ரை பிள்ளை!,'

வெளியே நின்ற பெரிய நயினாத்தி குரல் வைத்தாள்.

''பூமரத்தை விட்டுப் போறியா ?''

''மாட்டேன் ; போகமாட்டேன் !''

சாட்டை அடி !

''போறேன் ; பூமரத்தை விட்டிட்டுப் போறேன்......
ரெத்தப் பலி ... ரெத்தப் பலி!''

ஊத்தை குடியன் பொன்னனின் ஆட்டம் குறைந்து விட்டது. முற்றாகக் குறைந்துவிட்டது.

''பொன்னன், கோழியை வெட்டு!'' பொன்னன் மற்ற வெள்ளைச்சாவலைப் பிடித்துகயித்தானின் கத்தியை வாங்கி அதன் தலையை சீவி, சீறி வந்த இரத்தத்தை அவளின் முகத்துக்கு நேரே பிடித்தான். இரத்தம் அவளின் முகத்தை நனைத்தது.

அவளுக்கு இப்போது மயக்கம் வந்தது!

ஏற்கனவே தயாராக வைத்திருந்த சூரியகாந்தி இளநீரை முகம் வெட்டி கயித்தானிடம் பொன்னன் கொடுத்தான். அதன் முகத்தில் மூன்று சிறிய பித்தளைக் கம்பிகளை ஏற்றினன்.

ஆட்டம் ஓய்ந்து போகவே இத்தினி நயினாத்தியின் தலையைக் கவிழ்த்து ஒன்பது தலைமயிர்களை எண்ணி எடுத்து, அவைகளை மும்மூன்றாகப் பிரித்து, ஒவ்வொரு மூன்று மயிர்களையும் அந்தக் கம்பியில் சுற்றி விரலால் வீராய்த்து மடக்கிவிட்டு

''படிமத்தாளை விட்டிட்டுப் போறியே தாயே?'' என்று கடைசிமுறையாகக் கயித்தான் கேட்டான்.

அவள் பேசவில்லை.

கயித்தான் சாட்டையில் கை வைத்தான்...

''போறேன், போறேன்!'' நயினாத்தி கத்தினாள்.

''இனிமேல் இந்தப் பூமரத்துக்கு வருவியா?''

''மாட்டேன்; மாட்டேன்!'' அவள் மறுபடியும் கத்தினாள்.

பின் கயித்தான் தலைமயிர்களை கத்தியால் வெட்டி விட்டான்.

சணவேளைதான். அதற்குள் அவள் மயங்கி வீழ்ந்து விட்டாள்.

அவளை இத்தினி மடிமேல் தாங்கிக்கொண்டாள் உள்ளே கூட்டிச்சென்று படுக்க வைக்கும்படி கயித்தான் சொன்னான்.

இத்தினி அவளை உள்ளே கொண்டு சென்றாள்.

மீண்டும் சில மந்திர உச்சாடனங்கள் சொல்லி முடிந்தன

இனி சூரியகாந்தி இளநீரில் அவளின் தலைமயிரால் இறக்கிவிடப்பட்ட உத்திரமாகாளியை சுடலைக்குஎடுத்துச் சென்று அங்கே கழிப்புக் கழிக்க வேண்டும்.

கயித்தான், செல்லன், பொன்னன், எல்லுப்போலை மழுவராயரின் உதவி ஆட்கள் எல்லோரும் தயார்.

ஓலைச் சூள் பந்தங்கள் இரண்டு கட்டப்பட்டன.

சுடலைக்கு சுமார் ஒரு மைல் தூரம் போயாகவேண்டும்

நிலாவரைக் கேணிக்கு அப்பால்! சூள் கொழுத்தப் பட்டது!

''பொன்னன், காளியைத் தூக்கு.'' என்றான் கயித்தான்

பொன்னன் குனிந்து இளநீரை தூக்க முயன்றான் அசைக்க முடியவில்லை. மூச்சுப் பிடித்துக்கொண்டு தூக்கிப் பார்த்தான். முழுங்கால் உயரத்திற்குமேல் அதுவரமறுத்தது

''இளநீரில் இறங்கிய உத்திரமாகாளி இப்படிக் கனக்கிறாள்!'' எல்லோரும் குசுகுசுத்துக் கொண்டனர்.

பொன்னனுக்கு உதவி செய்ய செல்லன் முன் வந்தான் கயித்தான் பெருவிரலால் அவன் பாதங்களைச் சுரண்டினான். இந்தச் சுரண்டலைச் செல்லன் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

அவன் பொன்னனுக்கு ஒத்தாசை செய்து நெஞ்சு உயரத்திற்கு இளநீரை தூக்கிவிட்டான். மேலே முடியவில்லை.

கயித்தான் கையால்தொட்டு மேலே உயர்த்திவிட்டான்.

பொன்னனின் நீண்ட மயிர் உச்சியில் சும்மாடு ஒன்று வைக்கப்பட்டது. அதன்மேல் இளநீர் வைக்கப்பட்டபோது பொன்னன் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க நிமிர்ந்து அசைந்தான்.

பந்தத்தின் வெளிச்சத்தில் சுடலைப் பிரயாணம் தொடங்கிவிட்டது.

''செல்வன் மற்ற கோழிச் சாவலையும் எடுத்து வை; இடையிலே தடை வெட்டவேண்டி வந்தாலும் வரும்,''

நேரம் விடி காலையின் வெளுப்பைக் காட்டுவது போலிருந்தது.

''விடியப்போகுது கெதியாப் போகவேணும்.'' கயித்தான் சொன்னான். சற்றுநேரப் பிரயாணத்தின் பின் தச்சக்கடவை கேணியடி வந்தது.

பொன்னனால் அதற்குமேல் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை.

''ஐயோ! காலைத் தூக்க முடியேல்லை!'' பொன்னன் வருத்தத்துடன் கத்தினான்.

''செல்லன், தடை வெட்டவேணும் கோழியை எடு!''

மூன்றாவது வெள்ளைச் சாவலும் தடை வெட்டுக்காக தன் உயிரைக் கொடுத்துவிட்டது.

இப்போ பொன்னன் எந்தவித சிரமுமின்றி நடந்தான்.

சுடலை வந்துவிட்டது!

அன்றுமாலை கொள்ளிவைக்கப்பட்ட ஏரம்புநயினாரின் கட்டை,கட்டையோடு கட்டையாக எரிந்துநீறாகும்நிலையில் இருந்தது.

அதை எரியவிட்டு விட்டு பக்கத்தே இருந்த வாகை மரத்தின் கீழ் இருவர் நினைவு இழந்து கிடந்தனர். சூள்

வெளிச்சத்தை பிடித்துப் பார்த்தபோதுதான் அந்த இருவரும் செல்லனின் சிறிய தகப்பனும், மாமன் முறை யானவனும் என்று தெரிந்தது.

அவர்கள் அருகே ஒரு முட்டி சரிந்து கிடந்தது. அதில் இருந்து தென்னங்கள்ளின் வாசனை கம்மென்று வீசியது.

பிரேதத்தை எரித்துவிட்டு அவர்கள் கள் மயக்கத்தில் கிடக்கிருர்கள்.

சூரியகாந்தி இளநீர்மேல் சுற்றிய மஞ்சள் நூலைஎடுத்து பக்கத்து அரச மரத்தில் ஒரு ஆணியை ஏற்றி அதில் நூலைச் சுற்றி மீண்டும் கத்திப் பிடியால் இறுக்கி... கழிப்புக் கிருத்தியங்கள் முடிந்தன.

நன்ருக விடிந்து போய்விட்டது.

''என்ன, செல்லன் பிசகு என்னமாதிரி'' கயித்தான் கேட்டான்.

''நயினர் பொழுதுபட்டாப்போல உன்னைக்கூட்டியரச் சொன்னவர்'' என்ருன் செல்லன்.

கழிப்புச்சாமான்களை ஒரு கடகத்தில்வைத்து பொன்ன னின் தலையில் சுமத்திவிட்டபோது செல்லன் கேட்டான்.

''மூன்டு சாவலையும் கொண்டே போறியள் ? எனக் கொண்டு தந்தா என்ன ?

இளநீரைத் தூக்கிவிடும்போது தான் அவன் காலைச் சுரண்டி சய்கை செய்ததும், அவன் அதைப் புரிந்துகொண்டு நடந்தவிதமும் கயித்தானின் நினைவுக்கு வந்தன.

ஒரு சாவலை எடுத்து அனுயசமாக செல்லனுக்குக் கொடுத்தான்.

செல்லனும் எல்லுப்போலையும் சுடலையின் தென்புறத் தரவைால் இறங்கி நடந்தனர்.

மழுவராயரால் அனுப்பப்பட்ட ஆட்களும் போய் விட்டனர்.

இப்போது நன்றாக விடிந்துவிட்டது! அப்போதுதான் காலில் மாட்டியிருந்த கங்குமட்டைச் செருப்பு ஞாபகத்துக்கு வந்தது, கயித்தானுக்கு.

பட்டப்பகலில் இந்தச் செருப்பைப் போட்டுக்கொண்டு அவன் எங்கும் போனது இல்லை. இரவு இதைப் போட்டுக் கொண்டு கிறவல் கல்லுறோட்டுகளைத் தாண்டி வரும் போது, திரும்பிப்போக விடிந்திடும் என்று அவன் எதிர் பார்க்கவில்லை. அந்தச் செருப்பினை விட்டுவிட்டோ தூர வீசிவிட்டோ செல்ல அவனுக்கு மனமில்லை.

பொன்னனின் அண்ணனைக்கொண்டு கன்னிமரக் கங்குமட்டையில் நாரினால் இணைக்கப்பட்ட செருப்பு. அதை... வீசிவிடுவதா?

கலட்டியடிக்கு இரண்டு மைல் போகவேண்டும். தரை வைக்குள்ளால் யாரின் கண்ணிலும் படாமல் போய் விடலாம் என்ற துணிச்சலில் செருப்பை மாட்டிக்கொண்டு அவன் படபடவென நடந்தான்.

பொன்னன் கடகத்துடன் பின் தொடர்ந்தான்.

தரவைப் பரப்புகளைத் தாண்டி, ஒரு ஒழுங்கைக்குள் சற்றுத் தூரம் நடந்து ... அப்பால் சென்றால் வருவது கலட்டி மண்.

அதற்கிடையில் . . . .

ஒழுங்கைக் கரைக் கேணியில் அடிக்கழுவிவிட்டு நான்கைந்து பேர் நின்றனர்.

"எட, துரும்பன் கயித்தான் செருப்புமெல்லே போடத் தொடங்கியிட்டான்!"

"ஓமோம், மாந்திரீகக் காறனெண்டு காவோலை இழுக் காமல்விட இப்ப செருப்புமெல்லே போடத் தொடங்கியிட் டார். துரும்பப் பிள்ளைக்கு ரெண்டு போடவேணும்."

''எட, வேண்டாம், ஏதும் செய்வினை சூனியம் செய்து போடுவான்; சும்மா வெருட்டி செருப்பைக் கழட்டிப் போட்டுவிடுவம் ... மசுக்கிடாமல் ஆக்களைப் பசியாறிப் போடுவானடா.''சம்பாவனை முடியும் தறுவாயில் கயித்தானும் பொன்னனும் வந்து சேர்ந்துவிட்டனர்.

''டேய்! கயித்தான் காவோலை கட்டாமல் புழங்கு எண்டு உனக்கு இடம் தந்தா இப்ப செருப்பும் போட்டுக் காட்டிறாய் என்ன?''

''நாங்கள் புத்தூர் மழுவராயற்றை மோளுக்கு கழிப்புக் கழிச்சிட்டு வாறமாக்கும் ...''

பொன்னன் இடையே பேசினான்.

''என்ன மழுவராயர் வீட்டுக்கோ ...மழுவராயர் எண்டா எங்களுக்கென்ன கொம்பே? துரும்பா, கழட்டடா செருப்பை! ''

கயித்தான் செருப்பைக் கழட்டினான்.

''தூக்கடா செருப்பை!''

கயித்தான் குனிந்து தூக்கினான்.

''எறியடா வடலியிக்கை!''

கயித்தான் எறிந்தான்.

''திரும்பிக் பார்க்காமல் போடா!''

கயித்தான் திரும்பிப் பார்க்காமல் போனான்'

பொன்னனும் அடக்கமாகப் பின்னால் போனான், கயித்தானும் பொன்னனும் போய்விட்டனர். ''எனக்கென்னவோ பயமாக் கிடக்கு. பேய்வேலை பாத்திட்டம் போலை கிடக்கு...''இப்படி முன்னமே கயித்தானைப் பற்றிப் பயமுறுத்தியவன் சொன்னான்.

கயித்தான் அப்படியே அசையாமல் நின்றான்.

''என்னடா நாங்கள் சொல்லுறம் நீ மைன் பண்ணுமல் நிக்கிறாய்; கழட்டடா செருப்பை!''

சற்று வயதேறியதால் சுருங்கிக் கிடந்த நெஞ்சுத் தோல் சுருக்கத்திற்குள்ளாக அவர் இருதயம் துடித்துக்கொண்டிருந்தது நன்ருகத் தெரிந்தது.

''செல்லப்பக் குஞ்சிக்கு எல்லாத்துக்கும் பயம்தான்! அவன் மாந்திரீகக் காறனெண்ணதுக்காக தலைகால் தெரியாமல் நடக்கவிடுகிறதே! நாளைக்கு எங்களிட பெண்டுகளையும் வசியம் பண்ணி தூக்கிக்கொண்டு போவான்; விட்டிர்ரதே! ''

செல்லப்பாக் குஞ்சிக்கு ஒன்றும் பேசவரவில்லை.

அன்று இரவு செல்லப்பாக் குஞ்சி வாயாலும் மூக்காலும் இரத்தம் கக்கி இறந்து போய்விட்டதாகச் செய்தியும், துரும்பக் கயித்தானேடை கதைவழிப்பட்டதிலை அவன் உடன் பெல்லி விட்டு கொண்டு போட்டான்.'' என்ற செய்தியும் ஒன்றாகவே வந்தது.

அன்று பொழுது கருகிய போது சுடலைக் குருவி உருவத்தில் செல்லப்பாக் குஞ்சி வீட்டைச் சுற்றி நோட்டம் பார்த்து ஓலம் இட்டு கயித்தானின் பெல்லி சென்றதாகவும், கருக்கல் பொழுதுக்குள் கிணற்றடியில் வைத்து அவரை அடித்து வீழ்த்தி விட்டதாகவும் பேசிக்கொண்டனர்,

வீட்டைச் சுற்றி, சுற்றி சுடலைக் குருவி கத்தித் திரிந்தது ஒரு சாட்சி!

முற்றத்து வேலி ஓரம் பச்சிலை ஓணான் ஒன்று ஓடிச் சென்று கிணற்றடிப் பக்கம் மறைந்துவிட்டதாக மற்றச் சாட்சி!

அண்டங்காகம் ஒன்று செல்லப்பர் செத்துக் கிடந்த இடத்தில் ஏறக்குறைய அதேவேளையில் கத்திக் கத்தி பறந்ததாக இன்னுமொரு சாட்சி!

மொத்தத்தில் கயித்தானின் பெல்லிப்பேய் எடுத்த உருவங்கள் தான் என்ற முடிவு.

கயித்தான் பொன்னனின் அண்ணனைக் கொண்டு மீண்டும் ஒரு கங்குமட்டைச் செருப்பு செய்துகொண்டான். இப்போது எருமை வாரையே குத்துவாராகப் பாவித்து ஒரு செருப்பை இணக்கிவிட்டான்.

செல்லப்பாக்குஞ்சியின் எட்டுச் செலவுக்கு முன்னமே கயித்தான் பட்டப்பகலில் செருப்புடன் வீதியில் நடந்து சென்றான். அவனை யாரும் ஏன் என்று கேட்கவில்லை. அவனைத் தொலைவில் கண்டால் போதும், இப்போது எல்லோரும் ஓடி மறைந்து விடுகிறார்கள்.

///

# 10

கழிப்பு முடிந்து நான்கைந்து நாட்களுக்குப் பின்பு இத்தினியிடம் செல்லி கேட்டாள்.

''எணை இத்தியார் சின்ன நயினாத்திக்கு பேய் கழிச்சு முடிஞ்சுது. இனி அவவுக்காக ஆட்டிறச்சிப் பரியாரியார் சொன்னது மாதிரி வேறை பால்தான் குடுக்கவேணுமே

''செல்லி, உதை நானும் பெரிய நயினாத்தியிட்ட கேட்டுப் பாத்தனான். அவ பள்ளியின்ரை பாலை இன்னும் மூண்டு மாதத்துக்கெண்டாலும் குடுக்க

வேணுமெண்டு சொல்லுறா. கயித்தானிட்டையும் ஆள் அனுப்பிக் கேட்டுப்பாத்தவையாம். உத்திரமாகாளி அடங்கி சாந்திக்குப் போகும் வரையிலை இல்லாட்டி வேறை பூமரத்திலைஏறும்வரையிலை பாலைக்குடுத்த மாதிரித்தான் குடுக்கவேணு மாம்.கயித்தானும் சொல்லிப் போட்டானாம்.'

இத்தினியின் இந்தப் பதிலால் செல்லியின் நெஞ்சு வெந்தது. அவளுக்கு மனதுக்குள் நடுக்க மெடுக்கத் தொடங்கியது.

அன்று இரவும் கற்பூரச் சட்டியை செல்லியைக் கொண்டு அணைப்பித்தாள். அணைக்கும்போது அவளுக்கு மயக்கம் வருவது போல இருந்தது.

செல்லி வீட்டுக்குப் போனபோது ... செல்லன் முன்கூட்டியே வந்துவிட்டது தெரிந்தது.

வழக்கமில்லாத வழக்கம்!

இப்படி நேரகாலத்தோடு வீட்டுக்கு அவன் வரும் நாட்கள் சொற்பமே. அந்த நாட்களெல்லாம் செல்லனும், செல்லியும் வேளையோடே விளக்கை அணைத்துவிடும் நாட்களே!

''என்னடியப்பா... பால் குடுக்கப் போனா சட்டுப் புட்டென்று குடுத்துப் போட்டு வாறதுக்கு அங்கை இருந்து விண்ணாணக் கதையளே கதைச்சுப் போட்டுவாறாய்?''

செல்லன் சற்றுக் கண்டிப்பான அன்புத் தொனியில் கேட்டான்.

''எனக்கு வேறை வேலை இல்லையே நயினாத்தி யோடை விண்ணாணம் கதைக்கிறதுக்கு! அவ இத்தினி யோடை எப்பன் நேரம் கதைச்சுப் போட்டு வாறன்.''

செல்லியின் பதிலுக்கு செல்லனால் வேறொன்றும் பேசமுடியவில்லை.

''இஞ்சரப்பா, சின்ன நயினாத்தியின்ரை பேய்க் கழிவோடை அவவின்ரை பேய் போயிருக்குமெல்லே? கயித்தரப்பா நல்லாக் கழிப்புக் கழிச்சிருப்பார். உத்திரமா காளியை இளநீருக்கை இளக்கினாப் பிறகு இளநீரை மூண்டு பேர் சேந்தெல்லே தூக்கின நீங்களாம்! பாவம் சின்னக் கமக்காறச்சிக்கு எல்லாம் சுவம் வந்திடும் என்னப்பா?'' செல்லி பரிதாபத்துடன் கேட்டாள்.

''இஞ்சபார் இவளுக்கு சின்ன நயினாத்தியிலை இருக்கிற அக்கறையை... தெரியாமல் கேக்கிறன் உனக்கேன் உந்த அக்கறை?''

''அக்கறைப்படாமல் இருக்க ஏலுமே. எங்கடை நயினாத்தியெல்லே! அவவுக்கு வருத்தம் சுகப்படாட்டா நான் நெடுகலும் பால் குடுக்கப் போகவேணுமெல்லே... அது சரி, நீயும் சேந்துதானாம் இளநியைத் தூக்கி விட்ட நீ!...''

''ஓமடி! தூக்கி விட்டனான்தான். சின்ன நயினாத்தின்ரை பேய் இளநியிலை இறங்கினதோ ... கயித்தாரப்பா இறக்கினவரோ... அதெல்லாம் சும்மாவடி. நான் இளநியை தூக்கேக்கை கயித்தாரப்பா காலிலை சுறண்டினவர். அது தான் பாரத்தை தூக்கிறது போலை தூக்கினனான். கயித்தாரப்பா சொல்லிப் போட்டார். சின்ன நயினாத்திக்கு பேய்க்குறை ஒண்டும் இல்லையெண்டு.''

''நல்ல கண்டறியாத கதைதான் அப்ப ஏனாம் அவ ஆடினவா?''

''ஓ... நீ அதுக்குக் கேக்கிறாய் என்ன... ஆட்டிறச்சிப் பரியாரி சொல்லிப் போட்டார். ஆண் வாடை அடிச்சா அவ முடிஞ்சா எண்டு! அவர் கொழுந்தர் நயினாரும் கிட்டப் போறேல்லை. அவளுக்குப் புருஷனோடை படுக்க வேணுமெண்ட அமராம். அது பேய் மாதிரியும் ஆடுமாம் கயித்தாரப்பா சொன்னவர்.''

இதென்ன கண்கெட்ட கதையோ... பொஞ்சாதிக்குக் கிட்டப் போகேலாமல் நயினார் உன்னைச் சுத்தி சுத்தி வாறதை நானும் கவனிச்சனான். நீ விடடி உந்தக் கதையை

"உதென்ன கதையப்பா; ஆரும் கேட்டாலும்.. !"

"கேக்கட்டுக்கன், சின்ன நயினாத்திக்கு புருஷனோடை படுக்கவேணுமெண்ட அமர்! என்ரை செல்லிக்கு புருஷன் ரை மூச்சுக் கூடப் படக்கூடாது எண்டாவறை ஒரு அமர்! இதை ஊரிலை அறியட்டுக்கன்!

செல்லிக்கு அழுகை வந்துவிட்டது. அவள் விம்மி விம்மி அழுதாள்!

செல்லன் அவளுடை அழுகையை சாந்தப்படுத்த நினைக்கவில்லை. மரக்கட்டை போல நீட்டி நிமிர்ந்து கிடந்தான்.

விடியும்வரை விளக்கு எரிந்துகொண்டிருந்தது. விடிந்ததும் விளக்கை அணைத்துவிட்டு செல்லன் கல்லடிக்கப் போய்விட்டான்.

வழமை போல பத்துமணிக்கெல்லாம் செல்லன் காலை உணவுக்காக வந்தான்.

இரவு நடந்த வாக்குவாதத்தில் எந்தவித முக மாற்றமுமே அவனில் தெரியவில்லை.

வழமைபோல செல்லி கரைத்த பழங்கஞ்சியும், பனாட்டுத் தட்டும் அவன் வயிற்றுப் பசியைப் போக்கின.

பக்கத்து வடலி அடைப்பிற்குள் சேர்வைக்காக சின்னப் பொடியன் வந்து போவது செல்லனுக்குத்தட்டி இடைவெளி ஊடாகத் தெரிந்தது.

செல்லன் கஞ்சியைக் குடித்து முடிக்கும் தறுவாயில் கொழுந்தர் நயினார் எல்லைக் கடவையைக் கடந்து உள்ளே போவதும் தெரிந்தது.

"செல்லி!" என்ற குரலும் தொடர்ந்து கேட்டது.

"குடியப்பா... நயினார் கூப்பிர்றார். என்ன எண்டு கேட்டுவாறன்" என்று மட்டும் கூறி பதிலுக்காகக் காத்திராமல் செல்லி கடகத்தையும் தூக்கிக் கொண்டு கடவையைக் கடந்து போனாள்.

செல்லனின் உடம்பெல்லாம் நடுங்கி வியர்த்தது.

சற்று வேளைக்குப் பின் செல்லி வந்தாள். கடகம் பாதிக்குமேல் பனங்காய், பன்னாடை, பச்சைத்தின்னி, மாங்காய்களால் நிறைந்திருந்தது.

அவள் முகமெல்லாம் ஒரு மாதிரியாக இருந்தது. அவள் கண்களும் சிவந்திருந்தன. பனங்கள்ளின் வாசனை அவளில் வீசியது. தலைமயிர்களில் கள்ளின் துளிகள் சிதறிக் கிடந்தன —

"என்னவாமடி நயினார்? இண்டைக்குப் பைம்பலா தந்திருக்கிறார் போலை கிடக்கு. எட, பச்சைத் தின்னி மாங்காயுமெல்லே தந்திருக்கிறார். இனி என்ன நான் செத் தாலும் உன்ரை சோத்தை நாயும் தின்னாது!"

இதைக்கேட்ட செல்லி திடுக்கிட்டுப்போய் நின்றாள். செல்லன் தாழ்வாரத்தில் புடி கழன்று கிடந்த கொந்தாலியை எடுத்து கொடுவாக் கத்தியால் புதிய புடி ஒன்றினைச் சீவத் தொடங்கினான்.

பேச்சுமில்லை; மூச்சுமில்லை. கந்தன் வெளியே எங்கோ போய்விட்டான். இளையவன் உடும்புபிடித்தபடி விளையாடி கொண்டிருந்தான்.

"ஓமப்பா நீ ராத்திரிச் சொன்னது சரிபோலத் தான் கிடக்கு. சின்ன நயினார்... அவர் என்னை மடக்கப் பார்க்கிறார் போலைதான் கிடக்கு."

செல்லன் பேசவில்லை. கொந்தாலிப் புடியை சீவிக் கொண்டிருந்தான். செல்லி அவனுக்குச் சமீபமாக வந்தாள்.

''இந்தச் சன்னதியானானை நீ நினைக்கிற மாதிரி...''

செல்லன் பேசவில்லை.

அவனின் கோபத்தை மாற்றிவிட அவள் அவனைத் தொட்டழைத்தாள். செல்லனின் கண்களில் கண்ணீர் தேங்கியது.

''அவை நயினார்மார் என்னெண்டாலும் செய்வினம். நீ கவனமாய் இரெண்டு தான் சொல்லிறன்.''

செல்லன் வாய் திறந்து பேசினான்.

செல்வி அப்படியே அவனை அணைத்தாள். செல்லன் எழுந்து சென்று ஓலைப்படலை சாத்திக் கட்டிவிட்டான்.

செல்வி திகைத்துப்போய்விட்டாள்! கற்பூரச் சட்டியின் சத்தியம் ஞாபகத்துக்கு வந்தது. இப்படிச் செல்லன் நேரம் கெட்ட நேரத்தில் அவளுடன் நடந்துகொள்ள முற்பட்டது இல்லை. அவனிடமிருந்து இன்று தப்பிவிட முடியாது என்பது அவளுக்கு விளங்கிவிட்டது.

''ஐயோ, வேண்டாமப்பா ... சன்னதியானாணை வேண்டாம்.'' அவள் அடக்கமாக ஆணை வைத்தாள். செல்லனுக்கு இந்த ஆணை கேட்டாலும் அவன் அதை லட்சியம் செய்யவில்லை,

செல்வி திமிறிப் பார்த்தாள்.

முடியவில்லை; முடியவே இல்லை!

படக்கென்று அவள் அவன் நெஞ்சின் வலப் பக்கத்தில் கடித்தாள். பற்கள் பதியக் கடித்தாள். சதையை பிடுங்கும் அளவுக்குக் கடித்தாள். இரத்தம் அவள் கடவாயால் வழிந்தது.

செல்லன் பதறிப் போனான், அவனால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை, அப்படியே அவள் மூஞ்சியில் ஓங்கி

அவர் மனதுக்குப்பட்டது. நீண்ட 35 ஆண்டுகளுக்கு முன் என்னோடு அரசியலில் பிரவேசித்த அவருக்கு இப்போது உள் மனதில் வந்த உணர்வை எண்ணும் போது நான் ஆச்சரியப்படவில்லை. ஏனெனில் அவர் இன்று வாக்குச் சீட்டின் மூலம் அரசைக் கைப்பற்றி விடலாம் என்ற பிரிவில் நிற்பவர்.— அசையாத நம்பிக்கையுடையவர். ஆயினும் அவர் இலக்கியத்தையும் அரசியலையும் தூரத் தூர வைத்திருக்கிறார்.

இப்படிப் பல கோணங்களில் இலக்கிய மதிப்பீடு செய்யும் அரசியல்வாதிகளும் இருக்கின்றனர். "மாக்சிச பாரம்பரியத்திற்குட்படாதது" என்று நெறி வகுக்க முற்படுகின்றனர்.

"புரட்சியைத் துரிதப்படுத்தும் வழிமுறை எதுவோ அதுவே நெறியின் இலக்கணமாகும்" என்று லெனின் கூறியுள்ளதையே நான் நெறியாக மதிக்கிறேன், அதைத் துரிதப்படுத்தும் செயல்பாடுகளில் ஒன்றாக எழுத்தையும் மேற்கொள்ளுகிறேன் அதிலிருந்து பிறந்த எனது படைப்புகளில் இப்போது கடைசியாக வெளிவருவது "அடிமைகள்" என்ற இந்தப் படைப்பாகும்.

இதைப்பதிப்பித்து வெளியிடமுன்வந்த தோழமை வெளியீட்டாளருக்கும், அதற்கான ஒத்தாசைகளை நல்கிய சகல தோழர்களுக்கும் எனது நன்றிகள்.

**கே. டானியல்**

*23 | 5 | 83*

ஒரு குத்துக் குத்தினான். அவளை விட்டுவிட்டான். திடீரென எழுந்தான்; படலையை அவிழ்த்துக் கொண்டு வெளியே போய்விட்டான்,

அவன் நெஞ்சால் இரத்தம் வழிந்தது. செல்லியின் வாயெல்லாம் இரத்தம். அவள் அழுதுபடியே கிடந்தாள். அவள் இத்தினியின் கற்பூரச் சட்டி சத்தியத்தைக் காப் பாற்றிவிட்டாள்.

மத்தியானம் செல்லன் சாப்பிட வரவில்லை. செல்லி மத்தியானப் பால் கொடுக்கப் போய் வந்தாள். சாயந்தரம் போய் வந்தாள், இரவும் போய் வந்தாள். சத்தியமும் செய்தாள்.

செல்லன் இரவு வந்தான்!

எதை எதையோ பிதற்றிக்கொண்டு வந்தான். அவனுக்கு அளவுக்கு அதிகமான மதுமயக்கம் என அவள் எண்ணினாள். ஆனால் படிப்படியாக அவனுக்கு மதுவெறி அல்ல என்பதை அவள் அறிந்துகொண்டாள்.

ஏதோ எல்லாம் அவன் பேசினான். ''பித்தம் தெளிய மருந்தொன்று இருக்குதாம்'' என்ற பாட்டினை தலைகீழாக பலவிதமாகப் பாடினான்.

''ஆலகால விஷத்தையும் நம்பலாம் . '' என்ற பாட்டை தொடர்ச்சி இல்லாமல் பாடி சேலை கட்டிய மாதரை நம்பினால் தூங்கிச் சாகலாம்'' என்று முடித்தான்.

இப்படி எத்தனையோ பாட்டுக்கள்!

செல்லி அழுதுகொண்டிருந்தாள். "எடி செல்லி!'' என்று அவள் மேல் பாய்ந்து அவளைக் காலாலும் கையாலும் மொங்கித் தள்ளினான்.

கந்தன் கண்விழித்துப் பார்த்தான். தாயை தகப்பன் போட்டு அடிப்பதைக் கண்டான். எழுந்து ஓடிச்சென்று ''அப்பு... அப்பு... என்ரை அப்பு அடிக்காதையணை''

என்று மன்றாடினான். செல்லன் அவளை உதைப்பதை விட்டுவிட்டான்.

''எடி வேசை! இவன் என்ரை மோனடி. இளையவனை நீ கொழுந்தர் நயினாருக்குத்தான் பெத்திருக்கவேணும்''

இதற்குமேல் செல்லன் சுயநினைவு இழந்து... ''சேலை கட்டிய மாதரை நம்பினால் தூங்கிச் சாகலாம்...'' என்று பல தடவைகள் சொல்லியபடி வெளியேபோய்விட்டான்.

செல்லியால் அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. கந்தன் தாயை கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதான்.

இரவெல்லாம் விளக்கு எரிந்துகொண்டே இருந்தது.

விடிந்ததும் விடியாததுமாக பனை வெளியினூடாக அங்குமிங்குமாக பலர் போய்வருவதை செல்லி கண்டாள்.

அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

இத்தினி ஓடி வந்தாள்.

''எடி செல்லி ... எடி, செல்லி ... செல்லன் ... '' என்று மிகுதி வார்த்தையை முடிக்காமலேயே அவள் விம்மி விம்மி அழுதாள்.

''ஐயோ! என்ரை ராசா...'' என்று குரல் வைத்துக் கொண்டே சனங்கள் போன திக்கில் செல்லி ஓடினாள். கந்தனுக்கு ஒண்டும் விளங்கவில்லை. இத்தினிக்குப் பின்னால் கந்தன் ஓடினான்.

மழுவராயர் வீட்டு பின்பக்க நாவல் மரக்கொப்பில்......

செல்லன் ஓலைவடக் கயிற்றில் தொங்கினான் செல்லி நிலத்தில் புரண்டு கதறினாள்.

''என்ரை அப்பு! என்ரை அப்பு!'' என்று கத்திக் கொண்டே கந்தன் மரத்தில் தாவி ஏறினான்.

அவனைப் பலர் தடுத்து நிறுத்தினர்.

அவன் எல்லோர் பிடியையும் உதறிக்கொண்டே "ஐயோ... என்ரை அப்பு... சாகப் போறா என்னை விடுங்கோடா." என்று கதறிக்கொண்டே இருந்தான்.

நாலைந்து இளம் மட்டங்கள் மரத்தில் ஏறி செல்லனை இறக்க முற்பட்டனர். அப்போது மழுவராயர் தடுத்து விட்டார். கிராமத் தலைமைக்காரரும் மணியகாரரும் வராமல் பிணத்தை இறக்கக்கூடாது என்று சட்டத்தை நினைவுபடுத்தினார்.

நடுப்பகல் வரும்வரை செல்லனின் பிரேதம் ஓலைவடக் கயிற்றிலே தொங்கிக்கொண்டே இருந்தது. அவன் நாக்கு வெளியே தள்ளி இருந்தது.

மயக்கம் போட்டு விழுந்த செல்லியையும் கதறிக் கதறித் துடித்த கந்தனையும் வீட்டுக்குக் கொண்டுபோய்விட்டனர்.

நெடும் பனை நிழல்களில் உறவினர்கள் வந்து காத்து குந்தி இருந்தனர். இடைஇடையே நயினார்மார்களும் வந்து போயினர்.

பேச்சுக்கள் ஒவ்வோர் மாதிரிப் பரவின. செல்லனின் வலப்பக்சு மார்பில் தெரிந்த காயம்; வழிந்திருந்த இரத்தக் கறை — அவர்களைக் குசுகுசுக்க வைத்தது.

''செல்லனை யாரோ அடித்துக் கொலை செய்துவிட்டுத் தான் தூக்கி இருக்கவேண்டும்'' என்ற அபிப்பிராயம் ஊர் முழுதும் பரவியது.

யார் கொன்றிருப்பார்கள் ?

செல்லனுக்கென்று ஊரில் எதிரிகள் எவரும் இல்லை.

மதியம் திரும்பிய போதுதான் விதானையாரும், உடையாரும் வந்தனர். மரத்தின்கீழ் நின்று பார்த்தது மட்டும்தான். மழுவராயரும் அவர்களுடன் நின்றுபேசினார்.

''செல்லனை இறக்கிக் கொண்டுபோய் தாக்கலாம்.'' அவர்கள் அனுமதி வழங்கி விட்டனர். போய்விட்டனர்.

அவன் நெஞ்சில் இருந்த காயத்தைப் பற்றியோ, வடிந்து கிடந்த இரத்தத்தைப் பற்றியோ அவர்கள் பேசவில்லை.

பொழுது படுவதற்கு முன்னதாகவே செல்லனின் கட்டை தட்டுக் கட்டையில் வைத்து நிலாவரைக் கேணிக்கு அப்பால் உள்ள சுடலையில் புதைக்கப்பட்டது.

செல்லனின் சாதியினரை சுடக்கூடாது. சட்டம் அப்படி!

ஒரு நாள் கழிந்தது!

மறுநாள் கழிந்தது!

மறுநாளுக்கும் மறுநாள்...

அதற்கும் மறுநாள் விடிந்தபோது...

செல்லியையும் இளையவனையும் படுக்கையில் காண வில்லை.

''ஆத்தே... ஆத்தே...'' என்று குரல் வைத்தான் கந்தன். ஆத்தையையும் தம்பியையும் காணவில்லை.

பொழுது மேலே வரும் வரை அவன் ஆத்தையையும் தம்பியையும் காணாது புலம்பிக்கொண்டிருந்தான்.

பக்கத்து வடலிக் கடவைக்கு சேர்வைக்காக போன சின்னப்பொடி இளைக்கக் களைக்க ஓடிவந்தான்.

''கந்தன் கோத்தையும் இளையவனும் கிணத்துக்கை கிடக்கினம்!'' என்று கத்தினான்.

கந்தன் கடவைக்குள் புகுந்து கிணற்றடிப்பக்கம் ஓடினான்.

எட்டிப் பார்த்தான்!

ஐயோ! ஆத்தே என்று மட்டும் கத்தினான். உள்ளேயும் குதித்துவிட்டான்!

அங்குமிங்குமாக ஆட்கள் ஓடிவந்தனர். சேர்வைக்கார சின்னப்பொடி கிணற்றுக்குள் பாய்ந்துவிட்டான்.

அப்புறம்...

கந்தனை அவன் உயிரோடு மீட்டு எடுத்துவிட்டான்.

செல்லியினதும் இளையவனதும் பிணங்கள் வெளியே எடுத்துப் போடப்பட்டன. கந்தனுக்கு சுய அறிவு வர இரண்டு நாட்களாகிவிட்டன.

அறிவு வந்தபோது அவன் மிரள மிரள விழித்தான்!

ஏதேதோ பேசினான்.

பேச்சு தெளிவாக இல்லை. கடவாயில் இருந்து வீணீர் வடிந்தது. அன்றிலிருந்து... அந்த மிரண்ட விழியும் தெளிவற்ற பேச்சும், வீணீர் வடியும் வாயும், மூக்கும்.

சிதேவி அம்மாளுடன் சேர்ந்த வந்து சுட்டிபுரத்தில் புடம் போடப்பட்டு அம்மாளின் வீட்டோடு ஒட்டிக் கொண்டான். இன்று அவனுக்கு வயது பத்துக்கு மேல் ஆகிறது.

இப்போதும்...

அந்த மிரண்ட விழி!

வீணீர் வடியும் வாய், மூக்கு !

தெளிவற்ற பேச்சு...!

அப்படியேதான்.

///

# 11

செல்லனும், செல்லியும் இளையவனும் செத்துப்போய் வருடம் ஒன்றுக்கு மேலாகி விட்டது. செல்லனினதும், செல்லியினதும் மரணங்களுக்கான காரணங்களை இத்தினியால் ஓரளவுக்கு ஊகிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால்... இளையவனது மரணத்தையும், கந்தனுக்கு அந்த நிலைமை வந்ததையும் அவளால் யூகிக்க முடியவில்லை.

செல்லன் தூக்குப் போட்டுக் கொள்வதற்கு இரண்டு நாட்களுக்குமுன்...

''இத்தினி ஆச்சி, நான் என்னணை

செய்ய! கற்பூரச் சட்டியை என்னெண்டணை அணைக்க? அந்நாள் என்னை விடாது போலை கிடக்கு!'' என்றானே செல்லி.

கந்தன் தூக்குப் போடுவதற்கு முதல் நாள் மத்தியானப் பால் கொடுக்க வந்திருந்தபோது... கண்ணீர் வழிய ''இத்தினியாச்சி...! அந்தாள் என்னிலை ஐம்மிச்சப்படுகுது போலை கிடக்கணை! நான் என்ன செய்ய; இந்தக் கொழுந்தர் நயினாரும் எனக்குப் பின்னாலை நெடுகத் திரியுது!'' என்றாலே செல்லி...

இவைகள் அவர்களின் சாவுக்கு சாட்சிகளாயின. ஆனால் மூத்தவன் இருக்க செல்லி இளையவனைத் தன்னோடு கொண்டு போனதற்குக் காரணம் இத்தினிக்குப் புரியாமல் இருந்தது.

எல்லுப்போலையும் இத்தினியும் கோஜ் வண்டியில் கண்டிக்குச் செல்ல ஏற்பாடு செய்தபோது கந்தனையும் கூட்டிச் செல்லத்தான் இத்தினி விருப்பப்பட்டாள். ஆனால் அந்த விருப்பத்தை அவளால் நிறைவேற்ற முடியவில்லை.

சோவியக்குடிமையாகிய தங்களையே கோஜ் வண்டியில் ஏற்றுவதற்கு தர்க்கம் நடந்துகொண்டிருந்தவேளை பள் கந்தனையும் கோஜ் வண்டியில் ஏற்றுவதென்றால்...

இத்தினி சீதேவி அம்மாளிடம் இலேசாக வாய்விட்டுக் கேட்டாள். அப்போது சீதேவி அம்மாள் பார்த்தாலே ஒரு பார்வை! அத்துடன் அந்த விருப்பம் அவளுக்குப் போய்விட்டது.

கண்டிக்குக் கோஜ் வண்டி புறப்பட்டபோது வீணீருடன் போட்டி போட்டுக் கொண்டு கண்ணீரையும் வடித்து விம்மிப் புடைத்து விக்கி, விக்கி நின்றானே கந்தன்; இந்த மனச் சுமைகளை இறக்கி வைப்பதற்கிடையில்தான் உசன் வெளியில் எல்லிப் போலையனைக் கொன்று இத்தினியையும் கந்தனைப்போல் ஆனாதையாக்கிவிட்டார்களே!

எல்லிப்போலையனை மந்துவில் புழுதி மண்ணிற்குள் புதைத்துவிட்டு பின்வளவுக் கொட்டிலுக்குள் கிடந்த இத்தினிக்கு கந்தன் மட்டும் துணைக்கு இருந்திராவிட்டால், அவள் அழுது அழுதே செத்திருப்பாள்.

ஒரு நாள் சீதேவி அம்மாளுக்கு கடும் சுகயீனமாக இருந்தது. வேலுப் பிள்ளையரின் செல்வாக்கினால் பரஞ்சோதிச் செங்குந்தர் சிவிகையில் ஏற்றி வரப்பட்டார்.

பரஞ்சோதியர் இராச வைத்தியராக இருந்ததினால் தான் சிவிகை தூக்குபவர்கள் அவரை மட்டும் காவ சம்மதித்தனர். இராசகாரியம் என்பதனால் வேறு எந்தச் செங்குந்தருக்கும் அவர்கள் சிவிகை காவுவதில்லை.

சீதேவி அம்மாளைப் பார்க்க வந்த இராச வைத்திய ருக்கு முன்னால் கந்தனுக்கு வலி வந்துவிட்டது.

இத்தினி இராச வைத்தியரின் காலில் விழுந்து கெஞ்சினாள், கந்தனை ஒருதடவை பார்க்கும்படி.

கந்தனை அவர் நேரடியாக நாடி பிடித்துப் பார்க்கக் கூடாது! தேச வழமை அப்படி! வேலுப்பிள்ளையரிடமிருந்து காசாத் துண்டொன்றைப்பெற்று கந்தனின் நாடித்துடிப்பை அவர் ஆராய்ந்தார். வெகுநேரம் ஆராய்ந்தார். முடிவில் அவன் வரலாற்றினை இத்தினியிடம் கேட்டார். தெரிந்த வற்றை இத்தினி சொன்னாள்.

அவன் நல்லாப் பயந்து போனான். அதுநரம்பு வருத்தத்தைக் கொண்டு வந்திட்டுது. நாளைக்கு வேலுப் பிள்ளையரெட்டை எண்ணை கொஞ்சம் குடுத்து விடுகிறன். ஏழு நாட்களுக்கு ஒருக்கா உடம்பெல்லாம் பிரட்டி ஊற விட்டு தாமரைக் குளத்திலை ஆறு மாசத்திற்குத் தோய பார்த்தால் அது மாறிப்போகும்.

இராச வைத்தியர் கந்தனுக்கு கருணை காட்டிவிட்டார்

இராச வைத்தியர் புறப்பட்டபோது, எல்லுப்போலை யனைக் கட்டியபோது சீதனமாக காலில் அணிந்து வந்த வெள்ளிக் காப்பினை காலில் இருந்து கழற்ற முடியாமல் பழப்புளி போட்டு மிகவும் வருத்தத்துடன் கழற்றி வைத்தியரிடம் நீட்டினாள் இத்தினி.

"என்னடி அது?" என்று அதட்டினார் வேலுப் பிள்ளையர்.

"அது அது... என்ரை காப்பாக்கும் பரியாரி நயினாருக்கு குடுக்கவெக்கும்..." என்று இழுத்தபடி கூறிய இத்தினியை வேலுப்பிள்ளையர் எரித்துவிடுவதைப்போல் பார்த்தார்.

இராச வைத்தியர் மனதிற்குள் சிரித்தபடி கூறினார். "இஞ்சேரும் வேலுப்பிள்ளையர்' அவள் கோவிச்சி எண்டாலும் ஆருக்கும் கடமைப்படக்கூடாது எண்டு நினைக்கிறாள். விடும் அவளோடை சண்டைக்குப் போகாதையும்."

இதற்குமேல் இராச வைத்தியரை சுமந்து கொண்டு சிவிகை புறப்பட்டுவிட்டது.

இத்தினியின் நெஞ்சை எதுவோ அமுக்கியது. தான் செய்தது பிழைதான் என்று அவள் மனது ஒப்புக்கொள்ள வில்லை. தனது பழைய நயினார் மழுவராயர் என்றால் காப்பைத் தாமே வாங்கி வைத்துக் கொள்ளுவார். இதை நினைத்தபோது வேலுப்பிள்ளையர் மேல்!.....

மறுநாள் பட்டணம் போன வேலுப்பிள்ளையர் கந்தனுக்கான என்னை நிறைந்த தேங்காய் சிரட்டையை எடுத்து வந்து இத்தினியிடம் கொடுத்தார்.

முழுத் தேங்காயின் பெரிய கண்ணைத் திறந்து அதிலிருந்து தேங்காயை அப்புறப்படுத்தி சுத்தமாக்கிய சிரட்டைக் குவளையின் கண்களை மரக்கட்டையால் இறுக

அடைத்து மிகப் பக்குவமாக இராச வைத்தியர் அனுப்பி யிருந்தார்.

அன்று திங்கட்கிழமை!

பன்றித்தலச்சி அம்மன்விழாத் தொடக்கத் திங்கள். நல்ல நாள்!

அவசர அவசரமாக கந்தனைக் குடிலுக்குள் வைத்து அவன் உடம்பெல்லாம் எண்ணை தடவி உருவினாள் இத்தினி.

உடம்பில் பட்ட எண்ணை கந்தனுக்கு ஒருவித அருவருப்பைத் தந்தது. ஆனாலும் அவள் அவனை மடக்கி, மடக்கி எண்ணையை உடம்பெல்லாம் தடவிவிட்டாள்.

பின்பு... இராச வைத்தியர் சொன்னபடி அரை நாட் பொழுது கழித்து அவனைத் தாமரைக் குளத்தில் குளிப்பாட்ட வேண்டும்.

தாமரைக் குளம்?

இதை இத்தினி முதலில் நினைக்கவில்லை.

பக்கத்து வயல் பரப்புக்குள் ஒரு தாமரைக்குளம் இருக்கிறது. அந்தக் குளத்தில் தான் பக்கத்திலுள்ள நயினார், நயினாத்திகள் குளித்து முழுகுவார்கள். சற்றுத் தள்ளி வேறோர் அல்லித் தாமரைக்குளம் இருக்கிறது.

அங்கே .....

அங்கே... கொல்லர், தச்சர் என்ற இடைப்பட்ட சாதியினர் குளித்து முழுகுவார்கள். சற்றுத் தொலைவில் ஒரு பரவைக் குளம் இருக்கிறது. அங்கே மற்றச் சாதியினர் முழுகி எழுவார்கள். ஆனால் அதற்குள் ஆம்பல்பூதான் படர்ந்திருக்கிறது.

வைத்தியர் வற்புறுத்திச் சொன்னது தாமரைக் குளத்தை! இத்தினி இப்போதுதான் யோசித்தாள்.

கந்தனை முழுக வைக்க முடியாது... அவள் மனதால் ஏங்கினாள்.

கந்தன் அவள் பெற்ற பிள்ளை அல்ல. ஆனாலும் அவளால் கற்பூரச் சட்டியில் சத்தியம் செய்யப்பட்டு, அந்த பலாத்காரமான சத்தியத்திற்காக, அதைக்காக்க செல்லன் பக்கமே போகாமல், அவனுடன் படுக்காமல் இதன் காரண மாக அவனையும், தன்னையும்... போதாக் குறைக்கு, அந்தச் சின்னஞ்சிறு பாலகனையும் அழித்துக் கொண்டவள் செல்லி அவளின் மகன் கந்தன் அனாதையாகப் போன தற்கு தானே் காரணமானவள் என்று அவள் மனம் குமுறிக் குமுறி அழுதது!

அவனின் இந்த வலிப்பு!

அவனின் இந்த வீணீர் !

அவனின் இந்த உழறல் !

எல்லாவற்றுக்கும் தானே காரணம்! பொறுப்பாளி என்று அவள் முடிவு செய்தாள். கந்தனை எப்படியும் குணம் ஆக்கிவிட வேண்டும்.

எப்படியும் கந்தனை தாமரைக் குளத்தில் முழுக்காட்ட வேண்டும்.

ஒரு நாள் இரண்டு நாள் அல்ல.

ஒரு மாசம் இரண்டு மாசமல்ல.

ஆறு மாதத்திற்கு...

மதியம் போல் எண்ணை தடவியவள் இரவு வரும்வரை காத்திருந்தாள். வீட்டுவேலைகள் எல்லாவற்றையும் முடித்து விட்டு ... மாலை வெள்ளி படுவான் கரைக்கு போகும்வரை கந்தனை பல வழிகளிலும் நித்திரையாக விடாது, விழிப் பாக்கி பின் அவனைக் கையில் பிடித்தபடி, குடிசைப் படலையை சாத்தி முடிச்சு வெளியே தெரியாமல் உள்ளே

நகர்த்திவிட்டு வயல் வரம்பைத் தாண்டிப் போனபோது ...... குளத்தில் யாருமே இல்லை!

அவசர அவசரமாக கந்தனைக் குளத்தில் இறக்கினாள். கொண்டு வந்த கைப்பட்டையால் அவனை முழுக்காட்டினாள். ஊத்தை உழக்கினாள். அவசர அவசரமாக அவனைத் தண்ணீரில் மூழ்கி எழும்படிச் செய்தாள்.

கந்தனுக்கு இந்த அவசரங்களின் முக்கியம் புரியவில்லை அவன் எதை எதையோ வாய் குளறக் கேட்டான். குரல் வெளியே வராதபடி அவன் வாயை அவள் பொத்தினாள்.

ஒரு மாதிரி முழுக்கு முடிந்தது.

கந்தனை இழுத்துக்கொண்டு அவள் ஓட்டமும் நடையுமாக தன் குடிசைக்கு வந்து சேர்ந்துவிட்டாள்.

அப்பாடா...! தாமரைக்குளத்து முழுக்கு முதல் முழுக்கு ஒரு மாதிரி ஒப்பேறி விட்ட மகிழ்ச்சி அவளுக்கு.

அடுத்த வாரம்!

முன்னிலவு!

முன்னிலவு பட்டுவிடும் நேரம். அதற்காகக் காத்திராமல் கந்தனுடன் இத்தினி தாமரைக் குளத்தடிக்குப் போய் விட்டாள்.

குளத்தடி வெறிச்சோடிக் கிடந்தது. இத்தினி கந்தனை அவசர அவசரமாக முழுக வைத்தாள்.

அப்போது...

வயல் வரம்புகளால் யாரோ நான்கைந்து பெண்கள் பேசிச் சிரித்துக்கொண்டுவரும் ஓசை கேட்டது.

இத்தினிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தண்ணீருக்குள் தலைகளைப் புதைத்துக் கொள்ள முடியுமா?

''ஆரோ இரண்டு பேர் குளிக்கினம் போலை!'' இப்படி ஒரு குரல்.

"ஆர்.எங்களுக்குத் தெரியாமல் பெட்டையளெல்லாம் பொழுது படேக்கைகுளிச்சிட்டுப் போட்டாளவை..." இப்படி வேறோர் குரல்!

"ஆர், உதிலை குளிக்கிறது?"

இத்தினி எதுவுமே பேசவில்லை. கந்தன் கொன்னைத் தனமாகப் பதில் சொன்னான்.

"எட, பள் கந்தன்!"

"மற்றதார்? எட, இத்தினிக் கோவிச்சி!"

"வாடி வேசை வெளியாலை!"

இக்குரல் உரக்கக் கேட்டது. இத்தினி கந்தனையும் பிடித்துக் கொண்டு வெளியே வந்தாள். மற்றவள் இத்தினியின் முகத்தில் 'பளார்' என அடித்தாள். கந்தன் அடித்தவள் மேல் தாவிப் பாய்ந்தான்!

வெறொருத்தி அவனைப் பிடித்துக் குளக் கட்டுக்கு வெளியே தள்ளினாள்.

"எடி எடி வாருங்கோடி: விடிய வேலுப்பிள்ளை மருமோனோடை கதைப்பம்."

வேலுப்பிள்ளை மருமோனோடை கதைக்கிறதோ... அவர் பொம்புளை மயக்கத்திலை கிடப்பார். கள்தப்பு அம்மானோடை கதைப்பம்!"

"கயிலாயபிள்ளை அத்தானோடை கதைச்சுப் போட்டு தான் கதைக்கவேணும்."

இதற்கு மேல் அங்கு ஒன்றும் நடக்கவில்லை. பெண்கள் கூட்டம் குளிக்காமலே போய்விட்டது.

கந்தனையும் இழுத்துக் கொண்டு இத்தினியும் வந்து விட்டாள். பாதி முழுக்காவது நிலைறவேறிவிட்டதே என்ற திருப்தி!

மறுநாட்காலை வேலுப்பிள்ளையர் உத்தியோகத்திற் காகப் புறப்பட்டுப் போய் விட்டதின் பின்பு, பெரிய

கமக்காரன் வீட்டுக்கு கயிலாய பிள்ளையரும் அவரின் நான்கைந்து பேர்களும் வந்து சேர்ந்தார்கள்.

சுட்டிபுரம் அம்மன் கோவிலில் வைத்து கந்தன் தொட்டித் தண்ணீரில் கை வைத்ததற்காக அவனை அடித்த போது, புத்தூர் சம்பந்தி முதலி சின்னத்தம்பியின் பக்கச் சார்பில் நின்று கயிலாய பிள்ளையரைக் கண்டித்ததில் இருந்து இவருக்கும் கயிலாய பிள்ளையருக்கும் மன உடைவு ஏற்பட்டிருந்தது. அத்துடன் உசன் வெளியில் பெண்பிள்ளை மாப்பிள்ளை கோஜ் வண்டியை மறித்து எல்லுப்போலையை அடித்துக் கொலை செய்ததற்கும், கயிலாயபிள்ளையர் தான் பொறுப்பானவர் என்ற வதந்தியும் ஊரில் இப்போது பரவி வந்ததனாலும் இந்த மனவிரிசல் விரிவடைந்து இருந்தது. இருந்தாலும் வீட்டுக்கு வந்தவனுடன் மனவிரிசலைக் காட்டுவது சரியாகப் படாததினால் கயிலாயரை அவர் வரவேற்றார்.

''என்ன குஞ்சியப்பூ! இவள் புத்தூர் கோவிய இத்தினியாலை ஊர் அழியப்போகுது. ஒண்டில் நீ அவளைக் கட்டுப் படுத்தவேணும். இல்லாட்டி மற்றவையிட்டை விட்டிடவேணும்.''

எடுத்த எடுப்பிலேயே கயிலாயபிள்ளையர் கந்தப் பனாரை மரியாதை கொடுக்காமல் பேசினார்.

கந்தப்பருக்கு கயிலாயபிள்ளையர் பேசிய விதம் பிடிக்கவில்லையாயினும் விஷயம் என்ன என்பது விளங்கவில்லை.

''நீ சொல்லுறது ஒண்டுமாய் விளங்கேல்லை. இத்தினி என்ன செய்து போட்டாள்?. வெளியாச் சொல்லன்!''

கந்தப்பரும் மரியாதை கொடுக்காமலேயே கேட்டார்.

''உன்ரை மோன்ரை சீதனக் கோவிச்சி பிள்ளையர் கோயில் தாமரைக் குளத்துக்கை இறங்கிப் போட்டாள்.''

''எட, உதைச் சொல்லவே வந்தநீ? ஊர் அடங்கினாப் பிறகு குடிமைக் கோவியர் குளத்துக்கை இறங்கித்தானே

குளிச்சு முழுகிறனைவ்! பரம்பரை பரம்பரையாக கண்டதும் காணாததுமாக விட்டு - வந்திருக்கிறம். அதுக்கேன் இப்பிடித் துள்ளுறாய்?

அதுக்காகத்தானே மேற்குப் பக்கத்துக் குளக்கரையிலை எங்கடை ஆக்கள் குளிக்கிறேல்லை... ஏதோ புதிசா நடக்கிற மாதிரியெல்லே கதைக்கிறாய்?''

''ஓ... புதிசாத்தான் நடந்திருக்கு. உவன் வெருளி பள் கந்தனையும் கொண்டு போயெல்லே குளத்துக்கை இறக்கியிருக்கிறாள். எங்கடை பெண்டுகள் இத்தினியைக் கொண்டிருப்பாளவை; விட்டிட்டாளவை!''

கந்தப்பர் சற்று மௌனமானார்.

கயிலாயபிள்ளையரே மீண்டும் பேசினார். ''பல்லக்கு முதலியெண்டால்... உனக்குத்தான் தலைப்பு! எங்களுக் கில்லை. அவள் அந்த சிறைக்குட்டியளை எங்கடை ஊருக்கை மேய்கிறதுக்கு சட்டமில்லை. அது அவன்ரை புத்தூரிலைதான். அவன்ரை எண்ணத்துக்குப் பாத்து மேய்க்கிறது.உவன் கந்தன் பல்லக்கன்ரைபள்ளிபுள்ளையோ ஆருக்குத் தெரியும்?.''

கந்தப்பர் பேசவில்லை.

''பல்லக்கனும் முந்தி ஆரோ சிவலைப் பள்ளனுக்குத் தான் பிறந்தவனெண்டும் கேள்வி.''

சயிலாயபிள்ளையரின் இந்தப் பேச்சை கந்தப்பரால் பொறுக்க முடியவில்லை,

''டேய்! கயிலாயா! எழும்படா... போடா வெளியாலை!'' என்று அவர் பலமாக இரைந்தார்,

இந்த இரைச்சல் கேட்டு உள்ளே இருந்து சிதேவி ஓடி வந்தாள். தன் தந்தையை சிவலைப் பள்ளனுக்குப் பிறந்தவரெண்டு கயிலாய பிள்ளையர் பேசியது அவளுக்குக் கேட்டது. தொடர்ந்து மாமன் இரைந்தது கேட்டது.

"என்னடா சொன்னனி...? வேசைமோனே!... அப்பு பள்ளனுக்குப் பிறந்தவரோ? தூமைச்சீலை போடா வெளியாலை. விளக்குமாத்தாலைதான் ஆலாத்துவன்; போடா வெளியாலை!" என்று கீச்சிட்டாள் அவள்.

கயிலாயபிள்ளையருக்கு இப்படி ஒரு அவமானம். அதுவும் புத்தூரராள் தூமைச்சீலை எண்டும் விளக்குமாத் தாலை ஆலாத்துவன் என்றும் பேசிப் போட்டாள். மாபெரும் அவமானம்!

கணத்தில் கயிலாயபிள்ளையர் வந்தவர்களுடன் வெளியேறிவிட்டார்.

அதிகாலையோடு வந்து வீட்டுக் காரியங்களைக் கவனித்துவிட்டு தனது கொட்டிலுக்குப் போன இத்தினி கொட்டிலுக்குள் இருந்தே இந்தப் பேச்சு வார்த்தைகளைக் கவனித்துக் கொண்டாள்.

எல்லாம் அவளுக்கு முன் கூட்டியே விளங்கிவிட்டது. இரவு குளிக்க வந்த பெண்கள் கயிலாயபிள்ளையை அனுப்பிருப்பது பட்டென்று விளங்கியது.

கயிலாயபிள்ளையர் கந்தப்பருடன் சண்டை போட்டுக் கொண்டு போவார் என்பது மட்டும் அவளுக்குத் தெரியாது. ஆனால் கணவன் எல்லுப்போலையை உசன் வெளியில் அடிச்சுக் கொன்றதற்கு கயிலாயபிள்ளைதான் கர்த்தா என்றும் பல்லக்கு முதலியின் கோபத்திலிருந்து கயிலாய பிள்ளையர் தப்பிவிட முடியாதென்றும் அது எவருக் கூடாகவும் பிரதிபலிக்கும் என்றும் அவளுக்கு ஒரு ஊகம் இருந்தது.

சிதேவிப்பிள்ளையின் கடைசிக் கூச்சல்; தூமைச் சீலை வேசைமோனே! விளக்குமாத்தாலை தான் ஆலாத்துவன்! என்ற வார்த்தைத் துண்டுகள் — அவளைத் துணிவாக கமக்காரன் முன் போகத் தூண்டியது. அவர் கூப்பிட்டு விசாரிக்குமுன் தானாகவே போனாள்.

விறாந்தைப் பிரம்புச் சாய்மனையில் அவர் கால்களை நீட்டிக் கொண்டு பொய் உறக்கம் செய்தார்.

''என்னடி இத்தினி, ராவு என்ன நடந்தது?'' என்று அவக்கெனக் கதவைத் திறந்து கொண்டுவந்த சீதேவி அம்மாள் கேட்டாள்.

''அது... நாச்சியார்... அது... இத்தினி இழுத்தாள்.

''அது... அது எண்டால் எனக்கு விளங்குமே! கயிலாயன் ஏதோ சொல்லிப் போட்டுப் போறான். நீ சொல்லு என்ன நடந்தது?'' சீதேவி அம்மாள் சற்று அழுத்தமாகக் கேட்டாள்.

இத்தினி நடந்தவற்றை அப்படியே சொன்னாள் இதுவரை கண்களை மூடிக்கொண்டிருந்த கமக்காரன்,

''எண்டாலுமெடி இத்தினி நீ குளத்துக்கை இறங்கினதிலை பிழை இல்லை. அவன் பள்ளனை ஏனடி இறக்கின நீ?'' என்று கேட்டார்.

''ஓ, அவள் பள்ளனை இறக்கினா இவன் கயிலாயனுக்கு என்ன? இவனென்ன கேக்கிறது'' சீதேவி அம்மாள் சீறினாள்

''மருமோள் நல்லா ஆத்திரப்படுகுது போலை கிடக்கு. அந்த மடையனும் கதைக்கத் தெரியாமல் புள்ளையின்ரை தேப்பனை இழுத்துக் கதைச்சுப் போட்டான். சரி, விடு பிள்ளை! ஊரோடை பகைக்கேலுமே? இத்தினி! பரியாரி சொன்னமாதிரி எண்ணெயை வைச்சுப் போட்டு தாமரைக் குளத்துக்கை கந்தனை குளிப்பாட்ட வேணுமெண்டா... ஒவ்வொரு சனியும் நீ அவனைக் கூட்டிக்கொண்டு ஒரு ஐஞ்சு கூப்பிடு தூரம் தானே வரணிச் சந்தைக்கு அங்காலை இருக்கிற நளவற்றை குளம். அங்கை கூட்டிக்கொண்டு போய்க் குளிப்பாட்டன்.''

கந்தப்பர் பேசி முடித்தார்.

சீதேவி அம்மாள் கழுத்தை உள்ளே முறித்துவிட்டு மடக்கி சென்றுவிட்டாள். இத்தினியும் வந்துவிட்டாள்.

அடுத்த சனிக்கிழமை வந்தது.

வேளையோடு வீட்டுக் காரியங்களை முடித்துவிட்டு இத்தினி கந்தனுக்கு எண்ணை பிரட்டிவிட்டு மத்தியானப் பொழுதுடன் அவனை நளவ குளத்தடிக்கு அழைத்துச் சென்றாள்.

கந்தப்பர் சொன்னபடி அது ஐந்து கூப்பிடு தொலை வல்ல. ஐந்து மணி நேரப் பயணத் தொலைவு!

இத்தினியும் கந்தனும் குளத்தடிக்குச் சென்றபோது பொழுது சரிந்து வெகுநேரம் போய்விட்டது.

குளத்தைப் பலர் நிறைத்திருந்தனர். முழுகுவதற்காக கச்சைக்கட்டுடன் எண்ணை தேய்த்தபடி ஒருத்தன் குளத்தங் கரை மருத மரத்தின் கீழ் இருந்தான்.

இத்தினியைக் கண்டதும் அவன் அசைந்து எழும்பி... "என்னணை இத்தினியார் இந்தப் பக்கம்?" என்று விசாரித்தான். இத்தினியும் சற்று வேளைக்குள் அவனை அடையாளம் கண்டு கொண்டாள்.

"அண்ணாவியர், சுகம் எப்பிடி?" என்று அவளும் குசலம் விசாரித்தாள்.

அண்ணாவி செல்லனை அவளுக்கு முன்னமே தெரியும். கந்தனின் அப்பன் செல்லன் சாராயப் பூதியாக நடித்த காத்தான் கூத்தை நெறிப்படுத்துவதற்காக வரணியிலிருந்து செல்லனை ஒழுங்குபடுத்திக் கொடுத்தவர் பல்லக்கு முதலியர்தான்.

அப்போது அந்தக் கூத்தின் பழக்கங்கள் செல்லன் கொட்டிலுக்கு முன்னால் உள்ள மாமரத்தின் கீழ்தான் நடந்தன. அப்போது இத்தினி அவனைக் கண்டிருக்கிறாள். எல்லுப்போலையன் கூட அண்ணாவியுடன் சினேகமாக இருந்திருக்கிறான்.

முதலில் எல்லுப்போலையனின் கொலையைப் பற்றிப் பேசி, அதைச் செய்விச்சவர் கயிலாயபிள்ளை நயினார்தான்

என்பதையும் சொல்லிக் கறுவி, இத்தினிக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்ட அண்ணாவி, அப்போதுதான் கந்தனை யார் என்று விசாரித்தார்.

கந்தனை அறிமுகப்படுத்திய இத்தினி அவனின் பரிதாப கதையையும் கூறி முடித்தாள்.

முதல் முதல் செல்லன் தூக்குப் போட்டுச் செத்ததையும் செல்லியும், கடைக்குட்டியும் கிணற்றுள் குதித்துச் செத்துப்போனதையும் அறிந்த அண்ணாவி,

''அப்பிடியெண்டா செல்லி ஏதோ பிழை விட்டிட்டாள் போலை கிடக்கு'' என்று தனது மனக்கிளர்ச்சியை சொல்லி முடித்தார்.

இத்தினிக்கு மனது உருகியது.

அதை உடனடியாக இல்லையென்று மறுக்க அவள் அவனுக்கு எத்தனை நியாயங்கள் சொல்லவேண்டும்! ஒரு பெண்ணால் அவைகளையெல்லாம் சொல்லத்தான் முடியுமா?

கதையோடு கதையாக கந்தனை முழுக்காட்டி முடிய பொழுது கருகிவிட்டது.

அத்துடன் கூச்சம் பயம் எதுவுமின்றி அண்ணாவியனின் பணிப்பின்பேரில் ஒருத்தி சுற்றிக் கொள்ளத் துணி கொடுக்க சீலை தோய்த்து காற்றில் உலரவிட்டு இத்தினியும் தாராளமாக தோய்ந்து முடித்துவிட்டாள்.

இருட்டத் தொடங்கிவிட்டதும் அண்ணாவியனுக்கு இப்போது பிரச்சனையாகி விட்டது. இத்தினியையும் கந்தனையும்இருட்டியபின் தனியே போகவிட அவனுக்கு மனது இடம் தரவில்லை. அவர்களை தடுத்து நிறுத்தி காலையில் அனுப்புவதென்றாலும்... அதுவும் சரியானதாகப் படவில்லை. இத்தினிக்கும் அதிகம் வயதில்லை. நாப்பத்தொன்றுக்குள்தான் இருக்கும். அது ஒரு காரணம். அடுத்தது

அவள் கோவிச்சி நளவ வீட்டில் அவளைத் தங்க வைக்க லாமா? சிலவேளை அதற்கு இத்தினி சம்மதித்தாலும் அண்ணாவியனின் மனைவியானவள் ஒரு காந்தாரி! இவ்வளவு நேரம் இத்தினியுடன் பேசிக்கொண்டிருந்ததைக் கேள்விப் பட்டாலே அவள் அவனின கற்பின் மீது பழி சுமத்திவிடுவாள்.

''எணை இத்தினியார்! நானும் உங்களோடை வாறன். கூட்டிக்கொண்டு போய் விட்டிட்டு வாறன்.''

இத்தினி அதை மறுத்தாள். நிலவு வெளிச்சம்! தாங்கள் போய்விடுவதாக அவள் சொன்னாள். அண்ணாவியன் அதைக் கேட்கவில்லை. புல்தரைகளுக்கூடாக குறுக்கு வழியைப் பிடித்து அண்ணாவியன் அவர்களை அழைத்துச் சென்றான். அந்த வேளை அவனுடன் செல்ல இத்தினிக்கு மனது ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. ஆயினும் அதை அதிகம் காட்டிக் கொள்ளவில்லை.

பறுவத்திற்கு இன்னும் நான்கோ ஐந்தோ நாட்கள் தான் இருந்தன. தலைச்சோளகக் காற்று கணகணப்பாக இருந்தது. வான முகடும் களங்கமில்லாமல் இருந்தது.

''ஏண்ணை இத்தினியார் அங்கினேக்கை ஒரு குளத் திலை தோய வாக்காமல் இவ்வளவு தூரம் கூட்டிக்கொண்டு வந்தநீ?'' என்று அண்ணாவி கேட்டான்.

இப்போது இதற்கான காரணத்தை இத்தினி சொல்ல வேண்டியதாயிற்று. கயிலாய பிள்ளையரும் சீதேவி அம்மாளும் வாக்குவாதப் பட்டதையும் பல்லக்கு முதலியை இழுத்துப் பேசியதையும் சேர்த்து சொல்லி முடித்தாள்.

அண்ணாவியனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

கயிலாய பிள்ளையரைப் பற்றி அவன் பல தடவைகள் அறிந்திருந்தான். சுட்டிபுரம் அம்மன் ஆலயத்தில் அவர் செய்யும் அட்டகாசம் பற்றி அண்ணாவியனுக்கு நன்றாகத்

தெரியும். கொடிகாமச் சந்தையில் கையாட்களை வைத்து பஞ்சமச் சாதியினரை அவர் அடக்கி ஆள்வதை அவன் அறிந்திருந்தான்.

ஒரு தடவை இவனின் ஒன்றுவிட்ட அண்ணனானவன் கொடிகாமச் சந்தைக்கு தேங்காய் விற்பதற்காக சாக்கை தலையில் சுமந்து சென்றிருக்கிறான். அப்போது ஒழுங்கை யடியிலுள்ள தெருப்பிள்ளையார் கோயிலடியில் கயிலாய பிள்ளையும் அவரது ஆட்களும் நின்றிருக்கிறார்கள்.

தேங்காய் சுமந்து சென்றவன் தலையை நெரிடாமல் நலமுண்டு துண்டுக் குறிச் சால்வையை தலையில் வைத்துத் தான் சாக்கை சுமந்து சென்றிருக்கிறான். சயிலாயருக்கு வந்ததே கோபம்; அவனைத் தடுத்து நிறுத்தி தன்னை மதியாமல் சால்வையை தலையில் போட்டுச் சென்றதற்காக அவனை வேகும் வெய்யிலில் முழந்தாளில் இருத்தி அண்ணாந்து பார்க்கச் செய்து நெற்றியில் கால் சல்லிக் காசை ஒட்டி குறிப்பீட்ட நேரம வெய்யிலில் இருக்க வைத்த சம்பவம், அண்ணாவியனுக்குத் தெரியும்.

மந்துவில் பகுதிக்கு காத்தான் கூத்து பழக்குவதற்காக அவன் சென்றிருக்கிறான். ஒவ்வரு பழக்கத்திற்கும் பழக்கும் இடத்தில் தவசியக் குட்டித்தம்பி இருப்பானென்றால் கயிலாயபிள்ளையர்தான் கூத்து வைக்க அங்கீகரித்து விட்டார் என்று அர்த்தம்.

எண்ணிக்கைக்குக் குறைவான தவசியச் சாதிக் குடும்பங்களில் கயிலாயபிள்ளையருக்கு அடியாட்கள் மிக அதிகம். அதுவும் தவசியக் குட்டிகளை தலைச்சனாகவும் ஆக்கி வைத்துக் கொண்டார்.

பஞ்சமர்கள் கோவிலுக்கு நேர்த்தி நிறைவேற்றுவதில் ஒருவித வழக்கம். குழந்தைகளுக்கு நோய் நொடி வந்துவிட்டால்... அது குணப்பட அம்மனுக்கு காவடி

எடுப்பதாக நேர்த்தி வைக்கப்படும். நேர்த்தியைநிறைவேற்ற கயிலாயபிள்ளையரிடம்தான் போயாக வேண்டும். அவர் தான் காவடி எடுக்கும் நாளையும், காவடி எடுப்பவனையும் நியமிப்பார். இவர்களுக்காக காவடி எடுக்க தவசியன் ஒருவன் நியமிக்கப்படுவான். கோலாகலமாக நேர்த்தி நிறைவேற்றப்படும். செலவு சித்தாயம் எல்லாம் நேர்த்தி வைத்தவர்களின் பொறுப்புத்தான்.

சுட்டிபுர அம்மன் சன்னிதானத்தின் வெளிச்சக் கூட்டு ஆலமர எல்லைக்கப்பால் நேர்த்தி வைத்தவர்களும் அவர்கள் பரம்பரையினரும் நிற்க, இவர்களுக்காக காவடி எடுக்கும் தவசியன்தான் கோவில் வரை சென்று பூசாரி யினால் காவடியை இறக்குவிப்பான்.

ஊரில் ஏதாவது கல்யாண சுபகாரியங்கள் நடப்ப தானால் அது கயிலாயபிள்ளையரின் ஆணைக்குட்பட்டே நடக்கும்.

பொழுது உதயத்திற்கு கயிலாயபிள்ளையரின் வீட்டு வளவிற்குள் எல்லைக்கோட்டுக்குள் சிறைக் குட்டிகள் நிற்பாராகின் ஏதோ சுப காரியத்திற்கு அவரின் அனுமதி கோரப்படுகிறது என்றுதான் அர்த்தம்.

வாய்க்குள் ஆலம் குச்சியை செருகிப் பல் துலக்கியபடி அவர் தரிசனம் கொடுப்பார். இவர்களுக்காக யாராவது ஒரு தவசியன் பெண்பிளை மாப்பிளைகளை அறிமுகப் படுத்துவான். சில சமயங்களில் உடனடியாகவே தனது அனுமதியை அனாயாசமாகத் தந்துவிட்டு உள்ளே சென்றுவிடுவார்.

சில சமயங்களில் நாளைக்கு வியாழக்கிழமை நாளை மறுநாள் வாருங்கோ யோசித்துச் சொல்கிறேன் என்பார்.

குறிபிட்ட நாளில் மீண்டும் வந்தால், ''சரி, போய் சோத்தைக் குடுப்பியுங்கோடா!'' என்று பெரிய மனது பண்ணிக் கூறிவிடுவார்.

இவைகள் சகலதையும் சேர்த்த கூட்டுமொத்தமான கயிலாயபிள்ளையரை அண்ணாவிக்கு நன்றாகத் தெரியும்.

இத்தினி சொன்ன விபரங்களையும் கேட்டுக் கொண்டு வந்த அண்ணாவி மனதிற்குள் ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொண்டுதான் நடந்தான்.

பிள்ளையார் கோயில் குளத்தைத் தாண்டித்தான் இத்தினியின் குடிசைக்கு வர வேண்டும்.

குளத்தடி வந்துவிட்டது என்பதை குளித்துக் கொண்டிருந்த பெண்களின் குரல் வெளிப்படுத்தியது. நிலவு வெளிச்சத்தில் வெள்ளைத் தாமரைப் பூக்கள் நீண்ட தூரம் வெள்ளை பரப்பி இருந்தது தெரிந்தது.

''இனி நாங்கள் போவம் அண்ணாவி நீ எனிப்போவன்'' என இத்தினி சொன்னாள்.

''எடி, ஆரடி அதிலை வாறது!''

''இத்தினியும் கந்தனும் போலை கிடக்கு...''

''ஓமடி வேறையும் ஆரோ வந்திட்டுத் திரும்பிப் போறான் போலை கிடக்கு.''

''பல்லக்கு முதலியரை சந்திக்கத்தான் வேணும்.'' என்ற திடமான முடிவோடு அண்ணாவி திரும்பிப் போய்க் கொண்டிருந்தான்.

''எடி, நான் அண்டைக்குச் சொன்னனான்; அவளைக் கிழவி எண்டு நினைக்காதையுங்கோ எண்டு இப்பகண்டியே!''

''எடி மெல்லமாக் கதையடி. எக்கணம் கந்தப்ப அம்மான் அறிஞ்சா பெரிய வில்லங்கமாப் போயிடும்...''

இந்தப் பேச்சுகளையெல்லாம் காதில் வாங்கியபடி குளத்தங்கரை வரம்பால் இத்தினியும் கந்தனும் நடந்து சென்று மறைந்துவிட்டார்கள்.

///

# 12

நான்கைந்து நாட்களுக்குப் பின்பு ஊருக்குள் பெருங்கதை ஒன்று பரவியது.

புத்தூர் பல்லக்கு முதலி நேருக்கு நேர் சண்டைக்கு நாளும் இடமும் கேட்டு கயிலாய பிள்ளையருக்கு ஆள்விட்டிருப்ப தாகவும், கதை பரவியதென்ன... ஊரையே பற்றிப் பிடித்துவிட்டது;

பொதுவாக இந்தக்களறி பொது இட மான பன்றித்தலைச்சி அம்மன் கோயில் அடியில் நடைபெறக்கூடும் என்றும், அதுவும் பறுவத்திலன்று நடக்குமென்றும் பலர் ஆருடம் சொன்னார்கள்.

''பொது இடத்திலென்ன? பல்லக்கு முதலி கயிலாய பிள்ளையர் வீட்டுக்குள் புகுந்தே களறியைத் துவக்கிவிடக் கூடியவர்'' என்று பல்லக்கு முதலியை உயர்த்தியும் கயிலாய பிள்ளையரைத் தாழ்த்தியும் எழுந்த பேச்சுக்கள் கயிலாய பிள்ளையரைப் பலவீனப்படுத்தியிருக்க வேண்டும். நான்கு ஐந்து நாட்கள் அவரின் தலைக் கறுப்பையே காண முடியவில்லை.

கந்தப்பருக்கும் மகன் வேலுப்பிள்ளையருக்கும் மிகப் பெரிய சங்கடமாகி விட்டது. கயிலாயபிள்ளையரும் சீதேவியும் பொருத்திக்கொண்ட சொற்போர் முதலிக்கு எப்படி எட்டியிருக்கும்? என்பது இதுவரை கண்டுபிடிக்க முடியாத கேள்வியாகவே இருந்தது.

''இதோடை கயிலாயற்றை கொழுப்பை அடக்க வேணும்'' என்ற சீதேவியின் கருத்தை வேலுப்பிள்ளையர் அப்படியே பிரதிபலித்தார். கந்தப்பருக்கு இது முடியவில்லை ஆனாலும் கயிலாயபிள்ளையருடன் சமாதானம் போகவும் அவர் சற்றுக் கிலேசப்பட்டார்.

கந்தப்பரின் வில்லுவண்டி சம்மந்தி வீட்டுக்கு வந்து சேர்ந்தது. பல்லக்கு முதலியார் சம்மந்தியை வரவேற்றார். வந்த களைப்புத் தெளிந்து கந்தப்பர் பொதுவாகப் பேச்சு வார்த்தையைத் தொடங்கிவிட்டார்.

''சம்மந்தி நீங்கள் ஏன் வந்தநீங்கள் அவசரமாய் எண்டு எனக்கு விளங்குது! அவன் கயிலாயன் ஏதோ எல்லாம் சண்டித் தனக்கதை கதைச்சானாய், பல்லக்குமுதலியோடை சண்டித்தனம் விட அவ்வனாலை ஏலுமோ...? ஒருக்கா அவன்ரை எழுப்பத்தைப் பாப்பம்!''

''பறுவத்திலண்டைக்கு நாங்கள் பண்டித்தலைச்சி அம்மன் கோயிலடிக்கு வாறது வாறதுதான்! அவன் ஏலுமெண்டா வந்து பாக்கட்டுக்கு. அவன்ரை குடும்பியை வெட்டி கண்ணகி அம்மனுக்கு படைச்சுப் போட்டுத்தான் விடப் போறன் கண்டியளோ...?

எடுத்த எடுப்பிலேயே முதலித்தம்பியர் முடிவாகத் தொடர்ந்து கூறிவிட்டார். கந்தப்பருக்கு எதுவுமே பேச முடியவில்லை.

''சம்மந்தி! எங்கடை பரம்பரையை அவனுக்குத் தெரியாது கண்டியளோ. பழம் பல்லக்கு எத்தினை எங்களிட்டைக் கிடக்கெண்டு மழுவராயர் மச்சான்ரை வீட்டிலை கூட்டிக்கொண்டு போய்க் காட்டிறன். விடியக் காலமை என்னோடை வாருங்கோ... எங்கடை கமத்துக்கை ஆக்களை ஏரிலைபோட்டு உழுகிறதைக் காட்டிறன். அவன் கயிலாயன் நினைச்சுக் கொண்டான் அங்கினை தவசியப் பெண்டுகளோடை விடுகிற சண்டித்தனம் எங்களிலை விடலாம் எண்டு. சரி பண்டித்தலைச்சி பொது இடம். அங்கை அவன் வராட்டா அவன்ரை படலேக்கை வாறன். அவன் செய்யிறதைச் செய்யட்டும். பாப்பம்! புத்தூர் பள்ளரைக் கொண்டு அவன்ரை வீடு பூரிவிப்பான். ஏன் புத்தூரானை... அங்கத்தை நளவரைக் கொண்டு உவனைச் சரிக்கட்டாட்டா... நான் குடும்பி வழிச்சுப் போடுவன்!''

முதலியின் ஆவேசம் தணிய சற்று நேரம் ஆகிவிட்டது.

''அது சரியும் சம்மந்தி, கயிலாயன் வந்ததும் பேசினதும் மருமோன் அவனைப் பேசினதும் எங்களிடை ஆருக்குத் தெரியும்? உதெல்லாம் எப்பிடி உங்களுக்கு தெரிஞ்சுது?'' என்று பேச்சை மறுபடியும் தொடங்கினார் கந்தப்பர்.

''இப்ப நான் சொல்லேல்லையே... நளவரைக்கொண்டு படிப்பீப்பன் எண்டு சொன்னதிலை இருந்து அறிஞ்சு கொள்ளுங்கோ. பல்லக்கு முதலிக்கு எங்கையெல்லாம் ஆள் இருக்கெண்டு!''

இரவிரவாகப் பலதும் பத்தும் இருவரும் பேசிக் கொண்டனர்.

விடிந்தபோது முதலியார் சாதாரண நிலைக்கு வந்து விட்டார்.

கந்தப்பரின் சமாதானத்தூது வெற்றியைத் தந்தது.

''நேருக்கு நேரான சவால் மோதுதலை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது!'' என்ற உடன்பாட்டுக்கு முதலியர் வந்துவிட்டது கந்தப்பரைப் பொறுத்தவரை பெரு வெற்றியாகவே இருந்தது. ஆனாலும் பல்லக்கு முதலியர் ஒரு நிபந்தனையையும் விதித்தனுப்பினார். அதாவது கயிலாயபிள்ளையர் பேருக்காக ஒரு தடவை தன்னை வந்து சந்திக்கவேண்டும் என்பதாகும்.

இந்த நிபந்தனை ஒரு சுமைதான் அவருக்கு. ஆனாலும் எப்பிடியும் கயிலாயரைச் சமாளித்து பல்லக்கரிடம் அனுப்பி வைக்கலாம் என்றும் அவர் நம்பினார். ஏனெனில் கயிலாயர் பல்லக்கரின் சவாலினால் சற்று நிலைகுலைந்து இருந்ததை அவர் அறிந்திருந்தார். அதனால் புத்தூரிலிருந்து வந்ததும் வராததுமாக கயிலாயபிள்ளையரைக் கூட்டி வரும்படி ஆள் அனுப்பினார்.

கயிலாயபிள்ளையர் கந்தப்பரின் அழைப்பு என்ற கௌரவத்துடன் வந்துவிட்டார். ஒருவிதமாகச் சுற்றி வளைத்துப் பேசி கயிலாயரை பல்லக்கரிடம் சினேகபூர்வமாகப் போய் வரும்படி கருத்தைத் தெரிவித்துவிட்டார்.

கயிலாயரின் கௌரவத்தை இது சோதனைக்குட்படுத்தி விட்டது. ஆயினும் இச்சந்தர்ப்பத்தை இழக்கவும் அவருக்கு விருப்பம் வரவில்லை. எதற்கும் மறுநாள் சந்திப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்.

இந்தப் பேச்சு வார்த்தை நடந்தபோது சீதேவியும், வேலுப்பிள்ளையரும் மூச்சுக்கூட விடவில்லை. கயிலாயர் இதற்குச் சம்மதிக்கப்போவதில்லை என்று காதோடு காது வைத்து அவர்கள் பேசிக்கொண்டனர்.

கயிலாயர் வீட்டில் அன்று இரவு ஆரவாரமாக இருந்தது! கயிலாயரின் பரிவாரங்களுடன் அவர் கலந்து பேசினார்.

மறு நாள் ஆயிற்று!

வருவதாகச் சொன்ன கயிலாயர் இன்னும் வரவில்லை.

கந்தப்பருக்கு யோசனை தொடங்கிவிட்டது.

மத்தியானம் போல ஒருவன் வந்தான். அவன் தவசி குடியினன்.

"நேற்றுக் கதைச்ச விஷயம் சரிவராதாம் என்று கயிலாயப்பிள்ளையர் சொல்லச் சொன்னார்" என்று மட்டும் கூறிவிட்டு அவன் போய்விட்டான்.

இரண்டு நாட்களுக்குப்பின் புத்தூரில் இருந்து பல்லக்கரின் தூதுவன் வந்தான். "கயிலாயர் வருவாரா இல்லையா...?" என்று கேட்டுவரச் சொன்னதாக மட்டும் தான் அவன் சொன்னான்.

"கயிலாயர் சம்மதிக்கவில்லை. எதுக்கும் அவசரப்பட வேண்டாம். இரண்டொரு நாளைக்கிடையில் வந்து சந்திக்கிறதாம்" என்று பதில் சொல்லி அனுப்பினார்.

☆ ☆ ☆ ☆

பௌர்ணமிக்கு இன்னும் ஒரே ஒரு நாள்தான் இருந்தது. அதுவும் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன். நாளான திங்களில்தான் வந்தது. பொதுவாக இந்த நாளில் அம்மன்கோவிலில் காலையில் இருந்தே மக்கள் கூடிவிடுவர். பொங்கல் பானைகள் வைக்கப்படும். பொங்கல் நடக்கும். அம்பாளுக்குப் படையல் நடக்கும் அம்மாளின் கேணித் தீர்த்தம் நடைபெறும். கேணித் தீர்த்தம் முடியவும், பொழுது புதை குழிக்குள் சரிந்து கொள்ளவும் பொருத்தமாக இருக்கும்.

உள்ளூரில் மட்டுமல்ல வெளியிடங்களிலும் இந்தத் திங்களில் இங்கு நடக்க இருக்கும் முதலி—கயிலாயர் களறி பற்றிய செய்திகள் எங்கும் பரவி இருந்தது.

இதனால் ... ...

பௌர்ணமித் திங்கள் புலர்ந்தது! பகல் பத்து மணி தாண்டியிருக்கும் வழமைக்கு மாறாக கோயிலடி களை இழந்து கிடந்தது!

வழமையில் வண்டிகளால் நிறைந்து கிடக்கும் கோவில் வீதியில் ஒரு வண்டியைக்கூடக் காணவில்லை.

மணல் ஒழுங்கை முடக்கில் படலைக்குப் படலை தலைகள் நீள்வதும், உள் வாங்கிக்கொள்வதாகவுமே இருந்தன.

வழமையில் புல்தரையில் பரப்பிவைக்கப் பட்டிருக்கும் சட்டி, பானை, பெட்டி கடகம் கடைகளில் இன்று எதுவுமே இல்லை.

கடலை விற்கும் கிழவிகளில் ஒருத்தியைக் கூடக் காணவில்லை.

கோயில் குருக்கள் என்ற பூசாரியார் அதிகாலையோடு வந்து போனவர் போனவர் தான்!...

மணி பதினொன்றாயிற்று!

மேற்குப்புற வயல் பரப்புக்கு அப்பால் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பத்து வண்டிகள் வரை பறந்தோடி வந்தது கண்களுக்குத் தெரிந்தது!

வரவர மணல் தூறல் அதிகமாகி அந்தத் தூற்றலைக் கிழித்துக்கொண்டு சலங்கை நாதங்கள் கணீரிட்டுக் கணீரிட்டுக் கிட்டியது!

வண்டிகள் வந்து சேர்ந்துவிட்டன.

வழமையாகப் பல்லக்கில் ஏறிவரும் முதலித்தம்பியர் இன்று வண்டியில் வருகிறார். அவரது வண்டியை மட்டும் இரு குடிமைகள் இழுத்து வந்து சேர்த்தனர்.

சுமார் ஐம்பது பேர்கள் வரை இறங்கினர். எல்லோரும் சண்டிக்கட்டுடன் தான் இறங்கினர்.

வேட்டியை இறுகக் கட்டி சண்டிக் கட்டை இறுக முடிந்து… நெஞ்சுகளை முன் தள்ளிக் கொண்டே இறங்கினர்.

ஒரு வண்டியில் இருந்து ஐந்துபேர்கள் குதித்தனர். அவர்களுக்குத் தலைவனாக ஒருத்தன். அந்த ஐந்து பேர்களும் சங்கானைத் துரையரால் அனுப்பப்பட்டவர்கள்.

அடுத்த வண்டிக்குள் இருந்து கொட்டடிக் கறுத்தாரால் அனுப்பப்பட்டவர்களாக ஆறு பேர்கள்!

அதற்கு அடுத்ததாக சண்டிலிப்பாய் பறட்டைப் பெரிய தம்பியன் தானே நேராக நான்கு பேர்களுடன் வந்திறங்கினான்.

கொக்குவில் கொட்டப்பெட்டி ஆறுமுகத்தார் … … அவரைத் தொடர்ந்து அஞ்சணந்தாழ்வுச் செல்லன்! அவனுக்குப் பின்னால் ஆறுகால் மடத்தடி ஆறுமுகத்தான்… அராலிச் செல்லத்துரை !

கடையடிக் கணேசன் ஆகியோருக்குப் பின்னால் மல்லாகத் துரையன்; தாவடி மயிலன்.

அடுத்ததாக வண்டிக்குள் இருந்து நவாலி வீரசிங்கன்; சுதுமலைக் கரடி ஆறுமுகன்; சிலம்படி ரெத்தினன் ஆகியோர்…

அதை அடுத்து மாமிசமலையாக ஒருத்தன் இறங்கி வந்தான். அவன்தான் அழுக்கடைச் செல்லத்துரையனி. அவனுடன் நாண்கைந்து பேர்கள். புல்லுக்கடைச் சுப்பன் பண்டாரக் குளத்தடி முத்தன்; காராளி முத்தையன்; இப்படி ஒவ்வொரு பிரிவு!

மொத்தத்தில் எல்லோருமே களரிகள் பல கண்ட வீரர்கள்!

சீனடி சிலம்படியில் பேரெடுத்தவர்கள். இத்தனை பெருமைக்குரியவர்கள் எல்லாம் மழுவராயரினதும்,

பல்லக்கு முதலியினரதும் ஆணைக்குட்பட்டவர்கள் அல்ல ஆயினும் சொந்தபந்தம் என்ற அடிப்படையிலும் வேறு பல தொடர்புகளினாலுமே இந்தக் களரிக்கு பல்லக்கரின் சபதத்தை நிறைவேற்ற வந்திருக்கின்றனர்.

பல சாதியினர்!

பலவித திறமை கொண்டவர்கள்.

பலவிதங்களில் பிரபலம் ஆனவர்கள். இவர்களை ஒரே இடத்தில் காணும் பெருமை அவர்கள் ஒருவருக்கொரு வரைத் தவிர வேறு யாருக்குமே கிடைக்காத ஒன்று அவர்களே எதிர்பார்க்கவில்லை.

இறங்கிய எல்லோரும் நாலாபுறமும் நோட்டம் விட்டனர். முதலித்தம்பியர் தலையில் கட்டியிருந்த முண்டாசுக் கட்டை குலைத்து முகத்தைத் துடைத்து விட்டுக்கொண்டே பார்வையை பல இடங்களிலும் உலாவ விட்டார்.

எதிரிகளின் தலைகள் எங்குமே தெரியவில்லை. எதிரிகள் மட்டுமல்ல தன்னவர்களைத் தவிர எந்தத் தலையையுமே அவர்கள் காணவில்லை.

அம்மன் கோயில் மண்டபத்தை நோக்கி நகர்ந்து கொண்டே பல்லக்கர் எல்லோருக்கும் கையசைத்தார். எல்லோரும் அவருக்குப் பின்னால் திரண்டு சென்றனர். பல்லக்கர் அம்பாளுக்கு தேங்காய் உடைத்தார். கோவில் கதவு இறுக மூடப்பட்டிருந்தது.

''பிராமணியைக் கூப்பிடுங்கோ. பூசை ஒண்டு கட்டுவிக்க வேணும்'' என்றார் பல்லக்கர்.

''ஐயா; ஐயா;'' என்று பலர் அழைத்தார்கள். பதிலே கிடைக்கவில்லை.

''ஐயன் இல்லைப் போலை கிடக்கு. ஒரு சிலமணையும் காணேல்லை.'' என்றான் ஒருத்தன்.

பல்லக்கர் பரிவாரங்களுடன் கோவில் வீதியை வலம் வந்தார். கொய்யா மரங்களாலும் வாகை மரங்களாலும் சூழப்பட்டிருந்த வீதியை ஒவ்வொரு பிரிவிலும் இருவர் மூவராக வளைத்து நிற்கவைத்துக்கொண்டே வீதியை வலம் வந்து முடித்தார். கடைசியாக அவருக்குப் பின்னால் நின்ற வர்கள் பத்துப்பேர்கள் வரை! மிகுதிப்பேர்கள் சுற்றி வளைத்து வியூகம் அமைத்துக்கொண்டனர்.

பன்றித்தலைச்சி இப்போது பல்லக்கரின் ஆட்சியில்!

பொழுது உச்சிவரை நகர்ந்து வந்துவிட்டது.

பன்றித்தலைச்சியில் உள்ளூர் மனித ஜீவன்கள் எதுவுமே தலைநீட்டவில்லை.

உச்சிப்பொழுது சரிந்து போயிற்று.

வேற்று மனிதராவது மாஞ்சாடியாவது......

அப்போது......

கிழக்கில் இருந்து புழுதி கிளம்பியது! வண்டி ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேலோ வருகிறது போன்ற சதங்கை ஓசை!

பல்லக்கர் சால்வையை உயர்த்தி அசைத்தார். எல்லோரும் உஷாராகிக் கொண்டனர்.

பல்லக்கரைச் சூழ நின்றவர்கள் வண்டிக் கூடாரங்களை நோக்கி விரைந்து ஆளுக்கொரு தடிகளுடன் வந்தனர்.

வேகமாக வந்த வண்டி ஒன்று கோயில் முகப்பில் திரும்பி நின்றது.

ஐந்தாறு பெண்கள், நான்கைந்து சின்னஞ் சிறுசுகள் வண்டிச் சாரதி மட்டும் ஒரே ஒரு ஆண்மகன்! அதுவும் அறுபது வயதுக்குமேல் தாண்டியவன்

சூழ வந்து விட்டவர்களைக் கண்டதும் அவர்கள் பயந்து நடுங்கிவிட்டனர்.

''பயப்பிடாதையுங்கோ மோனை! நாங்கள் ஒரு பகுதியைப் பாத்துக்கொண்டு நிக்கிறம்! அம்மாளுக்கு நேர்த்தி செய்ய வந்தநீங்கள். பயப்பிடாமல் செய்யிங்கோ'' என்றார் பல்லக்கர்.

இந்தச் சூழ்நிலையில் பொங்கலாவது நேர்த்தியாவது! அவசர அவசரமாகத் தேங்காய்களை ஆளுக்கு ஒன்றாக உடைத்துவிட்டு அவர்கள் திரும்பிவிட்டனர்.

இப்படி இங்குஇன்று ஒரு களரி இருப்பது அவர்களுக்குத் தெரியாது! கனகம் புளியடிச் சந்தியில் வண்டி வந்து கொண்டிருந்தபோது அங்கு கூடி நின்ற சிலர் உங்கை கோயிலடியிலை இண்டைக்கு ஒண்டுமில்லை என்று குரல் வைத்ததை அசட்டை பண்ணிவிட்டுத்தான் அந்த வண்டி ஓட்டி வண்டியைச் செலுத்தி வந்தான். இப்போது உடனடியாகவே அவன் திரும்ப வேண்டியதாயிற்று.

''சரி இனிப் பண்டித் தலைச்சியிலை ஆட்சி எடுக்க வேணும். ஏறக்கூடியவர்கள் ஏறி தென்னங்கண்டுகளிலை ஆட்சி எடுங்கோ'' என்று பல்லக்கர் கூறி வாய் மூடவில்லை. பலர் தளநார்கள் இனறியே மரங்களில் தாவி குடும்பைகளை பறித்து மணல் பகுதிகளை நோக்கி வீசினர்.

எல்லோரும் குடிக்குமளவிற்கு பறித்தாய் விட்டது.

பண்டித்தலைச்சியில் பல்லக்கர் ஆட்சி எடுத்தாகி விட்டது!

///

# 13

கயிலாயபிள்ளையரின் பின்வாங்கலோடு அவரின் ஆதிக்கங்களில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. அவர் பின்வாங்கிக்கொண்டதை சிலர் புத்திசாலித்தனம் என்றனர். பலர் பயந்தாக்கொள்ளித்தனம் என்றனர்.

கந்தனின் உடம்பு மாற்றங்களின் தோற்றுவாயோடு ஒருநாள் இத்தினி செத்துப் போனாள். வேலுப்பிள்ளையரின் அபிமானத்திற்குரிய வளர்ப்பு நாயான எல்லுவன் ஒருநாள் இத்தினியைக் கடித்து

விட்டது. கடித்த கையோடு அது கந்தப்பரையும் கடித்துவிட்டது.

பத்து நாட்களுக்கிடையில் எல்லுவன் காணாமல் போய்விட்டது.

இத்தினி செத்துப்போனபோது காணாமல் போன எல்லுவனுக்கு விசர் கண்டிருக்க வேண்டுமென்ற ஊகம் பிறந்தது. இத்தினி நாய்போலக் குரைத்துக் குரைத்து உயிரை விட்ட போதுதான் பயத்தால் நடுங்கிப்போய் விட்டார் கந்தப்பர்.

அவர் இராச வைத்தியரை அணுகியபோது அவர் நிலமையை விசாரித்தபின் நோய் பரவிப் பிடிக்காமல் தடை மருந்துகளைப் பிரயோகித்தார். எப்படித்தான் மருந்துகளை அள்ளிக் கொட்டியும் அவரைக் காப்பாற்ற இராச வைத்தியரால் முடியவில்லை.

கந்தப்பர் இறந்தபோது சிதேவிக்குப் பிறந்த அவரின் பேரக் குழந்தை அன்னப் பிள்ளைக்கு பல்லு விழுந்திருந்த்து.

கந்தனுக்கு வயது பதினைந்துக்குமேல்! இத்தினி செத்துப் போகும்வரை அவள் மருத்தெண்ணை முழுக்குக் காசு வரணிக்குக் கொண்டு செல்ல தவறவில்லை. இராச வைத்தியர் அவனின் மருத்தெண்ணை முழுக்கை நீட்டி யிருந்தார்.

அன்ணாவி செல்லனுடன் அவனின் தொடர்பு விரிந்து கொண்டே இருந்தது.

காலை எழுந்து மாட்டுக் கட்டை கூட்டுதல்; சாணம் அள்ளிக் கும்பத்தில் போடுதல்;வீட்டில் உள்ள தொட்டாட்டு வேலைகளைச் செய்தல்; பத்து மணிவரையில் கிடைக்கும் பழையதைத் தின்னுதல்: மாடுகளையும், ஆடுகளையும் சாய்த்துக்கொண்டு வயலுக்குள் இறங்கித் தரைவைக்குள் சுலைத்து அவைகளைக் கால்போன போக்கில் தூரம் வரை கொண்டு சென்று மேயவிடுதல்; ஏனைய மாட்டுக்காரப்

பையன்களுடன் சேர்ந்து உப்பெலிப்புற்றுகளை வெட்டி எலிகளை வேட்டையாடுதல்; கிடைக்கும் சுள்ளிகளைக் கொண்டு அவைகளை வேகவைத்து உண்ணுதல்; தட்டித் தவறி வரணிவரை போய்விட்டால் மற்றப் பையன்களுடன் சேர்ந்து இளநீர் பிடுங்கி உண்ணுதல்; தட்டித் தவறி அண்ணாவியின் நினைப்பு வந்துவிட்டால் ... ஆடுமாடுகளை மற்றவர்களிடம் பார்க்க விட்டுவிட்டு உள் கிராமத்திற்குப் போய் அண்ணாவி வீட்டில் பனாட்டையோ ஒடியல் பிட்டையோ சாப்பிடுதல்; மறுபடியும் வந்து ஏனைய பையன்களுடன் அரட்டை அடித்தல்; மாலை வரும்போது ஆடுமாடுகளைச் சாய்த்துக்கொண்டு ஊர் திரும்புதல்; சிதேவி அம்மாளால் தட்டுவத்தில் கொடுக்கப்படும் சோற்றை விழுங்குதல்; படுத்துறங்குதல் ...... ...

மீண்டும் அதிகாலை வந்துவிடும்! கானல் வெய்யில் கண்ட உணவு, பட்டினி, வேளை தவறிய கூத்தடிப்பு. இவை எல்லாம் சேர்ந்த கந்தனின் உடலை மறு அமைப்புச் செய்து வந்தது.

வலிப்புப் போய்விட்டது.

குளறல்போய் கொன்னைமட்டும் இருந்தது. நடப்பவை களைப் பற்றியெல்லாம் யோசிக்கத் தொடங்கிவிட்டான்.

ஒருநாள் இரவு அவன் மாட்டு மேச்சலில் இருந்து வந்தபோது நயினார் வீட்டுக்கு முன் இரட்டைக் குதிரைகள் பூட்டப்பட்ட கோஜ் வண்டி ஒன்று நின்றது!

கோஜ் வண்டியின் பொறுப்பாளர் ஆசைப்பிள்ளையரும் வேறு இருவரும் வந்திருந்தனர். அவர்கள் உள்ளே நயினாருடன் பேசிக்கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு றயில் வர இருப்பதாகவும், அந்த றயில் வந்துவிட்டால்... சிறிசு பெரிசு என்ற வித்தியாசம் பார்க்காமல் எல்லோரையும் ஏற்றிப் பறிக்குமென்றும், பொதுவில் தேசவழமை அழிந்துவிடும் என்றும், இவைகளை

விடவும் மொத்தத்தில் பார்த்தால் யாழ்ப்பாணம் இருந்து மாத்தளை வரைக்குமான கோஜ் வண்டிக் கம்பெனி வீழ்ச்சியடையும் என்றும், அதற்குப் பரிகாரம் தேடும் முயற்சியில் வேலுப்பிள்ளையரின் ஒத்துழைப்பைக் கோரியும் அவர்கள் வந்திருந்தனர்.

கோஜ் வண்டிக் கம்பெனியின் முடிவுக்கு தான் ஒத்து வருவதாக வேலுப்பிள்ளையர் வாக்குக் கொடுத்தார்.

பின்பு கோஜ் வண்டியில் அவர்கள் கயிலாயபிள்ளை யரிடம் போயிருந்தனர்.

கயிலாயபிள்ளையரும் வாக்குறுதி தந்துவிட்டார். கயிலாயபிள்ளையரையும் வேலுப்பிள்ளையரையும் ஏற்றிக் கொண்டு கோஜ் வண்டி வரணிக்குப் பறந்தது! வரணி இராசா வீட்டில் நின்றது.

வரணி இராசாவும் வாகுத் தந்துவிட்டார். அவரையும் சுமந்துகொண்டு கோஜ் வண்டி புத்தூருக்குப் பறந்தது.

முதலில் மழுவராயர் வீட்டுக்கும் பின்பு அவரையும் ஏற்றிக்கொண்டு பல்லக்கர் வீட்டுக்கும் கோஜ் வண்டி விரைந்தது.

பல்லக்கு முதலியார் வீட்டு வாசலுக்குப் போனதும் கயிலாயபிள்ளையர் உள்ளே வரத் தயங்கினார். ஆசைப் பிள்ளையரும் வேலுப்பிள்ளையரும் அவரை இரு கைகளை யும் பிடித்து உள்ளே கொண்டு சென்றுவிட்டனர்.

பல்லக்கரும் பெரும் தன்மையுடன் எல்லோரையும் பெயர் சொல்லிச் சொல்லி வரவேற்றார்.

பல்லக்கர் வீட்டில் அன்றிரவு பெருவிருந்து! அரிக்கன் வெள்ளைக் கிடாய்க்குட்டி ஒன்று வெட்டப்பட்டது! உள்ளூரில் தவசிய வீடொன்றில் நடந்த வாக்குவாதம் ஒன்றில் தவசிய 'வைப்புக்கு' முன்னால் ''இனிமேல் நீ சொல்லும் வரை நான் ஆட்டிறச்சி தின்னேன்'' என்று

சபதம் ஏற்றுக்கொண்ட சில நாட்களுக்குள் அவள் சொல்லா மலேயே செத்துப் போய்விட்டதால் கயிலாயர் ஆட்டிறச்சி தின்பதில்லை. அதனால் கயிலாயருக்கென விசேஷமாக கோழி இரண்டு பிடிக்கப்பட்டது.

இரவிரவாக ஆலோசனைகள் நடத்தப்பட்டன!

1902ம் ஆண்டு தைமாதம் றெயிலை காங்கேசன் துறையில் இருந்து பளை வரை வெள்ளோட்டம் விடுவதாக அரசின் திட்டம். இது வேளையோடு ஊர் ஜிதமாகியிருந்தது. அந்தத் தேதி றயிலை ஓடாமல் தடுத்துவிட வேண்டும்.

யாழ்ப்பாண நிலையத்திலிருந்து பளை போய்ச்சேரும் வரை ஆங்காங்கே நின்று கற்களை வீசி ஆர்ப்பாட்டம் செய்ய இருப்பதாகத் திட்டம்! அதற்கு மேலும் பின்பு றெயில் ஓடுமாயின் அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து அமுல் நடத்துவதாகவும் முடிவாயிற்று.

இதன்படி கல்விசி ஆர்ப்பாட்டம் செய்ய ஆட்கள் வேண்டும்.

பல்லக்கர் இருநூறு பேர்கள் தருவதாக ஒப்புக் கொண்டார்.

வரணி இராசா நூறு!

வேலுப்பிள்ளை நூறு!

இப்படித் தலைக்கு நூறாக' தங்கள் கம்பனிக்கு ஊரில் செல்வாக்குகளையும் கணக்கெடுத்து... வழமையாக கோஜ் வண்டிக்கு ஆள் சேர்ப்பவர்களையும் கணக்கெடுத்து ஒவ்வொரு ஊரில்உள்ள சாதிமான்களையும் கணக்கெடுத்துப் பார்த்தால் ஐந்தாயிரம் பேர்களையாவது திரட்டிவிடலாம் என்ற கணக்கினை ஆசைப்பிள்ளையர் கூறினார்.

பூரண திருப்தி!

எப்படியும் றயிலைத் தடுத்துவிடலாம்! என்ற நம்பிக்கை ஆசைப்பிள்ளையருக்கு.

குறிக்கப்பட்ட அந்த நாள் வந்தது! வேலுப்பிள்ளையர் வீட்டில் ஆரவாரமாக இருந்தது. கயிலாய பிள்ளையர் அங்குமிங்குமாக ஓடித்திரிந்து, பல இடங்களில் இருந்து வந்தவர்களை தனது வீட்டிலும் வேலுப்பிள்ளையர் வீட்டிலுமாகத் தங்கவைத்துக் கொண்டும் தனது அடியார்களைக் கவனித்துக்கொண்டும் இருந்தார்.

முன்பு வேலுப்பிள்ளையரின் மனைவியான சீதேவியுடன் போர் பொத்தியதைப் பற்றிய சிந்தனை துளியளவு கூட மனதில் இருந்ததாகத் தெரியவில்லை.

தனது நால்சார் வீட்டுக்கு உள்ளே விடக் கூடியவர்களை உள்ளேயும், புதிதாகப் போடப்பட்டிருந்த சவக்கண்டிக்குள் இருக்கக் கூடியவர்களை அதற்குள்ளும் வெளித்தாவாரத்திலும் வளவுக்கிடுதக் கொட்டிலுக்குள் விடக்கூடியவர்களை கொட்டகைக்குள்ளும் இனங்கண்டு தங்க வைப்பதில், அவியல் நடத்துவதில், குடிக்க வைப்பதில் அவருக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

அவர்களுக்கு ஏற்ற விதங்களிலான ஏதனங்களைத் தேடுவது சின்னக்காரியம் அல்ல.

ஏதனங்கள்:

வாழைத்தடல்,

வாழை இலை,

மண்சட்டி,

வட்டில்,

சிரட்டை; உலைமூடி.

குண்டுச் சட்டி,

பித்தளைப் பேணி,

சுரக்குடுவை

இப்படி சாதிக்கேற்றபடி இனம் பிரித்து ஒவ்வொரு பிரிவினரும் மனம் கோணாதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமே!

இரண்டு நாட்களுக்கு முன் கிடைத்த தகவலின்படி மற்ற இடங்களில் நினைத்திருந்தது போன்ற பெரும் எதிர்ப்புகளை கொண்டுவர முடியவில்லை என்றும் சகல சக்திகளை ஒன்றுதிரட்டி சாவகச்சேரிக்கும் பளைக்கும் இடையில் தான் பிரயோகிக்க வேண்டுமென்றும் தெரிய வந்ததனால் ...

மறுநாள் காலை பத்து மணி வரை றெயில் இந்த இடைவெளிக்குள் வந்துவிடும் என்பது ஊகம். எனவே இரவோடிரவாக சகல சக்திகளையும் ஒண்டு திரட்டி அதி காலையோடு ஐந்து இடங்களில் முகாம் இட்டுவிட வேண்டும என்பது திட்டம்! கயிலாயபிள்ளையரையும் வரணி இராசாவையும்தான் இந்த உபசரிப்புப் போன்ற வேலை களில் வேலுப்பிள்ளையர் ஈடுபட வைத்திருந்தார்.

புத்தூரில் இருந்து பல்லக்கர் ஆணைக்குட்பட்டவர்கள் அதிகாலையோடு மீசாலைச் சந்திக்கு வந்து விடுவதாக இருந்தது.

மற்றவர்கள் சில இடங்களில் இருந்து சேர்ந்து வந்த மந்துவிலில் மொத்தமாகச் சேர்ந்து அதிலிருந்து அந்தந்த தரங்களில் தலைமைகள் தெரிவு செய்து உரிய உரிய ஸ்தலங்களுக்கு அனுப்பப்படுவர் என்பது முடிவு.

இரவு பத்து மணிக்கு மேல் கயிலாயபிள்ளையரும், வரணி இராசாவும் வேலுப்பிள்ளையரும் ஒரு தடவை சந்தித்துப் பேசினர்.

''எல்லா இடங்களிலை இருந்தும் கொஞ்ச கொஞ்சப் பேரண்டாலும் வந்து சேர்ந்துவிட்டாங்கள். நான்கு பதினெட்டுச் சாதியும் வந்திருக்கு. எங்கடை ஊருக்கை இருந்து ஒருத்தனும் வரேல்லை. ஆசைபிள்ளையர் எக்கணம்

பகிடிதான் பண்ணப்போறார். ஏன் கயிலாயர் ஒருத்தரும் வரேல்லை?''

வேலுப்பிள்ளையர் இக்கேள்வியை அலுப்போடு கேட்டார்.

இக்கேள்விக்கு கயிலாயரால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. ஆயினும் அவரும் பேச வேண்டியிருந்தது!

''எங்கடை வால் ஒடியால் தின்னும் வெள்ளாளரைத் தெரியாதே! உப்பிடித்தான் செய்வாங்கள்.'

''ஏன் ராசா அண்ணை நான் காலைமை கேள்விப் பட்டடன்; உங்கடை நளவள் அண்ணாவி செல்லன் உந்தக் காரியத்துக்கு ஒருத்தரையும் போக வேண்டாம் எண்டு சொல்லி திரிஞ்சவனாம்!'' கயிலாயரே மீண்டும் பேசினார்.

''உது ஆரோ பரதேசியள் கதை பரப்பி விட்டிருக் கிறாங்கள். அண்ணாவி நளவள் அப்பிடிச் செய்து போட்டு ஊருக்கை இருந்து போடுவானே!''

இராசாவர் பதில் சொன்னார்.

''அப்பிடியெண்டா ஒருத்தனையும் இன்னும் காணேல்லையே!''

வேலுப்பிள்ளையார் இடையே கேட்டார்.

''நான் அவங்களைக் கொஞ்சம் பிந்தித்தான் வரச் சொன்னனான் சரியான நேரத்துக்கு அவங்கள் வந்திடுவாங்கள்'

வரணி இராசாவர் சமாளித்துவிட்டார்.

''சரி சரி இருந்து கதைக்கிறதில்லை ஒண்டுமில்லை. ராசாண்ணை வாரும். நாங்கள் இப்பிடிச் சுத்திக் கொண்டு வருப்! எங்கடை தலைக் கறுப்பைக் கண்டோண்ணை அவங்கள் வெளிக்கிட்டுடுவாங்கள்.'' என்று கூறிக்கொண்டே கயிலாயர் நடக்க இராசாவர் பின் தொடர்ந்தார்.

''மினக்கெடாமல் வந்திடுங்கோ.'' என்று புத்தி சொல்லி அனுப்பினார் வேலுப்பிள்ளையர்.

கயிலாயரும், இராசாவரும் ஊரைச் சுற்றிக் கொண்டு வந்தபோது மனித ஓசைகள் எங்குமே கேக்கவில்லை.

ஒரு குடிசைக்குள் தன்னும் வெளிச்சம் தெரியவில்லை.

''என்னடாப்பா, நெடுக நடக்கிறாய்; ஒருத்தனையும் காணேல்லை'' இராசாவர் கேட்டார்.

கறுத்தான் வீட்டை ஒருக்காப் போட்டு வருவம். அவன் தான் கப்பித்தான். சிலவேளை ஆக்களைத் தன்ரை வீட்டிலை அடுக்குப் பண்ணி வைச்சாலும் வைச்சிருப்பான்.'' என்று கூறிக்கொண்டே வயல் வரம்பால் நடந்து கறுத்தான் வீட்டுக்குக் கிட்டவாக வந்தபோது... கறுத்தானின் வீட்டு முற்றத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கொளியில் நான்கைந்து தலைகள் தெரிந்தன.

''நான் சொன்னன். கறுத்தான் ஆக்களைச் சேத்து வைச்சிருப்பானெண்டு.'' என்று கயிலாயபிள்ளையர் கூறும்போது விளக்கு அணைந்து விட்டது!

கறுத்தான் அது நான்தான்ரா!'' என்று கயிலாயர் குரல் கொடுத்தார்.

கயிலாயரும், இராசாவரும் கூட்டத்திற்கு சமீபமாக வந்துவிட்டனர். இருபது பேர்கள்வரை கூடி மௌனமாக இருந்தனர்.

''இஞ்சேரடி விளக்கு நூந்து போச்சு. இதை எப்பன் கொழுத்திவா!''

கறுத்தான் குரல் கேட்டது. கறுத்தானின் இளம் மனைவி இருட்டுக்குள் இருட்டாக வந்து விளக்கை எடுத்து கொட்டிலுக்குள் புகுந்து அடுப்பை ஊதி விளக்கைப் பற்ற வைத்து வந்து விட்டு விட்டு கொட்டிலுக்குள் புகுந்துகொண்டாள்.

விளக்கு வெளிச்சத்தில் எல்லோர் முகமும் நன்கு தெரிந்தது!

கூட்டத்தோடு கூட்டமாக வரணி அண்ணாவி செல்லனும், அவன் மைத்துனன் முறையான வயிரவனும் இருந்தனர்.

''எட, அண்ணாவி! நீயும் இஞ்சையே இருக்கிறாய்! அங்கை இருந்து ரெண்டு பேர்தான் வந்திருக்கிறியள். மற்றவங்களைக் காணேல்லை.'' என்றார் இராசாவர்.

அண்ணாவியனோ மற்றவர்களோ எதுவும் பேசவில்லை.

''என்னடா நாங்கள் கதைக்கிறம் ஒண்டும் பேசிறியள் இல்லை.'' கயிலாயர் கடுமையாகக் கேட்டார.

மெதுமெதுவாக ஒவ்வொருத்தராக எழுந்து நின்றனர்.

''அவங்கள் எல்லாரும் மாட்டன் எண்டிட்டாங்கள். றெயிலிலை தாங்களும் ஏறலாமாம். எல்லாருக்கும் உள்ளுக்கை வாங்கு போட்டிருக்காம். அதுதான் மாட்டாங்களாம்.''

அண்ணாவி பதில் சொல்லிவிட்டான்.

''டேய்! அண்ணாவி! உது ஆற்றையோ விசர்க் கதையடா... எல்லாருக்கும் வாங்கு போட்டிருக்காமோ... எட, விசரா! வெள்ளைக்காறன்ரை றெயில் எண்டாப் போலை உங்கடை நினைப்பு எல்லாரையும் சரி சம்பந்தமாக நடத்துவானெண்டு. எத்தினை வருசமா வெள்ளைக்காரன் ஆண்டு வாறான். இண்டைவரையிலை உங்கடை ஆக்கள் ஆரையும் விதானை, உடையார், ஆக்கியிருக்கிறாங்களே? சொல்லு பாப்பம்! தலைமைக்காறர் வீட்டிலை சரிசமமாக வைச்சிருக்கிறாங்களே? கனக்க வேண்டாம். உந்தப் பிள்ளையார் கோயில் கிணத்திலை தண்ணி கிள்ள விட்டிருக் கிறாங்களே? ஏன் கனஞாயங்களை! உன்ரை கொப்பன்

தன்ரை குளத்துக்கை தாமரை ஒண்டு போட்டு வளத்ததுக்கு கிராமக் கோட்டிலை வழக்குப் போட்டு குற்றம் கட்ட வைச்சவன் எல்லே...! எங்கை ஒருக்கா கோயில் மண்டபத் துக்கை போங்கோ பாப்பம்? வெள்ளைக்காரன் உங்கட பக்கத்துக்கு நிக்கிறானோ பாப்பம்! எட, விசரன்களே! இன்னெரு கதையும் உங்களுக்குச் சொல்ல வேணும். ஊருக்கை றயில் ஓடினா என்ன நடக்கும் தெரியுமே! றயில் றோட்டுக் கரைவழிய உங்கடை ஆக்கள் தான்ரா குடியிருக் கினம். றயில் ஓடிற சத்தத்திலை பிள்ளைத்தாச்சியளுக்கு வயிறு அழிஞ்சு போகும். முருங்கக்காயிலை இருந்துமுளகாய் வரை ஒண்டும் காய்க்காது. பனையளிலை கூட ஒழுங்காய் பாளை வராது. உங்கடை ஆடுமாடுகள் கூட சினைப்படாது. ஏதோ சொல்லிப் போட்டன். றயிலை நிப்பாட்டாட்டா நட்டம் உங்களுக்குத்தான்!''

ஒரு பிரசங்கமே செய்துமுடித்த இராசாவர் அவர்களைத் துரிதப்படுத்தினார். ''எண்டாலும் நயினார் பொடியளை சரிக்கட்டாமல் வர ஏலுமே! தாங்கள் போக... எல்லாரையும் கூட்டிக்கொண்டு வாறமாக்கும்!''

கறுத்தான் இலேசாகப் பதில் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டான்.

இதற்கு மேலும் அங்கே நிற்க கயிலாயருக்கு விருப்பம் இல்லை. நேருக்கு நேராக அவங்கள் மறுத்துவிடும் அளவுக்கு போகாததை இட்டு இந்த அளவுக்கு வந்தது போதும் என்று மனதிற்குப்பட்டது.

இராசாவரையும் கூட்டிக்கொண்டு அவர் திரும்பி விட்டார்.

''உவன் அண்ணாவியன் வந்துதான் உவங்களைக் கெடுத்துப் போட்டான் போலை கிடக்கு...'' போகும்போது கயிலாயர் சொன்னார்.

"நான் அப்பிடி நினைக்கேல்லை ... இவங்கள் எல்லாரையும் வேறை ஆரோ ஆட்டிறாங்கள் போலை கிடக்கு. இவங்கள் எங்களுக்கு மேலாலை எங்கை ஓடப்பாக்கினம் பாப்பம்! காணி பூமியளுக்காது ஒழுப்பிப் போடுவம்."

இராசாவர் பதில் சொன்னார்.

"முக்கி முக்கிப் பார்த்தாலும் சேத்து வைச்சிருக்கிற ஆக்கள் அம்பதும் வராது போலை கிடக்கு. எக்கணம் ஆசைப்பிள்ளையர் எங்கடை பகுதியை குறைவாமதிக்கப் போறார்."

கயிலாயர் பெருமூச்சொன்றை விட்டுக்கொண்டே நடந்தார்.

மறுநாள் மத்தியானம்போல றயில் குறிப்பிட்ட இடங்களால் பளை வந்தடைந்துவிட்டது.

இடை இடையே நான்கைந்து இடங்களில் கல்லுகள் வீசப்பட்டதாகத் தகவல்; அவ்வளவுதான்!

சாண்டான் பொக்கட்டி என்ற இடத்தில் கல்லெறிந்த கூட்டத்தோடு வயதில் மிகவும் இளையவனாக ஒருவன் நின்றான். அவன் தான் கந்தன்!

அவன் தன் பலம்கொண்ட மட்டும் றயில்கழிந்துபோகும் மட்டும் தன்னால் அதிகபட்சம் எத்தனை கற்களை வீச முடியுமோ அத்தனையும் வீசிவிட்டான்.

நான்கைந்து நாட்கள் கல்லெறி நடந்துகொண்டிருந்தது

றயில் ஓடிக்கொண்டே இருந்தது. கல்லெறியின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்து இறுதியில் ஓய்ந்துவிட்டது.

ஓயும்வரை கலந்துகொண்டவர்களில் கந்தனும் ஒருவன்

///

# 14

சிதேவியம்மாள் புத்திர சந்தானத்தை அதிகமாகப் பெருக்கிக்கொள்ளவில்லை. ஒரே ஒருத்தியை மட்டும் பெற்றெடுத்து விட்டு அத்துடன் நிறுத்திக் கொண்டாள். அந்த ஒரேஒருத்தியும் வெட்டிவிட்ட கள்ளிச் செடிபோல அவசர அவசரமாக வளர்ந்தும் விட்டாள்.

அந்தப்பரம்பரையில் அவள் ஒரேஒருத்தி தான். பதினெட்டு வயதிற்குள்ளேயே அவளுக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டியதாயிற்று. வேலுப்பிள்ளையர்

குடும்பத்தில் பெண் எடுக்க ஒரே அடிபிடி; அவசரம்; ஆசை எல்லாம்.

கடைசியாக இந்தப் பாக்கியம் பெற்றவர் கோப்பாய் இராசவாசல் சாமுவேல் முதலியரின் சொந்தத்தில் வந்த சூரியருக்குத்தான் கிடைத்தது.

வேலுப்பிள்ளையர் தம்பதிகள் மகளான அன்னப் பிள்ளை நாச்சியாரை சூரியர் மணம் முடித்தபோது தலைநகரத்தில அவர் பெரும் பதவி ஒன்றில் இருந்தார். அவருக்குத் தெரியாத வெள்ளைத் தோல் அதிகாரிகளே இருக்கவில்லை. இத்தனைபேரும் புகழும் உடைய அவர் ஒரு தடவை தனது மேலதிகாரியுடன் போட்டுக்கொண்ட சண்டையினால் வேலையைத் தொம்மென்று தூக்கிப் போட்டுவிட்டு வந்துவிட்டார்.

வந்தாலும் வந்தார்.

வேலுப்பிள்ளையரின் சொத்துக்களுக்கு அதிபதியாக வந்து சேர்ந்தார். புதிய புதிய நண்பர்கள்.

புதிய புதிய வாழ்வு முறைகள்!

புதிய புதிய கேளிக்கைகள்!

புதிய புதிய சுகபோகங்கள்!

இப்போது ஊரில் சூரியருக்குத்தான் பெருமை! மருமகனுக்குச் சகலதிலும் வேலுப்பிள்ளையர் பணிந்தே போய்விட்டார்.

கயிலாயபிள்ளையர் மிகவும் கீழ்மட்டத்திற்கே போய் விட்டார்.

சூரியர் ஊரோடு வந்துவிட்டபோது முதல் சித்திரை வந்தது. அந்தச்சித்திரைக்கு சுட்டிபுரம் அம்மன் கோயிலுக்கு முன்னால் ஒரு பங்கம் வைக்க வேண்டுமென்று சூரியர் சொன்னார். பங்கமென்றால் பெரும் பங்கமாகவே நடத்தியும் விட்டார்.

ஆயிரம் ஆயிரம் போர்த் தேங்காய்களைக் கொண்ட இரண்டு பிரிவு. இரண்டு பக்கத்திலும் பத்துப் பத்து அடிகாரர்கள். மாறி, மாறித்தேங்காய்களை அடிப்பார்கள். யாருடைய பக்கத்தில் தேங்காய்கள் முதல் முடிகின்றனவோ அந்தப் பக்கத்துக்குத் தோல்வி.

ஒரு பக்கத்து பங்கக்காரர் சூரியர். மறுபக்கத்துப் பங்கக் காரராக யாரை வைப்பது? என்பதில் ஊருக்குள் பிரச்சனை. இறுதியில் கயிலாயர்தான் அதற்கான தகுதியானவர் எனத் தேர்ந்து எடுக்கப்பட்டார். வயது சற்று அதிகமாகிவிட்ட படியால்... கயிலாயர் தனது மகன் இராமச்சந்திரனையே நியமித்துவிட்டு சகல காரியங்களையும் மகனுக்காகத் தானே செய்து வந்தார்.

இராமச்சந்திரனுக்கு ஏறக்குறைய சூரியரின் வயதுதான் இருக்கும். அன்னப்பிள்ளையைக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டுத் தோற்றுப் போனவர். உத்தியோகம் என்று அவருக்கு எதுவும் இல்லை. ஏறக்குறைய சூரியர்போன்ற மனநிலைமை உடையவர்தான். ஆனால் பொருள் பண்ட விஷயத்தில் சற்று இறுக்கம். கவனம்!

வெள்ளடியான் சாவல் அடி என்றால் அவருக்கு அது தான் உயிர். பெருஞ்சாதி வெள்ளடியான் சாவல்களை வளர்ப்பது; பந்தயத்திற்கு விடுவது; ஜெயிப்பது; வெற்றி விழாக் கொண்டாடுவது... இதைவிட மகிழ்ச்சி தரக்கூடியது அவருக்கு எதுவுமே இல்லை.

சித்திரா பருவத்திற்குச் சரியாகப் பகல் பன்னிரண்டு மணிக்கு பங்கம் தொடங்குவதென்று ஏற்பாடு.

கோவில் மணியகாரர் பங்கத்தை ஆரம்பித்து வைக்க இருக்கிறார். இருபகுதியினரும் போர்த்தேங்காய் சேர்ப்பதில் ஒருமாத காலத்திற்கு முன்பிருந்தே தொடங்கிவிட்டனர்.

சூரியர் தனக்குத் தெரிந்த இடங்களிலும் வேலுப் பிள்ளையர் தனக்குத் தெரிந்தஇடங்களிலும் தேங்காய்களை

கொண்டுவர ஏற்பாடு செய்திருந்தனர். நாளாந்தம் நான்கோ பத்தோ என்று பலரும் தேங்காய்களைக்கொண்டு வந்து கொடுத்துச் சென்றனர்.

சூரியர் தனது கொழும்பு நண்பர்களுக்கு அறிவித்து விட்டார்.

காலிக்காய்களும், மாத்தறைக் காய்களும் வந்து சேர்ந்திருந்தன.

பல்லக்கர் புத்தூரில் இருந்து தேங்காய் சேர்ப்பதற்குப் படாத பாடுபட்டார். எப்படியும் பேத்தியின் புருஷனான சூரியரை வெற்றி ஈட்ட வைத்துவிடவேண்டும் என்ற ஆசை!

கயிலாய பிள்ளையர் மூகமாலை, சரசாலை, கைதடி என்ற பகுதிகளில் உள்ள தேங்காய் அடிகாரர்களுக்கு ஊடாக தேங்காய் சேர்க்கத் தொடங்கிவிட்டார்.

வில்லு வண்டிகள் அங்குமிங்குமாகப் பறந்தன. கடைசியாகக் காங்கேசன் துறையில் இருந்து ஆறுமுகத்தார் கொண்டு வந்த இருபத்தியொரு காய்களுடன் சரியாகக் கயிலாயருக்கு ஆயிரம் தேறிவிட்டது!

பௌர்ணமி நாளும் வந்தது. காலை பத்து மணியில் இருந்தே ஜனக்கூட்டம் சுட்டிபுரம் அம்மன் நிலப்பரப்பை முற்றுகையிடத் தொடங்கிவிட்டது.

காலை ஒன்பது மணிக்கு முன்பே கோவில் மணியகாரர் வீட்டில் பங்கம் பற்றிய சட்டதிட்டங்கள் அடங்கிய பூர்வாங்கக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

சூரியர் தனது இரண்டு உதவி ஆட்களோடும் இராமச் சந்திரன் என்ற சந்திரர் தனது ஆலோசகர்களோடும் பொதுவானவர்களாக மூன்று பேர்களும் மணியகாரர் தலைமையில் கூடியிருந்தனர். இந்தப் பொது ஆட்கள் பிரிவில் வேலுப்பிள்ளையர், கயிலாயர், வரணி இராசர் ஆகியோர்களே அடங்கி இருந்தனர்.

முதலாவதாக பங்கத்திற்கு ஆயிரம் ஆயிரம் தேங்காய்கள் என்ற தொகை மாற்றப்பட்டு ஐந்நூறு, ஐந்நூறு என்று முடிவாயிற்று.

அடிகாரர்கள் பத்துப் பத்துப் பேர்கள் என்பதும் குறைக்கப்பட்டு ஐந்து ஐந்து பேர்கள் என்றும் ஆயிற்று.

தேங்காய் முடி அகற்றியதாக இருக்கவேண்டும். விடு காயும் கையானும் ஒரே வேளையில் உடைந்து போய் விட்டால் கையான் காரனே பின்பு தேங்காயை உருட்டி விட வேண்டும்.

இத்தனை உடன்பாடுகளுக்குப் பின் இறுதியாக அடிகாரர் பற்றிய பேச்சுத் தொடங்கியது.

ஐவைந்து பேர்களில் ஒவ்வொரு பஞ்சமன் ஒவ்வொரு கோவியன், ஒவ்வொரு தவசியன், ஒவ்வொரு சாண்டான், ஒவ்வொரு வேளாளன் என்ற பேச்சு வந்தபோது, ஒவ் வொருத்தனுக்கும் எதிராக அந்தந்தச் சாதியினனே போர் செய்வது என்ற விதத்தில் முடிவானபோது... கூட்டமும் முடிந்து விட்டது!

சரியாகப் பன்னிரண்டு மணிக்குப் பங்கம் தொடங்க வேண்டும்.

நடுப்பகல் வந்தது!

சுட்டிபுரம் அம்மன் ஆலயத்து கல்வீதியைத் தாண்டி முன்னால் உள்ள வெட்ட வெளியில் காட்டுத் தடிகள் சுற்றி நடப்பட்டு... கயிறு கட்டப்பட்டு... அதன் நட்டுக்கு நடுவே இலேசாக மணல் பரப்பப்பட்டிருந்தது.

பங்கம் பார்க்க வந்த ஜனங்கள் தங்கள், தங்கள் சாதியினருடன் சேர்ந்துகொண்டு கயிற்றுக்கு அப்பால் சுற்றி வளைத்து நின்றனர்.

அடிகாரர்கள் பத்துப் பேர்களுக்குப் பதிலாக ஒன்பது பேர்கள் மட்டுமே உள்ளே நின்றனர்.

அவர்களில் ஒருவனாகக் கந்தனும் நின்றான். அவன் சூரியர் பக்கத்துக்காக நின்றான்.

இப்போது அவன் வலிமை பெற்ற உடல் கட்டுடைய வனாக நின்றான். சுத்தமானவனாக நின்றான். வெள்ளை வேட்டிக்காரனாக நின்றான்.

கோவில் மணியகாரர் ஒரு கோணத்தில் போடப்பட்டு இருந்த மரக்கதிரையில் கொலுவிருந்தார். கயிலாய பிள்ளையர் மணியகாரரின் காதிற்குள் ஏதோ குசுகுசுத்தார்.

தன்னுடைய மகன் பக்கம்தான் ஒருவன் வரத் தாமத மாகிவிட்டது.

வரத் தவறியவன் கறுத்தான்!

கறுத்தானுக்குப் பதிலாக வேறொருவரின் பெயரை கயிலாயர் மணியகாரரின் காதுக்குள் சொன்னார்.

மணியகாரர் சூரியரை அழைத்தார்.

சூரியரின் சம்மதத்தைக் கேட்டார்.

''என்ரை பள்ளனுக்குச் சோடியாக ஒரு தவசியன் எண்டால்... என்ரை பள்ளனுக்கு அது பெருமை!'' சூரியர் குத்தலாகப் பேசினார்.

தவசியப் பகுதிக்குள் இருந்து செல்லப்பன் என்பவனைக் கூப்பிட்டார் கயிலாயர். அவன் வரவில்லை.

''செல்லப்பா! நீதான்ரா வாடா!'' என்றார் கயிலாயர்.

''நான் என்ன அவ்வளவு இழப்பமோ... பள்ளனுக்கு நான் சோடியோ...? நான் மாட்டன்; நாளைக்குப் பள்ளர் என்னை மதிப்பாங்களே!''

செல்லப்பன் பதில் சொல்லிவிட்டு மறுத்துவிட்டான்.

கயிலாயரை சுயமரியாதை உணர்வு கொன்றது!

அந்த வேளை வெயர்க்கக் களைக்க கறுத்தான் ஓடி வந்தான். கறுத்தான் கந்தனைவிடச் சற்று வயதானவன் தான். என்றாலும் உடல் உறுதி கலையாதவன்.

கறுத்தான் களரிக்குள் வந்துவிட்டான்.

மணியகாரரின் பார்வையில் காய்கள் எண்ணிக் கணக்கிடப்பட்டன.

சந்தேகமான காய்களைத் தூக்கிக் கிலுக்கி சரி பார்த்து தனது நடுநிலைமை நிதானத்தை நிலைநிறுத்த முற்பட்டார் மணியக்காரர்.

கோவிலின் மதிய நேரப் பூசை முடிந்தது! பூசாரி அர்ச்சனைத் தட்டுடன் களரிக்குள் கால்வைத்து இரு பகுதியில் இருந்தும் இரு காய்களை எடுத்து அவைகளுக்கு சூடம் காட்டி பொட்டிட்டு, வெளியே போகவும் பங்கம் தொடங்கிவிட்டது.

சூரியர் முதலாவது காயை எடுத்துக் கந்தனிடம் கொடுத்தார். கந்தன் மிகவும் பல்வியமாக வாங்கி அம்பாளை நோக்கிக் கும்பிட்டுவிட்டு களரிக்குள் நின்றான்.

கயிலாயரின் மகன் சந்திரர் ஒரு காயை எடுத்து கறுத்தானின் கையில் வைத்தார். அவனும் அம்பாளை நோக்கிக் கும்பிட்டுவிட்டு களரிக்குள் வந்துவிட்டான்.

மணியக்காரர் பூ வைத்துப் பார்த்ததில் கந்தனே முதலாவது அடிகாரன்.

கறுத்தான் முதலாவது காயை உருட்டினான். கந்தன் காயைச் சுற்றி வந்து வளம் பார்த்து முஷ்டியை உயரத் தூக்கி தனது காயினால் விட்டான் ஒரு குத்து!

கறுத்தானின் முதலாவது காய் தூள்!

இரண்டாவது காய்......

அதுவும் தூள்!

மூன்றாவது காய்......

அதுவும் தூள் !

மொத்தத்தில் அத்தனையும் தூள் !

கந்தனுக்காகக் கரகோஷம் வானைத் தொட்டது !

பதினோராவது காயில் கந்தனின் கையானும் சேர்ந்து நொருங்கியது !

இப்போது அடிப்பது கறுத்தானின் முறை. அவன் தன்னைத் தயாராக்கிக்கொண்டான்,

கந்தன் ஒரு காயை உருட்டிவிட்டான் !

கறுத்தான் மோதினான் !

இரண்டுமே நொருங்கிவிட்டது.

மறுபடி கந்தன் முறை......

கறுத்தான் உருட்டிவிட்டான்.

கந்தன் மோதினான்; ஒன்று நொருங்கிவிட்டது !

மற்றது .....

மற்றதும் நொருங்கி ...

மற்றது......

கந்தன் இப்போது ஏழுகாய்களை நொருக்கி விட்டான் !

மறுபடியும் கறுத்தான் முறை.

அவன் காய்களினால் நான்கு காய்களை நொருக்கி விட்டான் !

மறபடியும் நொருக்கிவிட்டான் !

மறுபடியும் கந்தன் !

மறுபடியும் கறுத்தான் !

இப்படியே சற்று நேரத்திற்குப் பின் கந்தன் பக்கத்தில் இருபது காய்களும், கறுத்தான் பக்கத்தில் நாற்பத்தைந்து காய்களும் சேதமாகிவிட்டன.

கறுத்தானுக்குக் களைப்பு வந்துவிட்டது!

அவனுக்குப் பதிலாகத் தவசியன் ஒருவன்.

அவனுக்கு ஜோடியாக இந்தப் பக்கத்திலும் ஒரு தவசியன்!

மணி ஒன்றுக்கு மேலாகியது!

வெயில் கொளுத்தியது!

ஜனக்கூட்டம் அசையவில்லை!

அடுத்து சந்திரர் பகுதியில் ஒரு கோவியன். அவனுக்குச் ஜோடியாக இந்தப் பக்கத்திலும் ஒரு கோவியன்!

அடுத்துச் சாண்டான் ஒருவன். அவனுக்கு இணையாக இன்னுமொரு சாண்டான்!

இப்போதையக் கணக்கின்படி சூரியர் பக்கத்திற்கு நூறு வரை சேதம்! சந்திரர் பக்கத்திற்கு நூற்று எண்பதுக்கு மேல் சேதம்!

இதற்குப்பின் இரு பக்கங்களிலும் இரு வேளாளர்கள்!

அவர்கள் போர் முடிவு கண்டு, சூரியர் பக்கத்தில் இரு நூறுக்கும் அதிகமான சேதம்! சந்திரர் பக்கத்திற்கு முன்னூற்றி ஐம்பதுக்கு மேல்!

ஐந்தாவது ஜோடியும் மோதி முடிந்தபோது...சூரியர் பக்கத்தில் இருநூற்றி ஐம்பதும், சந்திரர் பக்கத்தில் நானூற்றுக்கு முன் பின்னாகவும் இருந்தது!

மறுபடியும் கந்தன்!

மறுபடியும் கறுத்தான்!

கந்தன் நொறுக்கித் தள்ளினான்.

கறுத்தான் தோற்றுக்கொண்டே போனான்.

கயிலாயர் மனதிற்குள் கறுவினார். கறுத்தான் வேண்டுமென்றே கையான்களை நொருக்குவதாக அவருக்குப் பட்டது.

சூரியர் அவனை முன்கூட்டியே விலைக்கு வாங்கிவிட்டதாகவும், அவர் முடிவுக்கு வந்தார். இடையே கறுத்தானை நிறுத்திவிட்டு அவர் தவசியனை விட்டார். பின்பு கோவியனை விட்டார்! எதுவும் பலிக்கவில்லை. கடைசியில் கறுத்தானையே விட்டார்.

கந்தன் பங்கத்தை முடித்தான்.

அவன் பக்கத்திற்கு எண்பத்தைந்து காய்கள் இருந்தன.

சூரியருக்குப் பெரும் வெற்றி!

பங்கம் முடியும்போது பொழுது நன்கு சாய்ந்துவிட்டது!

ஜனக்கூட்டம் கலைந்தது!

நொறுங்கிய தேங்காய்களை கோவில் பணியாள் அள்ளிக் குவித்துக்கொண்டிருந்தான்.

அதை வத்தல் ஆக்கி எண்ணை ஆக்க சாண்டான் ஒருத்தன் கோவிலோடு சேர்ந்து கொண்டு தொண்டு செய்தான்.

அடுத்த ஆண்டுவரை அம்பாளுக்கு விளக்கெரிக்கும் எண்ணைக்குப் பஞ்சமில்லை.

அன்றிரவு வேலுப்பிள்ளையர் வீட்டில் பெருவிருந்து!

கோழிகள் !

கிடாய்கள் !

விளைவு சாராயங்கள்!

இடை இடையே அவருக்கென்று பிரத்தியேகமாக அழைக்கப்பட்டிருந்த மாட்டின் பிறாண்டிப் புட்டிகள் பலருக்குமாக உடைக்கப்பட்டன.

///

# 15

மிகவும் அக்கறையோடு கந்தனை சுத்தம் செய்து பூசிப்புணத்தி, வெள்ளை உடுக்க வைத்து அவன் முடிக்கு எண்ணெய் தடவ வைத்து அவனை அலங்காரம் செய்து களரிக்குள் நிறுத்தி அவன் புயபலத்தால் சூரியர் பங்கத்தை வென்றுவிட்டார்.

மறுபடியும் கந்தன் ஊத்தையாகி விட்டான்! தன்பாட்டிலேயே கந்தன் பத்து மாடுகளையும் முப்பதுக்கு மேற்பட்ட ஆடுகளையும் சம்பாதித்துவிட்டான்!

பகல் சீதேவி அம்மாள் வீட்டு வேலை

களை முடித்துக்கொண்டு மாடுகளைச்சாய்த்து தரவைக்குள் விட்டுவிட்டுத் திரும்புவான். இடைப்பட்ட நேரத்தில் ஊருக்குள் திரிந்து தொண்டு துரவுகள் செய்வான். மதியத்திற்கு மேலே தரவைக்கு ஓடுவான். ஆடுமாடுகளை இட்டுச் சென்று தரவைக்குள் தண்ணீர் காட்டுவான். பின்பும் சிறிது தூரம் மேச்சல் காட்டுவான். பின்பு சாய்த்துக் கொண்டு வந்து கட்ட வேண்டிய இடங்களில் கட்டிவிட்டு தனது கால்நடைகளைச் சாய்த்துக்கொண்டுபோய் வயல் காடுகளில் கூலிக்கு எருக்கட்டுவான். மீண்டும் காலை வந்து விடும். கையில் நான்கு பணமோ ஐந்து பணமோ கிடைக்கும்!

எப்படியும் இரவுக்குள் நயினார் வீட்டுக் கோடிக்கு வந்துவிடுவான். தட்டுவச் சோறும், சிரட்டைத் தண்ணீரும் அவனுக்காகக் காத்திருக்கும்.

சூரியர்நயினார் காசையும் காணிகளையும் கரைத்து வருவது ஊரறிந்த செய்தியாகிவிட்டது. கந்தனுக்கு அதெல்லாம் தெரியாது. சூரியர் நயினார் விரல் அசைத்தால் அசைவான்.

ஊரில் எல்லாக் காரியங்களிலும் தன்னை மிஞ்சியாரும் இருக்கக் கூடாது என்பதுதான் சூரியருடைய ஆசை யெல்லாம்.

கோப்பாய் இராசவாசல் பரம்பரையில் பிறந்தவர்; புத்தூர் பல்லக்கு முதலியினதும் மந்துவில் வேலுப்பிள்ளை யினதும் மகளுமாகியவளைக் கட்டிக்கொண்டவர். இதனா லெல்லாம் அவரது ஆசை அப்போதைக்கு அப்போது நிறைவேற்றப்பட்டே வந்தது.

தேங்காய் அடித் தோல்வியுடன் கயிலாயபிள்ளையர் அடங்கிப் போய்விடவில்லை. தனது மகன் சந்திரரை இதற் கென்றே திட்டமிட்டு சூரியருக்கு எதிரான காரியங்களில் பயிற்றுவித்து வந்ததை சூரியர் கவனத்தில் கொள்ளவில்லை.

ஊரில் அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் கயிலாயருக்கு இருந்துவந்த செல்வாக்கினையெல்லாம் மகன் பெயருக்கு மாற்றுவதில் அவர் அதிக சிரமம் எடுக்க வேண்டியதாக இருக்கவில்லை.

அப்போதைக்கப்போது சூரியர் செல்வாக்கினைத் தடுத்துவிட பலவகைகளில் அவர் எடுத்துவந்த நடவடிக்கை களெல்லாம் உதவி புரிவதைப்போல புத்தூர் பல்லக்கு முதலியும் கண்களை மூடிக்கொண்டார். வேலுப்பிள்ளை யருக்கும் வயதாகிவிட்டது.

அப்போதுதான் கண்ணம்மாள் தாயானவளின் வயிற்றில் உதயமாகி மந்துவில் மண்ணில் கால்வைத்தாள்.

வேலுப்பிள்ளையர் கண்ணம்மாள் பேத்தியின் சாதகத்தை கச்சாய் சாத்திரியிடம் எடுத்து வந்தார்.

கச்சாய் சாத்திரி சகல விதங்களிலும் கண்ணம்மாள் சிறப்புடையவளாகத்தான் சாதகம் கணித்தார். தந்தை வழிக்கு சிலகாலம் கஷ்டம் என்று சொல்லி வைக்கவும் அவர் தவறவில்லை. இதனால் சூரியரின் கேளிக்கை நடவடிக்கை களை இலேசாகக் கட்டுப்படுத்தவேண்டியதாயிற்று. ஆயினும் சூரியரா கேட்பவர்!

வருடா வருடம் பங்கம் வந்து போயிற்று. அவைகளில் தொடர்ச்சியாக வெற்றி கண்டு வந்த சூரியருக்கு இம்முறை தோல்விதான் வந்தது; இந்த முறை தேங்காய் அடி தலைச்சனாக கந்தனை அவரால் நிறுத்த முடியவில்லை. அந்த வேளையில்தான் கந்தன் மரம் சறுக்கி தாவளத் துரும்பு லுக்கேசனிடம் புக்கை கட்டிக்கொண்டு படுத்து இருந்தான்.

இம்முறை தோல்வியைத் தொடர்ந்து நான்கைந்து காரியங்களில் தோல்விதான் கிட்டியது.

கடைசியாக நடந்த சேவல் அடிப்போரில் எடுத்த வெற்றி சற்று அவரை நிம்மதியடையச் செய்தது.

பெருஞ்சாதி வெள்ளடியான்களை வளர்த்துச் சண்டைக்கு விட்டு ஜெயித்து தனது பெருமையை நிலை நாட்டுவதில் சந்திரர் மிகவும் முன்னேறியிருந்தார்.

சூரியருக்கு இம்முறை ஒரு ஆசை வந்துவிட்டது. எப்படியும் ஒரு சேவலை வளர்த்து சந்திரரின் சேவலை வென்றுவிடவேண்டும் என்று அவர் முடிவுசெய்துகொண்டு பல இடங்களிலும் சொல்லி வைத்து......கடைசியாக யாழ்ப்பாணத்து முலைவையைச் சேர்ந்த பண்டாரி என்ற பஞ்சமனிடமிருந்து அரவான் என்ற புகழ் படைத்த சேவலைக்கொண்டு வந்து விட்டார்.

சூரியர் சேவல் வளர்க்கத் தொடங்கிவிட்டார் என்றும், சந்திரரின் கழுகனுக்கு இணையாகச் சண்டை செய்யக் கூடியது அதுதான் என்றும்ஊருக்குள் பெயர் வந்துவிட்டது

சூரியர் சந்திரருக்கு ஆள் சொல்லி அனுப்பி...... ''அடுத்த மாத முதல் சனிக்கிழமை சேவல் அடிக்கு ஒப்புச் சொல்ல முடியுமா ?'' என்று கேட்க வைத்தார்.

சந்திரர் என்ன இழப்பமானவரா ? பல களரி கண்ட கழுகன் அவரிடம் இருக்கிறது. ஒப்புச் சொல்லிவிட்டார்.

பின்பக்கத் தென்னம் சோலைக்குள் சிறிய கூடமைத்து மிகவும் பக்குவமாக சூரியர் அராவான் வளர்க்கத் தொடங்கி விட்டார்.

கொண்டுவந்த நான்கைந்து நாட்களும் கந்தனிடம் தான் அதைப் பராமரிக்கும் பொறுப்பு விடப்பட்டது. இந்த நான்கைந்து நாட்களுக்கிடையில் ஆராவான் இளைத்துப்போய் விட்டது. அது இளைத்துப் போய்விட்டதாக சேவலைப் பார்க்க வந்துபோன பலரும் கூறினர்.

எனவே சூரியருக்குக் கவலையாக இருந்தது. இன்னும் போட்டிக்கு இருபத்தைந்து நாட்களே இருந்தன.

அவர் முலைவைப் பண்டாரியனையே வீட்டுக்குத் தருவித்து விட்டார்.

அதைப் பராமரிக்க அவன் தருவிக்கப்பட்டது ஊருக்குப் புதுமையாக இருந்தது. பண்டாரி வந்து சேர்ந்தான்.

பண்டாரிக்கு வேண்டியவைகளை வேண்டிய வேளையில் கவனிப்பதற்கு கந்தனை நியமித்தார்.

மூன்று நாட்களுக்கு ஒரு தடவை பரவைக் கடலில் அராவானை நீந்த வைத்து கால்களை எடுக்கும்வரை முழுக்காட்ட வேண்டும் — உப்புத் தண்ணீரில் அதன் உடல் வலித்து இறுக்கமாக வேண்டும். முலவையில் அது அப்படித் தான் வளர்ந்தது.

அதிகாலையோடு அம்மியில் நெல் பரப்பி கொத்தித் தின்ன வைக்க வேண்டும். அப்போதுதான் அதன் சொண்டுகள் இறுக்கமடைந்து, தடித்து உரமாகும்.

பத்து மணிக்குப் பிந்தாமல் குமரிக் கத்தாளைச்சாற்றில் குரக்கன் மாக்கழி கிண்டி... அத்துடன் ஆண்பனைக் கள்ளில் காய்ச்சிய பனங்கட்டிப் பாணியும் குழைத்து உணவூட்ட வேண்டும்.

அப்போதுதான் அதன் குடலில் தண்ணீர்ப் பற்றுக் குறைந்து சுத்த இரத்தம் ஓடும்

மத்தியானத்திற்குப் பின்பு சற்று வேளை அதை வளவுக்குள் தாராளமாக உலாவவிட்டு சற்றுத் துரத்திக் கலைத்து களைக்கவைக்கவேண்டும். அப்போதுதான் அதற்கு இளைப்புக் களைப்பு பழக்கப்பட்டதாகிவிடும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு பெட்டைக்கோழி அதன் கண்ணில் படவோ, பெட்டைக்கோழியின் கேரல் அதன் செவியில் விழவோ கூடாது. அப்போதுதான் அதன் ஆண்மை இறுகி வீரம் விளையும்.

மாலையானதும் இரண்டு சிறங்கை விளைவு சாராயமும் ஒரு சிறங்கை விளைவு கற்கண்டுப் பொடியும், சிறிதளவு சிறு குறிஞ்சாச்சாறும் கலந்து பருக்கிக் குடிக்க வைக்க வேண்டும் அப்போதுதான் அதற்குச் சறளிப் பிடிப்பு நீங்கும்.

இரவில் அதை ஊஞ்சலில் உறங்க வைத்து இடை இடையே இரண்டொரு தடவை அந்த ஊஞ்சலை ஆட்டி வைக்க வேண்டும். அப்போதுதான் அதன் பாதமும் விரல்களும் இறுகி எதையும் அப்பிப்பிடிக்கும் வலிமைபெறும்

இடை இடையே நான்கைந்து தடவை தவிடு களையாத புழுங்கல் அரிசி முட்டுக்காய்ப் பதத்தில் வேகவைத்த சோறு... ஏதாவது சிறிய இறச்சித் துண்டுகள் அல்லது மாமிச சவ்வுகள் கொடுக்கவேண்டும்.

நான்கைந்து நாட்களுக்கொரு தடவை அதன் பெருந்துடை இறகுகளைப் பிடித்துவிட்டு மசாச் செய்து, அதன் தலையை இருகைகளாலும் அடக்கிப் பிடித்து இலுப்பெண்ணை தடவி கசக்கி அதன் தலையை வாய்க்குள் வைத்து உறிஞ்சி இழுத்து அதன் தொண்டைக்குள் இருக்கும் சறளியை இழுத்து விடுதல் வேண்டும்.

இத்தனை வேலைகளையும் கந்தன் முன்பு கற்றிருக்கவில்லை.

இது கந்தனால் செய்யக்கூடிய வேலையும் அல்ல. பண்டாரியனுக்கு இந்த வேலைகளே பெரிய சுமை! ஆனாலும் சூரியர் செய்து கொடுத்த வசதிகளால் இது சுமையாகப்படவில்லை. ஆயினும் நான்கைந்து நாட்களுக் கொரு தடவை பரவைக் கடலில் அதைக் குளிப்பாட்டி வைப்பது ஒன்றை அவனால் செய்து வைக்க முடியவில்லை.

தென்மேற்குப் பரவைக் கடலைத் தேடி ஏறக்குறைய எட்டு மைல்களுக்கப்பால் போகவேண்டும். கோயிலாக்கண்டி என்ற அந்த இடத்திற்குப் போவதற்கு குறுக்குப் பாதைகளும் இல்லை.

அந்தக் கோயிலாக்கண்டி கிழக்கே சேர்ந்து ஆனையிறவு கடலுடன் சங்கமமாகிறது இந்தச் சங்கம இடைவெளியில் சற்றுப் பரவை இடமொன்று இருக்கிறது. தென்னந் தோட்டங்களுக்கு நடுவால் மணலில் சுமார் நான்கு மைல் தாண்டிவிட்டால் அந்த இடத்தை அடைந்து விடலாம்.

அந்தப் பரவைக் கடலை நன்கு தெரிந்த ஒருவனைப் பிடித்து ஒருநாள் பண்டாரியுடனும் கந்தனுடனும் இடங்காட்டி அனுப்பி விட்டார் சூரியர்.

இதற்காக நான்கு நாட்களுக்கு ஒரு தடவை பண்டாரி யனும் கந்தனும் விடிவெள்ளி மூளைப்பதற்கிடையில் எழுந்து அராவானையும் ஏந்திக்கொண்டு நடக்க வேண்டியதாயிற்று!

பண்டாரியனுக்கு அப்போதைக்கப்போது மாமிச உணவு, குடிப்பதற்கு விளைவு சாராயம்... வெற்றிலை புகையிலை இடைக்கிடை,ஐயாவின் மாட்டின் பிராண்டியும் கிடைத்து வந்தது!

பண்டாரியன் பட்டணத்திலிருந்து வந்ததால் சிகரெட் பிடிக்கும் பழக்கமும் இருந்ததால் சூரியர் ஒரு ரின் எலிபன் சிகரெட்டும் வாங்கிக் கொடுத்தார்.

"பிள்ளையின்ரை சாதகப் பலனும் நல்லாயில்லை... உந்த வீண் வேலையளை விட்டிட்டுப் பேசாமல் இருங்கோ" என்று மனைவியானவளும் சொல்லிப் பார்த்தாள்.

சூரியருக்கு இது ஏறவில்லை. பிள்ளை பெற்ற வீட்டுக் குள்ளேயே நோய்வாய்ப்பட்டிருந்த அவளுக்கு சூரியரின் இந்தப் போக்கு மேலும் மேலும் சுகயீனங்களையே தருவித்தது.

இதைப் பற்றியெல்லாம் சூரியருக்குக் கவலை இருக்க வில்லை. இம்முறை எப்படியும் சந்திரரையும் கயிலாயரை யும் வீழ்த்திவிட வேண்டும் என்பதுதான் அவர் கவலை

எல்லாம். ஆனால் அவருக்கோ நான்கு வருடங்களுக்கு முன் கொடிகாமச் சந்தையில் நடந்த சண்டை ஒன்றுக்குள் தானாகச் சேர்ந்துகொண்டு அதன்பால் கொலையில் முடிந்த எதிரிகளை மீட்க அவர் விற்றுவிட்ட தென்னந் தோப்பு.

மூன்றாம் வருடம் சுட்டிபுரத் திருவிழாவின்போது சின்ன மேளம் பிடித்த விஷயத்திலிருந்து கோவில் மணிய காரனின் தம்பியுடன் முரண்பட்டுக் கோவில் அதிகாரத்தை கொழும்புவரை சென்று வேலை பார்த்ததி னால் இழந்துவிட்ட பணச் செலவுகள்.

தேவையில்லாமல் கடந்த வருடம் மட்டுவிலில் செட்டியச் சாதிக்கும் தச்சச் சாதிக்கும் இடையே நடந்த தாச்சி விளையாட்டுக்கு மத்தியச்சம் வகிக்கப்போய் அதனால் ஏற்பட்ட சண்டைக்குள் மாட்டுப்பட்டு, செட்டியப் பகுதிக்காக அள்ளிச் செலவழித்த செலவுகள் !

இடைஇடையே இப்படி எத்தனை எத்தனையோ, கடந்த தையில் வீட்டுக்குள் பரிசேயர் விளையாட்டு வைக்கப்போய் விளையாட்டு முடிவில் ஏற்பட்ட தகராறில் வீட்டுக்காரன் என்ற உரிமையில் கந்தன் சச்சரவை அடக்க மண்வெட்டிப் பிடியை விசுக்கி அடித்தபோது ஒருவன் மூன்று மாதத்திற்குள் இறந்துபோக கந்தனை மீட்பதற்காக அந்த செத்துப்போனவன் கணக்கில் செலவழித்த செலவுகள் !

இவையெல்லாம் போதாதென்று இப்போது தொடங்கி யிருக்கும் சேவல் அடிப்பந்தயத்தை இட்டு அவள் தனது மன ஏக்கத்தை தெரிவித்து ... சூரியர் அதை அசட்டை பண்ணவே அவள் நிரந்தரப்படுக்கையில் விழுந்து விட்டாள்.

சேவலடிக்கு நாலு நாட்கள் இருக்கும்போதே பண்டாரியன் பற்றை மறைவிற்குள் தடவித் தடவி

ஒவ்வொரு நாளும் ஐந்துக்குக் குறையாத ஓந்தில்களைக் கலைத்துப்பிடித்து உயிருடன் அல்லது குறை உயிருடன் அராவானுக்கு உண்ணக் கொடுத்துவந்தான்.

சூரியரின் சேவல் வளர்ப்புக்காரன் என்ற முறைப்படி இதைச் செய்யவேண்டும். அது ஒரு நாணம்!

இந்த ஓந்தில்களைக் கலைத்துப் பிடிப்பதற்கு கந்தனையும் உதவிக்கு வைத்துக்கொண்டு, தென்னந் தோப்புகளிலும் புல்மேடுகளிலும் சிறு சிறு நாயுண்ணி கிஞ்ஞான் பற்றைகளுக்குள்ளும் அலைய வேண்டிய தாயிற்று.

பண்டாரியனை இந்த நான்கைந்து நாட்களுந் தான் பலரும் பார்த்தனர். மற்றப்படி அராவானின் கடல் குளிப்பு வேளைகளைத் தவிர வெளியே அவன் போவதில்லை. குளிப்பு முழுக்குச்குள் எல்லாவற்றையுமே பின்புறத்தில் உள்ள துரவில் சமாளித்துக்கொள்வான்.

பண்டாரியன் பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியானவன்.

அந்தப் பிரதேசத்தில் அவனின் சாதிக்கு இல்லாத பழக்கமாக அவன் கிறில் வெட்டு வெட்டியிருந்தான்.

காதிலே திருகணை முறுக்குக் கடுக்கனுக்குப் பதிலாக வெள்ளை வெளேரென்ற கல்லுப் பதித்த காதுக்குச்சி அணிந்தும் இருந்தான்.

ஊருக்குள் இல்லாத வழக்கமாக அமைந்துவிட்ட அவனது தோற்றத்திற்கு எடுப்பாகவும், புதிதாகவும் அவன் அரைக்கை பெனியன் சட்டை அணிந்திருந்தான்.

வேட்டியை முழங்காலுக்குக் கீழாகவே பதித்து உடுத்தி இருந்தான், போதாக்குறைக்கு ஒட்டு மீசை! அவன் உலாவி வந்த தென்னை வளவிற்குள் அவனைக் கண்டு வெருண்டு ஓடி மறைந்த பெண்கள் பலர்!

அவனைப்பற்றி அவர்கள் தங்களுக்குள் ஏதேதோ பேசிக்கொண்டார்கள். அந்த நான்கைந்து நாட்களும் தென்னம் தோட்டத்திற்குள் உலாவிய வேளை அங்குமிங்குமாகக் கூடி கூடி ஒளிந்திருந்து அவர்கள் பார்த்தனர்.

சேவலடிக்குக் குறிக்கப்பட்ட நாளும் வந்துவிட்டது. முக்கியமாக வேம்பிராய் சந்திக்குப் பக்கமாக உள்ள கயிலாய பிள்ளையரின் சொந்தமான மாவளவிற்குள் சேவலடிக்கான களரி கட்டப்பட்டது.

முப்பதடி சதுர நீளத்தில் எல்லை போட்டு கயிற்று வடங்கட்டி பார்வையாளர்கள் அதற்கு அப்பால் முன் வரிசையினர் இருக்கவும் பின்வரிசையினர் நிற்கவும் ஏற்பாடுகள் பலவும் பூர்த்தியாகிவிட்டன.

நடுவராக நியமிக்கப்பட்ட வரணி இராசாவும் தனது நடுவர் நிலையைப் பொருட்படுத்தி வேளையோடேயே வந்து சேர்ந்து விட்டார்.

பத்துமணிக்கெல்லாம் போட்டி ஆரம்பம். பண்டாரியன் அராவசனை நெருஞ்சுமுள் இடுக்குள் வைத்து வலக்கரம் தாங்கிவர இடக்கரத்தால் அதன் தலையைத் தடவிக் கிழுகிழுக்க வைத்துக்கொள்ள, அவனையும் உதவியாளன் கந்தனையும் நடுவே விட்டு தனது பரிவாரங்களுடன் சூரியரும் வந்து சேர்ந்துவிட்டார்.

சூரியரின் அராவானின் எடுப்பைப் பார்த்துவிட்ட ஜனங்கள் முண்டி அடித்து தள்ளினர்.

அராவானை இலாவகமாகக் களரிக்குள் தூக்கிப் போட்டுவிட்டு பண்டாரியனும் களரிக்குள் வந்துவிட்டான்.

வாய் அகன்ற அண்டாச்சட்டி ஒன்றினை சுமந்து வந்த ஒருவன் அதை ஒரு புறத்தே வைத்துவிட்டு மாந்தோப்பை மருவியபடி இருந்த துரவை அடைந்து பட்டையுடன் இறங்கி தண்ணீர் அள்ளி நிறைத்துக் களரிப்பக்கமாக வைத்துவிட்டான்.

அராவானைக் கட்டிப்போட்ட பஞ்சுவடத்தை சுருட்டிக் கந்தனிடம் கொடுத்த பண்டாரியன் தான் சொல்லும் போதெல்லாம் அதை நிலத்தில் வளத்தி தான் சொல்லும் போதெல்லாம் அதற்கு சட்டித் தண்ணீரை அடித்துவிட வேண்டுமெனக் கட்டளை இட்டான். அதுவும் ஒரு நாணய்!

போராளியைக் கட்டிப்போட்ட வடம் குளிர்மையாக்கப் பட்டால் போராளியின் உடலும் குளிர்மை பெறும் என்ற நம்பிக்கை!

கூட்டத்தில் சில குசுகுசுப்புகள்!

''ஆரடாப்பா இந்த ஒட்டு மீசைக்காரன்.''

''அவன் பட்டணத்து முலைவைய நளவனாம்!''

''பட்டணத்துக்கை நளவர் மீசை விடவும் துவங்கீட்டாங்களோ?''

''மெல்லமாப் பேசு; அவன் றயிலடி நளவனாம்! பிறகு அவங்கள் வீண் கரைச்சலுக்கு வந்திடுவாங்கள்! ஒரு காட்டுச் சாதி; அவங்கள்! போன கிழமையும் ஆரிய குளத்துக்கை செல்லன் எண்டவனை துண்டு துண்டா வெட்டிப் போட்டவங்கள்.''

''எண்டாலும் இப்பிடியோ... இன்னும் இஞ்சாலுப் பக்கப் ஒருத்தரும் மேல் பெனியன் போடேல்லை. இவன் போட்டிருக்கிறான்!''

''உவன்ரை நிறத்தையும் ஆளையும் பாத்தா உவன் நளவனுக்குப் பிறக்கேல்லை...சில வேளை வெள்ளாளனுக்கு தான் பிறந்திருப்பான்! உவன்ரை முகத்திலை வேலுப் பிள்ளையற்றை சாயல் அடிக்குது. ஆர் கண்டினம்?''

''சாவல் வளப்பிலும் சாவல் விளையாட்டிலும் வலு விண்ணனாம்! இப்ப ஒரு மாசமாய் சூரியர் உவனைத்தான் வீட்டிலை வைச்சுச் சாவலைப் பாப்பிக்கிறாராம்!''

''நல்ல காலமாப் போச்சு உவன்ரை தோற்றத்துக்கு சூரியற்றை பெட்டைக்கோழியை மிதிச்சிருப்பான். அவள் பாவி படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள். இல்லாட்டி...''

''இஞ்சை! உனக்கேன் காணும் வீண் கதையளை! அவன்ரை வேட்டிக் கட்டைப் பார்!''

''ஓமோம் இஞ்சத்தைய நளவர், பள்ளர் வெள்ளை வேட்டியைக் கண்டறிய மாட்டாங்கள். முழங்காலுக்குக் கிழை கட்டுவாங்களோ... உவர் சூரியர் பெரிய எடுப்பிலை ஊரைப் பழுதாக்கப் போறார். எக்கணம் பஞ்சமச் சாதி மதிக்காமல் விடப் போகுது...! ஒரு பள்ளர் நளவர் காதுக் குச்சி போட்டிருக்கிறாங்களோ ... மேல் மீசை விட்டிருக் கிறாங்களோ... கோப்பாய் நயினார் சூரியர் எங்களுக் கெல்லே காது குத்தப்பாக்கிறார். நளவனைக் கொண்டுவிச்சு!''

கயிலாயபிள்ளையர் கால்களை இடாப்பி இடாப்பி முன்னே வர அதை அடுத்துச் சந்திரன் திருநீற்றுப் பூச்சும் சந்தணப் பொட்டுமாக தனது திருமேனியை திறந்து, திறந்து சால்வையால் மூடிப் பின்னே வர, அவரைத் தொடர்ந்து கழுகனைப் பக்குவமாக ஏந்தியபடி 'சரக்கன்' என்ற அவரின் போர்க்காரன் வர ஒருபெரும் சனக்கூட்டமே அவர்கள் பின்னால் வந்தது.

சரக்கன் மேற்குப்புற எல்லையில் கழுகனைக் களரிக்குள் போட்டுவிட்டு சால்வையைக் கழற்றித் தனது அரையில் கட்டி வேட்டியை மடித்து சண்டிக் கட்டுக் கட்டிவிட்டு மீண்டும் சால்வையை கழற்றி வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டான்.

அவனுக்குப் பக்கமாக தவசியக் குட்டியன் சாவல் வடத்தைத் தாங்கி நின்றான்.

அப்போதுதான் பட்டணத்தில் விற்பனைக்கு வந்திருந்த தகர வாளி ஒன்றினை களரிப்பக்கமாக வைத்துவிட்டு வேறு ஒரு சிறு வாளியால் துரவில் த்ண்ணி அள்ளி பெரியவாளியை நிரப்பிவிட்டான் ஒருவன்.

''கோவியச் சரக்கனைத்தான் கயிலாயர் விளையாட விடுவார் போலை கிடக்கு. எப்பிடி எண்டாலும் ஒரு நளவனுக்கு ஒட்டாக எங்கடை கோவியனை விடுகிறதோ?''

''சூரியர் நளவனை விடப்போறார் எண்டா... கயிலாயரும் ஒரு நளவனை அடுக்குப் பண்ணி இருப்பார். தெரியாது போலை கிடக்கு!''

''எண்டாலும் நாங்கள் உதுக்குச் சம்மதிக்கிறதோ? வாருங்கோ ஒருக்கா வரணி ராசாவைக் கேப்பம்! அவர் தானே மத்திச்சர்!''

வரணி இராசாவுடன் பலர் பேசினார்சள். அவர்கள் பேசியது என்ன என்று சூரியருக்கு விளங்கிவிட்டது.

''நீங்கள் என்ன கதைக்கிறியள் எண்டு எனக்கு விளங்குது' சாவல் வளக்கிறது; அடிபடவிடுகிறது நளவன்ரை பரம்பரையிலை வந்த தொழில். அதுக்குத்தான் நான் அவன்ரை பரம்பரைத்தொழிலை அவனைக்கொண்டே செய்விக்கிறன்.''

சூரியர் எடுத்த எடுப்பிலேயே கதையை முடித்துப் பேசினார்.

''உங்கைதேங்காய் அடியள்ளை நளம் பள் சாதியளைச் சேத்து அடிக்கச் சம்மதிச்ச நீங்கள் இதுக்கேன் சம்மதிக்கக் கூடாது; கேக்கிறன்?'' அவரே மறுபடியும் பேசினார்.

''ஓ சம்மதிச்சுச் செய்த நாங்கள்தான். அது எங்கடை பிழை! எண்டாலும் நளவனுக்கு நளச்சோடியைத்தான் விடவேணும்; கோவியனுக்கு கோவியச் சோடியைத்தான் விடவேணும்.''

கயிலாயர் புட்டுக்கொண்டு பேசினார்.

"அதுதான் இப்ப நான் நளவன் ஒருத்தனை விடுகிறன். ஏலுமெண்டா நீங்களும் ஒரு நளவனை விடுங்கோ பாப்பம்! இல்லை எண்டா என்ரை நளவனுக்கு கோவியனை விடுகிறதா இருந்தா என்ரை நளவனுக்குத்தான் அது பெருமை! ஏன் சரக்கனும் பயப்பிடுகிறானே போலை கிடக்கு; ஏன்ராப்பா நளத்தியளிட்டை போகேக்கை உதைப் பாக்காயள் என்ன?"

சூரியர் குத்தலாகப் பேசிவிட்டார். இது பலருக்குப் பிடிக்கவில்லை. சரக்கனுக்கு சுயமரியாதை தலைதூக்கி விட்டது!

"நயினார் கதைக்கிற கதையை எப்பன் கவனிச்சுக் கதைக்க வேணும்... நளவனெண்டா என்ன... ஆரெண்டா என்ன... நான் தயார்!" என்றான் அவன்.

"மக்காள்! அவசரப்படாதையுங்கோ; சரக்கன் சம்மதிச்சாச் செய்யட்டுக்கன்" என்று எல்லோர் முகங்களையும் இராசவர் பார்த்தார்.

எவரும் மறுப்புப் பேசவில்லை. போர் தொடங்கத் தயார் ஆகிவிட்டது.

"விளையாட்டுக்காரர் சம்மதிச்சாத்தான் சாவல்களைத் தூக்கிவிடலாம். ஒரு சாவல் கோளை கிளப்பி ஒடிச்சுது எண்டால், மற்றச் சாவலுக்குத்தான் வெற்றி! ஒண்டு செத்துது எண்டாலும் மற்றதுக்கு வெற்றி!

"சாவலுகள் அடிபட்டுக் கொண்டோ இல்லாட்டிக் களைச்சு நிண்டுகொண்டோ இருக்கேக்கை விளையாட்டுக் காரர் சாவல்களிலை தொடப்பிடாது!"

"சண்டை நடந்து கொண்டிருக்கேக்கை ஒண்டுக்கும் தண்ணி கிண்ணி தெளிக்கப்படாது."

இராசாவர் நிபந்தனையை வைத்துவிட்டு, பண்டாரியனுக்குக் கிழக்குப் பக்கமும், சரக்கனுக்கு மேற்குப் பக்கமும் தங்குமிடங்களைக் குறித்ததோடு போர் தொடங்கிவிட்டது.

களரியைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான் சரக்கன்.

பண்டாரியன் வானத்தைப் பார்த்து ஒரு நிமிடம் மௌனம் சாதித்துக் கண்களை ஒற்றிக் கொண்டான்.

''பண்டாரியன் பனை வட்டைக் குப்பிடுகிறான் போலை...'' என்று ஒரு நக்கல் குரல் கேட்டது.

பண்டாரியன் குரல் வந்த திக்கை பார்வையை வீசி குரலுக்கான முன்பிறை வெட்டுக்காரனை அவதானித்துக் கொண்டான்.

கிழக்கில் இருந்து மேற்கே அராவான்.

மேற்கில் இருந்து கிழக்கே கழுகன்.

இரண்டும் நட்டுக்கு நடுவே சந்தித்துக் கொண்டன.

அந்தவேளை அராவானும் கழுகனும் ஒத்துப் பறந்து செட்டை அடித்து ஒத்து மேவிக் கொண்டன. ஆனாலும் அந்த ஒத்து மேவலின் பறப்போடு பறப்பாக அராவான் தனது வலக்கால் முள்ளினை கழுகனின் கன்னத்தில் பதித்துவிட்டது!

அராவான் எதிரியை மடக்குவதில் தொடக்கத்திலேயே சினேகிதத்தோடு சினேகிதமாக இப்படிச் செய்துவிட்டது. இப்படித்தான் அது பல எதிரிகளை மடக்கி இருக்கிறது! வென்றிருக்கிறது!

கழுகனின் கன்னத்தில் இரத்தம் சொட்டியது.

''பாத்தியோ, பாத்தியோ... உன்ரை சாதிப்புத்தியைக் காட்டிப் போட்டாய்; நீ காட்டுவாய் எண்டு எனக்குத் தெரியுமடா'' என்று பண்டாரியன் தலது அராவானுடன் செல்லம் கொஞ்சினான்.

ஒத்துப் பறப்பது ஓய்ந்து இரண்டும் நேருக்கு நேராக இரண்டு முழத்தூரத்தில் நின்று கழுத்து இறகுகளைச் சிலிர்த்துச் சிலிர்த்து.. கண் இமை வெட்டாமல் வெறித்துப் பார்த்து மிகவும் மெதுவாக, மெதுவாக அடி நகர்த்தி...

திடீரெனக் கழுகன் பாய்ந்த பாச்சலுக்கு தலையைத் தாழ்த்தி இலாவகமாக தப்பித்துக்கொண்டான் அராவான்.

சணத்திற் பாய்ந்த கழுகன் அந்த வீச்சில் சற்றுத் தள்ளி வீழ்ந்து தடுமாறித் திரும்புவதற்கிடையில் அராவான் கணத்தில் அதன் பிடரியில் கொத்தி இழுத்து சடக்கென்று தனது இரு கால்களையும் அதன் கழுத்தில் பதியவைத்தது!

கழுகனுக்கு நல்ல காலம்! அராவானின் முள்ளுவளம் கழுத்தில் படவில்லை.

வெறும் அடி!

பிரயோசனம் இல்லாத அடி!

''சாய்!'' என்று அலுத்துக் கொண்டான் பண்டாரியன்.

ஜனக்கூட்டம் மாந்தோப்பை நிறைத்துவிட்டது!

வில்லு வண்டில்கள் அங்குமிங்குமாக விடப்பட்டிருந்தன

தொலைவில் நெருப்புப் பெட்டி போன்ற உருவத்தில் கார் ஒன்று வெடித்துப் புகை கக்கிக் கொண்டு வந்து சேர்ந்தது யாழ்ப்பாணத்திற்கென்று தருவிக்கப்பட்ட மூன்றாவது கார் அது.

பல்லக்கு முதலியின் சந்ததியில் வந்தவர்கள் ஆதரவு தெரிவிக்க கார் நிறைய வந்து சேர்ந்து விட்டனர்.

சமீபத்தில்தான் மழுவராயரின் மருமகன் காரைவாங்கி இருந்தார்.

யாழ்ப்பாணத்திற்குத் தருவிக்கப்பட்ட மூன்றாவது மோட்டார் கார் என்ற அந்தஸ்தை அது பெற்றிருந்தது. காரைக் கண்டதும் ஒரு கூட்டம் இளம் வட்டங்கள் காரைச் சூழ்ந்து புதினம் பார்க்கத் தொடங்கிவிட்டனர்.

சேவல் விளையாட்டின் கவனம் சற்றுவேளை எல்லோரிடமிருந்து நீங்கிவிட்டது.

தொலைவில் ஒற்றைக் குதிரை பூட்டிய சறுக்கீஸ் வண்டி தெரிந்தது.

யாழ்ப்பாணத்து மாமாத்தம்பியர் சூரியருக்கு ஆதரவு தெரிவிக்க பரிவாரங்களுடன் வந்துசேர்ந்துவிட்டார்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த வெளிநாட்டு சறுக்கீஸ் கொம்பனி திவாலாகி யாழ்ப்பாணத்தில் அதன் பொருள் பண்டங்கள் விலைப்பட்டபோது அந்த சறுக்கீஸ் வண்டியை குதிரையோடு மாமாத்தம்பியர் வாங்கி இருந்தார்.

யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக அது நீண்டதூரம் இப்போதுதான் ஓடிவந்திருக்கிறது. அதுவும் சூரியருக்காக.

உடுப்பிட்டிச் சேனாதிராசாவும் அவன் நண்பர்களான இளம் வட்டங்களும் வெள்ளை வடக்கன்கள் பூட்டிய முழு வண்டியில்!

பண்டாரக் குளத்தடி முத்தன், கோப்பாய் தவசியன், அஞ்சணந்தாழ்வு செல்லன்; இப்படி ஒரு கூட்டம் கால் நடையில் வந்து சேர்ந்தது

ஆறுகால் மடத்தடி அகிளான் ஆறுமுகம், அவன் அண்ணன் றைக்கோட் சண்முகம் சோனக நயினாக்கண்டன், கோணாந்தோடம் கணேசன், குளப்பிட்டி மரங்கந்தையன் குதிரை வண்டியில்!

உணாவில் கள்ளுக் கொட்டில் சின்னப்பனும் அவன் நண்பன் முதலியும் வேறுசிலரும் கடைசி நேரத்தில்.

இப்படிச் சொல்லப்பட்ட பெயர் எடுத்த காய்கள் எல்லாம் சூரியர் சந்திரர்களுக்காகவும், பண்டாரியன்

சரக்கன் இருவரின் சாவல் விளையாட்டைப் பார்ப்பதற்காகவும் பேரெடுத்த அராவான், கழுகன் போரைக் காண்பதற்காகவும் வந்து சேர்ந்து விட்டனர்.

திடீரெனக் களரியைச் சுற்றி ஆரவாரம் கேட்டது. கழுகன் அராவானின் கண்களுக்குள் முள்ளைச் சொருகி இழுத்துவிட்டது! அராவானின் கண்ணில் இருந்து இரத்தம் வந்தது!

முதல் அரை மணி நேரம் ஓங்கியிருந்த அராவானின் கை இப்போது தாழ்ந்தது.

அராவானின் ஒற்றைக் கண் பறிக்கப்பட்டுவிட்டது. கழுகன் கை ஓங்கி விட்டது.

பண்டாரியனும், சரக்கனும் பம்பரமாகச் சுழன்று அங்குமிங்கும் போராளிகளுக்கு வேண்டியதைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

பண்டரியன் கந்தனைப் பார்த்து சைகை செய்யவே கந்தன் கையில் இருந்த பஞ்சு வட்டத்தை நிலத்தில் நீட்டி வைத்து தண்ணீரை அள்ளி, அள்ளி அதன் மீது தெளித்துக் கொண்டிருந்தான்.

அந்தச் சணத்தில் மந்திரத்தால் ஏவி விட்டது போல அராவான் தலையை கீழ்புறமாகத் தாழ்த்தித் திருப்பி கழுகனின் சோணையில் கொத்திக் கொண்டு அடக்கமாகப் பாய்ந்து, பாய்ச்சலில் கழுகனின் இடப்பக்க செட்டைக் குழிக்குள் முள் ஏற்றவே கழுகனின் செட்டை கீழ் நோக்கித் தொங்கியது!

களரியை நோக்கி மறுபடியும் ஜன இரைச்சல். பொழுது உச்சிவரை வந்துவிட்டது!

நாலைந்து தடவைகள் விளையாட்டுக்காரர் இருவரும் பேசிப் பறைந்து சேவல்களைப் பிடித்து தண்ணீரில் கழுவி கைகளை உரசிச் சூடேற்றி, முகங்களுக்கு ஒத்தணம் கொடுத்துவிட்டனர்.

கழுகனின் செட்டைக் குழிக்குள் விழுந்த தாக்குதல் அதன் செட்டையை விழுத்திவிட்டது! செட்டை கீழ் நோக்கி சரிந்து அது பரிதாபக் கோலத்தில் தள்ளாடியது.

ஜனக்கூட்டம் அனுதாபத்துடன் கரகோசம் கொட்டிக் கொண்டது.

பொழுது சரிந்துவிட்டது!

கழுகனினதும், அராவானின் உடல்கள் இரத்தத்தால் தோய்ந்து போயின.

இரண்டுமே களைத்துப்போய் ஒண்டை ஒண்டு முட்டுப் பட்டுக் கொண்டு அப்படியே நின்றுவிட்டன.

மறுபடியும் பண்டாரியனும் சரக்கனும் பேசி அவைகளை பிரித்துக் களை ஆற்றிக் கொண்டு......

மறுபடியும் மோதல்!

கழுகன் அந்தரத்தில் ஆதாரம் எதுவுமின்றி எழும்பி மோதியது! அராவானின் மற்றக் கண்ணுக்கும் அதன் குறி தப்பவில்லை.

ஐயோ அதன் மறு கண்ணும் பறிக்கப்பட்டுவிட்டது!

பண்டாரியன் திகைத்துவிட்டான்!

கூட்டம் ஆரவரித்தது!

சரக்கன் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு களரியைச் சுற்றிச் சுற்றி வந்தான்.

கந்தன் பஞ்சு வடத்தின் மேல் தண்ணீரை ஊற்றிக் கொண்டே இருந்தான். இப்போது அந்தப் பஞ்சு வட ஆராதனை பயன் தரவில்லை.

அராவானுக்கு இரண்டு கண்களும் போய்விட்டன.

கழுகனுக்கோ ஒரு செட்டை போய்விட்டது. மற்றப்படி முகத்திலெல்லாம் முட்காயங்கள்.

அராவானான் இரண்டு கண்களும் இழந்த நிலையில் குறிபார்த்து விளையாட முடியவில்லை. அப்படியே முள்ளம் கால்களை மடக்கிக் கொண்டு படுத்துவிட்டது.

கழுகனுக்கும் அசைய முடியவில்லை. அதுவும் நிலத்தில் படுத்துவிட்டது.

இடையே இரண்டடி தூரம் இடைவெளி இருந்தது.

இரண்டுக்கும் பிராண களை!

பொழுது தன்கு சரிந்து போய்க்கொண்டு இருந்தது.

சுமார் நான்கு மணி நேரத்திற்கு போர் நீடிக்கிறது.

ஒன்றை ஒன்று விடவில்லை.

கோழை கிளப்பி ஓடவில்லை.

களரிக்குள் விழுந்து சாகவில்லை. நேரமோ போய்க் கொண்டிருந்நது.

''இனி அதுகளாலை ஏலாது. சபோத்தியாய் பிடிச்சால் என்ன ... பேந்தொரு கோசுக்கு விடலாம்.''

இப்படி ஒரு கிழட்டுக் குரல் கேட்டது.

''அதென்னெண்டு சபோத்தி எண்டு சொல்லிறது? அராவான்ரை கண் இரண்டும் போட்டுது... கழுகனுக்கு செட்டை ஒண்டுதானே விழந்தது... நியாயப்படி பாத்தா... கழுகன்எல்லோ வெற்றிக்கும் நிக்குது!'' இப்படி வேறோர் குரல்

''ஓமெண்டிறன்; பண்டாரியன் தோல்வியை ஒப்புக் கொண்டு தன்ரையைத் தூக்கிறதெண்டா தூக்கட்டுக்கு''

''உதுகும் ஒரு கதையே! ஒண்டில் அது ஓட வேணும். இல்லாட்டிச் சாக வேணும். ரெண்டும் நடக்காட்டி தோல்வியெண்டு என்னெண்டு சொல்லிறது.''

இந்தப் பேச்சுகள் பண்டாரியனின் காதுகளுக்கும் விழுந்துவிட்டன.

''களரியில் செத்தாலும் சாவமே ஒழிய. களரியை விட்டு ஓடிறது எண்டது எங்கடை சாதியிலை இல்லையடா அராவான்.'' என்றான் பண்டாரி.

''எங்கடை சாதியும் அதுதான்ரா கழுகா. ஒண்டில் ஓட வைப்பம். இல்லாட்டிக் களரிலை கொல்லுவம்.'' சரக்கனும் பதிலுக்குப் பேசினான். அவன் பேசி வாய் ஓயும் முன் மாந்தோப்புக் கூடாக காகம் ஒன்று பறந்து செல்ல, அந்த ஓசையில் கழுகன் கொறித்துக் கொள்ள அந்தக் குறிப்பில் அராவான் சண வேகத்தில் பாய்ந்ததே ஒரு பாய்ச்சல். தோந்தடி! அந்தர விசுக்கு! கழுகனின் தலையில் இலக்குத் தப்பாமல் விழுந்த அந்த விசுக்கு...

கழுகன் எழுந்தது!

கழுகன் கோழை கிளப்பி ஓடியது. களரியைச் சுற்றி இருந்த ஜனக் கூட்டத்தில் அது சரண் அடைந்தது!

இவையெல்லாம் சணத்தில் நடந்துவிட்டது!

கூட்டத்தில் ஒரே ஆரவாரம் !

கூச்சல்!

அராவான் வெற்றி வீரனாக களரியின் நடுவே... தன்னம் தனியாக நின்றது. அந்தக் கணம் களரிக்குள் புகுந்துவிட்ட கூட்டத்தினுள் கைகலப்பு!

அந்தப் பிறை வெட்டுக்காரன் ஓடிவந்துபண்டாரியனின் பெனியனில் இழுத்து கிழிக்க, வேறொருவன் பண்டாரியனை ''நளப்பிள்ளைக்கு மேஸ்பெனியனோ... காதுக் குச்சியோ'' என்று இழுத்துக் கொண்டே அவனைத் தாக்க......

பண்டாரியனைத் தாக்கியவனை கந்தன் பலம் கொண்ட மட்டும் உதைக்க ''கொல்லடா பள் கந்தனை!'' என்று வேறொருவன் இரைய......

அங்குமிங்குமாகக் கூட்டம் கூட்டமாகக் கைகலப்புகள் நடக்க.

வண்டிகளை விட்டு, விட்டு மாந்தோப்புகளால் ஜனங்கள் கலைந்தோட......

மோட்டார் கார் புகை கக்கிக் கொண்டு விரைய......

அடைப்புத் துறப்பற்ற அந்த மாந்தோப்புப் பரப்பில் ஜனங்களின் தலைகள் பரந்து தெரிய......

கடைசியில்......

பண்டாரியன் மடிக்குள் கிடந்த 'றெச்சேஸ்' வில்லுக் கத்தியை எடுத்து தன்னைத் தாக்கிய பிறைவெட்டுக்கார னையும் அவனுக்கு உதவிக்கு வந்த சாய வேட்டிக் குடும்பியனையும் சரித்து வீழ்த்திவிட்டு, இன்னொருவனைக் கலைத்துக்கொண்டு வெகுதூரம்வரை ஓடினான்.

உணாவில் கள்ளுக் கொட்டில் சின்னப்பனும், முதலி யனும் உதவியாக ஆக்கிரோசத்துடன் பண்டாரியனைத் தடுத்து இழுத்து வந்து பார்த்தபோது களரிக்கு சற்று அப் பால் பிறை வெட்டுக்காரனும், சாயவேட்டிக்காரனும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

கந்தன்...?

கந்தன் களரிக்குள்ளேயே குற்றுயிராகக் கிடந்தான்.

அவன் நையப்புடைக்கப்பட்டு விட்டான். அவன் கடவாயில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

பக்கத்தே அராவான்!

அது பிணமாகக் கிடந்தது!

முதலியனும் சின்னப்பனும் கந்தனைத் தூக்கினர். பண்டாரியன் அராவானைப் பக்குவமாகத் தூக்கினான்.

நால்வரும் மாந்தோப்பைத் தாண்டி வெளியே வந்து விட்டனர்.

சின்னப்பன் பக்கத்தே நின்று திருக்கல் வண்டியை, இழுத்து மாடுகளைப் பூட்டி கந்தனை வண்டிக்குள் இட்டு...

அராவானுடன் பண்டாரியனும் சணத்தில் பாய்ந்தேறி.

வண்டி காற்று வேகத்தில் மேற்குக் கல்லு றோட்டால் பறந்தது!

அது யார் வண்டி?

அது அவர்களுக்கே தெரியாது. வண்டிக்காரன் வண்டியை இணைக்க நேரமின்றியே ஓடியிருக்கவேண்டும்.

வடக்கில் இருந்து வந்தசந்திப்பில் ஒரு கூட்டம் குறுக்கே வண்டியை மறிக்கப் பாய்ந்தோடி வந்தது சின்னப்பன் மாட்டை உசுப்பிவிட்டான். அது நாலு கால் பாய்ச்சலில் பாய்ந்தது. குறுக்கே வந்தவர்கள் சந்திப்புக்கு வருவதற்கிடையில் வண்டி பாய்ந்து ஓடிவிட்டது!

''உணாவில் கள்ளுக் கொட்டில் சின்னப்பன்'' என்ற குரல் கேட்டது.

''சரி சரி. போகட்டுக்கும்; தப்பிவிட்டாங்கள். சின்னப்பனைப் பாத்துக் கொள்ளுவம்'' என்ற குரலும் கேட்டது!

அது சின்னப்பனுக்குப் பழகிய குரல்!

கயிலாய பிள்ளையரின் கிழட்டுக் குரல்.

///

# 16

சாவலடி முடிந்து பத்து நாட்களுக்குப் பின்னால் புத்தூர் பல்லக்கு மூதலி மந்துவில் செல்லப்பர் ஆகியோரின் பேத்தியும், வேலுப்பிள்ளை சீதேவி அம்மாள் ஆகியோரின் மகளும். கோப்பாய் இராசவாசல் சூரியரின் மனைவியுமாகியவள் செத்துப் போனாள் !

கண்ணம்மா என்ற பச்சைக் குழந்தையைத் தொட்டிலில் விட்டுவிட்டு செத்துப் போனாள். இந்தச் செய்தி ஊரெல்லாம் பரவி விட்டது. உணாவில்

வரை அது தெரிந்தது, கந்தனின் காதுகளுக்கும் அது கேட்டது.

சின்னப்பன் வீட்டில் மேனியெல்லாம் எண்ணை தடவி, நெஞ்சுக்குப் புக்கை கட்டிக்கொண்டு கிடந்த கந்தன் படுக்கையில் இருந்தே அந்த அம்மாளுக்காக அழுது விட்டான்.

''கந்தன் நீ ஏன்ராப்பா அழுகிறாய்? அவநயினாத்தி செத்தா உனக்கென்ன?'' சின்னப்பன் கேட்டான்.

முளியைப் பிரட்டிக்கொண்டே கந்தன் சொன்னான்.

''அவ என்ரை நயினாத்தியெண்டாலும் சின்னப் பண்ணை, கந்தன் கந்தனெண்டு என்னிலை உயிரை வைச்சிருந்தவ. எத்தினை முறை ஆக்கள்வாற இடத்திலை கந்தண்ணை, கந்தண்ணை எண்டு கூப்பிட்டவ. என்ரை ஒரு சகோதரம் மாதிரி அண்ணை அவ. துடக்குக் கழிய லண்டைக்கு வல்லி துடக்கு மயிர் எடுக்க வரேக்கை தாய் மாமன்ரை மடியிலை கிடத்தித்தான் துடக்கு மயிர் எடுக்க வேணும் எண்டிட்டினம். வருத்தமாக் கிடந்துகொண்டு...... 'கந்தன்ரை மடியிலை கிடத்தி எடுங்கோ' எண்டு சொன்னவ. அதாலை வீட்டிலை பெரிய சண்டை வரப் பாத்திது. அண்ணை! சின்னப்பண்ணை! உனைக் கும்பிட்டன். நான் செத்தவீட்டுக்குப் போகவேணு மண்ணை......'' என்று சின்னப்பனைக் கெஞ்சிக்கொண்டே கந்தன் விம்மினான்.

சின்னப்பனுக்கு மனது ஒரு மாதிரியாகப் போய் விட்டது.

ஒரு மதிரியான வைராக்கிய சுபாவம் அவனுக்கு. ஆனாலும் கந்தனின் கெஞ்சுதலை அவனால் மறுக்க முடியவில்லை.

"நீ திரும்பியும் அங்கை போனா உனக்கு ஏதும் வில்லங்கம் கில்லங்கம் வராதே கந்தா?"

சின்னப்பன் படக்கெனக் கேட்டான்.

"அப்பிடி ஒண்டு வருமெண்டு நான் நினைக்கேல்லை. அப்பிடி ஒண்டு வந்து என்ரை உயிர் போனாலும் பரவா யில்லை. நான், செத்தவீட்டுக்குப் போகவேணும்". இதற்கு மேல் சின்னப்பன் பேசவில்லை; கந்தனும் பேசவில்லை. சற்று வேளைக்குப் பின் சின்னப்பன் கண்டிப்பாகப் பேசினான்.

"கந்தன்! இனி நீ அங்கை போகவேணாம்; நான் சொல்லிப் போட்டன். நீ போகப்படாது. அவங்கள் எல்லாரும் சேந்து உன்னை அடிச்சுப் போடேக்கை உன்ரை சூரிய நயினார் தன்ரை உயிரைகாக்க ஓடித் தப்பியிட்டான் போக்கிலி, அவன்ரை வீட்டை நீ போகப் போறாய் என்ன?'

பேச்சு இதற்குமேல் நீடிக்கவில்லை. கந்தனைச் சற்று அயரவிட்டுவிட்டு சின்னப்பன் தூங்கிப்போய்விட்டான்.

சின்னப்பனின் மனைவிக்கும் கந்தனின் நன்றிக் கடன் விசுவாசம் நன்கு விளங்கியது. ஆனாலும் சின்னப்பன் கண்டிப்பாகச் சொல்லிவிட்டபோது அவளால் கந்தனுக்குப் பரிந்து பேச முடியவில்லை.

விடிந்தபோது...

கந்தனைக் காணவில்லை. எழுந்து நடக்க முடியாமல் கிடந்த கந்தன் போய்விட்டான்.

சின்னப்பன் அவனைத் தேடவில்லை. அவன், செத்த வீட்டுக்குத்தான் போய்விட்டான் என்பதை அவன் அனுமானித்துக்கொண்டான்.

"ஐயோ பாவமப்பா. நடக்க ஏலாமல் கிடந்தான் பாவி... வழியிலை கிழியிலை விழுந்து போவான். போய்ப்

பாத்து வாவன் ஒருக்கா!'' என்று சின்னப்பனின் மனைவி சொன்னாள்

''நீ பேசாமல் இரடி! இந்த ரோசங் கெட்டவனை நான் தேடிப் போகவேணும் என்ன? பரதேசி போய் வடுகரிட்டை வேண்டிக் கட்டட்டுக்கு... நீ பேசாமல் இரடி!''

மனைவிமேல் எரிந்து விழுந்துவிட்டு இயனக் கூட்டையும் கட்டிக்கொண்டு சின்னப்பன் சேர்வைக்குப் போய்விட்டான்

இருபது மரங்களை அவன் சேர்வை ஆக்க வேண்டும். பத்துக்கு மேற்பட்ட இளம் பாளைகளை இடுக்க வேண்டும். நான்கு ஆண்பனைகளுக்கு வழு இழுக்க வேண்டும்!

வழியில் முதலியன் சின்னப்பனைச் சந்தித்தான். ''கந்தனுக்கு எப்பிடிச் சின்னப்பு மச்சான்?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

''என்ன கந்தனோ... அந்தப் பரதேசியின்ரை கதையை கதைக்காதை மச்சான்! நயினாத்தியின்ரை செத்த வீட்டுக்கு போக வேணுமெண்டு ராத்திரிக் கேட்டான். போகப்பிடாது எண்டன்; விடியப் புறத்தோடை எழும்பி ஓடியிட்டான்! உவங்கள் தரவழியைத் திருத்த ஏலாது மச்சான்! நயினார் விடுவழிய நக்கிப் பழகினவங்கள் திருந்துவாங்களே...'' சின்னப்பன் சினத்துடன் பதில் சொல்லிவிட்டு நகர்ந்தான்.

முதலியனும் அவனுடன் திரும்பி நடந்தான்.

''வேறை ஒரு சங்கதி கேள்விப் பட்டியே மச்சான்? வாற மாதமெல்லே பண்டித்தலைச்சி கொடி ஏறுது. இந்த முறை நளம் பள்ளுகளை எல்லா இடங்களிலும் புளங்க விடுகிறது இல்லை எண்டு கயிலாயன் சொல்லிக்கொண்டு திரியிறானாம்.'' என்று முதலியன் சொன்னான்.

''ஓ... கயிலாய நயினார் பண்டாரியன் பக்கத்துக்கு நாங்கள் நிண்டதாலையும் கந்தனைத் தூக்கிக்கொண்டு

வந்ததாலையும் கையோடை சுய ரூபத்தைக் காட்ட வெளிக்கிட்டிட்டார் போலைக் கிடக்கு பாப்பம்!'' சின்னப்பன் பேசிக்கொண்டே நடந்தான்.

கந்தனுக்கு மறுபடியும் பழைய வாழ்க்கை பிடித்து விட்டது. சூரியரின் மனைவி மரணத்திற்குப் பின் பல நாட்கள் கந்தன் அவளுக்காக கண்ணீர் விட்டான்.

அவளின் குழந்தை கண்ணம்மாவை தூக்கித் தாலாட்டி விளையாட விருப்பம்தான். ஆனால் அதுதான் முடியாமல் இருந்தது.

தன் மனைவி இறந்துபோனது பற்றி சூரியருக்கு அதிகம் கவலை இருக்கவில்லை. இந்த கவலையை இரண்டொரு நாட்களில் தூக்கி எறிந்துவிட்டு வழமையான தனது கேளிக்கைகளோடு சங்கமமாகிவிட்டார்.

சாவலடியில் ஏற்பட்ட கலவரத்தில் நடந்த பாதிப்புக்கள் எதுவும் அவரை ஒன்றும் செய்யவில்லை. பண்டாரியையோ அராவானையோ அவர் தேடவில்லை. கயிலாயரை வென்று விட்ட பெருமையில் மனைவியின் மறைவு பெரிதாகப் படவுமில்லை.

அவளைக் கட்டிக்கொண்ட ஐந்தாண்டு காலத்தில் ஏறக்குறைய அவளுக்கிருந்த சொத்துக்களில் பெரும் பகுதியை அவர் தீர்த்துக் கட்டிவிட்டார். அவள் உயிருடன் இருந்தபோது அவளின் சீதனச் சொத்துக்களில் ஒன்றான அந்த வீட்டையும் வளவையும் கொழும்பில் உத்தியோகம் பார்த்தபோது ஒரு தேவைக்காக பெயருக்கே எழுதிவைக்க வேண்டி ஏற்பட்டதால் அந்த வீடும் வளவும் மட்டும்தான் இப்போது கடனில்லாச் சொத்தாக இருந்தது; அதுவும் அவர் பெயருக்குத்தான்.

ஈடுகளில் இருந்த இரண்டொரு தோட்டங்களை ஈட்டுக்காரனுக்கே அறுதியாக்கிவிட்டு கையில் வைத்திருந்து இராச வாழ்வைத் தொடர அவர் தவறவில்லை. கொண்டாட்டங்கள்!

பந்தயங்கள்!

கேளிக்கைகள் எல்லாமே உள்ளது உள்ளது மாதிரியே நடந்தது. வேலுப்பிள்ளையருக்கு வாய் திறந்து ஒரு வார்த்தையேனும் பேசமுடியவில்லை. ஏனெனில் சொத்துக்கள் எல்லாம் மருமகனின் பெயருக்கே இருந்தமையால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

சீதேவி அம்மாள் மனதிற்குள் குமைந்து கொண்டிருந்தாள். அவள் கவனமெல்லாம் பேத்தி கண்ணம்மாவை ஆளாக்கி விடுவதிலேயே இருந்தது. அவள் ஏதாவது மனது விட்டுப் பேசுவதாக இருந்தால் அது கந்தனுடன் தான்!

கந்தன் உடல் தேறிவிட்டது. அவன் ஊரெல்லாம் சுற்றி உழைக்கிறான். இரவோ சாம ஏமத்திலோ இத்தினி குடி இருந்த குடிலுக்குள் வருவான். தட்டுவ்மூம் சோறும் அவனுக்காக பழம் சுளகினால் மூடியிருக்கும்.

கையில் கிடைப்பதை அப்போதைக்கப்போது சீதேவி அம்மாளிடம் நீட்டுவான். அம்மாளோ அவன் மீது சீறிப் பாய்வாள். தனது நயினாத்தி அந்தஸ்தை இழக்க அவள் விரும்பவில்லை.

சூரியரும் சந்திரரும் இப்போது நல்ல உறவு! பகைமைகள் மனதோடு இருந்ததாகக்கூட குறிப்பெடுக்க முடியவில்லை. சந்திரருடன் உறவென்றால் கயிலாயருக்கு அடக்கம் என்பதுதான் உண்மை!

கண்ணம்மாவுக்கு வயது மூன்றாயிற்று. சாவல் சண்டை நடந்து அடுத்தடுத்து இரண்டு திங்கள் போய் மூன்றாவது திங்களும் வந்துவிட்டது.

இம்முறை கொடி ஏற்றத்தில் அன்றே கயிற்றெல்லைகள் போட்டு பஞ்சமரை எல்லைக்கப்பால் பொங்கவும், படைக்கவும் உலாவவும் திருவிழாப் பாக்க விடுவதும் என்றும் முடிவாயிற்று. பன்றித் தலைச்சி

உரிமைக்காரர்கள் முடிவு செய்துவிட்டனர். இந்த முடிவை அவர்களைக்கொண்டே எடுத்துவிட கயிலாயர் எடுத்த இரண்டாண்டு கால முயற்சி இம்முறை கைகூட இருந்தது.

''செட்டிய வெள்ளாளர் இம்முறை கயிறு கட்டித்தான் நளம் பறயளைவிடப் போகினமாம்.'' என்று பேச்சு ஊருக்குள் பரவி விட்டது.

இதைப் பலரும் நம்பவில்லை.

செட்டிய வெள்ளாளருக்கு இந்தத் துணிச்சல் வர முடியாது என்பது பலருக்குத் தெரியாது.

முதல் திங்கள் நெருங்க, நெருங்க இந்தத் துணிச்சலின் செயல்கள் வெளிப்பட்டன. பொங்கல் மடத்தைச் சுற்றி ஒரு எல்லை பஞ்சமர்கள் பொங்குவதற்காக. தீர்த்தக் கேணியைச் சுற்றி ஒரு எல்லை பஞ்சமர்கள் ஒதுங்கி நின்று தீர்த்தம் பெறுவதற்கு. கோவிலின் தெற்குப்புற மருதமரப் பகுதிக்குள் ஒரு எல்லை அம்பாள் வலம் வரும்போது பஞ்சமர்கள் தரிசனம் செய்ய.

முகப்பை ஒட்டி தென்கிழக்குக் கரையில் ஒரு எல்லை - கோவிலில் இரவு நடக்கும் மேளக்கச்சேரிகளையும் சதுர்க் கச்சேரிகளையும் பஞ்சமர்கள் பார்ப்பதற்காக

கோவிலைச் சுற்றி உள்ள தேனீர்க்கடைகளில் ஒதுக்குப் புறங்களில் எல்லைகள். அந்த எல்லைத் தடிகளில் கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும் பேணிகள். அதாவது வெளிப் பேணிகள்! பஞ்சமர்கள் வெளியே நின்று உணவு அருந்துவதற்காக.

இப்படிப் பஞ்ச இலட்சணங்கள் அமைய விதிமுறை தவறாது இம்முறை சாதிமுறை அனுஷ்டிப்பு!

கொடி ஏற்ற முதல் திங்கள்!

கண்ணகை அம்மன் திருச்சன்னதிக்கு ஏழமைபோல் பெரும் கூட்டம் இல்லை. இந்த வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் நின்று வழிபாடுகளில் கலந்துகொள்ளப் பெரும் கூட்டம் இல்லை.

பெயருக்கு நான்கோ ஐந்தோ...

முதல் திங்கள் ஒருவிதமாக ஒப்பேறி விட்டது. கயிலாயரும் சகாக்களுடன் வந்து போனர்.

சூரியரும், சந்திரரும் சகாக்களுடன் வந்து போயினர். சூரியர் சந்திரரை ஒரே வண்டியில் கண்டதில் பலருக்கு ஆச்சரியம்!

இரண்டாம் திங்களும் வந்து போயிற்று!

இந்த இரண்டாம் திங்கள் எல்லைகளுக்குள்ளானவர்கள் எண்ணிக்கை முன்னைய விடக் குறைவாக இருந்தது.

கயிலாயர் வந்து போனார்.

சூரியர் சந்திரரும் வந்து போனார்கள்.

சரக்கன் கூட்டத்தினரும் வந்து போயினர்.

மூன்றாம் திங்களும் வந்து போயிற்று!

இப்போது எல்லைக்கப்பால் நிற்கவேண்டியவர்கள் ஓரிருவர்தான்.

வரவேண்டியவர்களும் வந்து போயினர்.

கடைசித் திங்கள் வர இருந்தது!

சின்னப்பனின் கள்ளுக் கொட்டிலிலிருந்து கடைசித் திங்களில் கயிறுகளை வெட்டி எறியப் போவதாக ஒரு கதை உலாவியது.

இது உண்மையோ, பொய்யோ. இத்தகவல் செட்டிய வெள்ளாளரால் கயிலாயருக்கும், சூரியருக்கும் அறிவிக்கப் பட்டது,

சேதியை இவர்களுக்குச் சுமந்து வந்தவர்களை கயிலாயரும், சூரியரும் திடப்படுத்தி அனுப்பி வைத்தனர்.

விடிந்தால் கடைசித் திங்கள்

இன்று இரவுதான் பெரு விழா!

பெரிய மேளம்; சின்ன மேளம், வாண விளையாட்டு, முத்து சப்பறம். கம்படி. பந்து வீச்சு, எல்லாம்...

இரவு மணி பத்துக்கு மேலாயிற்று!

முன் மண்டபத்துக்கு நடுவே சதிர் கச்சேரி நடக்க இருந்தது. அடுத்து வரப்போகும் தாவடிச் சின்னச்சாமி கூட்டத்தின் மேளக் கச்சேரிக்காகவும், அடுத்துவரும் சின்ன மேளக்காரிகளின் சதுர்க்கச்சேரிக்காகவும் மேடை அலங்காரங்கள் நடந்து கொண்டிருந்தன.

கோவில் வடக்கு வீதியைத் தாண்டி அப்பால் கோவில் மணியகாரனின் சவக்கண்டிக்குள் பலர்.

கயிலாயபிள்ளை, சந்திரர், சூரியர், வரணி இராசா, கோப்பாய் மார்க்கண்டர், புத்தூர் மாணிக்க வேலர், உணாவில் முருகப்பர், குளப்பட்டிச் சேனாதி, நாவிற்குளிக் குட்டித்தம்பியர், வட்டுக்கோட்டை நடராசா, மரங்கந்தையா, புக்கை நடராசா, அளுக்கடைச் சண்முகம், கறுத்தாற்றை துரைராசா, கரம்பன் சூரியத்தம்பியர், கடையடிக் கணேசன்......

இப்படிப் பல புள்ளிகள்...

ஒவ்வொரு புள்ளிக்கும் பக்க பலமான சிஷ்யர்கள்!. ஏறக்குறைய நாற்பது பேர்களுக்குமேல். அவர்கள் எல்லோரும் எதை எதையோ குசுகுசுத்துக்கொண்டனர்.

கோவில் மணியக்காரர் அப்போதுதான் கொழும்பில் இருந்து முதல் முதலாக அப்பகுதிக்கு எடுத்துவந்த

பெற்ரேல்மாச் லயிற் சவக்கண்டிக்கு நடுவே கம்பியில் தூக்கி விடப்பட்டிருந்தது.

மணி பதினொன்றாயிற்று!

மேளக் கச்சேரி தொடங்கிவிட்டது! அங்குமிங்குமாக உயர்த்தி வைக்கப்பட்டிருந்த கிச்சன் லைற் ஒளியில் கோவில் வீதி பட்டப்பகலாகக் காட்சி கொடுத்தது!

மேளக் கச்சேரி முடியும் நேரம். அடுத்து வரவேண்டியது சதுர்க் கச்சேரி!

''தேவடியாளவை வரப்போகினம். தேவடியாளவை வரப்போகினம்...'' என்ற ஓசைகள் அங்குமிங்கும் எழுந்தன.

''றலி எண்ட தேவடியாளாம் பாட்டு. கன்னியா பரமேஸ்வரி என்ற தேவடியாளாம் ஆட்டம்!'' இப்படி அங்குமிங்குமாக அறிமுகக் குரல்கள்.

மணிக்காரரின் சவக்கண்டிக்குள் இருவர் வந்தனர். ''நளச் சின்னப்பனும், பள் மூதலியும் வந்து நிக்கிறாங்கள்'' என்று ஒருவன் தகவல் சொன்னான்,

''எத்தனை பேரடா வந்து நிக்கறாங்கள்?'' கயிலாயர் கேட்டார்.

''ஒரு பத்துப் பதினைஞ்சுபேர் இருக்கும்.'' அடுத்தவன் பதில் சொன்னான். அவன் சொல்லி வாய் மூடும் முன் வேறொருவன் ஓடிவந்தான்.

''கயிறுகளை வெட்டிறாங்கள்!'' வந்தவன் சொல்வதற்கிடையில் சவக்கண்டிக்குள் இருந்த கூட்டம் கோவில் முகப்பிற்கு பாய்ந்து ஓடியது!

அப்புறம்...

அப்புறம்...

ஜனக் கூட்டம் கூப்பாடு போட்டுக்கொண்டு ஓடியது!

கிச்சன் ஓலயிற்றுகள் விழுந்து நொருங்கின. கூட்டத்துக்குள்ளே...

"வெட்டடா! கொத்தடா!!" என்ற கோசங்கள்.

மாட்டுவண்டிகள் பறந்தன! கடைகளில் பத்த வெளிச்சங்கள் நூர்ந்து போயின.

ஏறக்குறைய அரைமணி நேரத்திற்குள் அம்பாள் சன்னதி அமைதியாகிவிட்டது.

விடிந்தது!

மூன்று உடல்கள் மணலில் புரண்டு கிடந்தன!

ஒன்று முதலியன்!

மற்றவன் சடையன்!

மூன்றாம் ஆள்... சின்னப்பன். அவன் மட்டும் முனகிக் கொண்டு கிடந்தான்.

மற்ற இருவர்களின் உயிர்கள் போயிருந்தன. சின்னப்பனின் இடது கரம் துன்டிக்கப்பட்டிருந்தது!

அவன் இடது கைப்பாவனை ஆளன். அவனின் கையில் இருந்த ஏதோ ஒரு ஆயுதம் பறிப்பதற்காக அவன் கரம் துண்டிக்கப்பட்டிருக்க வேண்டும்.

சற்றுத் தொலைவில் அவனின் இடது கரம் கோவில் எல்லைக்கு அப்பால் இருந்த பனம் பாத்திக்கு மேல் வீசப்பட்டிருந்தது. எல்லைக் கயிறுகள் அறுத்து வீழ்த்தப்பட்டிருந்தவ.

///

# 17

பண்டித்தலைச்சி அம்மன் கோயில் கொலை வழக்கு நடந்து கொண்டிருந்தது! வழக்கை நடத்தும் பொறுப்பு சூரியருக்கு விடப்பட்டிருந்தது!

சந்தேகத்தின் பெயரில் அறுவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் இருக்கிறார்கள் அவர்களை விடுவிப்பதற்கான செலவு சித்தாயங்கள் என்ற விதத்தில் செட்டிய வேளாளர் அதிகம் பங்கெடுக்கவில்லை. ஏனெனில் இந்தக் காரியத்தின் சூத்திரதாரியாக இருந்தவர் கைலாயர்.

கயிலாயரும், வரணி இராசாவரும், சூரியரும், பெயர் சொல்லத் துணிவற்ற வேறு சிலரும்தான் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டியதாயிற்று.

பட்டணத்திற்கு கிழக்காகப் போய் வருபவர்களையும் காப்பாற்றியாகவேண்டும்.

சாவலடிப் பண்டாரியன்தான் பட்டணத்தில் இவர்களைக் கவனிப்பதற்கான பொறுப்பினை சின்னப்பன் பக்கத்திற்காக ஏற்றிருந்தான். அதை அவன் கனகச்சிதமாக செய்ய ஏற்பாடுகளைச் செய்திருந்தான், யாழ்ப்பாண றயிலடி நிலையத்திலிருந்து கோட்டடி போகும் வரையில்...

இரண்டு மூன்று தவணைகள் எதிரிகள் மட்டுமே கோட்டுக்குக் கொண்டுவரப்பட்டனர். அவர்களைப் பார்ப்பதற்கு எவருமே வந்து போகவில்லை.

பண்டாரிக்கு சூரியரையும், சந்திரரையும், கயிலாயரையும், வரணி இராசாவையும்தான் தெரியும். அவன் கண்கள் இவர்களையே இலக்குத் தேடின.

யாரும் கிடைக்கவில்லை.

வழக்கு முடியும்வரை கிடைக்கவில்லை. கந்தனுக்கு இவைகளைப் பற்றி கவலையோ... அக்கறையோ இருக்கவில்லை.

வேலுப்பிள்ளை கமக்காரன் வீட்டில் அடிமையாகக் கிடக்க வேண்டாம் என்று சின்னப்பன் பல ஆட்களின் மூலம் அவனைக் கேட்டுப் பார்த்துவிட்டான் வசதிப்பட்ட இடங்களில் ஆட்களை வைத்து அவனை மிரட்டிப் பார்த்தான். இரண்டொரு தடவை ஆட்களை விட்டு உதைப்பித்தும் பார்த்தும் விட்டான்.

கந்தன் அசையவில்லை!

சீதேவி அம்மாளையும், கண்ணம்மாவையும் வேலுப்பிள்ளையரையும் விட்டுவிட்டு வந்துவிட அவன் தயாராக இல்லை.

திடீரென ஒரு நாள் சூரியர் காணாமல் போய் விட்டார்! நாட்கள் பல போயும் அவர் வீடு திரும்ப வில்லை.

கடைசியாக அவர் கொட்டிடக் கறுத்தான் வீட்டுக்குப் போனதாகத்தான் தகவல்!

சில நாட்களாக கடன்காரர்கள் பலர் அவரிடம் வந்து போனார்கள்.

''கடன்காரர்களுக்குப் பயந்து அவர் ஊரைவிட்டுப் போய்விட்டாராம்.''

''அச்சுவேலியில் சந்திரரின் கோவிய வைப்பாடிச்சி வீட்டிலை நிண்டவர் எண்டும், ஐஞ்சாறு நாளா அவளை யும் காணவில்லை எண்டு கதையாக்கிடக்கு.''

''சின்னப்பனும் சாவல் பண்டாரியனும் பட்டணத் துக்கை வைச்சு ஆளை முடிச்சுப் போட்டாங்கள்'' என்றும் ''ஆள் மசுக்கிடாமல் சிங்கப்பூருக்குப் போட்டாராம்.''

எது எப்படி நடந்ததோ மொத்தத்தில் சூரியரைக் காணவில்லை.

வேலுப்பிள்ளையர் தேடாத இடங்களிலெல்லாம் தேடி விட்டார். கயிலாயபிள்ளையரும் தேடிவிட்டார். பல இடங்களுக்கெல்லாம் ஆட்களை அனுப்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சந்திரர் மட்டும் வாய் திறக்கவில்லை. அவர் ஆழ்ந்த கவலைப்படுகிறார் என்பது மட்டும் முகத்தில் தெரிந்தது.

உள்ளூரில் கந்தன் மட்டும்தான் சூரியரைக் கடைசி வேளையில் கண்டதாகச் சொன்னான். மாடுகளைக் கயிலாயப்பிள்ளையர் கமக்காரர் தோட்டத்தில் பட்டி அடைத்து வீட்டு வரும்போது கயிலாயபிள்ளையின் ஒழுங் கைப் படலையைத் திறந்துகொண்டு இருட்டுக்குள் ஒருவர் உள்ளே போவதாகக் கண்டிருக்கிறான். இருளுக்குள்

அந்த உருவத்தை அவனால் நிச்சயப்படுத்த முடியவில்லை. பொதுவில் அது சந்திரராகத்தான் இருக்கவேண்டும்! அவன் அதற்கான ஆய்வினை நடத்தவில்லை. அப்போது நிலவு படும் நேரம்.

மிகவும் அதிகாலையோடு அவன் பட்டியைக் கலைத்து ஆடுமாடுகளை மேய்ச்சலுக்கு விட்டு விட்டுத்தான் வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டும் என்பதற்காக அவன் பட்டியைத் தேடிப் போனான்.

அப்போது திருக்கல் வண்டியில் இருந்து சந்திரரும், அவரின் மூத்த மகன் கருணை நயினாரும் வந்திறங்கினர். அப்போதுதான் அவர்கள் கொடிகாமத்தில் றெயிலால் இறங்கி வந்திருக்கிறார்கள்.

கந்தன் இவர்களைக் கண்டிருக்கிறான். சூரியர் காணாமல்போன பத்துப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு தான்கந்தனின் மூளைக்கு தற்செயலாக இது தட்டுப்பட்டது அப்போதுதான் அந்த இரவில் கயிலாயர் வீட்டுப் படலை யைத் திறந்துகொண்டு போனது ............ ?

''அது சூரியர் நயினாராக இருந்தாலும் இருக்கும்'' என்று அவன் மனது எண்ணியது. அதை அவன் வெளியே சொன்னான். அதை யாரும் பெரிது படுத்தியதாகத் தெரியவில்லை.

கயிலாயர் வீட்டுப் பின்புற வடலிக்குள்தான் கறுத்தா னின் வீடுஇருக்கிறது. சூரியர் இடை இடையே தனிப் பனைக் கள்ளுக்காக பச்சைப் பிளாவில் குடிப்பதற்காக இரவில் அங்க போவது வழக்கம். வேலுப்பிள்ளையர் கறுத்தானை விசாரிப்பித்துப் பார்த்தார். சூரியர் நயினார் அங்கு வந்ததாக அவன் கூறவில்லை. ஆனால் அவன் ஒரு மாதிரி யாக வெலவெலத்துப் போனதை வேலுப்பிள்ளையர் அனுப்பிய ஆளினால் அவதானிக்க முடியவில்லை.

அவன் கேட்கப்பட்டபோது கறுத்தானின் மூன்றாம் தாரமான இளம் மனைவி குடிசையின் கதவைத் திறந்த படியே ஏங்கிப்போய் நின்றதையும் போனவனால் கவனிக்க முடியவில்லை.

இரவு ஒரு மணிக்குக் கயிலாயர் வந்து கறுத்தானைக் கூட்டிச் சென்றதை சொல்லிவிட அவள் வாய் உன்னிவிட்டு எதையோ நினைத்துக்கொண்டு விழுங்கிவிட்டாள்.

''ஏனப்பா அண்டைக்கு ராத்திரி எல்லே... அதுதான் சூரிய நயினார் காணாமல் போன அண்டைக்கு ஒண்டு பாதி நேரத்திலை கயிலாய நயினார் உன்னை வந்து எழுப்பிக் கொண்டு போனவர். விடியப்புறம் உடுத்த வேட்டியையும் விட்டிட்டு கச்சைக் கட்டோடை எல்லே வந்தநீ. எனக்கொண்டுமா விளங்கேல்லை...'' இரவு கறுத் தானின் மனைவி கேட்ட கேள்விக்கு.

''அதை ஏன்ரி உனக்கு? பேசாமல் கிடவடி!'' என்று கறுத்தான் அவள்மேல் சீறிப் பாய்ந்தான்.

அவள் பேச்சை முடித்துவிட்டாள். சொற்ப நாட்களுக்குப் பின்பு சூரியர் பற்றிய பேச்சே நின்று விட்டது. ஆனால் கந்தனின் மனதில் மட்டும் அது நின்ற பாடில்லை.

அந்த மன எண்ணம் கந்தனுக்கு ஒருவித நோயாகி விட்டது. ஒரு தடவை அவன் அண்ணாவி செல்லனைச் சந்தித்தான். அண்ணாவி செல்லன் இப்போது கிழண்டி இருந்தான்.

அவனைக் கண்ட நேரத்திலிருந்து அவனைப் பிரியும் வரை கயிலாயர் வீட்டுப் படலையைத் திறந்து உள்ளே போனது சூரியர்தான் என்பதை அவன் பல தடவைகள் சொல்லிவிட்டான்,

அண்ணாவி செல்லனின் கவனத்தை அந்தப் பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காக கந்தன் அப்படிப் பேச வில்லை. சம்மந்த சம்மந்தமில்லாமல் அப்படித்தான் அவனால் பேச முடிந்தது. கந்தன் போய்விட்ட பின்பு அண்ணாவி செல்லனுக்கு பல எண்ணங்கள் தோன்றின கயிலாயர்தான் சூரியரை ஏதோ செய்திருக்க வேணும், என்று அவன் ஊகித்தான். கந்தனைப் போல அண்ணாவி செல்லனுக்கும் சூரியர் விசர் பிடித்துவிட்டது.

சூரியர் மேல் அவனுக்கு எந்தவித பற்றும் கிடையாது. ஆயினும் கயிலாயர் மேல் அவன் கொண்டிருந்த வெறுப்பு அப்படி அவனை விசர் கொள்ள வைத்தது.

கயிலாயர் வளவுக் கறுத்தான், அண்ணாவிக்கு வேண்டிய நண்பனாக ஒரு காலத்தில் இருந்தவன். அதனால் அவனிடம் விசாரித்து விட்டால் தெரிந்துவிடும் என்று எண்ணிய அண்ணாவி மறுநாளே கறுத்தானைத் தேடிப் போய் இருந்தான்.

கறுத்தான் வீட்டில் இல்லை. கறுத்தானின் மூன்றாந் தார மனைவிக்கு அண்ணாவியைத் தெரியாது. அவள் அண்ணாவியை அதிகம் வரவேற்றுப்பேசவில்லை. கறுத்தான் எங்கோ வடலி ஓலைவெட்டப் போயிருப்பதாகவும் வரப் பொழுது பட்டாலும் படுமென்றும் அவள் மொட்டையாகப் பதில் சொன்னாள்.

''பொடிச்சி நீ கறுத்தானின் மூத்த மோளோ...?'' என்று அண்ணாவி ஒரு கேட்கக்கூடாத கேள்வியைக் கேட்டு விட்டான்.

அவளுக்குக் கோபம் வந்துவிட்டது ''அதேன் உனக்கு; வந்தா வந்த அலுவலைப் பார்த்துக் கொண்டு போ!'' என்று வெடுக்கென்று பாய்ந்தாள்.

''இல்லைப் பொடிச்சி; நான் தெரியாமல் கேட்டுப் போட்டன்; எட இப்பான் நினைப்பு வருகுது கறுத்தான்

மூண்டாம் தாரமா உன்னைக் கட்டினவன் எண்டு அண்டைக்கு ஆரோ வரணிப் பெண்டுகள் கதைச்சவளவை. கறுத்தான் பெண்டில் நல்ல வடிவு எண்டும் சொன்னவை; நான் நம்பேல்லை. அவளவை சொன்னது சரியாத்தான் இருக்கு.''

அண்ணாவியன் பொடி வைத்த பேச்சில் அவள் கணத்தில் சுருண்டு போய் விட்டாள்!

இல்லையணைப்பு! நான் சும்மா பகிடிக்கெல்லோ கோவிச்சனான்!'' என்று அவள் சமாளிக்க முயன்றாள். அதற்குப் பின் அவள் அண்ணாவியனை விசாரித்தாள். தனக்கும் கறுத்தானுக்கும் இருந்த தொடர்பினை அண்ணாவி சொல்லிக் கொண்டே போனான். அண்ணாவி வெகுவிரைவில் அவளை மசிய வைத்துவிட்டான். பலதும் பத்தும் பேசினான்.

கதையோடு கதையாக சூரியரைப் பற்றியும் பேசினான். நான்கு வருடங்களுக்கு முன்னால் நடந்த போர் அடிபற்றி கறுத்தான் கயிலாயருக்காக தேங்காய் அடித்த கெப்பீரத்தைப் பற்றியெல்லாம் பேசிப் பேசி சூரியர் காணாமல் போய் விட்டது பற்றியும் பேசிவிட்டான்,

சூரியர் காணாமல் போன அன்று நடுச்சாமத்தில் கயிலாயர் வந்து கறுத்தானை அழைத்துச் சென்றதை மட்டும் தான் அவளுக்குத் தெரிந்திருந்தது. அத்தோடு சேர்த்து......விடியப்புறம் அவன் கச்சைக்கட்டுடன் திரும்பியது...

''அந்தாளிட்டை ஏன் ஒண்டு பாதி நேரத்திலை வந்து கயிலாயர் கூட்டிக்கொண்டு போனவர்? எண்டு நான் ஒருக்காக் கேட்டுப் பாத்தன். அந்தாள் என்னிலை பாய்ஞ்ச பாய்ச்சலை நினைக்க இப்பவும் நடுங்குது...பேந்து நான் அதைப் பற்றி ஒண்டும் கேக்கேல்லை.'' என்றும் சொல்லி விட்டாள்.

அண்ணாவிக்கு அது போதும், அதற்கு மேல் சூரியர் பற்றி அவன் ஒன்றும் பேசவில்லை. இருட்டி வந்தபோது கறுத்தான் வந்தான்!

அண்ணாவி தன்னைத் தேடி வந்தது ஏன் என்று விளங்கவில்லை. அண்ணாவியை இரவு தங்கிப் போகும்படி கறுத்தான் கேட்டான். சற்றுப் பிகு பண்ணிவிட்டு அண்ணாவியும் சம்மதித்துவிட்டான்.

அவசர அவசரமாக இயனக் கூட்டைக் கட்டிக்கொண்டு தான் வழுப்பனை அறுத்துவிட்டு வருவதாகக் கூறிக்கொண்டு போன கறுத்தான் இரண்டு சுரை குடுவைகளுடன் விரைவில் திரும்பிவிட்டான்.

கொட்டிலுக்கு வெளியே இலுப்பை மரத்தின் கீழ் இருவரும் குந்திவிட்டனர்.

சுரைக் குடுவைகளும் சிரட்டைகளும் பக்கத்தில் இருந்தன. புதிதாக வந்த விருந்தாளிக்காக அடுப்புப் புகட்டில் கட்டி தொங்கவிட்ட மரை வத்தலை வெட்டிச் சமையல் செய்வதில் ஈடுபட்டிருந்தாள் கறுத்தானின் மனைவி.

கள்ளைக் குடித்துக்கொண்டே தான் மூன்றாம் தாரமாக மாசாரைச் சேர்ந்த அவளை எடுத்து வந்ததாகவும் முதல் தாரத்தின் சாவுக்குப் பின் கட்டிய இரண்டாம் தாரமும் பெறுமாதத்தில் செத்த கதையையும் கறுத்தான் சொல்லிக்கொண்டிருந்தான்.

"நான் உன்ரை மனிசி எண்டு நினைக்கேல்லை. மூத்த மோள் எண்டுதான் நினைச்சன். முந்தி நான் இஞ்சை றயிலை மறிக்கிற கதை கதைக்க வரேக்கை இருந்த பெட்டை எண்டுதான் நினைச்சன். தெரியாமல் கறுத்தான்ரை மோளோ ? எண்டு கேட்டுப் போட்டு நான் பட்ட பாடு..."

அண்ணாவி தான் பட்ட அவஸ்தையை மனம் விட்டுச் சொன்னான்.

''அண்ணாவியண்ணை, அவளெட்டை வாய் குடுத்துத் தப்பேலாது கண்டியோ, உன்னைப் போலத்தான் கயிலாய நயினாரும் உந்த வயதிலை அண்டைக்கொருநாள் பகிடி விட்டுப் பாத்தவர், நல்லாக் குடுத்தாள் பச்சை பச்சையாய். அவற்றை பேப்பகிடி எனக்கும் பிடிக்கேல்லைத்தான். நயினாரைக் கேப்பம் எண்டுதான் போனனான். பேந்தும் என்னத்துக்கெண்டு விட்டிட்டு வந்திட்டன்! நான் நினைச்சா உவரை தூக்குக் கயித்துக்குத்தான் அனுப்புவன்!'' கறுத்தான் சற்று ஆத்திரத்துடன்தான் பேசினான்.

''ஓ...ஓ... உதுகும் ஒரு பேய்க்கதை, பண்டித்தலைச்சியிலை முதலியனையும் சடையனையும் சரிக்கட்டிப்போட்டு ஒண்டும் தெரியாதது போலை திரியிறான். ஆராரோ மறியலிலை இருக்கிறாங்கள். இவனை என்னெண்டு நீ தூக்குக்கு அனுப்பப் போறாய்? சும்மா கதைக்குக் கதைக்கிற கதையே இது?''

''அதுக்கில்லை அண்ணாவியார். நான் வேறை ஒண்டுக்குச் சொன்னனான். நான் இருக்கிறன் சாட்சிக்கு. சாமத்திலை என்னை வந்து எழுப்பிக் கொண்டுபோய் என்னைக் கொண்டேல்லே மண்ணைக்கிளறி தாப்பிச்சவன்!''

அண்ணாவியின் பேச்சுக்குப் படக்கென்று பதில்சொன்ன கறுத்தான் அப்பிடியே மிகுதிக் கதையை விழுங்கிக் கொண்டான். இதற்குமேல் அவன் வாய் மூடிக்கொண்டதில் அண்ணாவிக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

சூரியர் எங்கும் காணாமல் போகவில்லை. அந்தத் தென்னங்காணி யணலுக்குள்தான் கிடக்கிறார். ஆனால் சூரியரைக் கயிலாயர் இப்படிச் செய்ததற்கான காரணம் தான் அவன் மனதிற்குத் தெரியாமல் இருந்தது.

பண்டித்தலைச்சிக் கோவிலில் கயிலாயரும், சூரியரும் ஒன்றாகச் சேர்ந்துதான் காரியங்களைச் செய்தார்கள் என்பதும் பணச் செலவின் பொறுப்பின் பெரும் பகுதியை சூரியர்தான் செய்து கொண்டிருந்தான் என்பதும் பகிரங் கமான ஒரு உண்மை. அப்படியானால் சூரியர்...

நீண்ட நேரமாக கறுத்தானும் அண்ணாவியும் கீழ்க் குரலில் பேசினர். கடைசியில்......

''கறுத்தான் நான் எங்கை இருந்து சொன்னனெண்டு பார்! நீ அவனை ஒண்டும் செய்ய ஏலாது. உன்ரை சொல் லைக் கோடு கச்சேரியும் ஏற்காது.. அவன் உன்னைத்தான் தூக்குக் கயிறுக்கு அனுப்பப் போறான். சூரியரைக் கொண்டது அவன்;தாட்டது நீ! அதுவும் இரத்தம் பட்டிட்டு தெண்டு உன்ரை வேட்டியையும் போட்டுத் தாக்க வைச்சுப் போட்டு உன்னைக் கச்சையோடை வீட்டை அனுப்பியிருக்கிறான் எண்டதை மறந்திடாதை!

''எக்கணம் நீ பொலிசிலை சொல்லி தாட்ட இடத்தை கிளறிவிச்சுப் போட்டாய் எண்டு வை. நீ தான் ஆப்பிடு வாய்; உன்ரை வேட்டிதான் சூரியரோடை கிடக்குது கண்டியோ. சொல்லிப்போட்டன் நீ தான் கயித்துக்குப் போகப் போறாய்! கோடு... கச்சேரி... விதானை... பொலிசு எல்லாம் அவன்ரை கையுக்கை!''

அண்ணாவி பேசி முடித்தபின் கறுத்தன் ஒன்றும் பேச வில்லை. சுரைக் குடுவைக் கள்ளும் முடிந்துவிட்டது.

மரை வத்தல் கறியுடன் சேர்த்துப் பொரி மா வாசனை மூக்கைத் தாக்கியது.

''என்னப்பா சத்தம் ஒண்டையும் காணேல்லை... சோறு தின்ன இன்னும் நேரம் கிடக்கே?'' என்ற கறுத்தான் மனைவியின் குரல் கேட்கவே இருவரும் குடிலுக்குப் போய் விட்டனர்.

மரை வத்தல் கறி மணம் குணமாக இருந்தது அண்ணாவிக்கு வயது அறுபதுக்கு மேலாகியும் பற்கள் நன்றாக இருந்தன. மரை வத்தலை அவன் சுவைத்துச் சாப்பிட்டான். விடியப்புறம் போல்தான் இருவரும் அயர்ந்து போயினர்.

விடிந்ததும் அண்ணாவி எழுந்து போவதற்குப் புறப்பட்டான்.

''கறுத்தான் பெண்டில் நான் போட்டு வாறன்.'' என்று கூறி, முதல் நாள் விட்ட தவறினைத் திருத்திக் கொண்டு அண்ணாவி புறப்பட்டு விட்டான்.

கறுக்தான் பெண்டிலுக்கு இப்போது உள்ளுக்குள் சிரிப்பாக இருந்தது!

அண்ணாவியனை இலுப்பை மரத்தைத் தாண்டி, பெரிய ஒழுங்கை முகப்புவரை வந்து வழியனுப்பினான் கறுத்தான்.

''தம்பி கறுத்தான் ஆளைக் கயிலாயர் முடிச்சது ஏன்? எண்டு இண்டைவரை உனக்கு ஏதும் விளங்கிச்சுதே?''

அண்ணாவியனின் இந்தத் திடீர் கேள்விக்கு ''ஒண்டும் விளங்கேல்லை—— படுக்கையிலை வைச்சு அடிச்சது போலை அடிச்சிருக்கிறான். ஓரடியிலை ஆள் முடிஞ்சு போச்சு! சூரியர் முளிப்பாய் இருந்தால் அவரை ஓரடியிலை அடிச்சு மடக்குகிறது கஷ்டம் அண்ணை......'' என்று கறுத்தான் சொன்னான்.

ஆலம் குச்சியை கொடுப்புக்குள் செருகிக்கொண்டு கயிலாயர் முடக்கில் திடீரெனத் திரும்பி வந்தார்.

கறுத்தான் திகைத்துப் போனான். தாட்டன் வருகுது; பேசாமல் வா!'' என்று மெதுவாகக் கூறினான் அண்ணாவி.

''கறுத்தான் நான் முந்தியும் ஒருநாள் உனக்குச் சொன்னனான், உன்ரை மனிசி இளம் பெட்டை; கண்ட

கண்டவங்களை வீட்டிலை அணைக்காதை எண்டு; உவன் ஆர் வரணிச் செல்லனோ......? ஏதோ நான் சொல்லிப் போட்டன்.'' என்று கூறிக்கொண்டே கயிலாயர் வழி விலத்திப் போனார். சற்றுத் தூரம் போனபின்,

கேட்டுதே பொடி தாட்டன் நயினார் சொல்லிப் போட்டுப் போறதை! உன்னை தாட்டன் நயினார் கட்டி மேய்க்கப் பாக்கிறது விளங்குதெல்லே......'' என்று மொட்டையாகக் கூறிவிட்டு அண்ணாவி தென்னங் காணிக்குக் குறுக்காக இறங்கி நடந்தான்,

அவன் தென்னங்காணியில் இறங்கி வயல் வெளிக்குள் இறங்கும் வரை அவ்விடத்திலேயே நின்று பார்த்து விட்டு கறுத்தான் திரும்பினான்.

'உன்னைத் தாட்டன் நயினார் கட்டி மேய்க்கப் பாக்கிறது விளங்குதெல்லே.....! அண்ணாவியின் இந்தப் பேச்சு அவன் நெஞ்சுக்குள் சுழன்றுகொண்டே இருந்தது!

நான்கு நாட்களின் பின்!

மத்தியான வேளை!

கறுத்தானுக்கும் மனைவிக்கும் ஏதோ தகராறு. அவன் சட்டிபானைகளை உடைத்து நொருக்க......

அவள் வாய்க்கு வந்தபடி அவனைத் திட்ட......

அவன் கைகால்கள் எட்டும்வரை அவளை அடித்து உதைக்க......

அவள் கூக்குரல் இட......

அந்தச் சத்தம் ஒழுங்கையால் போய்க்கொண்டிருந்த கயிலாயர் காதில் விழ......

கயிலாயர் இலுப்பைக்குக் கீழ் வந்துவிட்டார்!

''டேய் கறுத்தான்!''

அவர் பலமாக அழைத்தார்.

கறுத்தானின் அடி உதையும் அவள் கூக்குரலும் ஓய வில்லை.

"டேய்! கறுத்தான், ஏன்ரா அவள் குழந்தைப் பெட்டையை அடிச்சுக் கொல்லுறாய்? உதுதான்ரா நான் நெடுகச் சொல்லிறனான்; கண்டவங்களை எல்லாம் வீட்டிலை அடுக்காதை எண்டு! நான் சொன்னது காதிலை ஏறேல்லை: இப்ப ஏன்ரா அவளைக் கொல்லுறாய்? இந்த வயதிலையும் பொண்டில் தேவை எண்டா, ஒரு துடக்கு நிண்டவளாய் பாத்துக் கட்டிறதுக்கு அவள் குழந்தைப் பெட்டையைக் கொண்டந்திட்டு ஏலாக் கைக்கு அவளைக் கொல்லுறாய் என்ன? டேய் கறுத்தான் விடடா!"

கயிலாயர் இரைந்தார்!

கறுத்தான் வெளியே வந்தான்; "இது எங்கடை வீட்டு விஷயமாக்கும். வீணாத் தலையிட்டு பிழைபடாமலுக் காக்கும்......" கறுத்தான் எச்சரிப்பதுபோல விரல் நீட்டி சொன்னான்.

கயிலாயருக்கு வந்ததே கோபம்! பக்கத்தே இருந்த நார் உரித்துப் போட்ட பச்சை மட்டையை எடுத்து கறுத்தானைத் தாறுமாறாகத் தாக்கி விசுக்கினார்!

கறுத்தான் கைகளை ஒதுக்கிக் குறுகிக் குறுகி சுழன்றான்.

நயினார் கறுத்தானின சுழற்சிக்கு எற்ற விதத்தில் பச்சை மட்டையால் வீசி, வீசி அடித்தார்!

கறுத்தான் ஒரு தடவை நிமிர்ந்தான்! அவனின் நிமிர்ச்சி கயிலாயரைச் சற்றுத் திகைக்க வைத்துவிட்டது!

"எனக்குக் கோவம் வருகுது!" கறுத்தான் கத்தினான்!

"என்னடா பள் வேசைமோனே! உனக்குக் கோவம் வருகுதோ? இன்டைக்கு நினைச்சாலும் உன்னைத் தூக்குக்கு அனுப்புவன்! தெரியுமோடா:" கயிலாயர் உரக்கப் பேசினார். தொடர்ந்து தாக்கினார்!

கறுத்தான் தட்டிக் கிடுகுக்குள் கை வைத்தான்!

அவன் கையில் ஓலை வெட்டும் கொடுவாக் கத்தி!

அது காலைதான் தீட்டப்பட்டுப் பளிச் சென்று இருந்தது!

ஒரு விசுக்கு!

ஒரு கொத்து!

ஒரு இழுவை!

சணத்தில் எல்லாம் நடந்து விட்டது!

கயிலாயர் உடல் புழுதியில் இரண்டு மூன்று முறை புரண்டது!

அவ்வளவு தான்!

பின்பு எல்லாம் அடங்கிப் போய் விட்டது! சற்று வேளைக்குள் சீறி வந்த இரத்தத்தை எல்லாம் சுடுபுழுதி உறிஞ்சிவிட்டது.

மந்துவில் கயிலாயர் அதிகாரம் முடிந்துவிட்டது!

ஒரு சகாப்தம் முடிந்தது போல......

///

# 18

கயிலாயரின் கொலைக்கான சரியான காரணங்களை எவராலும் சொல்ல முடியவில்லை. ஊரைவிட்டு ஓடிப்போய் விட்டான் கறுத்தான்!

அடுத்த நாள் காலை வரை கயிலாயரின் பிணம் கறுத்தானின் இலுப்பைக்குக் கீழ்தான் கிடந்தது!

விதானை வந்து, உடையார் வந்து... அதற்கு அப்பாலும் பட்டணத்தில் இருந்து பொலீஸ் வந்து விசாரணை எல்லாம் முடிய மறுநாள் காலை பத்து மணிக்கு மேலாகிவிட்டது.

கறுத்தானின் மனைவி எல்லோராலும் கேள்விகள் கேட்கப்பட்டாள்!

தனக்கும் புருசனுக்கும் ஏற்பட்ட சண்டையில் இருந்து கயிலாயர் வந்தது வரை, கறுத்தானுக்கு அடித்தது வரை கறுத்தான் செத்தைக்குள் செருகி வைத்த கொடுவாக் கத்தியை உருவி எடுத்து கயிலாயரை வெட்டியதுவரை அவள் சொல்லி விட்டாள்!

வெட்டிய கத்தி மாத்திரம் கிடைக்கவில்லை. அதைக் கறுத்தான் கையோடு கொண்டே போயிருக்க வேண்டும்.

ஏதோ கயிலாயருக்கும் கறுத்தான் பெண்டிலுக்கும் நீண்ட நாட்கள் தொடர்பு இருந்தது போலவும், கயிலாய ருக்கு அவள் வைப்பாட்டியாக இருப்பது கறுத்தானுக்கும் தெரியும் என்றது மாதிரியும், திடீரென வந்த ஆத்திரத்தில் அவன் கயிலாயரை வெட்டி விட்டது போலவும் பொருட்பட பலர் பலவிதமாக அவளைக் கிளறினர். இந்தக் கேள்வி களுக்கெல்லாம் அவளுக்கு அழுகைதான் வந்தது. திடீரென அவளுக்கு ஒரு சந்தர்ப்பத்தில் ஆத்திரம் வந்துவிட்டது!

"என்னை என்ன நயினாரவைக்கு முந்தாணைவிரிக்கிற வேசை எண்டு நினைக்கிறியள் போலை கிடக்கு; அப்பிடிப்பட்ட ஆத்தைக்கு நான் பிள்ளையாப் பிறக் கேல்லை." இப்படிப் படக்கென்று பேசிவிட்டாள்!

எல்லோரும் திகைத்துப் போயினர். அவளிடமிருந்து இந்த வார்த்தையை ஒருவரும் எதிர்பார்க்கவில்லை.

விசாரணை எல்லாம் முடிந்தது! கயிலாயரின் பிணம் அவரின் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நடுப்பகல் சகல சிறப்புகளுடனும் பூப்பல்லக்குத் தண்டிகையில் சகல அடிமை குடிமை சீர் சிறப்புகளுடன் கயிலாயர் மயானத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டார்!

கயிலாயர் புறப்பட்டதுதான் தாமதம், கறுத்தானின் தும் கறுத்தானின் உறவினரதும் குடில்கள் பல எரிந்தன.

கயிலாயரின் சிஷ்யர்களுக்குப் பிடித்து விட்ட ஆத்திரம் இப்படிச் செய்து விட்டுத்தான் அடங்கிப் போனது.

கறுத்தானின் மனைவி ஒண்டிக் கட்டைதான்! குடில் எரிந்து சாம்பலாய்விடும் வரை அவள் காத்திருக்கவில்லை. குறுக்குக் கட்டை இறுக்கிக் கட்டிக்கொண்டே அவள் தனது ஊரை நோக்கிப் புறப்பட்டுவிட்டாள்! எடுத்துப் போகவும் எதுவும் இல்லை.

எப்படிப் பாத்தாலும் மாசார் அங்கிருந்து ஐந்து மைலுக்கு மேல் இருக்காது! அவள் துணிச்சலுடன் புறப்பட்டு, வேலுப்பிள்ளைக் கமக்காரரின் வீட்டைத் தாண்டிய போது... திரும்பிப் பார்த்தாள். தலையில் போடப்பட்ட தளைநாருடன் கந்தன் அவளுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தான்!

''கந்தண்ணை நீ எங்கை வாறாய்?''

அவளின் கேள்விக்கு,

''உன்னைக் கூட்டிக் கொண்டு போய் உன்ரை வீட்டிலை விட்டிட்டு வரப்போறன் வா!'' இப்படிப் பதில் கூறிக் கொண்டே அவன் அவளுக்குப் பின்னால் நடந்தான். கொடுக்குக் கட்டு இழகித் தொங்கியது. அவளாக அவனை உதவிக்குக் கேட்கவும் இல்லை. அவளுடன் போகும்படி அவனுக்கு யாரும் கூறவும் இல்லை. அவனாகவே தன் மனதிற்குத் தோன்றியதைச் செய்தான்.

ஒரு மணிநேர மௌனத்தின் பின் கந்தன் கேட்டான்.

''கறுத்தார் அண்ணை கயிலாயர் நயினாரை ஏன் வெட்டினாரோ தெரியேல்லை!''

''வெட்டினதோ... அவனைத் துண்டு துண்டாய் எல்லோ வெட்டி எறிஞ்சிருக்க வேணும். அந்தாள் எண்டபடியால் இப்பிடி ரெண்டு மூண்டு வெட்டோடை விட்டிட்டுது...!''

கந்தன் எதுவும் பேசவில்லை. அவளும் பேசவில்லை.

''அந்தாள் தன்ரை பெண்டிலுக்கு அடிச்சா இவன் என்ன அந்தாளை அடிக்கிறது! அந்தாள் முந்தியிட்டுது இல்லாட்டி நான் கயிலாயனை வெட்டியிருப்பன்!'' அவளே மீண்டும் பேசினாள்.

கந்தனும் அவளும் மாசார் போய்ச் சேர்ந்தபோது இருட்டிவிட்டது.

வீட்டில் உள்ள எல்லோரும் இருவரையும் சூழ்ந்து விட்டனர். அப்போதுதான் அவர்களுக்கு நடந்தவைகள் தெரியவந்தன.

கந்தன் திரும்பிப் போகப் புறப்பட்டான். இருட்டி விட்டது நின்று விடியப் போகும்படி எல்லோரும் கூறினர்.

கந்தன் இரவு படுக்கையை அங்கேயே வைத்துக் கொண்டான்.

நல்ல அயிறை மீன் சேர்த்து அவித்த ஒடியல் பிட்டு இரவு கிடைத்தது. உடனேயே அவனுக்குத் தூக்கமும் வந்துவிட்டது.

விடிவெள்ளி முளைத்தபோது கந்தன் எழுந்து நடக்கத் தொடங்கிவிட்டான்.

தாமரைக் குளத்தடிக்கு வந்தபோது வெள்ளாப்பாகி நிலம் தெரிந்தது. இந்தவேளை தாமரைக் குளத்தில் ஒருவன் குளிப்பது தெரிந்தது.

''ஆற்றா கந்தனே? என்ன கறுத்தான் பெண்டிலைக் கூட்டிக்கொண்டு போய்விடப் போனியாம்? இப்பான் வாறியே? வேலுப்பிள்ளையர் கூட்டிக் கொண்டே விடச் சொன்னவரே?'' என்று குளத்தில் கிடந்தவன் கேட்டான்.

''நயினார் ஒண்டும் சொல்லேல்லையாக்கும். நான் தான் கொண்டுபோய் விட்டிட்டு வாறனாக்கும்...'' கந்தன் பதில் சொன்னான்.

''எடை ஏன்றா நீ எனக்கு மறைக்கிறாய்? பள்ளனைக் கொண்டு கயிலாயரைக் கொண்டு போட்டு இப்ப

பள்ளியைக் கொண்டு போய் விட உன்னையும் அனுப்பி இருக்கிறார் வேலுப்பிள்ளையர். உந்தப் பாவங்களுக்கு உவன் பாவி புழுத்துத்தான் சாவான்! நீ என்ன செய்யிறது அவன்ரை சிறை: போ! போ!''

கந்தன் பதில் பேசாமலேயே வந்து விட்டான்.

அவன் வீட்டுக்கு வந்தபோது வேலுப்பிள்ளையர் முன் பக்க விறாந்தையிலை சாய்மனையில் படுத்திருந்தார்.

‘‘டேய் கந்தன்! எங்கையடா போட்டு வாறாய்?''

அவ, கறுத்தார் அண்ணையின்ரை பெண்டிலைக் கூட்டிக்கொண்டு போனனாக்கும் நயினார்!''

அவள் தேவடியாள் வேசையாலை கறுத்தான் கயிலாயனை வெட்டிக் கொண்டு போட்டான். நீ அந்தத் தேவடியாளோடை ராமுழுக்கக் கிடந்திட்டு வாறீர் என்ன? டேய் கந்தன் ஆரைக் கேட்டா நீ போன நீ?''

பேச்சுக் குரலைக் கேட்டு ஏதோ என்னவோ என்று எண்ணிக்கொண்டே சீதேவி அம்மாள் வெளியே வந்தாள் கண்ணம்மாப் பேத்தி அவள் இடுப்பில் இருந்து தானும் தனது பாணியில் ஏதோ பேசிக்கொண்டிருந்தது....... கந்தனைப் பார்த்துக் கை நீட்டியது.

கந்தனிடம் வந்துவிட அது முயல்கிறது.

‘‘டேய் பள்ளா! ஆரைக் கேட்டடா அந்தத் தேவடியாளோடை போன நீ?'' வேலுப்பிள்ளையர் அதட்டினார்.

‘‘சும்மா ஏனப்பா அவனோடை சண்டைக்குப் போறியள்! செய்யிறது எது? செய்யாதது எது? எண்டு அவன் விசரனுக்குத் தெரியுமோ?''

சீதேவியின் இந்த இடை புகுதலுக்குப் பின் வேலுப் பிள்ளையர் வாய் திறக்கவில்லை.

கந்தனும் மயிந்தி மயிந்தி, மாட்டுக் கொட்டகைப் பக்கம் போய்விட்டான்.

//

# 19

ஒரு மூன்று வருட இடைவெளிக்குள் இரண்டு பெரும் தலைகள் போய்விட்டனர்.

சூரியர் எப்படியோ காணாமல் போய் விட்டார்.

கயிலாயரின் கதையை கறுத்தான் முடித்துவிட்டான்! இருவரின் இல்லாமைக் குப்பின் ஊரே களை இழந்துவிட்டது. ஊரில் பெரும் கேளிக்கைகள், ஆரவாரங்கள் எல்லாமே அழிந்து போய்விட்டன, ஆனால் பதிலுக்கு ஒன்று நடந்தது.

கொடிகாமச் சந்தைக்குள் கயிலாயரின் கையாள் சரக்கன் இராச தர்பார் நடத்தத் தொடங்கிவிட்டான்! பக்கத்து ஊர்களில் இருந்து கொடிகாமச் சந்தைக்கு வரும் பஞ்சமர் யாராக இருந்தாலும் அவனுக்கு ஏதாவது ஒன்று நடந்தே ஆகும்,

கயிலாயரின் ஆவி ஆவேசம்கொண்டு சரக்கன் ஊடாகப் பழி வாங்கிக்கொண்டு இருப்பது போன்று!

அவன் பழி தீர்த்துக் கொள்வதும், தண்டனை கொடுப்பதும் புது மாதிரியாக இருக்கும். தனியாக ஒருவன் அகப்பட்டுக்கொண்டால் சரக்கனின் சகாக்கள் அவனுக்கு நான்கு உதை கொடுத்துவிட்டு வெறி நாயைத் துரத்துவது போல் கூக்காட்டிக் கூக்காட்டி அவனை வெருட்டி ஓட வைப்பர்.

இரண்டுக்குமேல் அகப்பட்டுக் கொண்டால் வீதிக் கரையில் அவர்களை முட்டுக்காலில் இருக்க வைத்து அண்ணார வைத்து சுடுநீரை அவர்கள் தொண்டைக்குள் ஊற்றுவார்கள்.

மூன்று நான்குபேர் அகப்பட்டுக் கொண்டால்...உச்சி வெய்யிலில் முழம்தாளில் இருக்க விட்டு அண்ணார வைத்து நெற்றியில் ஒரு கல்லை வைத்து...... அந்தக் கல்லு விழுந்து விடாமல் பல மணி நேரம் அவர்களை இருக்க வைப்பார்கள்.

இரவு நேரங்களில் யாராவது அகப்பட்டுக்கொண்டால் ...... தளநார் ஒன்றைக் கொடுத்து நெடும்பனை ஒன்றில் ஏற வைத்து விடியும்வரை அவனை இருக்க வைத்து விடுவார்கள்.

சிலருக்கு குடும்பியில் கயிற்றுத் துண்டைக் கட்டி அதில் ஒரு தரவழியான கல்லைக் கட்டி அவர்களைத் தலை நிமிர்த்தி நடக்க வைப்பார்கள். இப்படி எத்தனை எத்தனையோ சித்திரவதைகள்!

விரகதாபம் எடுக்கும்போது கயிலாயர் செய்யும் முறைகள் சிலவற்றை சரக்கன் அறிந்து வைத்திருந்தான். யாராவது ஒருத்தியில் கண் வைத்துவிட்டால் அவள் உறவினன் அல்லது உறவினள்; ஏன் சில வேளையில் அவளின் கணவனிடமே ஒரு ஓலை உமலில் புழுங்கல் அரிசித் தவிட்டை நிறைத்து கொடுத்து விட்டால் குறிப்பிட்டவள் அதை உடம்பு முழுதும் தேய்த்துக் குளித்து புனிதமாக்கிக்கொண்டு கயிலாயரின் தனி வளவான பலா மரக் கிடுகுக் களஞ்சியக் கொட்டகைக்கு அவள் வர வேண்டும். உமலில் தவிடு நிறைத்து அனுப்புவாரானால் அதனோடேயே இடம், நேரம் ஆகிய அறிவிப்புகள் எல்லாமே அந்தத் தவிட்டு உமலுக்குள் அடங்கிவிடும்.

பொழுது கருகும் நேரத்தில் தவிட்டு முழுக்கு, பலாத் தோப்பு கிடுகுக் களஞ்சியம், செக்கலுக்குப் பின்னால் ஏழு மணிக்கும் எட்டு மணிக்குமுள்ள இடை நேரம்!

இந்த நிகழ்ச்சி நிரலுக்குப் பிரத்தியேகமான அறிவிப்பு ஒன்றும் இருப்பதில்லை வாடிக்கை அப்படி!

கயிலாயரின் கடைக்கண்ணுக்குட்பட்ட வீட்டின் வாடிக்கைச் சிறைக்குட்டி கோவிச்சி தவிட்டு உமலைக் கொடுக்கும் போது இலேசாகச் சொல்லி வைப்பாள் அவ்வளவுதான். கயிலாயரின் தவசியப் பெண்கள் இதற்கு உட்பட்டவர்களாக இருப்பதில்லை. அவர்கள் புனிதமானவர்கள்!

சரக்கனுக்கும் இப்போது இந்த ஆசை பிடித்துவிட்டது.

சந்தைக்கு இப்போது பஞ்சம ஆண்களே வருவதில்லை. வருவதெல்மாம் வயதான பெண்களே!

கயிலாயரின் மறைவுக்குப் பின் சரக்கன் மந்துவில் பக்கம் போவதையே நிறுத்திக் கொண்டான். அவன் தலையெடுத்து நயினார்த்தனம் காட்ட முற்பட்டபின்

'சரக்கன்' என்று நாக்குத் தெரிக்க அழைத்து வந்தவர்கள் 'சரக்கர்' என்றே ஆக்கிவிட்டனர்.

சரக்கன் ஆகிய சரக்கர் மந்துவிலுக்கு இடைஇடையே சந்திரரைப் பகலிலேயே சந்திக்கப் போய் வந்தார். இரவில் போய்வர அவருக்குப் பயம்!

கயிலாயபிள்ளையருக்குநடந்ததுபோல நடக்கக் கூடாது என்ற முன் எச்சரிக்கை! படிப்படியாக சந்திரரே சரக்கரைத் தேடிச் செல்வது வாடிக்கையாகி விட்டது.

சரக்கருக்கு வந்துவிட்ட பெருமையோடு புழுங்கல் அரிசித்தவிட்டு உமல் கொடுத்து சுகத்தைத் தேடிக் கொள்ளும் பெருமையும் தேவைப்பட்டது.

கொடிகாமச் சந்தைக்குச் சற்றுத் தூரத்திலுள்ள சுப்பனிடம் அவர் கள்ளு எடுப்பது வழக்கம்.

சுப்பனின் மனைவியிடம் அவருக்கு மனம் பொங்கி நிற்கும் ஆசை!

சுப்பனின் மனைவி கண்ணிக்கு அதிகம் வயதாகவில்லை முப்பத்தைந்துக்கு மேல் ஒன்றோ இரண்டே அதிகம் இருக்கும். அவ்வளவுதான்!

உண்மையிலேயே அவள் கண்கள் ஆண்களைக் கண்ணி வைத்துப் பிடிக்கக் கூடியதுதான்!

சரக்கர் வீட்டுக்கு வந்துபோன சில சந்தர்ப்பங்களில் ஒருவிதமாகப் பேசி வந்தார். உள் பொருளை அவள் புரிந்து கொண்டுதான் இருந்தாள்.

வழக்கமில்லா வழக்கம். ஒருநாள் சுப்பன் சேர்வைக்குப் போய்விட்ட இடைவேளை!

காலை பத்து மணிபோல்! சரக்கர் சுப்பனின் வீட்டுக்குப் போய் இருந்தார்.

கண்ணி சமையலில் இருந்தாள். அவளின் பெடியனும் பெட்டையும் முற்றத்தில் மண் விளையாடிக்கொண் டிருந்தனர்.

"கண்ணி சுப்பன் வந்திட்டானே? ஒரு பனையான் ஏதெண்டாலும் கிடக்குதே?" என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

கண்ணி அடுக்களைக்குள் இருந்து வெளியே வந்தாள். "இதென்ன நாசமறுப்பு! வாடிக்கைக்கு மாறாக இந்தப் பகலோடை?" கண்ணியின் இந்தக் கேள்வி சரக்கருக்கு வசதியாகி விட்டது.

"அப்ப..... இந்தா இதைப்பிடி! இண்டைக்குத்தான் எங்கடை சந்தையிக்கை சிங்களவன் ஒருத்தன் கொண்டு வந்து விக்கிறான். சந்தணக்கட்டிச் சவுக்காரம் மணந்து பார்"

சரக்கரால் நீட்டப்பட்ட சவர்க்காரத்தை வாங்கி அவள் முகர்ந்து பார்த்தாள்.

"சரியான சந்தண மணம்! என்று அவள் வாய் நிறையக் கூறினாள்.

"கண்ணி நான் போறன். சுப்பன் பின்னேரம் சிவலாலை வர இரவு ஒன்பது மணி எண்டாலும் செல்லும். வாடிக்கைக்காரரும் வர ஒன்பதாகும். ஒரு எட்டு மணிக் குள்ளை றெயில் இஞ்சாலை போனாப் பிறகுதான் வாறவங்கள்......"

சரக்கரின் பேச்சுக்கு அவள் பதில் கூறவில்லை. யாழ்ப்பாணப் பட்டணம் போற றயில் எட்டு மணிக்கு இஞ்சாலை வரும்...... அப்ப நான் பின் பக்கத் துரவடிக்கு வாறன். சந்தணக் கட்டியைப் போட்டு குளிச்சுப் போட்டு துரவடியிலை நில் வாறன்!"

கல்வி பேசாமல் நின்றாள்.

அவள் முகம் வியர்த்தது!

முந்தாணையால் அதைத் துடைத்துக் கொண்டாள். சரக்கர் போய் விட்டார். கண்ணியின் கால்களில் வேர் முளைத்தது போல அவளை அப்படியே நிற்க வைத்து விட்டது!

ஊருக்குள் நடந்துவரும் பல சம்பவங்களை அவளுக்குத் தெரியும். பல தலைமுறைகளையும் அவள் கேள்விப் பட்டிருக்கிறாள்.

பல நயினார் மார்களுக்கும் வடுகருக்கும் இப்படி ஒவ்வொன்றை அல்லது அதற்கு மேற்பட்டவைகளையும் வைத்துக்கொள்வதில் பெருமை! இது இரகசியமாக மட்டு மல்ல பகிரங்கமாகவும் நடந்துகொண்டிருக்கின்றது.

இதேவேளை மரச்சேர்வைக்குச் சென்று இவர்கள் வீடுகளில் தொட்டாட்டு வேலைகள் செய்து செல்லப் பிள்ளைகளாக இருக்கும் சிலரைப்போல நயினாத்திகள் பெற்றெடுத்ததும் உண்டு. அவைகளெல்லாம் முழுவியளப் பல்ன் என்று பக்குவமாக முழுவியளத்தின்மேல் தூக்கி வைத்து விட்டவர்கள் பலரையும் அவள் அறிந்து வைத் திருந்தாள்.

அதிகாலையோடு சேர்வைக்குப் போகும் கந்தனிடமோ, வேலனிடமோ அம்மாள் துயிலிலிருந்து விழித்து விட்டால் ஏறக்குறைய அந்தக் குழந்தை கந்தன் உருவிலோ, வேலன் உருவிலோதான் பிறக்குமாம்! ஆனால் பொன்னிக்கும் சின்னிக்கும் நயினார்மார் உருவில் பிள்ளைகள் பிறப்பதற்கு இந்த முழுவியளப் பிழை காரணமாக அமைந்துவிட நியாயம் இல்லை. நயினார்மார்கள் அதிகாலையோடு பொன்னியின், சின்னியின் கண்களில் தோன்ற எந்தச் சந்தர்ப்பமும் இல்லை. அப்படியானால் இந்தப் பொன்னியோ, சின்னியோ மனதில் நயினார்மாரைச் சுமந்து வைத்திருப்பவர்களாக இருந்திருக்க வேண்டும்!

ஊருக்குள் எந்தவித எழுத்துக் கணக்கிலும் அல்லது வரையறுக்கப்பட்ட விதிகளும் இல்லாமல் நடைமுறையில் இருப்பவைகளை கண்ணியும் தெரிந்து வைத்திருந்தாள்.

மாலை வந்தது!

கருக்கல் பொழுதுக்கு முன்னால் சுப்பன் சேர்வைக்குப் புறப்பட்டு விட்டான். சந்தணக் கட்டிச் சவர்க்காரம் செத்தைக்குள் செருகி வைக்கப்பட்டபடியே இருந்தது! கண்ணி குளிக்கப் போகவில்லை.

இருட்டி விட்டது!

சற்று வேளைக்குள் றெயிலும் இரைந்துகொண்டு மேற்குத் திசையில் ஓடி விட்டது! இன்னும் ஒரு மணி நேரத்தில் கிழக்கே ஓடும் றெயிலும் வந்துவிடும்,

கண்ணிக்கு நெஞ்சு அடித்துக் கொண்டது! சரக்கர் துரவடியில் காத்திருப்பார். கண்ணி அடுப்போடும், நெருப் போடும் போராடிக்கொண்டிருந்தாள்.

துரவடியில் இலேசான காறல் சத்தம் ஓரிரு தடவை கேட்டது!

அடிக்கடி அது குரைத்தது!

கண்ணிக்காக சரக்கர் துரவடிக்கு வந்திருக்க வேண்டும்.

துரவடியில் இலேசான காறல் சத்தம் ஓரிரு தடவை கேட்டது!

நீண்ட நேரமாயிற்று!

மேற்கே போகும் றயிலின் இரைச்சலும் தொலைவில் நாவற்குளிப் பாலத்தடியில் கேட்டது!

சுப்பன் வந்தான்!

''என்னடியப்பா, துரவடிப்பக்கம் நாய் குலைக்குது?'' என்று கேட்டுக்கொண்டே வந்தான்.

''ஆற்றையோ நாம்பன் ஒண்டு துரவடிப் பக்கத்திலை பொழுது படேக்கை வந்து நிண்டுது அதுதானாக்கும்!'' என்று கண்ணியும் பதில் சொல்லிவிட்டாள்.

நாயின் குரைப்பு இப்போது துரவுக்கு அப்பால் நீண்டு கேட்டது.

"என்ரை சத்தத்தைக் கேட்டோண்ணை நாம்பன் ஓடுதாக்கும் அதுதான் நாய் கலைச்சுக் குலைக்குதாக்கும்.''

எதையுமே மனதில் வைக்காமல் சுப்பன் பேசினான். அது கண்ணியின் நெஞ்சிற்குள் குத்தியது!

''ஆளை இந்தாள் கண்டிட்டுதோ...?'' என்று அவள் மனதிற்குள் கேட்டுக்கொண்டாள்.

இயனக் கூட்டைக் கழற்றி வைத்துவிட்டு சுப்பன் துரவடிப் பக்கம்போய் மேல் கழுவி விட்டுத் திரும்பிவந்தான் அதற்குள் வாடிக்கைக்காரர்கள் வந்து விட்டனர். சரக்கர் மட்டும் வரவில்லை. றயில் மேற்கேபோய்விட்டது என்றால் சுப்பன் வந்து விட்டான் என்பது வாடிக்கைக்காரர்களுக்குப் பழகிப் போனது ஒன்று. இரவெல்லாம் கண்ணிக்குத் தூக்கம் வரவில்லை!

சுப்பனின் குணம் அதளுக்குத் தெரியும். இப்படிப்பட்ட காரியத்தை அவன் பொறுக்க மாட்டான்.

அவனிடம் இலேசாக விஷயத்தை சொல்லலாமா? என்று அவள் பல தடவைகள் நினைத்தாள். ஆனாலும் அவளால் அந்த நினைப்பை வெளியே கொண்டுவர முடியவில்லை.

சில வேளை நான் சொல்லாட்டியும் வேறை வழியிலை அறிஞ்சால் அந்தாள் என்னிலையும் ஐமிச்சப்படும்'' என்று நா சொல்லிக் கொண்டது.

வெள்ளாப்போடு சுப்பன் வளவுக்குப் போட்டு வந்தான்

''என்னடியப்பா! துரவடியிலை காலடி ஒண்டு வந்து கிடக்கு; நிண்டு கிடக்கு, அவசரமாய்ப் போய்க் கிடக்கு! ஆரோ அறிஞ்ச காலடிபோலை கிடக்கு!'' சுப்பனின் இந்தப் பேச்சு கண்ணியைக் குறுக வைத்துவிட்டது!

காலடியைப் பார்த்து ஆளையே கண்டு பிடிக்கும் அளவுக்கு அவனுக்கு ஆற்றல் இல்லை என்பது அவளுக்குத் தெரியும். ஆயினும் பொதுவில் அவள் குறுகிவிட்டாள்!

இரண்டு கடகங்களை எடுத்துக்கொண்டு சுப்பன் துரவடிக்குப் போனான். கடகங்களால் இரண்டு அடிகளை மூடினான். கடகங்களைக் காற்றுத் தள்ளாமல் மேலே பாரங்களை வைத்துவிட்டுத் திரும்பினான்.

'முருகனை ஒருக்காக் கூட்டிக் கொண்டு வாறன். அவன் பாத்தான் எண்டாச் சொல்லிப் போடுவான்.'' இந்தப் பேச்சுக்கு மேல் கண்ணிக்கு நடுக்கம் வந்துவிட்டது!

சற்று வேளைக்குப்பின் முருகனுடன் சுப்பன் வந்தான். இருவரும் துரவடிக்குப் போயினர். முருகன் காலடியைப் பார்த்தான்.

''இது சரக்கற்றை அடிதான் சுப்பு!'' முருகன் திட்ட வட்டமாகச் சொல்லிவிட்டான்.

காலடி விஷயத்தில் அவனின் முடிவுக்கு மேல் வேறு முடிவு இல்லை.

சரக்கருடன் அவன் நன்றாகப் பழகியவன். சரக்கனின் காரியங்கள் பலவற்றில் கலந்து கொண்டவன் காலடி பார்ப்பதில் அவன் விண்ணன்!

அந்தக் காலடிகளை இருவரும் தொடர்ந்து சென்றனர். அவைகள் துரவைத் தாண்டி, காய்ந்து கிடந்த அருகம்புல் சருகைத் தாண்டி ... அதற்கும் அப்பால் நிலவடலி மணல் பரப்பைத் தாண்டி... றெயில் றோட்டு வரை சென்று மறைந்தன!

முருகனை அனுப்பிவிட்டு அவன் சேர்வைக்குப் போகத் தயார் ஆனான். கண்ணி பழங்கஞ்சியை உலை மூடிக்குள் கொண்டு வந்து அவன் முன்னே வைத்தாள்.

சுப்பன் அதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

கண்ணிக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

அவள் அடக்கமாக விம்மினாள்.

சுப்பன் ஒன்றும் பேசவில்லை.

செத்தைக்குள் இருந்த சந்தணக்கட்டியை எடுத்து வந்து அவன் முன்னால் வைத்து விட்டு விக்கித் தக்கி அந்தக் கட்டி வந்த காரணத்தையும், துரவடியில் வந்து நின்றது சரக்கர் தான் என்பதையும் சிறுபிள்ளை போல அவள் ஒப்புக் கொண்டாள்.

''ராத்திரி எனக்கேனடி சொல்லேல்லை?''

''நீ ஏதெண்டாலும் எக்கச்சக்கமாய்ச் செய்து போடு வாய்; பேந்து சரக்கற்றை ஆக்கள் எங்களை வீட்டுக்கை வைச்சுக் கொழுத்திப் போடுவாங்கள்! அங்கை மந்துவிலுக்கை கொழுத்தினது மாதிரி...''

சுப்பன் தீட்டுத் தடியை எடுத்து அடிப்பாளை கோதும் சூரிக்கத்தி ஒன்றை எடுத்து நீண்டநேரம் தீட்டினான்.

''என்ரை ராசாவெல்லே; வீணாய் சண்டைக்குப் போகாதை; ஏதேனும் செய்து போடாதை! புள்ளை குட்டி யளும் நானும் தெருவிலை நிப்பம்! எங்களைத் தெருவிலை நிக்க வைச்சுப் போடாதை...!''

கண்ணி அடக்கமாக அழுதாள்!

சுப்பன் ஒன்றும் பேசவில்லை!

அவன் சுபாவம் அப்படி!

அப்போது நித்திரையில் இருந்து மூத்தவன் எழுந்து வெளியே வந்தான்.

கண்களைக் கசக்கிக்கொண்டு அழுதான்.

''ஆத்தை கஞ்சி!'' என்று சிணுங்கினான்.

''பிள்ளையளுக்குக் கஞ்சியைக் குடு போ!''

சுப்பன் அதுமட்டும்தான் பேசினான்.

"நீயுப் குடி!"

கண்ணி கேட்டாள்.

சுப்பன் பேசாமல் சூரிக்கத்தியைக் கூர் பார்த்தான். உள்ளே சென்ற கண்ணி இரண்டு உலை மூடிக்குள் பழம் கஞ்சியை எடுத்துவந்து ஒன்றை மூத்தவளுக்குக் கொடுத்து விட்டு மற்றதை சுப்பனிடம் நீட்டினாள். சுப்பன் அதை வாங்கி மட மடவெனக் குடித்தான். அவனுக்குக் கண்ணி மேல் எந்தவித சந்தேகமும் இல்லை; கோபமும் இல்லை. அதனால்தான் அவன் அந்தக் கஞ்சியை வாங்கிக் குடித்தான் கண்ணிக்கு மனச்சுமை சற்று இறங்கிவிட்டது. அவனுக்குக் கோபம் இறங்கி விட்டதாக அவள் எண்ணிக்கொண்டாள்.

இயனக் கூட்டைக் கட்டிக்கொண்டு சுரைக் குடுக்கை களுடன் சுப்பன் போய்விட்டான்.

வெய்யில் ஏறிக்கொண்டு வந்தபோது சரக்கர் வந்தார்.

கண்ணி அடுக்களைக்குள் இருந்தாள். வந்த சரக்கர் அங்குமிங்கும் பார்த்துவிட்டு, முற்றத்தில் நின்று இரண்டு தடவைகள் செருமினார்.

"ஓ கேக்குது!"

கண்ணி குரல் வைத்தாள். அந்தக் குரலின் தொனி அவருக்கு அவ்வளவு நன்றாக இல்லை.

கண்ணி முந்தாணைச் சேலையில் கைகளைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

"நீ ராத்திரி என்னை ஏமாத்திப் போட்டாய் என்ன?" கொஞ்சலாகவும் சற்றுக் கோபமாகவும் சரக்கர் கேட்டார்.

கண்ணி பேசாமல் நின்றாள்.

"நீ அயந்திட்டாய் போலை கிடக்கு. நான் மேற்கை போற றயில் வரும் மட்டும் காத்துக்கொண்டு நிண்டதுதான் மிச்சப்.!';

''நான் அயந்து போகேல்லை, அந்தாளோடை கூடித் திரிஞ்சு போட்டு இப்பிடிச் செய்யிறது சரியில்லாத வேலை.''

கண்ணி பேசி விட்டாள்.

''கூடித் திரியிறதுக்கும் இதுக்கும் என்ன?... மொட்டந் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடப் பாக்கிறாய் நீ?''

சரக்கர் இலேசாகப் பகிடி விட்டார்,

''அப்பிடி எண்டா அந்தாளும் கூடித்திரியுது. உங்கடை பெஞ்சாதியை அந்தாளும் பிடிக்கலாம் தானை?''

கண்ணியின் இந்தப் பதில் கேள்வி சரக்கரை ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது! திகைத்துப் போனார். ஆனாலும் சமாளித்து விட்டார். தொந்தியாகி நரை தெரிந்த நெஞ்சுக்குக் கீழ்ப்பட்ட பகுதியை அவர் சால்வையால் துடைத்துக் கொண்டார்.

''அவனாலை அப்பிடிச் செய்யேலுமே?'' இப்படி மட்டும்தான் அவர் கேட்டார். அந்தச் சின்னக் கேள்விக்குள் எத்தனையோ அடங்கியிருந்தன.

கண்ணி பேசவில்லை. அவர் சுற்றும்முற்றும் பார்த்து விட்டுப் பேசினார்.

''உனக்கு அவன்ரை உயிர் வேணுமெண்டா... நீ இண்டைக்குத் துரவடிக்கு வரவேணும். சுப்பனுக்கு தெரியப் போகுதே...? நான் உன்னை நெடுகலும் கேக்கமாட்டன். நாலுபேர் அறிஞ்சாஎனக்கும் மரியாதைகேடு!நளத்தீட்டைப் போட்டான் எண்டு...''

''அந்தாளுக்குத் தெரிஞ்சு போச்சு. துரவடியிலை அடி பாத்திட்டுது! எக்கணம் என்ன செய்யுமோ தெரியேல்லை. வீண் வில்லங்கத்தை வரச் செய்யாமல் போகவாக்கும்!''

''எடி கண்ணி! நீ என்னைப் பயப்புடுத்தப் பாக்கிறாய் என்ன...? அவன் என்ரை மயிரைப் புடுங்க ஏலுமோ?...

நான் நினைச்சனெண்டா அவனை வெட்டி றெயில் பாதை யிலை போட்டிடுவன் தெரியுமோ...?''

அவர் பேச்சைச் சரியாக முடிக்குமுன் நில வடலியைத் தாண்டி அதற்கு அப்பால் புளியமரத்தின் கீழ் மண் விளை யாடிக் கொண்டிருந்த மூத்தவனிடமும், இளையவனிடமும் போய்விட்டாள் கண்ணி.

பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு வரச் சற்று நேரம் ஆகிவிட்டது.

சரக்கர் அங்கில்லை.

றெயில் றோட்டுப் பக்கமாக நான்கைந்து தலைகள் தெரிந்தன.

சரக்கர் வந்தது, பேசியது, போனது எல்லாவற்றையும் அவர்கள் கவனித்திருக்க வேண்டும்

கண்ணி வெட்கப்பட்டாள். இரண்டு நாள் கழிவதற் கிடையில் ஊரெல்லாம் கதை பரவிவிட்டது! துரவடியில் அடி பார்த்தவன் சரக்கரின் அடி என்றும் கூறிவிட்ட பின் ...

சரக்கர் வழக்கத்துக்கு மாறாகப் பட்டப்பகலில் வந்து போனது...

சுப்பன் கலகலப்பில்லாமல் தலை குனிந்து நடமாடித் திரிந்தது...!

இரண்டு நாட்களாக சுப்பனும் சரக்கரும் நேருக்கு நேர் சந்திக்கவில்லை.

மூன்றாம் நாள் சேர்வையில் இருந்து வரும் போது வழியில் சீனாக்காரப் புடைவை வியாபாரிடம் நார்பட்டு வேட்டி சால்வைச் சோடியினை, மீன் செதில் போன்ற யோஜ்ராசாவின் தலை போட்ட பத்துச் சத நாணயங் களாக இருப்பதைக் கொடுத்து வாங்கி வந்தான்.

வழக்கமில்லாத வழக்கம்! நார்பட்டு உடுக்கக் கூடாத பரம்பரையில் வந்த சுப்பனுக்கு இந்த ஆசை!

அன்று சூரன் போர்!

சுட்டிபுரத்தில் நடக்கும் சூரன் போருக்கு அவன் போகவேண்டும்.

ஒரு நேரத்தோடு சீவலை நிறுத்திவிட்டு அவன் புறப் பட்டபோது......

"ஏனப்பா உதை உடுப்பான்! வீணா நயினாரயோடை கொழுவப்படவோ?" என்று கண்ணி கேட்டபோது... பதிலுக்கு பள பள வென்ற சூரிக்கத்தியை அவன் மடிக்குள் சொருகிக் கொண்டான்

கண்ணி பின்பு ஒன்றும் பேசவில்லை.

நான் நினைச்சனெண்டா அவனை அடிச்சுக் கொண்டு போட்டு றெயில் றோட்டிலை போடுவன்!" என்று மூன்று நாட்களுக்கு முன் சரக்கர் சொன்னது அவள் நினைவுக்கு வந்திருக்க வேண்டும்!

சுப்பன் வெளியே போய்விட்டான். பொழுது நன்றாகச் சாய்ந்து படுவானுக்குள் புகுந்து கொள்ளும் நேரம்.

சந்தைக்கு சற்று தூரத்தில் உள்ள மதவடியில் சரக்கரும் நான்கைந்து பேர்களும் நின்றனர்.

"எடை அங்கை பாருங்கோடா... சுப்பன்ரை நார்பட்டு வேட்டியையும், தலைப்பாக் கட்டையும்!" என்று ஒரு குரல் கேட்டது.

"ஓ ... ஓ ... சரக்கரண்ணை தன்ரை பெண்டில் பக்கம் எண்ட துணிவிலே அவன் தலைப்பாக் கட்டுவான்தானே!" இப்படி வேறோர் குரல்
வேறோர் குரல்.

"டேய் சுப்பன்! கழட்டடா தலைப்பாவை!" இது சரக்கரின் குரல்!

சுப்பன் அவர் முன்னே வந்து நின்றான். மடிக்குள் கையை வைத்து சில்லறைகளை எடுத்தான் ..

"கோவிக்குதாக்கும்! இதைப் பிடிக்கவாக்கும்! என்ரை பெண்டிலுக்கு வாசச் சவுக்காரம் வாங்கிக் குடுத்த கடனை வாங்கிறதுக்கு கோவிய நயினார் கோவிக்குதாக்கும்; புடிக்க . !"

சுப்பனின் பேச்சு முடியவில்லை. யாருக்கும் செயல்பட நேர இடைவெளி கிடைக்கவில்லை.

வீசப்பட்ட சில்லறைகள் சரக்கரின் முகத்தில் பட்டுத் தெறித்த அதே வேகத்தில்... சுப்பனின் சூரிக்கத்தி அவர் பழுவில் புதைந்து போனது! கணத்தில் போனதும் வந்ததும்! சூரிக்கத்திக்கே தெரியவில்லை!

மின்னல்கொடி போன்ற ஒரு நொடிப் பொழுதுக் காட்சி!

திகைத்து விட்ட கூட்டம் சிதறி ஓடியது!

சுப்பனுக்குக் கிட்ட வர யாரும் முயற்சிக்கவில்லை.

சரக்கரின் அவயவங்களின் துடிப்புகளைக்கூட எவரும் காணவில்லை. சுப்பனால் கூடக் காணமுடியவில்லை. உள்ளே சென்று திரும்பிய சூரிக்கத்தி கண்களுக்குத் தெரியாத அந்த உயிரை காந்தம்போல் இழுத்து வந்திருக்க வேண்டும்!

"சரக்கர் முடிந்தார்! சுப்பன் முடித்துவிட்டான்!" என்ற செய்தி சற்று வேளைக்குள் ஊரெல்லாம் பரவியது! சூரன் போரில் திரண்டிருந்த சனக் கூட்டம் செய்தியைப் பல இடங்களுக்கும் கொண்டு சென்றுவிட்டது! ஊரில் உள்ள சுப்பனின் உறவினர்கள் சுப்பனின் வீட்டைச் சூழ்ந்து விட்டனர்!

சுப்பன் வீட்டுக்குத்தான் நேராக வந்தான். எங்கும் அவன் ஓடி ஒழிக்கவில்லை.

எல்லோரும் அவனை வேறெங்காவது ஓடிவிடும்படி கூறினார்கள்; சுப்பன் மறுத்துவிட்டான்.

துரவடிக்குச் சென்று இரத்தம் தோய்ந்த உடம்பைக் கழுவிவிட்டு புதிய நார்பட்டு வேட்டி சால்வையையும் நனைத்து அலம்பிக்கொண்டான்!

புத்தம் புதிய நார்ப்பட்டு, இரத்தக்கறை பட்டென்று போய்விட்டது! கண்ணிக்கு எதுவும் செய்யத் தோன்ற வில்லை. மந்துவிலில் நடந்ததைப் போல இங்கும் வீடெரிப் புகள் நடக்கலாம் என எல்லோரும் எதிர் பார்த்தார்கள்!

''கொழுத்திறதா இருந்தா சுப்பன்ரை வீடுமட்டும் கொழுத்த மாட்டாங்கள். எல்லாற்றை வீட்டையும்தான் கொழுத்துவாங்கள். நாங்கள் நூறு குடியள் மட்டிலை இருக்கிறம்; கவனமாய்இருந்தமெண்டால் அவங்கள் ஒண்டும் புடுங்க ஏலாது!''

இப்படி, ஒரு வயதானவன் கூறினான். அது அண்ணாவி செல்லனின் குரல். தகவல் கேள்விப்பட்டு வரணியிலிருந்து அவன் வந்துவிட்டான்.

''ஓமோம் சுப்பண்ணை தனக்காக மட்டும் இதைச் செய்யேல்லை. எல்லோருமாகத்தான்!'' இப்படிப் பொது நோக்கோடு வேறொருவன் கூறினான்.

ஒருவிதமான உறவு பிறந்துவிட்டது! நாங்களும் வெறும் கையோடை இருக்கப்படாது. உடனை அடுக்குக்கு எங்கை போறது?'' இப்படி வேறோர் குரல்.

''ஏன்ராப்பா, ஓலை வெட்டிற கத்தியளும், தீட்டுத் தடியளும் பாளைக் கத்தியளும் எங்கை... அடைவே வைச்சிட்டியள்?'' இப்படி அண்ணாவி செல்லன் கேட்டான்.

''ஓமோம், வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்!''

கடைசியாகப் பேசியவனுடன் பேச்சு வார்த்தைகள் முடிந்துவிட்டன.

இருட்டிவிட்டது!

சுப்பனின் குடிசையைச் சுற்றி பத்துப் பதினைந்து பேர்கள்!

மற்றவர்கள் ஆங்காங்கே!...

நடுச்சாமத்திற்கு மேலாகிவிட்டது! சுப்பனின் வீட்டைச் சுற்றி நாய்கள் குலைத்துக் குலைத்து ஊளையிட்டன!

எதிரிகளுக்காக எல்லோரும் காத்திருந்தனர்.

''டேய்! வாறவனெல்லாம் நேரை வாருங்கோடா...! நாங்களும் ஆயித்தமாத்தான் இருக்கிறம்!வாருங்கோடா..''! இப்படி சுப்பன் வளவில் இருந்து பல குரல்கள் எழுந்தன!

நில வடலிகள் சட சடக்கும் ஓசைகள் கேட்டன!

சற்று வேளைக்குப் பின் நாய்கள் குரைப்பும், ஊளைகளும் ஓய்ந்தன.

வந்தவர்கள் பின் வாங்கிருக்க வேண்டும்.

மறுநாள் மத்தியானம் வரை சரக்கரின் சடலம் மதவடியில் கிடந்தது.

பட்டணத்தில் இருந்து பொலீஸ்காரர் வர மத்தியானம் ஆகிவிட்டது! டாக்குத்தர், நீதவான், தலைமைக்காரர்கள் வந்து சேர மதியம் திரும்பிவிட்டது.

மதவுக்கரையோடு ஓலைக்கிடுகு மறைவுகட்டி அதற்குள் டாக்குத்தர் கீறிக் கிழித்துப் பரிசோதனை செய்து முடிக்கும் வரை அங்குமிங்குமாக சனக்கூட்டம் நின்று கொண்டது.

கூட்டத்தில் ஒருவன் ஒரு தினப் பத்திரிகையைக் கையில் எடுத்து வந்திருந்தான்.

அவன் அதை விரித்து எல்லோருக்கும் காட்டினான்.

அதன் முற்பக்கத்தில் நான்கைந்து படங்கள் இருந்தன.

அவைகளில் ஒன்றில் சரக்கரின் முகத் தோற்றமுள்ளவனாக ஒருவன் இருந்தான். இராணுவ உடை தரித்திருந்தான்.

எல்லோரும் மாறி மாறி அந்தப் படத்தைப் பார்த்து வியந்தனர்.

''இரண்டாவது உலக மகாயுத்தம் தொடங்கிற்று.;'

என்ற பெரும் செய்தி இருந்தது!

ஹிட்லர், சர்ச்சில், லூஸ்வெல்ட், ஸ்ராலின், முசோலினி ஆகியோர்களின் படங்கள்தான். செய்தித் தொடருக்குக் கீழாக அங்குமிங்குமாகப் போடப்பட்டிருந்தன.

முசோலினியின் படத்தைத்தான் சரக்கரின் முகத்தோடு ஒப்பிட்டு எல்லோரும் பார்த்தனர்.

''எட, இந்த உலக யுத்தத்தைப் பாக்க குடுத்து வைக்காமல் சரக்கர் அண்ணை போய்ச் சேந்திட்டார்'' என்று அப்பாவித்தனமாக ஒருவன் அனுதாபப்பட்டான்.

///

# 20

ஒரு வருட கால இடைவெளிக்குள்...

சூரியர் காணாமல் போய்விட்டார்...

கயிலாயரின் உயிரை கறுத்தன் எடுத்து விட்டு பதினான்கு வருடகால மறியலுக்குப் போய்விட்டான்.

வரணி இராசாவும் நோய் கண்டு இறந்து போய்விட்டார்.

கடைசியாக சரக்கரும் போய்விட்டார்.

கோட்டில் சரணடைந்து தண்டனைக் காக விளக்க மறியலில் காத்திருக்கிறான் சுப்பன்.

சொல்லப்பட்ட நான்கு பெரிய மனிதர்களின் இடத்தை நிரப்புவதற்கு உடனடியாக யாரும் வாரிசுகளாக வருவதற்கு அறிகுறிகள் தெரியவில்லை.

எல்லாவற்றையும் மேவிக் கொண்டு இரண்டாவது உலகப் போர்!

கொழும்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் குண்டு வீச்சு!

அந்தப் பகுதிகளிலிருந்து தங்களையும், தங்கள் உடமைகளையும் எடுத்து வருவதில் யாழ்ப்பாணப் பெரு மனிதர்கள் பட்ட அவஸ்தைகள்!

முழு நாட்டிலும் அன்னியர்களின் குண்டு வீச்சுக்குத் தப்பிப் பிழைப்பதற்கு பாடசாலைப் போதனைகள்.

வீடுகளில், பொது வீதிகளில் ஆறடி ஆழத்திற்கு நெளிவு அதர்கள் வெட்டல்.

காடு கரம்பை, வெட்ட வெளிகள் எல்லாம் காப்பிலி, வெள்ளைக்காரன், வங்காளி ஆகிய அன்னிய நாட்டுப் படைகளின் குவிப்பு!

பலாலியில் பென்னாம் பெரிய விமான நிலையம், நாடெங்கிலும் வாகன இரைச்சல்களும், பீரங்கிப் பயிற்சி வேட்டுகள்!

சாதி, இன, மத, மொழி வித்தியாசங்கள் எதுவுமற்று உள்ளூர் படை சேர்ப்பு!

ஆங்காங்கே யுத்தத் தேவைகளுக்கான கூலியாட்கள் குவிப்பு!

இரண்டு சதத்திலிருந்து நூறுரூபாய்வரை தங்க வெள்ளி நாணயங்களுக்குப் பதில் கரன்சி நோட்டுகள்!

சந்தைக்குக் காய் பிஞ்சு விற்பவர்கள் திரும்பும் போது ஓலை உமல்கள் நிறைய பண நோட்டுகளை அடைத்துச் செல்லும் செல்வாக்கு!

படைவீரர்கள் குடிப்பதற்காக ராங்குகள் இணைத்த றக்குகளைக் கொண்டுவந்து ஊர் ஊராக பண நோட்டுகளை வீசி எறிந்து கள்ளுகளை நிரப்பிச் செல்லும் மதிப்பு!

இத்தனைக்கும் நடுவில் தேசவழமை என்ற வெள்ளைக்காரன் தனது ஆட்சிச் சுபாவத்திற்காக வைத்திருந்த சட்டத்தை அமூலில் வைத்திருத்தல் முடியாத ஒன்றாகி இருந்தது.

கிராமத்திற்கு குறைந்த பட்சம் ஐந்தோ ஆறோ பஞ்சமர்கள் உள்ளூர் படையான சி. எல். எஸ். என்ற படைப் பிரிவில் சேர்ந்து கொண்டனர்.

இந்தப் படையில் சேருவதென்பது மேட்டுக் குடியினருக்குத் தரம் குறைவாக தெரிந்தது. அதனால் அவர்களின் எண்ணிக்கை அதிகம் இல்லை.

இந்தப் படைப்பிரிவிற்குக் கல்வித் தரம் கவனிக்கப் படவில்லை.

அரசில் வேலை பார்ப்பதற்கு அவரின் நான்கு ஐந்து சந்ததிக்கு மேல் கிறிமினல் குற்றத்திற்குகோ, இராசத் துரோகக் குற்றத்திற்கோ உட்படாமல் இருக்கவேண்டும் என்ற இறுக்கமான நிபந்தனை துளியும் கவனிக்கப் படவில்லை.

கவனிப்பில் இருந்த ஒன்றே ஒன்று உடல் உறுதி மட்டும்தான்!

இந்த உடல் உறுதியில் பஞ்சமர்கள் உச்சத்தில்தான் இருந்தனர்.

சில மாதங்களுக்கு முன் மரமேறிப் பிழைத்தவர்களும் கூலி வேலை செய்து வயிற்றை வளர்த்தவர்களும் நயினார் வீடுகளில் சிறைக் குட்டிகளாக இருந்தவர்களும் பலர் இப்போது படைகளில் சேர்ந்து இராணுவ உடையுடன் ஊருக்குள் உலாவி வரத் தொடங்கி விட்டனர்.

ஆயுதம் தாங்கிய படைப் பிரிவினர் தங்கள் படை நண்பர்களுடன் தேனீர் சாலைகளிலும், சலூன்களிலும் புழங்கினர். இவர்களைத் தடுத்து நிறுத்தும் துணிச்சல் யாருக்கும் இல்லை.

ராணுவ முகாம்களில் அவர்களுக்குத் தரப்பட்ட படைப் பயிற்சி அவர்களை துணிச்சல்காரர்களாக்கிவிட்டது.

அத்துடன் வெள்ளைக்காரனுக்கு ஒப்பான—வெள்ளைக் காரனால் அங்கீகரிக்கப்பட்ட உடையுடன் உலாவ முடிந்த தால் வெள்ளைக்காரனின் வாரீசு என்ற இறுமாப்பு!

தனித் தமிழர்களின் உலகத்தையும் அவர்களின் நடை பாதையையும் மாற்றி விட்ட ஐந்தாண்டு காலம் வரை கந்தன் அசையவே இல்லை.

கந்தன் பழைய கந்தன்தான்! தலையில் தளநாரும் தொங்கக் கட்டிய கொடுக்கும், மரச்சினி நாறும் உடம்பும் ஆட்டு மாட்டுப்பட்டி அடைப்பும், ஊரைச் சுற்றிய தொட் டாட்டு வேலையும், வேலுப்பிள்ளைக் கமக்காரன் வீட்டில் சீதேவிக் கமக்காரச்சியினால் தரப்படும் தட்டுவச் சோறும்...

''கந்தன், கந்தன்'' என்ற பேத்திக் கமக்காறச்சியின் அழைப்பைக் கேட்டு மெய்சிலிர்க்கும் சிரிப்பும், மாதத்துக்கு ஒரு தடவை பரவைக் குளத்துக் குளிப்பும்! மொத்தத்தில் பழைய கந்தன் கந்தன்தான். ஒரு நாள் கந்தன் அல்லிப் பரவைக் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தபோது சந்திரர் அந்தப் பாதையால் வந்தார்.

குளத்துக்கு நடுவே வெள்ளைத் தாமரை மலர் ஒன்று தலை நிமிர்த்திப் பூத்திருந்தது.

''கந்தா! உதென்னடா உங்கடை குளத்துக்கை தாமரை முளைச்சிருக்கு ... என்னெண்டடா உது உங்கடை குளத்துக் கை வந்தது? மற்றவங்கள் கண்டிருந்தாங்களெண்டா கந்தா! அதைப் புடுங்கி வெளியிலைஎறியடா!''

சந்திரரின் இந்தக் கட்டளைக்கு கந்தன் பயபக்தியுடன் வெள்ளைத் தாமரையை கிழங்கோடு பிடுங்கி வெளியே வீசினான்.

இன்னொரு நாள்...

அன்று வெள்ளிக்கிழமை! வருடத்தில் ஒரு தடவை அல்லது இரு தடவை கந்தனுக்கு சுட்டிபுரத்தானின் நினைவு வரும்.

. அந்தத் தடவைகளில் ஒரு நாள்... அப்போதுதான் ஆயிரத்தி எழுநூற்றி மூன்று நம்பர் மல்வேட்டியும், அணில் மார்க் பெனியனும் ஆரணியன் சால்வையும் விற்பனைக்கு வந்திருந்தது. இந்த உடை வரிசையை பெரிய மனிதர்களைத் தவிர வேறு யாருமே அணியக் கூடாது.

கந்தனுக்கு ஒரு விருப்பம் வந்து விட்டது! யார் எதை அணிய உரிமை உள்ளவர்கள்? யார் உரிமை அற்றவர்கள்? என்பதைப் பற்றியெல்லாம் அவனுக்குத் தெரியாது.

கோவிலுக்குப் போவதற்காக இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் பொட்டளி வியாபாரி சுவலை மூப்பனிடமிருந்து அதை வாங்கி இருந்தான்.

மதியத்துப் பூசை வேளைக்கு கந்தன் சுட்டிபுரம் போய் விடவேண்டும், பரவைக் குளத்தில் தோய்ந்துவிட்டு புத்தம் புதிய ஆயிரத்தி எழுநூற்றி மூன்று வேட்டியையும் உடுத்து, அணில் மார்க் பெனியனையும் போட்டு. ஆரணியன் சால்வையையும் அதன் சிகப்பு முகத்தலப்பு கீழே குஞ்சமாகத் தொங்கக் கட்டிக்கொண்டு கந்தன் புறப்பட்டு விட்டான்.

என்ன கலாதியான தோற்றப்! போதாக் குறைக்கு ஈரத்தோடு நெற்றியில் அப்பி வைக்கப்பட்ட திருநீற்றுப் பூச்சும் அதன்மேல் குங்குமப் பொட்டும்...

கந்தன் வெய்யில் உச்சிக்கு நகர்ந்து வரும் முன் புறப்பட்டு விட்டான். கயிலாயரின் வீட்டை அவன் தாண்டிக்

கொண்டிருந்த போது, "என்ன கந்தன் கோயிலுக்குப் போலை கிடக்கு...?" என்று சந்திரர் பின் வந்து குரல் கொடுத்தார்.

"ஓமாக்கும், மதியப் பூசைக்குப் போறனாக்கும்...', என்று நின்று பதில் சொன்னான்.

"எட! மாப்பிள்ளை போலை கிடக்கடா கந்தா... உடுக்கிறதெண்டா உப்பிடியெல்லோ உடுக்க வேணும். சாய் நாவுறுபடப்போகுது..." என்று சந்திரர் வாய் நிறையச் சொன்னார்.

"பூசைக்கு நேரமாச்சுதாக்கும். பின்னை நான் வரப் போறனாக்கும்!" கூறிக்கொண்டே கந்தன் நகர்ந்தான்.

"கந்தன் பின்னாலை கூப்பிடுறன் எண்டு நினைக்காதை. நாலைஞ்சு நாளா மாடுகளுக்கு ஆன தீன் இல்லை...'. என்று சந்திரர் கூறும் போது உள்ளே இருந்து பெரிய மாடு கத்தும் ஓசை கேட்டது.

"கந்தன் ரண்டு பனையிலை ஓலை வெட்டித் தந்திட்டுப் போடாப்பா!" சந்திரர் தொடர்ந்து பேசினார். கந்தனால் மறுக்க முடியவில்லை. மௌனமாக அவன் வளவுக்குள் நடந்தான். ஒரு முடிச்சுப் பொச்சுக் கயிறு ஒன்றை எடுத்து திருகி புத்தம் புதிய வேட்டியை மடக்கிக் கொடுக்குக் கட்டிக்கொண்டு ஓலை வெட்டுக்குத் தயாராகி விட்டான்.

"கந்தன், வெனியனோடை ஏறப்போறியே?" என்று கேட்டுக்கொண்டே கயிலாயரின் பேரனும், சந்திரரின் மகனுமாகிய கருணை வீட்டுக்குள் இருந்து வந்தான்

"டேய் சுருணை உனக்குக் கனக்கத் தெரியுமே! பேசாமல் இரு! கந்தன் அவன் குழந்தைப் பொடியன்ரை பேய்க்கதையை விட்டிட்டு நீ ஏறு!" என்று கந்தனை அவசரப்படுத்தினார் சந்திரர்

கந்தன் அடிக் கங்குக்கட்டைகளின் மேல் கால்களைத் தனித்தனியாக வைத்து நகர்ந்து, சற்று மேலே போய் கலம்பைக் கயிற்றினாலான தளைநாரை இரு கால்களுக்கும் இணைத்து; கொடுவாக் கத்தியை தோள் மூட்டில் வைத்து தலையைச் சரித்து அதை இறுக்கிக் கொண்டு பனையை ஆரத் தழுவி ஏறத் தொடங்கிவிட்டான்.

அணில் மார்க் பெனியன் பற்றியோ, ஆரணியன் சால்வையைப் பற்றியோ, ஆயிரத்தி எழுநூற்றி மூன்று வேட்டியைப் பற்றியோ எந்தக் கவலையும் அவனுக்கு இருக்க வில்லை.

இரண்டு பனைகளில் ஓலை வெட்டப்பட்ட பின்னும் இன்னும் இரண்டு பனையில் வெட்டும்படி சந்திரர் கூறி விட்டார்.

கந்தன் கவலைப்படவில்லை. அவன் சம்மதித்து ஏறத் தொடங்கிவிட்டான்.

அடுத்தும் இரண்டு!

மொத்தத்தில் ஆறு பனைகள்! ஓலை வெட்டியும் முடியும் போது மதியம் திரும்பிவிட்டது.

கந்தன் உடம்பெல்லாம் பனம் தூசிகள் படர்ந்து, வெயர்வையோடு கலந்து உடைகளில் சிந்துண்டு... ...

"கந்தன் பிறகு வந்து அம்மாட்டை ஏதாலும் வேண்டு. கோவிலுக்குப் போறதெண்டாப் போட்டு வா!" என்று கூறிக்கொண்டே சந்திரர் உள்ளே போய்விட்டார்.

கந்தன் கோவிலுக்குப் போகவில்லை.

கோவிலுக்குப் போக இந்தக் கோலம் சரியில்லை என்பதுதான் அவன் நினைப்பு.

அவன் திரும்பி வந்துவிட்டான். அன்று இரவு வேலுப் பிள்ளை வீட்டுத் தாவாரத்தின் கந்தன் ஓலை கிழித்துக் கொண்டிருந்தபோது,

''யப்பானிலை வெள்ளைக்காரன் அணுக் குண்டு போட்டிட்டானாம்!'' என்று வேலுப்பிள்ளையர் சீதேவிக்கும் கண்ணம்மாப் பேத்திக்கும் சொன்னது அவன் செவிகளுக்கும் கேட்டது.

உலகப்போர் முடிந்துவிட்டது! அச்சு நாடுகள் சரணடைந்துவிட்டன. நான்கு ஐந்து மாதங்களுக்குள் அன்னியப் படைகள், படைக்கலங்கள் எல்லாமே திருப்பிப் போய்விட்டன. ஊர் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டது.

உலகயுத்தம் தொடங்கும் போது நாட்டு நடப்புகள் யாவும் - விடுபட்ட இடத்திலிருந்து முன்பு கழற்றிவிட்ட மெட்டியை றயில் வந்து மீண்டும் கொழுவிக் கொள்வது போல - விட்ட சில வருடங்களைக் கனவாக்கிவிட்டு காலம் மறுபடியும் தொடுத்துக்கொண்டுவிட்டது!

கந்தன் தொடர்ந்து கந்தனாகவே இருந்தான்.

கால ஓட்டத்தோடு அவன் ஓடிச் செல்லவே இல்லை. காலம் பழையதுக்குத் திரும்பிவரும்போது அவன் திரும்பி வரவும் இல்லை.

நயினார்மார் வீட்டுத் தொட்டாட்டு வேலை!

பரவைக் குளத்துக் குளிப்பு!

வேலுப்பிள்ளையர் வீட்டுத் தட்டுவச் சோறு!

சிரட்டைத் தண்ணீர்!

இத்தினியால் விட்டுச் செல்லப்பட்ட கொட்டில் படுக்கை!

புழுதி புரண்ட வாழ்க்கை!

///

# 21

புழுதி புரண்ட வாழ்க்கையில் புரண்டு, புரண்டு சம்பாதித்துக்கொண்ட தேட்டத்தைக்கொண்டுதான் இன்று கந்தன் வெந்நீசில் காணியை மீட்டுவிட்டான்.

கடந்த இரு வாரங்களுக்கு முன் மூப்பன் மேளம் தட்ட, வெந்நீசுக்கார உடையார் வெலியாத்துத் தீர்வை அறிவித்தலை சங்கடப்படலைத் தலைவாயில் பக்கத்தே நின்ற தென்னை மரத்தில் ஒட்டிச் சென்றிருந்தார்.

அப்போது கந்தன் வீட்டில் இல்லை.

பொழுது படுவதற்கு முன் வீட்டுக்கு வந்துவிட்டான். சங்கடப்படலையை திறந்தபோது தென்னை மரத்திலும் ஒன்று ஒட்டியிருந்தது. அந்த அறிவித்தலைப் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

கண்ணம்மா கிணற்றடியில் நின்று வந்தாள்.

'பேத்தி நாச்சியார்! இதென்னை எழுதி ஒட்டியிருக்கு?' என்று அவன் கண்ணம்மாவைக் கேட்டான்,

''எங்கடை வீடு வளவு விற்பனைக்கு கோடு நோட்டீசு ஒட்டியிருக்கு கந்தன்!'' என்று கண்ணம்மா பதில் சொன்னாள்.

''உதை எப்பன் படிச்சுக் காட்டு நாச்சியார்!'' என்று கந்தன் கெஞ்சினான்

கண்ணம்மா படித்தாள்

''இத்தால் சகலரும் அறிய, யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோர்ட்டுச் சட்டத்திற்கு அமைய,வலிகாமம் கிழக்கு கோவில் பற்று கோட்டை மறிச்சான் என்ற தோம்பையுடைய பதனைந்து பரப்புடைய காணித்துண்டும், அதற்கடங்கிய வீடு வாசல் சகலதும், 1932ம் ஆண்டு வைகாசி மாதம் பத்தாம் திகதி முடிக்கப்பட்ட நன்கொடை உறுதிப்படி இதன் உரித்தாளராகிய இதே இடத்தைச் சேர்ந்த கனக சூரியர் குமார சூரியர் என்பவரினால் இதே ஊரைச் சேர்ந்தவராகிய இ ரா ச த் தி ன ம் கயிலாயபிள்ளை என்பவருக்கு ரூபா ஆயிரத்திற்கு முடிக்கப்பட்ட ஈட்டுறுதி யின்படிக்கு, ஈட்டுக்காரராகிய கார்த்திகேசு கயிலாய பிள்ளை என்பவரின் சொத்துக்கு தத்துவ உருத்துக்காரரால் கோட்டதிகாரம் பெற்ற கயிலாயபிள்ளை இராமச்சந்திரன் என்பவரினால் மேற்படி கோட்டில் தொடரப்பட்ட பிராதின்படி 1—4—53ல் எடுக்கப்பட்ட கோட்டுத் தீர்ப்பின் படி அந்த ஆயிரத்திற்கும், அதற்கான வட்டிக்கும், கோட்டுச் செலவுக்குமான நாலாயிரத்து ஒன்றுக்குமாக 1955ம் ஆண்டு, ஆனி மாதம் பத்தாம் தேதி காலை பத்து

மணிக்கு ராசசேகரம் அண்ணாச்சாமி உடையார் ஆகிய என்னால் ஏலத்தில் விற்கப்படும். இதன் எல்லைக்குள்ளாவன .. ''

கண்ணம்மா ஒரே மூச்சில் காணி எல்லையையும் படித்துவிட முயன்ற போது கந்தன் இடை மறித்தான்.

'நிப்பாட்டு நாச்சியார்.' போதுமனை நிப்பாட்டு!' என்று கூறிக்கொண்டே தனது கொட்டில் பக்கம் போய்விட்டான்.

இதற்குப்பின் மறுநாட்காலை கந்தன் அந்த அறிவித்தலைக் கிழித்தெறிவதை மட்டும்தான் வீட்டில் எல்லோரும் கண்டனர். பின்பு அதைப் பற்றிய பேச்சு எதுவுமே இல்லை.

இன்றுதான் மறுபடியும்... ... ... ...

கந்தன் காணியை மீட்டுவிட்டான்! அதைக் கண்ணம்மா பெயருக்கும் ஆக்கிவிட்டான்.

சந்திரர் சபதம் ஏற்றுக்கொண்டு இடையே போய் விட்டார். அவரின் பரிவாரங்களும் போய்விட்டன!

''உந்தக் காணியுக்கை நான் ஆட்சி எடுக்கிறன் பார்! ஆட்சி எடுக்காட்டா நான் கயிலாயருக்குப் பிள்ளை இல்லை!'' இப்படித்தான் அவர் சபதம் எடுத்தார்.

அண்ணாச்சாமி உடையாரும் உதவியாட்களும் போய் விட்டனர்.

ஏதும் புதிதாக நடக்காதது மாதிரி தன்பாட்டிலேயே அதே கோலத்தில்

தலையில் தளநாருடன் ...

தளர்ந்த கொடுக்குக் கட்டுடன் கந்தன் பீலிப் பட்டையை இழைத்துக்கொண்டே இருக்கிறான்.

○ ○ ○

தட்டுவத்திற்குப் பதிலாக வட்டிலில் சோறு போடப் பட்டு மூடி வைக்கப்பட்டிருந்தது.

இரவு கந்தன் கொட்டிலுக்கு வந்தபோது உறியில் அவனுக்கு உணவு இருந்தது.

கந்தனுக்கு ஒன்றும் விளங்கவே இல்லை. ஆனாலும் அவன் அதைப் பெரிதுபடுத்தவில்லை.

கந்தன் சாப்பிட்டுவிட்டான்.

கந்தன் பாய்த்துண்டில் படுத்துவிட்டான். மனதிற்குள் அவனுக்கு ஒன்றுமே இல்லை.

அதிகாலையோடு அவனை ஒரு கரம் தொட்டு எழுப்பியது.

திடுக்கிட்டுக் கண் விழித்தான்!

இன்றுவரை தொட்டு யாரும் துயில் கலைத்ததாக அவனுக்கு நினைவு இல்லை.

கண்ணம்மா பித்தளைப் பேணி நிறைந்த பால் கோப்பியுடன் நின்றாள்.

கந்தனுக்கு இப்போதும் ஒன்றும் விளங்கவில்லை.

வழமைபோல தனது தலைமாட்டில் இருந்த சிரட்டையை எடுத்து நீட்டினான். சிரட்டையைப் பறித்து கண்ணம்மா தூர வீசினாள்!

''இந்தா கந்தன் மாமா, பேணியோடை குடி!'' கண்ணம்மாளின் இந்தப்பேச்சின் ஓசை மட்டும்தான் கந்தனுக்குக்கேட்டது.

இப்போதும் அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை!

பேசாமல் பேணியை வாங்கி மடமட வென்று பால் கோப்பியைக்குடித்தான்!

கோப்பி இளம்சூடாக, இதமாக இருந்தது.

கண்ணம்மாவுக்கு அழுகை வந்து விட்டது.

அவள் விம்மினுள்.

இப்போதும் கந்தனுக்கு எதுவும் புரியவில்லை.

அவன் கோப்பியைக் குடித்து முடித்தான்.

''என்ன நாச்சியார்! ஏன் நாச்சியார் அழுகுது?'' என்று மட்டும் அவன் கேட்டான்.

கண்ணம்மாள் பதில் சொல்லாமலே போய்விட்டாள்.

வேலுப்பிள்ளையர் வீட்டில் கந்தனுக்கு வட்டில் சோறும், பித்தளைப் பாத்திரத்தில் தண்ணீரும் கொடுக்கப்படுவதாக ஊரில் கதை பரவி விட்டது. அத்துடன் கண்ணம்மாப் பெட்டை அவனுடன் ''கந்தன் மாமா'' என்று முறை கொண்டாடுவதாகவும் நாக்கு வளைக்கப்பட்டது.

எல்லோரும் கந்தனை ஒரு மாதிரியாகப் பார்த்தனர்.

''கந்தன் வழமையான கந்தன்தான்! கந்தன்ரை சோத்தை இனி நாயும் தின்னுது! கண்ணம்மாப் பெட்டையும் கந்தனுக்கு மருமோள் ஆகிவிட்டாள்''

இப்படிப் பல வீட்டு நயினுத்திகள் கந்தனைக் கிண்டல் செய்தனர்.

இன்னும் கந்தனுக்கு ஒன்டும் விளங்கவில்லை.

வட்டில் சோறு!

பித்தளைப் பேணித் தண்ணீர்!

''கந்தன் மாமா'' என்ற கண்ணம்மாவின் பேச்சு!

''கந்தன்ரை சோத்தை இனி நாயும் தின்னுது!'' ஆகியவைகளெல்லாம் இப்போது கந்தனுக்குப் பழகிவிட்டது

* * *

சந்திரரின் மூத்த மகன் கருணை உத்தியோகத்திற்குப் போய் வருடங்கள் மூன்றாகி விட்டன.

கண்ணம்மா ஒன்பதாவது வகுப்பு வரை தேறிவிட்டு வீட்டோடு இருக்கிறாள். தனது குடும்பத்தின் நிலைமையை நினைத்து அவள் ஏங்கிக் கொண்டிருந்தாள்.

கருணையை அவள் பலதடவைகள் கண்டிருக்கிறாள்

ஒரு தடவை கருணை விடுதலையில் வந்திருந்தான். வேளையோடு கண்ணம்மாவில் அவனுக்கு ஒரு கண் இருந்தது

தனது குடும்பத்திற்கும் கண்ணம்மாவின் குடும்பத்திற்கும் பெரும் பகை என்பது ஒன்று இல்லாவிட்டாலும் அவ்வளவு ஒத்துப் போகக்கூடிய நிலை ஒன்று இல்லை என்பது அவனுக்குப் புரிந்தது.

கருணை வீட்டுக்கு வந்து சேர்ந்த போதுதான் காணி வெந்நீசில் போன ஆத்திரத்தில் தந்தையான சந்திரர் வீட்டுக்கு வந்திருந்தார்.

கருணைக்கு நிலைமை புரிந்துவிட்டது. தந்தை நடந்து கொண்ட விதம் அவனுக்கு ஒத்துப்போனதாகவில்லை.

தாயாரிடம் அவன் தனது அதிருப்தியை பொதுவாகத் தெரிவித்துக்கொண்டான்.

விடுதலையில் நின்ற அந்த ஒருவார காலத்தில் கண்ணம்மாவைசந்தித்து தனது அனுதாபத்தை தெரிவித்துச் சமாதானப்படுத்த வேண்டும் என்பது அவன் எண்ணம்.

இரண்டு நாட்களுக்குப் பின் கருணை கண்ணம்மா வீட்டுக்கு வந்தான்.

கண்ணம்மா வளவின் பின்பக்கம் நின்றாள்.

முன் விறாந்தையில் வேலுப்பிள்ளையர் வழமையான சாய்மனைக் கதிரையில் படுத்திருந்தார். சீதேவிக் கிழவி சுளகுக்குள் சிறு சேலைத் திரணையால் நெல்லு மணிகளை ஒற்றி எடுத்து கடகப் பெட்டிக்குள் தடவி உதிர்த்திக் கொண்டிருந்தாள்.

எல்லுவன் குலைத்துக் குரல் வைத்தது.

''ஆர்மோனே உதிலை வாறது?'' வேலுப்பிள்ளையரின் இந்தக் கேள்விக்கு,

''அது, நானணை அப்பா!'' என்று மட்டும் கருணை பதில் கொடுத்துவிட்டு விறாந்தைக்கு வந்துவிட்டான்.

''ஆரடா மோனே நானெண்டு?'' என்று சீதேவிக் கிழவி தலை நிமிர்ந்தாள். கருணை அவளுக்கு முன்னால் நின்றான்.

''ஆரது சந்திரன்ரை மோன் போலை கிடக்கு'' என்ற வேலுப்பிள்ளையரின் அடுத்த கேள்விக்கு.

''ஓமணையப்பா! நான்தான்.'' என்று கருணை மறுபடியும் பதில் கொடுத்தான்.

''இதென்னடா மோனே எக்கணம் கொப்பன் அறிஞ்சாலும்!'' என்று சீதேவிக் கிழவி ஏக்கத்தைத் தெரிவித்துக் கொண்டாள்.

கருணை அப்படியே நின்றான்.

பேச்சுக் குரல் கேட்டுக் கண்ணம்மா பின்புறக் கதவால் கூடத்துள் வந்து, விறாந்தைக்கு ஏறினள். பேச்சுக்கள் எதுவும் இல்லை. கண்ணம்மா பழைய சாய்மனை நாற்காலியை எடுத்துவந்து வைத்து விட்டு உள்ளே போனாள்.

''ஏன் நிக்கிறாய். உதிலே இரு மோனே!'' வேலுப்பிள்ளையரின் வரவேற்புக்குப் பின் கருணை உட்கார்ந்து கொண்டான்.

''பாத்தியே மோனே கொப்பன் செய்த வேலையை! இப்படி இவன் செய்யலாமே? அவன் கந்தனும் இல்லையெண்டால் நாங்கள் தெருவிலை எல்லே நிண்டிருப்பம்.'' சீதேவிக் கிழவி பேசினாள்.

''ம்......கடைசி நேரத்திலே அவனோடை சினேகிதமா இருந்து போட்டு, அவனும் காணுமல் போய் இத்தினை வரிசத்துக்குப் பிறகு இப்பிடிச் செய்து போட்டான் கொப்பன்! நாங்கள் கெட்டு நொந்து போனம். அவன்

எளிய கோப்பாயான் எங்களை இந்த நிலைக்கு வைச்சிட்டு எங்கையோ துலைஞ்சு போனான். கோப்பன் செய்த வேலை சரியே? சொல்லு பாப்பம். பண்டித்தலைச்சிச் சண்டையிலை செட்டிய வெள்ளாளருக்காக செலவழிச்ச காசுக்கு கோப்பாயானெட்டை, ஈட்டுக்குக் கையெழுத்து வாங்கிப் போட்டு கயிலாயன் செத்துப் போனான். மோன் இப்பிடிச் செய்திருக்கிறான்; சரியே? நீ படிச்ச நீ சொல்லு பாப்பம்......'' வேலுப்பிள்ளையர் மூச்சை இழுத்து தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டார்.

''உதேனணை இப்ப இந்தக் கதையெல்லாம்; வீட்டை வந்தவையெட்டை உதுகள் கதைக்கிறதே!', உள்ளே இருந்து கண்ணம்மாவின் குரல் கேட்டது. இதற்குப் பின் பேச்சுமில்லை; மூச்சுமில்லை. கண்ணம்மா தாம்பாளத்தில் பித்தளைப்பேணி முட்ட கோப்பியை சுமந்து வந்தாள்.

கோப்பியை உறிஞ்சிக் குடித்துக் கொண்டே, ''ஐயா செய்த பிழைக்கு நான் மன்னிப்புப் கேட்டுப் போகத்தான் வந்தனான்.'' என்று மட்டும் கருணை பேசினான்.

சற்று வேளைக்குப் பின் கருணை போய்விட்டான். எல்லுவன் மறுபடியும் உறுமிக் குலைத்தது.

இதற்குப் பின் கருணை வரவில்லை. விடுதலை முடிந்து அவன் கண்டிக்குப் போய்விட்டான்.

நான்கைந்து நாட்களுக்குப் பின் கண்ணம்மாவுக்கு அவன் கடிதம் ஒன்று அனுப்பி வைத்தான். அவன் எழுதிய கடிதத்தை கண்ணம்மா பேரனுக்கும் பேத்திக்கும் படித்துக் காட்டினாள். அதில் ஒன்றும் வித்தியாசமாக எழுதியிருக்க வில்லை. பொதுவான மன்னிப்பு மட்டும்தான். கடிதத்தை அவர்களுக்குப் படித்துக் காட்டும்போது கந்தன் வந்தான்.

அவனுக்கும் கேட்கக் கூடியதாக கடிதத்தைப் படித்து விட்டு,

''கந்தன் மாமா இது ஆற்றை காயிதம் எண்டு விளங்குதே! காணியை வெந்நீசிலை வித்ததுக்கு தேப்பனுக்குப்

பதிலாக மோன் எழுதின காயிதம்.'' என்று கண்ணம்மாள் கேலியான விதத்தில் சொன்னாள்.

சுந்தனுக்கு இப்போதும் ஒன்றும் விளங்கவில்லை. அவன் கொட்டிலுக்குள் போய்விட்டான். அவன் எதுவும் பேசவில்லை.

இக்கடிதத்திற்கு கண்ணம்மா பதில் எழுதியிருக்க வேண்டும். பின்பு கருணையிடமிருந்து பல கடிதங்கள். அவளுக்கு வந்திருந்தன. இக்கடிதங்களைப் பற்றி அவள் யாருக்கும் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

ஆறு மாதங்களுக்குப் பின்பு ஒரு நாள் கருணையிடமிருந்து சந்திரருக்கு பதிவுக் கடிதம் ஒன்று வந்திருந்தது அதில் அவன் ஏதேதோ எல்லாம் எழுதியிருந்தான். வேலுப்பிள்ளையர் வீட்டுக்குச் செய்த அநியாயத்திற்கு பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று எழுதியிருந்தான்.

கண்ணம்மாவை மணம் முடிப்பதாக வாக்குப் பண்ணிவிட்டதாகவும் எழுதியிருந்தான்.

அவளுக்கும் கண்டி சர்வகலாசாலையில் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், கல்யாணம் முடித்துவிட்டு அவளையும் அழைத்துச் சென்று வேலையில் அமர்த்திவிடலாம் என்றும் எழுதியிருந்தான்.

இந்தக் கல்யாணத்தால் விடுபட்டுப்போன உறவு மறுபடியும் ஒட்டும் என்றும் எழுதியிருந்தான்.

சந்திரர் கடிதத்தை மனதிற்குள் படித்து மேசையில் போட்டுவிட்டு வெளியே போய்விட்டார்.

மனைவியானவள் அவர் போனதும் கடிதத்தை எடுத்துப் படித்தாள்.

ஏங்கிப் போனாள்.

அவளின் ஏக்கம் தணியவில்லை

தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. படுக்கையில் வீழ்ந்துவிட்டாள். உள்ளத்தால் வெதும்பினாள். அவளால் வாய்விட்டு எதுவும் பேசமுடியவில்லை

சூரியர் அவள் கண்ணுக்குள் வந்தார்.

பேசினார்!

சிரித்தார்! அடக்கமான சிரிப்பு!

இரவு படுக்கைக்குப் போகும்போது......

''அவன்ரை காயிதத்துக்கு என்ன எழுதப் போறியள்?''

''எங்களுக்குச் சம்மதமெண்டு எழுதப்போறன்.''

''என்ன...... சம்மதமெண்டோ?''

ஓமோம்; நான் காணி வெந்தீசில் அண்டு சபதம் போட்டிருக்கிறன். உந்தக் காணியை நான் ஆளாட்டா நானும் கயிலாயன்ரை பிள்ளை இல்லை எண்டு.''

இந்தச் சம்பாசனைக்குப் பின் சந்திரர் தூங்கிவிட்டார். அவருக்கு நிம்மதியான தூக்கம் வந்தது.

ஆனால் அவளுக்கு......

அவளுக்குத் தூக்கமில்லை.

சூரியர் வந்தார்; பேசினர் சிரித்தார்; அடக்கமான சிரிப்பு!

அப்புறம்...... அப்புறம்......

இதற்குப்பின் மகனிடமிருந்து பதில் கடிதம் வரவில்லை. சந்திரர் பதில் கடிதத்தைத்தான் எதிர்பார்த்தார்.

கடிதம் ஒன்று வந்தது!

அதில் மகன் எழுதியிருந்தான். சம்பிரதாயத்துக்கு கந்தனிடமும் ஒரு வார்த்தைகேட்கவேண்டுமாம்.கண்ணம்மா இந்த நிபந்தனையை வைத்திருக்கிறாளாம்!

சந்திரரை தன்மான உணர்ச்சி உறுத்தியது. ஆனாலும் அவர் உணர்ச்சி வசப்படவில்லை.

மத்தியான உணவு அருந்தும் போது, ''பொடியன் எழுதியிருக்கிறான் எல்லாம் சரியெண்டு; எண்டாலும் கந்தனையும் நாங்கள் ஒரு சொல்லுக் கேக்க வேணுமெண்டு.

மருமோள் சொல்லியிருக்கிறாளாம். ஒருக்கா உவள் பொன்னியிட்டை சொல்லிவிடும். கந்தனை வந்திட்டுப் போகச் சொல்லி'' என்று சந்திரர் மனைவிக்குச் சொன்னர்.

''என்ன...... கந்தனை ஒரு சொல்லுக் கேக்க வேணுமாமோ? எங்கடை வீட்டுக் காரியத்துக்கு கந்தனைக் கேக்க வேணுமாமோ? நான் சொல்லிப் போட்டன். இனியும் உந்தக் கலியாணம் நடந்தா ...... என்ரை பிரேதத்தில்தான் முளிப்பியள்!''

மனைவி தூக்கி எறிந்து பேசினுள். எப்படியும் அவள் இக்கலியாணத்தை நிறுத்திவிட வேண்டும் என எண்ணினுள்.

''நீ சாகிறதெண்டாச் சா! நான் அந்தக் காணியை ஆளாமல் விடன்'' என்று கூறிக் கொண்டு சாப்பாட்டை இடையில்விட்டுவிட்டு சந்திரர் எழுந்து விட்டார்.

சற்று வேளைப் பின் பொன்னி வந்தாள்.

''பொன்னி வேலுப்பிள்ளையர் வீட்டை ஒருக்காப் போய், கந்தனை நான் வரட்டாம் எண்டு சொல்லிப் போட்டு வாடி.''

சந்திரரின் ஆணைப்படி பொன்னி போய்விட்டாள்.

இரவுபோலக் கந்தன் வந்தான். ''நயினார் வரச் சொன்னதாம்!'' என்று கேட்டுக்கொண்டே அவன் வந்தான். ''ஓமோம் கந்தன்; என்ரை மோன் கண்ணம்மாப் பெட்டையை முடிக்கப் போறானாம்! உன்னையும் ஒரு சொல்லுக் கேக்கச் சொல்லி மோன் எழுதியிருக்கிறான். அதுதான் வரச் சொன்னனான்.''

சந்திரரின் மனைவி சற்றுத் தொலைவில் நின்றது பிரகாசமான அலடின் லாம்பு வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது. அவளின் வட்ட முகத்திலை ஒளிவெள்ளம் நின்றது.

கந்தனின் கண்கள் அவளையே பார்த்தன. அந்த வட்ட முகத்துக்கு உள்ளே சூரியரின் முகம் நிறைத்து நிற்பதைப் போன்ற ஒரு தோற்றம்...

சூரியர் காணாமல் போனதான அன்று, இருட்டோடு ஒழுங்கைப் படலையைத் திறந்துகொண்டு உள்ளேபோன அந்த மங்கலான உருவம் தெரிந்தது!

''உவன் கயிலாயன்தான்ரா கந்தா சூரியர் நயினாரை அடிச்சுக் கொண்டிருக்கவேணும்'' -இப்படி வரணி அண்ணாவி செல்லன் முன்பு சொன்னது இப்போது கந்தனின் செவிப் புலனில் மோதியது!

''என்ன கந்தன் பேசாமல் நிக்கிறாய்?'' சந்திரர் கேட்டார்.

''என்னத்தைப் பேசிறதாக்கும். நான் யோசிச்சுத்தான் சொல்ல வேணும். கனக்க யோசிக்க வேணும். உடனை நான் உதுக்கு மறுமொழி சொல்லமாட்டன்.''

கந்தன் பதில் சொல்லிவிட்டு நின்றான்.

''என்ன நீர் யோசிக்க வேணுமோ? எங்கடை வீட்டுக் கலியாணத்துக்கு நீர் யோசிக்க வேணுமோ...? பள்புள்ளை! உமக்கு இப்பிடி எழுப்பம் வந்திட்டுதோ?'' சந்திரர் உரத்துக் கத்தினார்.

''உது முறையில்லாக் கலியாணம் எண்டு நான் நினைக்கிறனாக்கும். கருணை நயினாருக்கு கண்ணம்மா நாச்சியார் சகோதரமாக்கும்!''

கடைசியில் கந்தன் இதை மட்டும்தான் சொன்னான். மடமடவெனத் திரும்பி நடந்தான்.

இப்போது கந்தன் எல்லாம் தெரிந்தவனாகிவிட்டான். சந்திரனுக்கோ எதுவும் விளங்கவில்லை.

அவரின் மனைவியானவளோ திடுக்கிட்டு விட்டாள்!

● ● ●

சகலதையும் புரிந்துகொண்ட கந்தனால் மூன்று நாட்களுக்குமேல் உயிர் வாழ முடியவில்லை.

மூன்றாவது நாள்...

பட்டப் பகல்!

கொடிகாமம் சந்தைக்குப் போய்விட்டுத் திரும்பிய போது...... சந்தைக்கு அடுத்த ஒழுங்கையின் வடலிக் கரையோரம்...

கந்தன் சுடப்பட்டான்!

செத்துப் போனான்!

மறுநாள் மாலைவரை கந்தனின் கட்டை ஒழுங்கை மூட்டு வடலிக் கரையோரம் கிடந்தது. விசாரணை முடிய அப்படி நேரம் ஆகிவிட்டது!

சரக்களை முடித்துவிட்டு சிறையில் இருக்கும் சுப்பனின் ஆட்கள் தங்களுக்குள் பணம் சேர்த்து சுப்பனின் கொட்டிலுக்கு கந்தனின் சடலத்தை எடுத்துச் சென்றனர்.

மாலை ஆயிற்று!

இழவு வீட்டு வாயிலில் கார் ஒன்று வந்து நின்றது!

''ஐயோ கந்தன் மாமா!'' என்று கத்திக் கொண்டே ஒருத்தி காரை விட்டு இறங்கி வந்தாள். வெள்ளைச் சிலையால் மூடிப் போர்த்தியிருந்த கந்தனின் பிரேதத்தில் விழுந்து புரண்டாள்!

''கந்தன் மாமா! என்ரை கந்தன் மாமா.'' என்று கதறினாள்.

அவள் கண்ணம்மா!

இழவுவீட்டில் கூடியிருந்தோர் எல்லோரும் மூக்கில்

விரலை வைக்கும் அளவுக்கு அவள் புரண்டு புரண்டு கத்தினாள்!

''உந்தப் பொட்டைதான் கந்தன்ரை வளப்பிணி! கிட்டடியிலை காணி ஒண்டு வாங்கி உவளுக்குத்தான் கந்தன் எழுதினவனாம்...... வெள்ளாளச்சி எண்டாலும் செய் நன்றி மறக்கேல்லை'' இப்படி இழவு வீட்டில் பேச்சுகள் அடிபட்டன!

பிரேதம் தூக்குவதற்கான அடுக்குகள் நடந்தன.

சற்று வேளைக்குள் கந்தனின் சவ ஊர்வலம் புறப்பட்டு விட்டது!

கண்ணம்மா அழுதுகொண்டே ஊர்வலத்தின் பின்னால் சென்றாள்.

ஒழுங்கை முடுக்குகளுக்குள் பெண்கள் கூடித் திரண்டு நின்று பார்த்தனர். கண்ணம்மா ஊர்வலத்தின் பின்னால் போகிறாள்!

மந்துவில் வேலுப்பிள்ளையரினதும், புத்தூர் பல்லக்கு முதலியினதும் பேத்தியும்; ராசவாசல் சூரியரின் மகளுமாகிய கண்ணம்மாள் கந்தனின் பிரேத ஊர்வலத்தில் போகிறாள்!

இதுவரை ஊர் கண்டிராத புதுமை!

கண்ணம்மா தலை கவிழ்ந்து அழுதுகொண்டே போகிறாள்!

யார் பார்க்கிறார்கள்? ஏன் பார்க்கிறார்கள்? என்ன பேசிக் கொள்கிறார்கள்? என்பதைப் பற்றியெல்லாம் அவள் கவலைப்படவில்லை.

சுடலைக்குள் கந்தனின் கட்டை இறக்கப்பட்டது! விறகுக் கட்டைகள் மேல் வைக்கப்பட்டது.

முறைப்படி கந்தனின் கட்டைக்கு கொள்ளி வைக்க வேண்டும்.

கந்தனுக்கு இரத்த உருத்தினர் என்று அங்கு யாரும் இல்லை.

கொள்ளி வைக்க அப்போதுதான் ஆளைத் தேடினர்.

கண்ணம்மாள் வந்தாள்! நெருப்புச் சட்டியில் இருந்த கொள்ளியை எடுத்தாள்; கந்தனின் கட்டையை முறைப்படி மூன்று தடவைகள் சுற்றி வரவேண்டும்.

அவள் ஒரு தடவை சுற்றி வந்தாள். முறைப்படி முன்பக்கம் பார்த்து பின் பக்கத்தால் கொள்ளி வைக்க வேண்டும்.

கண்ணம்மா முன் பக்கமாகவே அடுக்கப்பட்ட கட்டைக்குள்வாக கந்தனின் முகத்தைப் பார்த்து அழுது கொண்டே கொள்ளி வைத்தாள்!

மீண்டும் அழுதாள்!

அவளைத் தொட்டுத் தேறுதல் கூற யாரும் துணிய வில்லை. அவளை யாரும் தொடக் கூடாது!

அவள் சுடலையை விட்டு வெளியே வந்துவிட்டாள்!

இருட்டிவிடும் நேரம்! கண்ணம்மா தன் வீட்டுக்கு இரண்டு மைல் வரை போக வேண்டும். அவள் நடந்தாள்...

"எட, பொடியள், எல்லாரும் வாருங்கோடா, பொடிச்சி தனியப் போகுது... வீடு மட்டும் கொண்டு

போய் விட்டிட்டு வருவம்''என்று கூட்டத்தில் ஒரு கிழட்டுக் குரல் கேட்டது!

அவளுக்குப் பாதுகாப்பாக ஊர்வலத்தில் வந்த பெரும் கூட்டம் அவளுக்குப் பின்னால் வீடுவரை சென்றது. வீட்டுச் சங்கடப் படலையைத் திறந்து கொண்டு அழுத படியே கண்ணம்மாள் போய்விட்டாள்!

விறாந்தையில் வேலுப்பிள்ளையர் மூச்சிழுக்கும் ஓசையும், சீதேவிக் கிழவியின் லொக்கு, லொக்கென்ற வெற்றிலை உரல் ஓசையும் கேட்டுக் கொண்டே இருந்தது.

நன்றாக இருட்டி விட்டது. வந்த ஜனக்கூட்டம் மௌனமாகத் திரும்பிவிட்டது.

சற்று வேளைக்குப்பின்......

இடிபோன்ற ஓசைகள்!

தகரப்படலையில் உதைப்பதைப் போன்ற ஓசைகள்!

மண்ணை வாரி, வாரி தகரங்களிலும், வேலிகளிலும் வீசி எறிவதைப் போன்ற ஓசைகள்!

கல்மாரி பொழிவதைப் போன்ற ஓசைள்! எல்லாமே ஒன்றிணைந்து கண்ணம்மாளின் செவிப் புலனில் உதைந்தன!

''என்ன புள்ளை உப்பான் வாறியே? சவம் எடுத்துப் போட்டாங்களே? சனம் வந்திதே?'' என்ற வேலுப் பிள்ளையரின் கேள்விக்குப் பின்னால்......

''என்ன உங்காலை கயிலாயன் வீட்டுப் பக்கமா சத்தங்கள் கேக்குது?. என்ன பிள்ளை அது?'' என்ற சீதேவிக் கிழவியின் கேள்வியும் எழுந்தது.

இரண்டு கேள்விக்குமே பதில் சொல்லவில்லை.

அப்படியே நின்றாள் கண்ணம்மாள்.

///